Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதை தந்த திருவாடானை

ஆக்கம்
"இலக்கியச் சுடர்"
முறசை சுந்தரேச சிவம்

சிவஸ்ரீ சௌந்தர் - தியாகராஜ குருக்கள் - ஸ்ரீமதி மர்கதம் தம்பதிகள்

மணிவிழா மலர் : 14.07.2014

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

8526159506

சிவகீதைதந்த திருவாடானை

ஓர் ஆய்வு நூல்

C.S.S.

திருவாடானை

சிவஸ்ரீ. சௌந்தர தியாகராஜ குருக்கள்

ஸ்ரீமதீ. மரகதம்

மணிவிழா மலர் 14.07.2014

ஆக்கம்

இலக்கியச்சுடர்

முறைசை சுந்தரேச சிவம்

(எ)

இராம. சுரேஷ் M.A.M.phil

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் விளக்கக் குறிப்பு

பெயர்	:	சிவகீதைதந்த திருவாடானை
ஆசிரியர்	:	முறசை சுந்தரேச சிவம்
பதிப்பு	:	முதற்பதிப்பு - 2014
எழுத்து அளவு	:	13
தாள்	:	
பக்கங்கள்	:	
பிரதிகள்	:	500
உரிமை	:	ஆசிரியருக்கு
கணினி அச்சு மற்றும் பதிப்பு	:	R R பிரிண்டோகிராஃப் மதுரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூரியன் துதி

காதம் நூறாயிரம் கடந்தொளிக் கரம் – நீட்டி
பூதலம்சூழ் ஆழிநீர் முகந்து முகிலுள் வைத்து
மேதினி வாழவே மீண்டும் தந்து அருள்செய்யும்
ஆதவன் மலரடி அனுதினம் போற்றுவோம்.

(மு.சு.சிவம்)

சிநேகவல்லி அம்மை துதி

கணேசனையும் கந்தனையும் கனிந்தளித்த வில்வ
வனேசனெனும் நீல மணீசன் இடமேவி
அநேகவித மானநலம் அடியார்க்கீந் தருளும்
சிநேகவல்லி பாதமலர் சிந்தைகொண்டு உய்மனமே !

(மு.சு.சிவம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதை தந்த திருவாடானை

எனும் இந்த ஆய்வு நூல்

சிங்கப்பூர்

ஸ்ரீ சந்திரசேகரன்

ஸ்ரீமதீ இந்து சந்திரசேகரன்

அவர்கள் வழங்கிய

அருட்கொடையின் மூலமாக

வெளியிடப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
சிவமயம்

மணிவிழா தம்பதிகள்

திருவாடானை

சிவஸ்ரீ சௌந்தர - தியாகராஜ குருக்கள்

ஸ்ரீமதீ மரகதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
சிவமயம்

மகிழ்வுரை

எல்லாம் வல்ல இறைவன் சிவபெருமானால் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு உபதேசிக்கப்பட்டது சிவகீதை. இதன் பொருளையும், திருவாடானைத் தலபுராண மகிமைகளையும், இந்நூல் எங்கு, எப்போது நடைபெற்றிருக்கலாம் என்பதற்கான ஆராய்ச்சியையும், முக்கனிச் சுவைகளாக நமக்குத் தந்திருப்பவர் திரு. சுந்தரேச சிவம் அவர்கள். இவற்றை வெளியிட உதவியிருப்பவர் என்னுடைய இளவல் திரு. சந்திரசேகர சிவாசார்யார் அவர்கள். இந்நூல் அடியேனுடைய மணிவிழா மலராக மலருவதற்கு உதவிய அனைவருக்கும் ஸ்ரீசிநேகவல்லி அம்பிகா ஸமேத ஸ்ரீ ஆதிரெத்னேஸ்வரப் பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

கணபதி சௌந்தர தியாகராஜன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஓம்

ஸ்ரீகுருப்யோ நம:

Swami Omkarananda

வேதபுரீ, தேனி

ஐய வருஷம் ஆனி 21

சனிக்கிழமை

(05-07-2014)

மாதோர் கூறுகந் தேற தேறிய

ஆதியா னுறை ஆடானை

போதினாற் புனைந் தேத்து வார்தமை

வாதியா வினை மாயுமே. (திருஞானசம்பந்தர் தேவாரம்)

அருள் வாழ்த்துரை

பேரன்பிற்குரிய ஸ்ரீ முறசை சுந்தரேச சிவம் அவர்களுக்கு,

ஓம் நமோ நாராயணாய!

மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

தாங்கள் இயற்றியுள்ள, "சிவகீதை தந்த திருவாடானை" என்ற ஆய்வு நூல், திருவாடானைத் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஅம்பாயிரவல்லீ ஸமேத ஸ்ரீஆதிரத்நேச்வர ஸ்வாமியின் திருவடிகளில் அழகிய மாலையாக அணி சேர்த்துள்ளது.

பாரதப் புண்ணிய பூமியில், எத்தனையோ திருத்தலங்கள் இருப்பினும், ஒவ்வொரு திருத்தலமும் தனக்கென ஒரு சிறப்போடு விளங்கி, மெய்யன்பர்களை திருவருளில் திளைக்கச் செய்கிறது. அவ்விதத்தில், திருவாடானைத் திருத்தலத்தின் சிறப்புக்களைக் கூறி, அங்குதான் சிவகீதை எழுந்தது என்ற செவிவழிச் செய்தியினை, தகுந்த ஆதாரங்களோடு நிலைநாட்டியுள்ளீர்கள்.

பேரன்போடு இந்நூலை ஆக்கியுள்ள தாங்களும், இதனை வாசிக்கும் மெய்யன்பர்கள் அனைவரும் அறிவுநலம், மனநலம், சொல்நலம், செயல்நலம், உடல்நலம், உறவுநலம், பொருள்நலம் ஆகிய அனைத்து நலன்களுடன் கூடிய ஆன்ம நலம் பெற எனது வழிபடு தெய்வங்களான ஆதிகுரு ஸ்ரீப்ரஜ்ஞா தக்ஷிணாமூர்த்தியையும், ஜகந்மாதா ஸ்ரீபுவநேச்வரியையும், ஸ்ரீதத்தாத்ரேயரையும் மனம் மொழி மெய்களால் பிரார்த்தனை செய்து உளமார வாழ்த்துகிறேன்!

உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

ஓம் நமோ நாராயணாய!

பேரன்புடன்

ஸ்வாமீ ஓங்காராநந்த

ஸ்வாமீ ஓங்காராநந்த

Acharya : Adiguru Sri Prajna Dakshinamurti Vidya Pitham, Theni. & Sri Bhuvaneswari Avadhuta Vidya Pitham, Pudukkottai.

Founder & Managing Trustee : Vedanta Sasthra Prachara Trust & Sri Dakshinamurti Seva Samiti, Theni.

SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM, P.B. 23, Vedapuri, Chatrapatti Road, Theni - 625 531.
☎ 04546-253908 E-mail : swamiomkarananda@yahoo.com / gmail.com www.vedaneri.com
SRI SRI JUDGE SWAMIGAL ADHISTANAM, East 7th Street, Pudukkottai - 622 001. Ph : 04322-221440

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
ஸ்ரீ குருப்யோ நம:

விகாஸ் ரத்ன, சிவாகமச் செம்மல்

டாக்டர் சிவஸ்ரீ கி. பிச்சை குருக்கள் அவர்கள்
தலைமை அர்ச்சகர், ஸ்ரீகற்பக விநாயகர் திருக்கோயில்
முதல்வர், ஸ்ரீகற்பக விநாயகர் வேதாகம வித்யாலயம்
நிறுவனர், சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி

நாள் : 05.07.2014

வாழ்த்துரை

திருவாடானை, சைவாகம சித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஐயாமணி சிவம் அவர்களின் சகோதரர், சிவஸ்ரீ சௌந்தர கணேச சிவாசார்யார் அவர்களின் குமாரர் சிவஸ்ரீ சௌந்தர தியாகராஜ குருக்கள் – ஸ்ரீமதீ மரகதம் தம்பதிகளின் மணிவிழா நிகழும் ஆனி மாதம் 30ம் நாள் 14.07.2014 அன்று நடைபெற இருப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த அற்புதமான நிகழ்வின் நினைவாக "சிவகீதை தந்த திருவாடானை" என்ற ஆய்வு நூலை வெளியிடுவது சிவாகம வல்லுநர்கள் வாழும் திருவாடானை திருத்தலத்திற்கு மேலும் பெருமை சேர்க்கிறது. நூலாசிரியர் முறசை சுந்தரேச சிவம் செய்துள்ள ஆய்வு மிகவும் போற்றத்தக்கதாகும்.

மணிவிழா இனிது நடைபெறவும், விழா மலர் வெளியீடு சிறக்கவும் பிள்ளையார்பட்டியில் கோயில்கொண்டு அருளும் ஸ்ரீ கற்பக விநாயகப் பெருமானின் பேரருளை போற்றிப் பணிந்து உளமாற வாழ்த்துகின்றோம்.

பேரன்புடன்

K. Pitchai Gurukkal

K. பிச்சை குருக்கள்

Ph: 0091 (0) 4577 - 264275 HP: 00914433623320 / 9842462320
website: www.pitchianna.com / Email: pitchaianna@gmail.com

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ குருப்யோ நம:

சிவாகம சிரோமணி, சிவாகம கலாநிதி

சிவஸ்ரீ க. ராஜா பட்டர் (எ) சந்த்ரசேகர பட்டர் அவர்கள்

ஸ்தானிகர், அருள்மிகு ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி திருக்கோயில்,

அர்ச்சகர், அருள்மிகு மீனாக்ஷிஸுந்தரேச்வரர் திருக்கோயில்

முதல்வர், ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம், மதுரை

நாள் : 05.07.2014

வாழ்த்துரை

எல்லாம் வல்ல ஸ்நேகவல்லித் தாயார் உடனமர் ஆதிரெத்தினேச்வரப் பெருமானின் திருவருளால் நிகழும் ஆனி 30, 14.07.2014 அன்று நடைபெறும் சிவஸ்ரீ சௌந்தர தியாகராஜ குருக்கள் - ஸ்ரீமதீ மரகதம் தம்பதிகளின் மணிவிழாவில் சிவகீதை தந்த திருவாடானை எனும் நூல் வெளியிடப்படுவதைக் குறித்து மிக மகிழ்ச்சியடைகிறோம்.

சிவபெருமான் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசம் செய்த சிவகீதை எனும் தத்துவ நூல், சமய கருத்துக்கள் பல அடங்கிய ஒரு ஞானக் கருவூலம். இவ்வரிய நூல் திருவாடானை திருத்தலத்திலேயே உபதேசம் செய்யப்பட்டது என்ற செவிவழிச் செய்தியை பல ஆதாரங்களுடன் நிறுவுகிறார் ஆசிரியர் திரு. முறசை சுந்தரேச சிவம் அவர்கள்.

மணி விழா தம்பதிகள் பல்லாண்டு காலம் சுகமாக வாழவும், நூல் வெளியீடு சிறக்கவும் பரங்கிரியதனில் கோயில் கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின் திருவடிக்கமலங்களை மனம், மொழி, மெய்களால் வணங்கி வாழ்த்துகிறோம்.

பேரன்புடன்

K. ராஜா

K. ராஜா பட்டர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ குருப்யோ நம:

சிவகீதை தந்த திருவாடானை

வேதம்:

இறைவன் எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்திருந்து எண் குணத்தானாய் ஆதி பரமேச்வரன் உமயொருபாகனாய் அளப்பரிய கருணையோடு கனிவுடன் இருக்கிறார்.

ஆகமம்:

இறைவன் மந்த்ர, பத, வர்ண, தத்துவ, புவன, கலை வடிவங்களைக் கொண்டு நம்மையெல்லாம் தனு கரண புவன போகங்களில் தானே வந்து நம்மை தடுத்தாட்கொள்கிறார்.

இதிகாச புராணம்:

இறைவன் யுகம்தோறும் புருஷனாய் (தலைவனாய்) தானே வந்து நமக்கு புரிதலின் எளிமையை, அன்பின் இருப்பிடத்தை, அமைதியின் அவசியத்தை அனைவருக்கும் அறிவிக்கின்றார்.

கருத்து உரு:

யுகங்களின் தொடர்ச்சி, பரிணாம வளர்ச்சி, விதியும் மதியும், வினையும் விளையும், விளைவின் முடிவும், உணர்தலில் உயர்வும் உண்மையான நிலை

கரு:

பதி	பசு	பாசம்
சத்	சித்	ஆனந்தம்
இறை	உயிர்	தளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பத்ம புராணச் செய்தி:

த்ரேதாயுகத்தில் ஸ்ரீ ராமர் சிவனிடம் பெற்ற கீதையை த்வாபர யுகத்தில் ஸ்ரீ கிருஷ்ணராகி அர்ச்சுனருக்கு கொடுத்தார் என்று அறிவிக்கிறது. 18 புராணங்களும் பாச இலக்கணத்தை நமக்கெல்லாம் தெளிவு பெறச்செய்வதே. எனவே இந்த அறிய சிவகீதை அவை பெறுவதற்கு முன்னால் அகத்தியரும், மார்க்கண்டேய மகரிஷிகளும் உபதேசம் செய்த மொழிகள் நம் எல்லோருக்கும் இக்கலியுகத்திலும் மிக மிக இன்றியமையாத பயன்பாட்டினைக் கொடுக்கிறது.

"சிவகீதை தந்த திருவாடானை" என்கிற தலைப்பில் வெளிவந்திருக்கும் இந்நூல் அனைவரும் இறையருள் பெற உற்ற துணையாய் இருக்கும். இவ்வெளியீட்டிற்கு ஆசி கூறிய எமது குருநாதர் சிவஸ்ரீ ஐயாமணி சிவாச்சாரியார் அவர்களது ஆசியோடு தம்மை அர்பணித்துக்கொண்ட அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எமது நன்றியை காணிக்கையாக்குகிறேன்.

சிவனடியார்க்கு அடியவன்

சுவர்ண - சந்திரசேகர குருக்கள்

திருவாடானை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதைதந்த திருவாடானை

முன்னுரை

இன்றைக்குச் சுமார் ஐந்தாண்டுகாலம் பின்னோக்கிச் சிந்தித்துப் பார்க்கிறேன். அன்றைக்குத் திருவாடானைத் திருத்தலத்தில் அருள்மிகு ஆதிரெத்தினஈசனையும், சினேகவல்லி அம்மையையும் தரிசனம் செய்துவிட்டு சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் அவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன். அந்த ஆலயத்தின் தொன்மை மற்றும் சிறப்புக்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபொழுது; ஓர் அரிய விஷயத்தைத் தெரிவித்தார்கள். “இதுவரை வெளியுலகத்திற்குத் தெரியாத இத்தலத்திற்கே உரிய பெருமை ஒன்றிருக்கிறது. எல்லாம்வல்ல பரமேச்வரனால் ஸ்ரீராமபிரானுக்கு உபதேசிக்கப்பட்ட “சிவகீதை” இத்தலத்திலே தான் உபதேசிக்கப்பட்டது. எனது பெரியதந்தையார் சிவஸ்ரீ ஐயாமணி சிவம் அவர்கள் இதனை வெளியுலகிற்குத் தெரியச் செய்ய விரும்பினார்கள். ஆனால் அது இயலாமற் போய்விட்டது, இனி நமது காலத்திலாவது அதனை நிறைவேற்ற வேண்டும். எனவே அந்தப்பணியை நீங்கள் மேற்கொண்டு முடித்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். ஆண்டவன் சன்னிதானத்தில் அதனை எனக்கிடப்பட்ட கட்டளையாகவே நான் கருதினேன். எனவே முயற்சிப்பதாகக் கூறி அதனை ஏற்றுக்கொண்டேன்.

இறைவன் என்னோடிருக்கும் தைரியத்தில் அப்பணியை ஏற்றுக் கொண்டேனே தவிர அதனை எப்படி துவங்கப் போகிறோம்? எப்படி முடிக்கப் போகிறோம்? என்றெல்லாம் எண்ணிய பொழுது பிரமிப்பாகவே இருந்தது. ஏனென்றால் சாதாரணமாக ஓர் ஆலயத்தின் தலபுராணத்தை எளியநடையில் எழுதுவது சுலபம், ஆனால் இதுவரை வெளியுலகிற்குத் தெரியாத ஒரு விஷயத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தக்க சான்றுகளுடன் நிறுவுவது கடினம். திருவாடானை சிவஸ்ரீ சந்திரசேகரக் குருக்கள் அவர்கள்; திருவாடானைத் தலபுராணம், திருஞானசம்பந்தரின் பதிகம், அந்தத் தலத்தைச் சுற்றியுள்ள ஊர்கள், தலங்கள் பற்றிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விபரங்களையெல்லாம் சேகரித்துக் கொடுத்து இப்பணிக்குப் பெரிதும் உதவினார்கள்.

இந்நூல் மூன்று பகுதிகளை உள்ளடக்கி உள்ளது. முதல் பகுதி திருவாடானைத் தலபுராணம்; இரண்டாம் பகுதி சிவகீதையின் சாரம்; மூன்றாம் பகுதி சிவகீதை திருவாடானைத் திருத்தலத்திலே உபதேசிக்கப்பட்டதனை நிறுவும் வகையிலும் அமைந்துள்ளது.

சிவகீதை

சிவகீதைக்குக் காஞ்சி காமகோடிபீடம் 57 வது பீடாதிபதி ஸ்ரீபரமசிவேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள் 16ம் நூற்றாண்டிலும், அதன் பிறகு கடந்த 20ம் நூற்றாண்டில் மருவூர் பிரம்மஸ்ரீ கணேச சாஸ்திரிகள் (1906) அவர்களும், புலோலி சிவஸ்ரீ முத்துக்குமாரசாமி குருக்கள் அவர்களும், நல்லூர் த.கைலாசபிள்ளை (1914) அவர்களும் உரையெழுதி இருக்கிறார்கள். தற்காலத்தில் தேவகோட்டை அ. சொர்ணசுந்தரேசன், திருவாடானை சொ. சந்திரசேகரக்குருக்கள் ஆகிய இருவரும் இணைந்து (1998-1999)ல் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் சிவகீதையின் சாரத்தைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர். 2004ல் ஸ்ரீ ஆனந்தநாச்சியாரம்மா அவர்கள் சிவகீதைக்கு முழுமையாக உரையெழுதி மூலமும் உரையுமாக வெளியிட்டுள்ளார்கள்.

அப்பெரியோர்களது அடியொற்றி அடியனேனும் அப்பணியை மேற்கொள்ள விழைகிறேன். சிவகீதைக்கு உரை எழுதுவது எனது நோக்கமல்ல, இத்தனை பெரியவர்கள் அதனைத் திறம்படச் செய்திருக்கும் பொழுது; நான் வேறு தனியாகச் செய்யவேண்டிய அவசியமும் இல்லை. இந்நூலின் அவசியம் கருதிச் சிவகீதைத் தொகுப்பாகவே இங்கே தந்திருக்கிறேன். இடையிடையே அவசியமான விளக்கங்களையும் தந்திருக்கிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருவாடானைப் புராணம்

திருவாடானைத் தலத்தின் பெருமைகளை அதன் தலபுராணம் வாயிலாக அறிய முடிகின்றது. சூரியன் பூஜித்தது முதல், மார்க்கண்டேயர், அகத்தியர், காமதேனு, முதலானோர் பூஜித்த வரலாறுகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

ஸ்ரீராமபிரான் இத்தலத்திலே பாசுபத விரதமிருந்து அஸ்த்திரமும், கீதோபதேசமும் பெற்றதனை அறிந்ததனாலேயே இந்திரன் தனது குமாரன் அர்ஜுனனை இத்தலத்திலே பாசுபத விரதம் மேற்கொள்ளப் பணித்தான் என்பதனை நம்மால் உணர முடிகிறது. மேற்கூறிய பெருமக்களோடு ஞானசம்பந்தப் பெருமானும், அருணையடிகளும் பூஜித்துப் பாடிப்பணிந்த இத்திருத்தலத்தைப் பற்றி; சூரியனுக்கு முன்னால் விளக்கொளி போல அடியேனும் என் சிற்றறிவுக்கு எட்டிய வகையிலே எழுதியிருக்கிறேன்.

திருவாடானைத் தலபுராணம், ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா அவர்களின் சிவகீதை, Dr.அ.அறிவொளி அவர்களின் கம்பராமாயண உரை, சிலப்பதிகாரம், அமரர் ராஜாஜி அவர்களின் வியாசர் விருந்து போன்ற பல நூல்களின் துணை கொண்டு அச்செய்திகளை களஆய்வுப் பணியில் கிடைத்த தரவுகளுடன் ஒப்பிட்டு "சிவகீதையானது திருவாடானைத் திருத்தலத்திலேதான் ஸ்ரீ இராமபிரானுக்குச் சிவபெருமானால் உபதேசிக்கப் பெற்றது" என்பதனை நிரூபணம் செய்திருக்கிறேன். இதனைப் படிக்கின்ற அனைவரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

திருவாடானைத் திருத்தலத்தின் பெருமைகளைக் கூறுமிடத்து அங்கு வாழ்ந்து சான்று பதித்த பெரியவர்களைப்பற்றிக் கூறுவதும் அவசியமாகிறது. அவ்வகையில் இத்தலத்திற்குப் பெருமை சேர்த்தவர்கள் இருவர். ஒருவர் சிவஸ்ரீ ஐயாமணிசிவம் அவர்கள், இரண்டாமவர் அவருடைய இளவல் சிவஸ்ரீ சொர்ண சுந்தர கணபதி (எ) கணேசமணிசிவம் அவர்கள். பெரியவரை இவ்வுலகமே அறியும். கடந்த நூற்றாண்டில் முதன் முறையாகத் திருவண்ணாமலையிலே 33 குண்டங்கள் அமைத்து (உத்தமபக்ஷ யாகசாலை) கும்பாபிஷேகம் செய்தவர். பழநி, இராமேஸ்வரம், முதலான பெரிய க்ஷேத்திரங்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மட்டுமன்றி; அந்தக் காலத்திலேயே பல வெளிநாடுகளுக்கும் சென்று கும்பாபிஷேகங்கள் செய்து சைவம் வளர்த்த பெருமைக்குரியவர். இளையவர் சிவஸ்ரீ கணேசமணிசிவம் அவர்களும் சளைத்தவர் அல்லர். பல கும்பாபிஷேகங்களை முன்னின்று திறம்பட நடத்திய பெருமைக்குரியவர். அடியேனுக்குப் பெரியவரோடு அதிக நெருக்கமில்லை. (அவரைப் பார்த்தாலே ஒரு மரியாதை கலந்த பயம் வந்து விடும்) சிறியவரோடு அதிக நெருக்கமுண்டு. ஒரு சில விசேஷங்கள் அவரோடு இணைந்து பணியாற்றி இருக்கிறேன். மிகச்சிறந்த பண்பாளர். அவரோடு தொடர்புடைய ஒரு சம்பவத்தைக் கூறினால் இந்தக் கூற்று எவ்வளவு உண்மை என்பது எளிதில் விளங்கும். எனது ஊர் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் முறையூர் என்னும் சிற்றூர். (திருப்பத்தூருக்கும் சிங்கம்புணரிக்கும் இடையே மருதிப்பட்டிக்கு அருகில் உள்ளது) இங்குள்ள பழமையான அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்தில் பரம்பரையாகச் சிவத்தொண்டுபுரியும் மகத்தான பணி எங்களுடையது. இங்கு ஒரு பிரதிஷ்டைக்காக சிவஸ்ரீ கணேசய்யா அவர்கள் வந்திருந்தார்கள். அவருடைய தோற்றத்தை வைத்து நான் அவரைத் தாத்தா! என்று அழைப்பதுண்டு. மறுநாள் நிகழ்ச்சிக்கு முதல் நாள் மாலையே வந்துவிட்டார்கள். மாலை 6.00; மணி நான் சாயரக்ஷை பூஜை செய்யத் துவங்குகிறேன். கிராமப்புறக் கோவில் எனவே இங்கு சுயம்பாகம், பரிஜாரகம், போன்ற பணியாளர்கள் யாரும் இல்லை. ஒருவரே தலுகைத் தட்டையும் இடுப்பில் அணைத்துக் கொண்டு, இடதுகையில் மணி பஞ்சபாத்திரத்தோடு தூபத்திற்காக ஊது பத்தியும் ஏற்றிக் கையில் வைத்து கொண்டு பூஜை செய்வோம். இது எங்களுடைய அன்றாட வழக்கமாகையால் சிரமமாகத் தெரிவதில்லை. எனவே அந்த வழக்கப்படி பூஜை செய்தேன். இதனை கணேசையா அவர்கள் பார்த்துவிட்டார்கள். (திருவாடானை ஆலயத்தில் சுயம்பாகம் உண்டு. அவர் தலுகை, தூபம் முதலானவற்றை எடுத்துவருவார். அர்ச்சகர், மணி பஞ்சபாத்திரம் மட்டும் எடுத்துச் சென்றால் போதுமானது) வேகமாக என்னிடம் வந்தவர் என்னிடமிருந்து தலுகைத்தட்டை வாங்கிக்கொண்டார்! எனக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. அவரிடம் வேண்டாம் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றேன். அவர் கேட்கவில்லை. பிறகு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நீங்கள் பூஜை செய்யுங்கள் என்று மணியை அவரிடம் கொடுத்தேன். அதையும் வாங்க மறுத்துவிட்டார்கள் "இங்கு நீதான் அதிகாரி! நீதான் பூஜை செய்ய வேண்டும் தலுகைத்தட்டு எடுப்பது ஒன்றும் கௌரவக் குறைவான செயல் அல்ல" என்று சொல்லி அந்த பூஜை முடியும் வரை என்னுடன் தலுகைத் தட்டு ஏந்தி வந்தார்கள். (அப்போது எனக்கு 25 வயது அவருக்கு 70 வயதிருக்கும்) பூஜை முடிந்த பிறகு நான் மிகுந்த மனவருத்தத்துடன் அவரிடம் "நீங்கள் இப்படிச் செய்தது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்று கூறினேன். அதற்கு அவர் கூறிய சமாதானம்தான் அவருடைய பண்பிற்குச் சான்று. அதுமட்டுமல்ல அது ஆதிசைவ குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டிய பின்பற்றவேண்டிய ஒன்று. இதோ அவர்கூறிய சமாதானம்; "எந்தவொரு ஆலயமாக இருந்தாலும் அந்த ஆலயத்தில் உறையும் தெய்வத்திற்கும், அங்கு பூஜைசெய்யும் பூஜகருக்குமான உறவு குழந்தைக்கும் தாய்க்குமான உறவு போன்றது. அந்தத் தாய் ஊட்டினால் தான் குழந்தை திருப்தியாக சாப்பிடும். அந்தந்தத் தலத்து தெய்வங்களைப்பற்றி அந்தந்த பூஜகருக்குத்தான் நன்கு தெரியும். அதற்கேற்ப அவர்கள் நடந்து கொள்வர். அல்லது அவர் எப்படி நடந்துகொண்டாலும் அந்த தெய்வம் ஏற்றுக் கொள்ளும். நான் இங்கு வந்ததற்காக இன்று ஒருநாள் மட்டும் எவ்வளவு சிறப்பாகப் பூஜை செய்தாலும் அது அந்த தெய்வத்திற்கு வித்யாசமாகவே படும். அது மட்டுமல்ல பரிஜாரக தொழில் என்பது ஒன்றும் கேவலமான தொழில் அல்ல! சமய, விஷேசதீக்ஷை பெற்ற ஒருவன் தான் பரிஜாரகனாக இருக்க அருகதை உள்ளவன் என்று சிவாகமம் கூறுகின்றது. அந்த தெய்வத்திற்கு சிவாச்சாரியார் தாய் என்றால் பாரிஜாரகன் தந்தை! சாப்பிடப் பிடிவாதம் பிடிக்கும் ஒரு குழந்தைக்குத் தாயும் தந்தையும் சேர்ந்து சோறூட்டுவதாகக் கற்பனை செய்துபார்! அது உனக்கே புரியும். தந்தை ஒரு கிண்ணத்தில் அந்தக் குழந்தைக்குப் பிடித்தவகையில் பருப்பும் நெய்யும் கலந்த சோற்றைக் கையிலெடுத்துக் கொண்டு பின்னால் செல்ல தாய் குழந்தையை இடுப்பில் தூக்கிக் கொண்டு நிலவையும் நட்சத்திரங்களையும் காட்டிச் சோறூட்டுவாள். இது நல்ல தம்பதிகள் தம் குழந்தைக்கு அன்றாடம் செய்யும் பணிதானே! இதில் தாய் செய்வது என்ன உயர்ந்தது? தந்தை செய்வது என்ன தாழ்ந்தது?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அது போலத்தான் இதுவும்! இதில் கௌரவக் குறைவு ஒன்று மில்லை. உன்னோடு இணைந்து இந்த மீனாட்சி சுந்தரேச்வராளுக்குக் கைங்கர்யம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததில் எனக்கு மகிழ்ச்சியே! எனவே நீ வருத்தப்படாதே"என்று எனக்குச் சமாதானம் கூறினார்கள். இவ்வளவு சிறந்த பண்பாளரை நமது சமூகத்தில் பார்ப்பது அரிது தானே!

அப்படிப்பட்ட பண்பாளர்கள் வாழ்ந்த திருத்தலத்தைப்பற்றி எழுதுவதை அடியேன் மிகுந்த பாக்யமாகவே கருதுகிறேன். மேலும் திருவாடானை எனது மனைவி பிறந்தவூர். முன்பு அடியேன் பிறந்தவூராகிய முறையூரைப்பற்றி "முறசை மகிமை"என்ற பெயரில் முழுவதும் செய்யுள் வடிவில் தலவரலாறாக எழுதியுள்ளேன். "நீ பிறந்த ஊரைப்பற்றி மட்டும் எழுதினால் போதுமா?, உனது மனைவி பிறந்த ஊரைப்பற்றி எழுத வேண்டாமா? எனவே அதனையும் நீயே செய்யக்கடவாய்."என்று அந்த ஆதிரெத்தின ஈசனும், சினேகவல்லி அம்மையும் அடியேனுக்குக் கட்டளையிட்டதாகவே நினைத்து; அவனருளாலே இப்பணியை நிறைவு செய்திருக்கிறேன். எனவே குறை இருக்காது என்று நம்புகிறேன்.

"சிவகீதைதந்த திருவாடானை"என்னும் இந்நூலை எழுதிடப் பணித்ததோடன்றி அதற்கான செய்திகளையும் தரவுகளையும் தந்துதவிய திருவாடானை சிவஸ்ரீ சந்திரசேகரக்குருக்கள் அவர்களுக்கும், சிவஸ்ரீ வைரமணிகுருக்கள் அவர்களுக்கும், இந்நூலுக்கு வாழ்த்துரைகள் நல்கிய தேனி, வேதபுரி, ஸ்ரீ ஸ்வாமீ சித்பவானந்த ஆச்ரம நிறுவனர், பரமபூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹா சுவாமிகள், பிள்ளையார்பட்டி, டாக்டர் சிவஸ்ரீ K. பிச்சை குருக்கள், திருப்பரங்குன்றம் ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலய "குரு முதல்வர்" சிவஸ்ரீ K. இராஜாபட்டர் ஆகியோருக்கும், இந்நூல் உருவாகுவதற்கு எனக்குப் பெரிதும் உறுதுணையாக நின்று உற்றுழி உதவிய எனது அருமை நண்பர் திருப்பரங்குன்றம் ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலய ஆசிரியர் சிவஸ்ரீ G. கார்த்தியேசிவம் அவர்களுக்கும் நல்லமுறையில் அச்சிட்டுத் தந்த மதுரை, ஆர் ஆர் பிரிண்டோகிராஃப் பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகளைக்காணிக்கை ஆக்குகிறேன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்நூல் திருவாடான்ன சிவஸ்ரீ கணேச குருக்களது திருக்குமாரர்களுள் ஒருவராகிய சிவஸ்ரீ சௌந்தர தியாகராஜ குருக்கள், ஸ்ரீமதீ மரகதம் தம்பதிகளின் மணிவிழா மலராக 14.07.2014 அன்று வெளிவருவது மிகுந்த மனமகிழ்வைத் தருகிறது.

பல அரிய விடயங்களைத் தன்னுள்ளே கொண்ட இந்நூல்; எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய திருவாடானை இளையவர் சிவஸ்ரீ கணேசமணி சிவம் அவர்களுடைய மூத்த குமாரர் சிவஸ்ரீ சௌந்தர தியாகராஜன் (எ) வாகீசன் – பாமா தம்பதிகளின் மணிவிழாவில் திருவாடானைத் திருத்தலத்திலேயே வெளியிடப்பெறுவது நூலுக்கு மேலும் அணி சேர்பதாக அமைகிறது.

மணிவிழாத் தம்பதியர் நோயற்ற தேகமும், குறைவற்ற ஆயுளும் பெற்று கனகாபிஷேகம் காணும் பாக்கியம் தந்தருள அருள்மிகு ஆடானைநாதர் அன்பாயி அம்மன் பதம் பணிந்து வேண்டிக் கொள்ளவதோடு "சிவகீதையானது "ரத்தினம்"என்று நேரடியாகச் சொல்லப்படவில்லை ஆயினும் இப்பொருள் வரத்தக்க இலக்கண விதிமுறைகள் இதில் இருத்தலால் வடமொழிப் பண்டிதர்கள் "சிவகீதாரத்தினம்" என்று கூறியிருக்கிறார்கள்" என்று சிவகீதையைப்பற்றி அதற்கு உரையெழுதிய ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா அவர்கள் தனது உரையில் எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட "சிவகீதாரத்தினத்தை" உபதேசித்த ஸ்ரீ ஆதிரெத்தினேச்வரரைப் பற்றி எழுதுவதற்கு அநுக்கிரஹித்த ஸ்ரீ ஆதிரெத்தினேச்வரர் சினேகவல்லி அம்மையின் பதம்பணிந்து இவ்வரிய நூலினைத் திருவாடானைப் பெரியவர்கள் சிவஸ்ரீ ஐயாமணி சிவம், சிவஸ்ரீ கணேசமணிசிவம் ஆகியோரின் திருவடிகளுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

என்றும் அன்புடன்
முறசை சுந்தரேச சிவம்
(எ)
இராம. சுரேஷ் MA.M.Phil
முறையூர், சிவகங்கை மாவட்டம் – 630501
Cell: 86818 71009

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொருளடக்கம்

திருவாடானைத் தல புராணச் சுருக்கம்	1
சிவகீதையின் சாரம்	49
சிவகீதை தந்த திருவாடானை	110



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதைதந்த திருவாடானை

நாடுறைவார் வேந்தர் நமன்மால் அயனோடு
காடுறைவார் சிலந்தி கரியெறும்பு தேவரெனக்
கோடானு கோடிமனம் கொள்ளை கொண்டு கூத்தாடும்
ஆடானை நாதர்பதம் அநுதினமும் தொழுதெழுவாம்

(மு.சு. சிவம்)

பொருள்:

நாட்டிலே வாழக் கூடியவர்களான மக்கள் அரசர் முதலியோரும் யமன், திருமால், நான்முகன், காட்டிலே வாழக்கூடிய துறவியர், ஞானியர், சிலந்தி, யானை, எறும்பு, மற்றும் தேவர்கள் இப்படி உயர்திணை, அஃறிணை என்கின்ற பாகுபாடில்லாமல் அனைத்து உயிர்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டு அந்த சந்தோஷத்திலே கூத்தாடுபவனும், திருவாடானை என்னும் தலத்திலே எழுந்தருளும் தலைவனுமான ஆதிரெத்தினேச்வரரின் திருவடிகளை ஒவ்வொரு நாளும் தொழுது நம் பணிகளைத் தொடங்குவோம்.

திருவாடானை தலபுராணச் சுருக்கம்

அன்பேவடிவான ஆடானைநாதர் ஆதிரெத்தினேச்வரர், சினேகவல்லி அம்மையின் திருவடி மலர்களைச் சிந்தை கொண்டு திருவாடானைத் தல புராணத்தின் அடிப்படையில் திருவாடானைத் திருத்தலத்தின் வரலாற்றை எழுத முற்படுகின்றேன்.

நமது ஹிந்து மதத்திற்கு ஒரு பெருமையுண்டு. அதாவது இது தோன்றிய காலமும் தோற்றுவித்தவரும் என்றும் யாராலும் அறியப்படாத ஒன்றாகவே இருக்கிறது. அத்தகையபெருமை இத்திருத்தலத்திற்கும் உண்டு என்று சொன்னால் அது மிகையில்லை. ஆம், இத்தலம் க்ருதயுகம் தொடங்கி இன்றுவரை வழிபாட்டுத்தலமாக இருந்து வருகிறது என்று தல புராணத்தின் வழி அறிய முடிகிறது.

உலகில் பிரத்யக்ஷமாய் யாரும் கண்கொண்டு நேரடியாகப் பார்க்கக்கூடிய தெய்வமாக, இவ்வுலகை என்றும் வாழவைத்துக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கொண்டிருக்கக் கூடிய தெய்வமாக விளங்கும் சூரிய பகவான் (க்ருதயுகத்திலே) வழிபட்டுப் பேறுபெற்ற வரலாற்றினைத் தொடக்கமாகக் கொண்டு ஆடானைத் தலபுராணம் துவங்குகிறது அதன் அடிப்படையில் பார்த்தோமானால்,

அதாவது,

க்ருதயுகம்	-	17,28,000	வருடங்கள்
த்ரேதாயுகம்	-	12,96,000	வருடங்கள்
த்வாபரயுகம்	-	8,64,000	வருடங்கள்
கலியுகம்	-	4,32,000	வருடங்கள்
		43,20,000	ஆண்டுகள் ஒரு சதுர்யுகம்

இன்றைய காலக் கணக்கின்படி சுமார் 4 மில்லியன் ஆண்டுகளாக சிறந்ததொரு வழிபாட்டுத் தலமாக வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பெருமை வாய்ந்த திருத்தலம் திருவாடானைத் திருத்தலம்.

முதலிலே தலபுராணம் கூறும் செய்திகளைப் பார்த்துவிட்டுப் பிறகு ஆலயத்தின் இன்றைய நிலையைப் பார்ப்போம்.

வேத வியாசரின் பிரதம சீடர்களில் ஒருவரான சூதமுனிவரிடம் சௌநகர் என்கின்ற முனிவர் ஆடானைத் திருத்தலத்தின் மகிமையை எடுத்துரைக்கும்படி வேண்ட; அவருடைய வேண்டுகோளை ஏற்றுச் சூதமுனிவர் ஆடானைத் திருத்தலத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் வகையில் இத்தலபுராணம் அமைக்கப் பெற்றுள்ளது. சூதமுனிவரின் கூற்றுப்படி இத்தலம் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு வனமாகத் திகழ்ந்திருக்கிறது. அதாவது அக்காலத்தில் மக்கள் தொகை மிகவும் குறைவாதலால் (பாரதியார் காலத்திலேயே இந்தியாவின் மொத்த மக்கட் தொகை 30 கோடி தான் அதனையே 30 கோடி முகமுடையாள் என்று பாடுகிறார்.) 60 ஆண்டுகளுக்கு முந்தைய நிலைமையே இதென்றால் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முந்தைய நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. வாழும் மக்கட் தொகைக்கேற்ற நிலப்பகுதியும் விளைநிலங்களும் நீங்கலான மற்ற பகுதிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மரங்கள் நிறைந்த அடர்ந்த காடுகளாக இருந்தன. (அதனாலேயே அன்று மாதமும்மாரி பெய்தது) அந்தக்காட்டில் எவ்வகை மரங்கள் நிறைந்திருக்கினறனவோ அம்மரத்தின் பெயரை அந்த வனத்திற்கு (காட்டிற்கு) வைத்து விடுவார்கள். அவ்வகையில் இப்பகுதி க்ருதயுகத்தில் - பாரிஜாத வனமாகவும், த்ரேதாயுகத்தில் வன்னி வனமாகவும், த்வாபரயுகத்தில் - குருக்கத்தி வனமாகவும், கலியுகத்தில் வில்வ வனமாகவும் திகழ்ந்திருக்கிறது. (இன்று அதனை நினைவுறுத்தும் வகையில் ஒருசில வில்வ மரங்கள் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது).

சூரியன் பூஜித்த வரலாறு

சப்த ரிஷிகளில் முதன்மையானவரும் சிறந்த தவசீலருமாகிய காச்யபர் என்கின்ற ரிஷி ஒருவர் இருந்தார் (அவரிடம் இருந்து தான் தேவகுலம் அசுரகுலம் என்கின்ற இரண்டும் தோன்றின). அவருக்கு அதிதி, திதி என்கின்ற இரண்டு மனைவிமார்கள் இருந்தார்கள். அவர்களிலே அதிதி எனபவள் சாத்வீககுணமும், தெய்வீக ஞானமும், மங்களமான எண்ணங்களும் நிரம்பப்பெற்றவள். திதி என்பவள் ராஜோ குணமும், பொறாமை மனமும், கொண்டவளாக இருந்தாள். பொதுவாக, ஒருமித்த கருத்தும் உயர்ந்த எண்ணமும் கொண்ட தம்பதிகளுக்கு தன்மையான, பிறரால் மதிக்கப்படக் கூடியவர்களான, குழந்தைகள் பிறப்பார்கள். அவ்வாறின்றி வேறு வேறு குணாதிசயங்களையும் கருத்தொற்றுமையின்றியும் வாழும் தம்பதிகளுக்கு பிறரால் பழிக்கப்படக் கூடிய, மற்றவர்களைத் துன்புறுத்தி இன்பங்காணும் குழந்தைகள் பிறப்பார்கள். மேலும் பிறந்த குழந்தைகள் பெரும்பாலும் தாயின் குணாதிசயங்களைப் பின்பற்றியே வளர்கின்றன. இது அறிவியல் உண்மை. (தர்மசிந்தனையும் அன்புள்ளமும் கொண்ட குந்திதேவிக்குப் பிறந்த குழந்தைகள் தாயின் குணாதிசயங்களைப் பின்பற்றி நல்லவர்களாக வாழ்ந்தார்கள். பொறாமை குணம் மிகுந்த காந்தாரிக்குப் பிறந்த குழந்தைகள் பொறாமை வஞ்சகம் முதலான கீழ்க்குணங்கள் நிரம்பியவர்களாக வாழ்ந்தார்கள் என்பது வரலாறு)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(வகையில் மறையோர் குடிப்பிறந்தும் மாதா குலத்தின் வழிநின்றே) (உத்தரகாண்டம் ஒட்டக்கூத்தர்)

அந்த வகையில் காச்யப முனிவருக்கும் அதிதி என்கிற குணவதிக்கும் ஒரு ஆண் மகன் பிறந்தான். அதிதியின் குமாரன் என்பதால் ஆதித்யன் எனவும் அழைக்கப்பெற்றான் (அதிதிக்குப் பிறந்த புதல்வர்கள் அனைவரும் ஆதித்திர்கள் (தேவர்கள்)? என்றும் திதிக்குப் பிறந்த புதல்வர்கள் அனைவரும் தைத்யர்கள் (அசுரர்கள்) என்றும் அழைக்கப்பெற்றனர். (தேவாசுர யுத்தம் என்பது உண்மையில் ஒரு பங்காளிச் சண்டை என்பதை மறுப்பதற்கில்லை நல்லவர்களுக்குத் தெய்வம் துணை நிற்கும் என்ற வகையில் தேவர்கள் பக்கம் மும்மூர்த்திகளும் இருந்து அருள்கிறார்கள். அசுரர்களுக்கும், தெய்வங்கள் அருளும் வரமும் தருகிறார்கள் என்றாலும் அவர்கள் அதனைத் தவறாகப் பயன்படுத்துவதால் தெய்வங்களின் துணையை இழந்து அழிவைத் தேடிக் கொள்கிறார்கள்) குழந்தைக்கு சூரியன் எனப்பெயரிட்டு அழைத்தனர். குழந்தை இயற்கையிலேயே பிரகாசமான அறிவுடன் விளங்கினான். தந்தையின் அறிவுரைப்படி பிரம்மதேவனைக் குறித்துத் தவம்புரிந்த ஆதித்யனுக்கு பிரம்மாவும் நேரில் தோன்றி எண்ணிறந்த வரங்களை நல்கி ஆசிர்வதித்தான். பிரம்மாவிடம் வரம் பெற்றதால் பிரகாசமான தேஜஸும், கிரஹ பதவியும் கிடைக்கப் பெற்றான். லோக சஞ்சாரத்திற்காக சூரியனுக்குப் பிரம்மதேவன் ஒரு சக்கரம் உள்ள தேரும், குதிரையும் வழங்கினான். அதன்படி லோக சஞ்சாரம் துவங்கிய ஒளிக்கடவுள் மேருமலையைக் தாண்டி தனது ரதத்தைச் செலுத்த முடியாமல்இடருற்றான். இதன் காரணம் அறியப் பெறாதவனாய் மீண்டும் பிரம்மதேவனைத் துதித்தான். நேரில் தோன்றிய பிரம்மா "சிவபெருமானைத் துதியாமல் துவங்கும் எந்தச் செயலும் சித்தியடைவதில்லை. எனவே நீ உனது தந்தையாகிய காச்யபரிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று பூமியில்புண்ய நதிக்கரைகளில் நவரத்தின இலிங்கங்களை ஸ்தாபிதம் செய்து பூஜிப்பாய். அப்போது உனக்குக் காரியத்தடை விலகுவதுடன் இன்னும் பல சிறப்புக்களும் பெறுவாய்." என்றுரைத்து மறைந்தருளினார். ஆதித்யனும் பிரம்மதேவனின் கட்டளைப்படி தனதுதந்தையிடம்திருஐந்தெழுத்தை உபதேசமாகப்பெற்று பூமியின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புண்ணிய நதிகளைத் தேடியடைந்து அதன் கரைகளில் ஒவ்வொரு இடத்திலும் ஒரு இரத்தினம் வீதம் 8 லிங்கங்களை ஸ்தாபிதம் செய்து விட்டு, நிறைவாக புண்யநதியாகிய மணிமுத்தா நதிக்கரையில் முன்னாளில் அமிர்தத்துளிகள் சிந்தியதால் உண்டானதும் பாரிஜாத மரங்கள் நிறைந்ததுமாகிய இந்த வனப் பகுதியை அடைந்து, ஒன்பதாவது இரத்தின லிங்கத்தை ஸ்தாபித்துப் பூஜிப்பதற்கு இதுவே தகுந்த இடம் எனத் தெரிந்து பாரிஜாத மரத்திற்குக் கீழ்திசையில், (இப்போதுள்ள ஆலயத்தின் உட்புறம் (ஈசானபாகத்தில்) வடகிழக்கு மூலையில்) தன்பெயரால் (சூரியதீர்த்தம்) ஒரு தீர்த்தம் உண்டுபண்ணி அதற்கு எதிர்பாகமான (நிருதி பாகத்தில்) தென் கிழக்கில் நீல ரெத்தின மணியாலாகிய இலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து, அதன் இடப்பாகத்தில் அன்பே உருவானவளாய், அழகெல்லாம் நிரம்பப் பெற்றவளாய், அம்பிகையையும் ஸ்தாபிதம் செய்து அம்மையப்பனுக்கு ஆதி இரத்தினேச்வரர் சிநேகவல்லி எனத் திருநாமம்சூட்டி, விநாயகர், முருகன் முதலான பரிவார மூர்த்தங்களையும் அவரவர்க்குரிய இடங்களில் சைவாக்ம முறைப்படி பிரதிஷ்டை செய்து, தானுண்டாக்கிய தீர்த்தத்தால் அபிஷேகஞ் செய்து, பாரிஜாத மலராலும் வில்வதளத்தாலும் அர்ச்சித்து வழிபட்டான். அவனது வழிபாட்டால் மகிழ்வுற்ற பரமேச்வரன் தனது தேவியுடன் தோன்றி அவனுக்கு அருள் செய்து "இனி உனது சஞ்சாரத்திற்குத் தடையிருக்காது, என்று அனுக்கிரஹித்து கிரஹங்களின் தலைவனாக நீ என்றும் விளங்குவாய், உனது தேஜஸ் பல நூற்றாயிரம் மடங்கு பெருகுவதாக" என வரமீந்து மறைந்தருளினார். இந்த உலகத்தின் ஆதியாகிய (தொடக்கமாகிய) சூரியனால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற இரத்தினமயமான இலிங்கம் விளங்கும் தலம் ஆகையால் இத்தலத்திற்கு ஆதிரெத்தினேச்வரம் என்கின்ற பெயர் உண்டாயிற்று. இந்த தீர்த்தத்திலே சூர்ய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு நீராடி, ஸ்ரீ ஆதிரெத்தினேச்வரரை வில்வதளத்தினாலே அர்ச்சித்து வழிபடுபவருக்கு சகல காரிய சித்தியும் ஏற்படும் என்பது திண்ணம். நீர்க்கடன் பெறாத (திலதர்ப்பணம் செய்யாத புத்திரர்களைப் பெற்றவர்கள்) பிதுருக்களின் வாரிசுகள் இந்த தீர்த்தத்தில் நீராடி இறைவனை பூஜிக்க அந்த பிதுர்க்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முக்தியடைகிறார்கள். மேலும் இங்குள்ள லிங்கம் நவகிரஹங்களில் முக்கிய அங்கம்பெறும் நீலம் என்னும் ரெத்தினத்தால் ஆனதாகையால் இத்தலத்து இறைவனை சனிக்கிழமைகளில் வில்வதளத்தால் அர்ச்சித்துக் கிரமப்படி பரிகார பூஜை செய்பவர்களுக்கு ஜென்மச்சனி, கண்டச்சனி, பாதச்சனி, அஷ்டமச்சனி, அர்தாஷ்டமச்சனி முதலான சனிதோஷங்களால் ஏற்படும் பாதிப்புகள் அகலும். இத்தலத்து இறைவனின் திருநாமத்தை இடைவிடாமல் உச்சரிப்பவருக்கு ஜோதிஷ்டோம யாகம் என்னும் யாகம் செய்த பலன் கிடைக்கும் என்றும் தலபுராணம் வலியுறுத்துகிறது. (இந்த யாகம் செய்து தான் சூரிய பகவான் ஜோதி வடிவத்தைப்பெற்றான்).

வாருணி சாபம் நீங்கப்பெற்ற வரலாறு

நமது பாரத பூமி உலகம் அனைத்துக்கும் சிறந்த பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் எழுந்த அதியற்புதமான சரித்திரங்களையும் புராண இதிகாசங்களையும் தன்னுள்ளே கொண்டுள்ளது என்று நாம் பெருமையுடன் சொல்லிக்கொள்ளும் அளவிற்குச் சிறப்பானது. மனிதன் பின்பற்ற வேண்டிய பண்பாட்டு நடைமுறைகளை வெறும் அறிவுரைகளாக மட்டும் சொல்லாமல் அதனை அனைவரும் உணரும் வண்ணம் சம்பவங்களோடு இணைத்து “இந்த நடைமுறை தவறினால் இந்த விளைவு ஏற்படும்” என்று விளக்கும் வகையில் அந்தப் படைப்புகள் அமைக்கப்பெற்றுள்ளன. “அடுத்தவன் சொத்துக்கு ஆசைப்பட்டால் அணுவும் மிஞ்சாது அழியும்” என்பதனை விளக்குவது மஹாபாரதம். பிறன்மனை நயந்தான் பெயர், புகழ், செய் புண்ணியம் மட்டுமல்ல தன் குடும்பத்தோடு தானும் அழிவான் என்பதை விளக்க எழுந்தது இராமாயணம். அதே போல ஓர் மனிதனை மனிதன் மதித்து வாழவேண்டும் என்ற மேலான பண்பாட்டை வலியுறுத்துவது நமது இலக்கியங்கள். “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற குறள் இதனை உணர்த்தும். ஒரு பக்தன் இன்னொரு பக்தனை அவமதிக்கக்கூடாது. ஒரு சிவனடியார் இன்னொரு சிவனடியாரைக் கண்டபோது “நமச்சிவாயம்” என்று சொல்லி வணங்கவேண்டும். அவரையும் சிவமாகவே பாவிக்கவேண்டும் என்பது சைவக்கொள்கை. சுந்தரமூர்த்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுவாமிகள் தனது சித்தத்தைச் சிவன்பாலே செலுத்தி வேறு சிந்தனையற்றவராய் திருவாரூர் ஆலயத்திலுள்ளே நுழைகிறார். அங்கே தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார் கூட்டம் ஒன்று நின்று கொண்டிருக்கிறது. சுந்தர மூர்த்தி சுவாமிகள் வருவதைக் கண்ணுற்ற அச்சிவனடியார்கள் "நமச்சிவாயம்" என்று சொல்லி வணங்குகிறார்கள். ஆரூரன் அடிக்கமலங்களை மட்டுமே சிந்தை கொண்டு நடந்ததால் அவர்களுடைய வணக்கத்தைக் கவனிக்காதவராய் மேலே சென்றார். அந்தக் கூட்டத்திலே நின்று கொண்டிருந்த சிவனடியாராகிய விறன்மிண்ட நாயனார் என்பவர் சுந்தரர் செயல் செருக்கோடு நடந்து கொள்வதாக எண்ணி "இவன் சிவனடியாருக்கும் சிவபெருமானுக்கும் புறம்பானவன்" என்று கூறிச் சுந்தரமூர்த்தி நாயனாரை ஏசுகிறார். இது சுந்தரமூர்த்தி நாயனாருடைய காதிலே விழுகிறது. சிவனடியார்களை மதியாமற் சென்று சிவநிந்தனை செய்துவிட்டோமே! என்று எண்ணி மயங்குகிறார். அப்படியே சிவனடியார் கூட்டத்தைப் பணிந்து எழுகின்றார். "அடியார் பெருமக்களே! அடியேனுடைய பிழையைப் பொறுத்தருளவேண்டும். அடியேன் அகந்தையால் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை, தில்லைவாழ் அந்தணர் முதல் திருவாரூரிலே பிறந்த கடைசிக் குடிமகன் வரை அத்துணைபேருக்கும் நான் அடியவன்". என்று கூறி திருத்தொண்டைத் தொகையைப் பாடுகிறார். அதன் மூலம் 63 நாயன்மார்களைப் பற்றிய விபரங்கள் நமக்குக் கிடைத்தது.

இவ்வாறு ஒரு மனிதன் சக மனிதனை மதிக்க வேண்டும். தம்மைவிட வயதிலும் அனுபவ ஞானத்திலும் உயர்ந்தவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். என்பதைப் பல்வேறு வகைளில் வலியுறுத்தி வந்திருக்கிறது நமது சமயம். அந்தவகையில் அமைந்தது இந்த வாருணி சாபம் நீங்கிய கதை.

அட்டதிக்பாலகர்களில் மேற்றிசைக்கதிபனாகிய வருணபகவானுக்கு வாருணி என்கிற புத்திரன் ஒருவன் இருந்தான். அவன் சகல கலைகளிலும் வல்லவனாகவும், சிறந்த சிவபக்தனாகவும் விளங்கினான். ஒருமுறை பக்தி மேம்பட்டவனாய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தனது சகாக்களுடன் கையிலயங்கிரி சென்று சிவபெருமானை வணங்கிவிட்டு வரும் வழியில், புஷ்பத்திரை என்கிற நதிக்கரையில் துர்வாச முனிவரின் ஆசிரமம் இருப்பதைக் கண்டு அங்கு சென்றான். அவன் சென்ற சமயம் முனிவர் பெருமான் தியானத்தில் இருந்தார். தவசீலர்களைக் கண்டவுடன் வணங்க வேண்டும் என்பது நடைமுறை; என்றாலும் முனிவர் தியானத்தில் இருக்கிறார் என்கின்ற எண்ணத்திலும், தாம் கயிலை சென்று சிவபெருமானையே வணங்கி வருகிறோம் என்கின்ற மமதையினாலும் முனிவரை வணங்கத் தவறியதுடன் அகங்காரம் மேம்பட்டவனாய் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தான். தியான நிலையில் இதனை உணர்ந்த துர்வாச முனிவர் அவனுடைய அகந்தையை அடக்க எண்ணங்கொண்டவராய், தியானத்திலிருந்து கோபத்தோடு எழுந்து "ஒரு சிவனடியாருக்குடைய இயல்பை மறந்தவனாய் "ஆட்டுக்கிடாயைப்போல அறிவில்லாமலும் யானையைப்போல மதங்கொண்டவனாகவும் நீ நடந்து கொண்டமையால் இன்று முதல் உனது உருவம் ஆட்டின் தலையும் யானையின் உடலும் கொண்டதாக மாறக்கடவது" என்று சபித்தார். தனது தவற்றையுணர்ந்த வாருணி, முனிவர் பெருமானைச் சரணடைந்து பலவாறு துதித்து, தனது தவறுக்கு வருந்தி, மன்னிப்பும் கேட்டுக்கொண்டு சாப நிவர்த்தியை வேண்டிநின்றான். பெரியவர்களின் கோபம் கணநேரமே இருக்கும். ஆதலால் முனிவர்பெருமான் அவனை அருட்பார்வை பார்த்து, சிவனடியாரை நிந்தித்த பாவத்திற்குத் தண்டனை அனுபவித்தேயாக வேண்டும். மேலும் எனது சாபத்தை என்னாலும் நிவர்த்திக்க இயலாது, சிவனருளால் மட்டுமே அது இயலும். ஆகவே நீ இந்த உருவத்துடன் 12 ஆண்டுகள் மட்டும் வனத்தில் சஞ்சரித்து அதன்பிறகு உனது பிதாவாகிய வருணனுடன் அகத்திய முனிவரை வணங்கி உபதேசம் பெற்று அவருடைய அறிவுரைப்படி பாரிஜாத வனத்தை அடைந்து மார்க்கண்டேய முனிவரிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்று, அங்கு சூர்யதீர்த்தத்தில் நீராடி, அங்கு சூரியனால் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள ஆதிரெத்தினேச்வரரை வழிபட உனது சாபம் நிவர்த்தியாகும்" என்று அருளினார். மேலும் அவர் கூறுகிறார். உலோகங்களிலே தங்கம் முதன்மையானது, பிராணிகளில் பசு உயர்ந்தது, நதிகளில் கங்கை முதன்மையானது, பறவைகளில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கருடன் முதன்மையானது, பஞ்ச பூதங்களில் அக்னி சிறப்பு வாய்ந்தது. ரஸங்களில் அமிர்தம் முதன்மையானது, தேவர்களில் மஹாவிஷ்ணு முதன்மையானவர், மந்திரங்களில் பிரணவம் முதன்மையானது. ஜபங்களில் பஞ்சாக்ஷரம் முதன்மையானது, அதுபோல மனிதப்பிறவியில் அந்தணர்கள் முதன்மையானவர்கள். (தில்லைவாழ் அந்தணர்களை முதன்மையாகக் கொண்டே பெரியபுராணம் துவங்குகிறது.) அதுவும் பிறப்பால் வருவதன்று, வேதாகம புராண இதிகாசங்களைப் படித்தோதுவதோடு அதன் வழி நிற்கும் தகுதியான் வருவது. ஆகவே அத்தகைய தகுதிவாய்ந்த அந்தணர்களையும் தவசிகளையும் அவமதித்தால் ஏற்படும் விளைவு இங்கு உன்னால் உணர்த்தப்பட்டது. உனக்கு ஜெயமுண்டாகும் போய் வா" என்று அனுக்கிரஹித்து அனுப்பினார். வாருணியும் அக்கணமே ஆட்டின் தலையும், யானையின் உடலும் கொண்ட விசித்திர உருவம் எய்தி கானகத்தில் சஞ்சரிக்கலானான். (12 மாதங்களை ஒரு நாளாகக் கொண்ட தேவர்களுக்கு 12 ஆண்டுகள் சாபத்தை அனுபவிப்பது ஒன்றும் பெரியவிஷயமன்று அவர்களுடைய வாழ்நாளில் அது வெறும் 12 நாட்கள் மட்டுமே. நமது நீதிமன்றங்களில் 15 நாள் சிறைதண்டனை விதிப்பதும் இதுவும் ஒன்றே). தூதர்கள் மூலம் இதனைக் கேள்வியுற்ற வருணனும் மிகுந்த மனத்துயரத்துடன் தக்க காலம் வரும்வரை காத்திருந்தான்.

அடர்ந்த வனங்களில் சஞ்சரித்து வந்த வாருணியும் 12 ஆண்டுகள் நிறையும் தருவாயில் விதிப்பயனால் தென் திசையை வந்தடைந்தான். தக்க தருணம் வந்ததை உணர்ந்த வருணபகவானும் அகத்திய முனிவரின் வரவை இறைஞ்சி நிற்கிறார். முக்காலமும் உணர்ந்த தவசீலராகிய அகத்திய முனியும் வருணனின் இருப்பிடஞ்சென்றார். முனிவரின் வருகையை அறிந்த வருணனும் அவரை முறைப்படி வரவேற்று, உயர்ந்த ஆசனத்தில் அமர்த்தி, முறைப்படி அதிதிபூஜை செய்து உபசரித்து, பிறகு தனது மகனுக்குத் துர்வாசரால் ஏற்பட்ட சாபத்தைக் கூறி அதன் நிவர்த்திக்கான வழியையும் வேண்டி நின்றான். நடந்தவற்றைத் தனது ஞானத்தால் உணர்ந்து கொண்ட குறுமுனியும் "அஞ்ச வேண்டாம்" என்று அவனுக்கு அபயங்கொடுத்து, இந்த சாபத்திற்குரிய நிவர்த்திஸ்தலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எங்கிருக்கிறது என்று யோகத்தால் அதனையும் அறிந்து வருணனுக்கு நல்லுபதேசங்கள் செய்து "மேற்றிசைக்கதிபனே! காவிரியின் தென்பாகத்தில் பாண்டிய நாட்டிலே திருக்காளிஸ்வரத்திற்குத் தென்கிழக்கில், புனிதமான மணிமுத்தா நதிக்கரையில் பாரிஜாத வனம் ஒன்று இருக்கின்றது. அங்கு சூரியனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட லிங்கமும், தீர்த்தமும் இருக்கிறது. நீயும் உடனடியாக அந்த வனத்தையடைந்து உனது புத்திரனுடன் அங்கு வசித்து வரும் சிரஞ்சீவியான மார்க்கண்டேய முனிவரைச் சரணடைந்து முறைப்படி பூஜிப்பாய். அவரும் உனது புதல்வனுக்குப் பஞ்சாக்ஷர உபதேசம் செய்விப்பார். அந்த மந்திரத்தை ஜெபித்தபடி நின் மகனைச் சூர்ய தீர்த்தத்தில் நீராடி எழச் செய்வாய். அப்போது சாப விமோசனம் நிகழும். மேலும் அங்குள்ள தெக்ஷிணாமூர்த்தி சன்னியில் அமர்ந்து பஞ்சாக்ஷர மந்திரத்தை ஆறுலக்ஷம் முறை பக்தியுடன் ஜெபிக்க எல்லாம் வல்ல பரமேச்வரன் பிரத்யக்ஷமாகி அநேக வரங்களை அருளுவார்" என்று உபதேசித்தருளினார். வருணனும் அகத்திய முனிவரைப் பணிந்து நன்றியுணர்வோடு பலவாறு துதித்து அவரது நல்லாசியுடன் முன்னர் கூறிய புண்ணிய பூமியாகிய பாரிஜாத வனத்தை அடைந்து, அங்கு சாப நிவர்த்தி வேண்டிநிற்கும் தனது மகனைக் கண்டு மனங்கலங்கினான். பிறகு அவனை அழைத்துக் கொண்டு மார்க்கண்டேய முனிவரின் ஆசிரமத்தையடைந்து, அந்த முனிவருக்குப் பாத பூஜைகள் செய்து தாங்கள் தயைகூர்ந்து எனது புதல்வனுக்கு பஞ்சாக்ஷர உபதேசம் செய்தருள வேண்டும் என்று பணிந்து நிற்க; முனிவர் பெருமானும் அவனுடைய நிலைக்கு இரங்கி அவனுக்குப் பஞ்சாக்ஷர உபதேசம் செய்தருளினார். வருணனும் வாருணியும் நன்றிப் பெருக்குடன் முனிவரைப் பணிந்து அதன்மேல் சூரிய தீர்த்தத்தையடைந்து, வாருணியை பஞ்சாக்ஷர மந்திரம் ஜெபித்தபடி அந்த தீர்த்தத்தில் நீராடி எழச்செய்தான். அவ்வாறு அந்த தீர்த்தத்தில் நீராடி எழும்பொழுது வாருணியும் தனது ஆடும் ஆனையுமான தோற்றத்திலிருந்து விடுபட்டு, முன்பிருந்ததைவிட அதிகமான தேஜசுடன் சுந்தர ரூபனாகி வெளிவந்தான். வருணனும் மிகவும் மனமகிழ்ந்து தனது புதல்வனுடன் ஆதிரெத்தினேஸ்வரரைப் பணிந்து, அவரை எண்ணற்ற வில்வ தளங்களால் அர்ச்சித்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அகத்திய முனிவர் உரைத்தபடி அங்குள்ள தெக்ஷிணாமூர்த்தி சன்னதியில் அமர்ந்து தனது புதல்வனை ஆறுலக்ஷம் முறை பக்தி சிரத்தையுடன் பஞ்சாக்ஷரத்தைச் ஜெபிக்கச் செய்தான். வாருணியும் அவ்வாறே பக்தியுடன் ஜெபிக்க எல்லாம் வல்ல பரம்பொருளாகிய பரமேஸ்வரன் தேவியுடன் எழுந்தருளி அவனுக்கு நீண்ட ஆயுளும், அளவற்ற காந்தியும், இன்னும் அநேக விதமான வரங்களும் அருளி அவனை ஆட்கொண்டார்.

இங்கு ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பெரியவர்கள் அருளாளர்களுடைய கோபம் நமக்கு பாதிப்பை ஏற்படுத்துவது போலத் தோன்றினாலும் முடிவில் அதனால் ஏற்படும் நன்மைகள் அளவிட முடியாததாக இருக்கின்றது. துர்வாச முனிவரின் சாபம் வாருணிக்கு ஆரம்பத்தில் துன்பத்தைக் கொடுத்தாலும் நிறைவில் சாப நிவர்த்தியளித்ததோடு மார்க்கண்டேய முனிவரிடம் பஞ்சாக்ஷர உபதேசப் பேற்றையும் அதன் மூலம் அவனுக்கு அம்மையப்பன் தெரிசனமும் அளவற்ற வரங்களும் நற்பயனும் கிடைக்கப் பெற்றான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பகுதியில் வில்வ மகாத்மியம் விரிவாகச் சொல்லப்படுகிறது. மார்க்கண்டேய முனிவர் வாருணிக்கு இத்தலத்தில் விளங்கும் வில்வ மரத்தின் பெருமையையும், வில்வ தளத்தால் சிவபெருமானை அர்ச்சிப்பதால் ஏற்படும் நற்பலன்களையும் விரிவாக எடுத்துரைக்கிறார். அவற்றின் சாரம் வருமாறு.

1. இத்தலத்தில் விளங்கும் வில்வமரம் மிகவும் மகிமை வாய்ந்தது.

2. மற்ற சிவத்தலங்களைப் போலவே இத்தலத்து இறைவனுக்கும் வில்வார்ச்சனை சிறப்பானது.

3. இத்தலத்தில் சிறப்புற விளங்கும் வில்வ மரத்தை வலம்வந்து வில்வ தளத்தினாலும் வில்வப் பூவினாலும் பஞ்சாக்ஷர ஜெபம் செய்தபடி சிவார்ச்சனை செய்பவன் தான் விரும்பிய நற்பேறுகளையெல்லாம் ஒருசேரப் பெறுகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. ஞாயிறு, மற்றும் திங்கட்கிழமைகளில் ஆதிரெத்தினேஸ்வரரை வில்வதளத்தால் அர்ச்சித்து வழிபடுகின்றவன் சிவஞானத்தைப் பெறுகிறான்.

5. அமாவசை, பௌர்ணமி, சூரிய சந்திர கிரஹண காலங்கள், வியதீபாத புண்யகாலம், சங்கராந்தி புண்ய காலம், அவரவர் ஜென்ம நக்ஷதிரம், திருவாதிரை நக்ஷத்திரம், பிரதோஷ காலம், சதுர்த்தி திதி ஆகியவை வில்வார்ச்சனை செய்வதற்கு மிகவும் உகந்த காலங்கள்.

(குறிப்பு: மேற்கூறிய புண்ய காலங்களிலும், திங்கட் கிழமையிலும் வில்வ தளங்களைப் பறிக்கக் கூடாது. எனவே பூஜைக்குரிய வில்வத்தை முந்தைய தினமே பறித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது)

6. அமாவாசையிலும், தாய் தந்தையர் அற்றவர்கள் அவர்கள் இறந்த திதி நாளிலும் வில்வார்ச்சனை செய்தால் அந்த பித்ருக்களும் அவர்களுடைய முன்னோர்களும் நரகத்திலிருந்து விடுபட்டு சிவபதம் அடைவார்கள்.

7. இத்தலத்தின் வில்வ மரத்தினடியில் நம் முன்னோர்களுக்கு நீர்க்கடன் செலுத்திப் பிண்டம் அளிப்பவனுடைய பித்ருக்கள் அந்த பிண்டத்தில் உள்ள அன்னத்தின் (சாதத்தின்) எண்ணிக்கையளவு ஆண்டுகாலம் சிவலோகத்தில் இருப்பார்கள்.

8. அவ்வாறு நீர்க்கடன் அளிப்பவனும், வில்வார்ச்சனை செய்பவனும் அவனது சந்ததிகளும் சிவனருளால் பிறவா நிலையடைவார்கள்.

குறிப்பு : வில்வதளம் : ஒரு காம்பில் மூன்று இலைகளைக் கொண்ட வில்வம் ஒரு வில்வ தளமாகும். சிவபெருமானை இவ்வாறு மூன்று மூன்று இதழ்களைச் கொண்ட வில்வத்தாலேயே பூஜிக்கவேண்டும் என்பது தாத்பர்யம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேற்கூறிய தாத்பர்யங்களை மார்க்கண்டேய முனிவர் வாருணிக்கு விளக்கமாகக் கூறியருள அவனும் மூன்று மாதகாலம் தன் தந்தையுடன் இத்தலத்தில் தங்கியிருந்தான். வருணனும் ஆதிரெத்தினேஸ்வரருடைய சன்னதியில் தன் பெயரில் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி அதில் கங்கை முதலான சப்த நதிகளையும் ஆவாஹனம் செய்து அந்த தீர்த்தத்தால் ஆதிரெத்தினேஸ்வரருக்கு அபிஷேகம் செய்து முன்னர் கூறிய முறைப்படி வில்வதளத்தால் அர்ச்சித்துக் கிடைத்தற்கரிய நற்பேறுகளையெல்லாம் பெற்றார்கள்.

முனிவர்கள், தபஸ்விகள், பிராம்மணோத்தமர்கள் முதலானவர்களின் சாபத்தால் பீடிக்கப்பெற்று துன்பத்தை அனுபவிப்பவர்கள் இந்த வருண தீர்த்தத்தில் நீராடி ஆதிரெத்தினேச்வரரை வில்வதளத்தால் பஞ்சாக்ஷர ஜெபத்துடன் முறைப்படி அர்ச்சிப்பவர்கள், சாபத்தின்று விடுபடுவதுடன் அளவற்ற நன்மைகளையும் பெறுவார்கள் என்பது சத்தியம்.

ஆட்டின் தலையும், யானையின் உடலும் கொண்ட விசித்திர ரூபத்துடன் விளங்கிய வாருணியின் சாபம் நீங்கப் பெற்றதால் அன்று தொட்டு இத்தலம் அஜகஜேச்வரம் (அஜம் = ஆடு, கஜம் = யானை) திருவாடானை என்றழைக்கப் பெற்று வருகிறது.

மார்க்கண்டேயர் பூஜித்த கதை

ராக்பெல்லர் என்பவர் ஒரு சிறந்த தொழிலதிபர். உலகம் முழுவதும் தனது நிறுவனத்தை ஸ்தாபித்து அதன் மூலம் உலகின் பெரிய பணக்காரர்கள் வரிசையில் முதலிடம் பிடித்தவர். அவர் தனது தள்ளாத வயதில் தனது தொழில் நிமித்தமாக விமானப் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரது அருகில் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்த இளைஞன் ஒருவன் "நீங்கள் அதிகமாக உழைத்து அதன் மூலம் உலகின் முதற்பணக்காரர் என்கின்ற அந்தஸ்தையும் பெற்றுவிட்டீர்கள். இந்தத் தள்ளாத வயதில் வீட்டில் அமர்ந்து ஓய்வெடுக்காமல் எதற்காக இவ்வளவு சிரமப்படுகிறீர்கள்?" என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கேட்டான். அதற்கு, ராக்பெல்லர் பதிலளித்தார் "தம்பி இந்த விமானத்தை தரையிலிருந்து மேலே எழுப்புவதற்கு விமானி எவ்வளவு சிரமப்பட்டார் பார்த்தாயா முதலில் இவ்வளவு பெரிய விமானத்தைச் சரியாக ஓட்டி அதனுடைய ஓடு பாதையின் மையத்தில் கொண்டுவந்து நிறுத்த வேண்டும்! பிறகு சரியான வேகத்தில் அதனை இயக்கி குறிப்பிட்ட தூரம் ஓடுபாதையில் அதனை ஓடச்செய்ய வேண்டும்! பிறகு காற்றைக் கிழித்துக் கொண்டு புவியீர்ப்பு விசையை மீறி அதனை ஆகாயத்தில் செலுத்த வேண்டும்! குறிப்பிட்ட உயரத்தில் அதனை நிலையாக பறக்கவிடும்வரை பலவிதமான தடைகளை அவர் கடக்க வேண்டும். இவ்வளவு தடைகளையும் கடந்து வந்த விமானம் இப்பொழுது சீராகப் பறந்து கொண்டிருக்கிறது. விமானம் சீராகப் பறந்து கொண்டிருக்கிறது என்பதற்காக விமானத்தின் இயக்கத்தை நிறுத்திவிட முடியுமா? அதுபோலத்தான் நானும் பலவிதத் தடைகளையும் தாண்டி எனது உழைப்பின் மூலம் உயர்ந்து ஒரு உன்னத நிலையை அடைந்திருக்கிறேன். இந்த நிலையில் நான் எனது உழைப்பிலிருந்து விலகி ஓய்வெடுத்தால் அது நடுவானில் விமானத்தின் இயக்கத்தை நிறுத்திய விமானியைப்போல நானும் மண்ணைக்கவ்வ வேண்டிய நிலை வந்துவிடும்." என்று கூறினார். இந்தக் கதை உழைப்பாளர்களுக்கு மட்டுமல்ல அருளாளர்களுக்கும் பொருந்தும். இடைவிடாத முயற்சியினாலே இறையருளும் இறை தெரிசனமும் பெற்றுவிட்ட அடியார்கள்; அந்த ஒருமுறை ஆட்கொள்ளபட்டதோடு திருப்தியடைந்து அந்த முயற்சியை கைவிட்டுவிடுவதில்லை. மீண்டும் மீண்டும் அந்தப் பேரின்ப வெள்ளத்திலே திளைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்கான முயற்சியிலும் இடைவிடாது முயலுகிறார்கள். திருப்பெருந்துறையிலே இறைவனாலே ஆட்கொள்ளப்பட்டு அவரிடமே பஞ்சாக்ஷர உபதேசமும் பெற்ற மணிவாசகர் அத்துடன் திருப்தியடையவில்லை. "எங்கெழுந்து அருளுவது இனியே" என்று மீண்டும் மீண்டும் இறைவனிடமே கேட்டு இறை தெரிசனத்திற்காக ஏங்கி நிற்கிறார். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பது பக்தி விஷயத்திற்குப் பொருந்தாது. அந்த வகையில் அமைவது இந்த மார்க்கண்டேயர் பூஜித்த கதை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மார்க்கண்டேயரைப் பற்றிய செய்திகள் யாவரும் அறிந்த ஒன்றுதான். அவரைப் பற்றிய அறிமுகம் அதிகம் தேவையில்லை என்று நினைக்கிறேன். 16 ஆண்டுகள் மட்டுமே வாழ்நாள் என்கின்ற நிபந்தனையுடன் பிறந்தவர். தனது வாழ்நாளில் ஒவ்வொரு வினாடியையும் சிவ சிந்தையிலும், சிவ வழிபாட்டிலும் கழித்தவர். தனது 16ம் வயது நிறைவடையும் தருவாயில் எமதர்மன் பாசக் கயிற்றுடன் வருவதைக் கண்டு திருக்கடையூரிலே எழுந்தருளும் சிவபெருமானிடம் தஞ்சம் புகுந்தார். தான் என்ற அகந்தையுடன் எமதர்மனானவன் சிவலிங்கத்தையும் சேர்த்துத் தனது பாசத்தால் இழுக்க வெகுண்டெழுந்த பரம்பொருள் எமதர்மனை வதைத்து மார்க்கண்டர்க்கு அருள்புரிந்து "என்றும் பதினாறு வயதுடன் விளங்குவாயாக" என்று ஆசீர்வதித்தார். பிறகு உலக இயக்கத்தின் பொருட்டு தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் எமதர்மனுக்கு உயிர் பிச்சையளித்தார். இவ்வாறு தனது இடைவிடாத பக்தியின் மூலம் சிவ தரிசனமும், சிரஞ்சீவித்துவமும் பெற்ற மார்க்கண்டேயன் அத்துடன் திருப்தியடைந்து தனது முயற்சியினை நிறுத்திவிடவில்லை. இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அந்தப் பேரின்ப நிலையை மீண்டும் மீண்டும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினார். அதற்கான முயற்சியினையும் மேற்கொண்டார்.

ஐம்பது எழுத்தே அனைத்து வேதங்களும்
ஐம்பது எழுத்தே அனைத்து ஆகமமும்
ஐம்பது எழுத்தேயும் ஆவது அறிந்தபின்
ஐம்பது எழுத்தும் போய் ஐந்தெழுத்தாமே!

என்ற திருமூலர் வாக்கிற்கிணங்க "ஓம் நமச்சிவாய" என்கின்ற ஐந்தெழுத்து மந்திரத்தின் முழுப்பொருளையும் உணர்ந்து, தெளிந்து அதன்பின் அதனை ஜெபித்தலே மற்ற மந்திர ஜெபங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது என்பதைத் தனது அனுபவ ஞானத்தால் தெளிந்து, அவ்வாறு அந்த பஞ்சாக்ஷர ஜெபம் செய்வதற்கு ஏற்ற இடம் எது என்பதை அறியமுற்பட்டு கௌதமர் முதலான முனிவர்களுடன் கலந்தாலோசிக்க, அவர்களும், முன்னாளில் அமிர்தத் துளிகள் சிந்தியதால் புனிதமடைந்ததும், சூரியனால் பிரதிஷ்டை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யப்பெற்று பூஜிக்கப் பெற்றதும், நீல ரெத்தினமயமானதுமான, மணிமுத்தா நதிக்கரையில்விளங்கக் கூடிய ஆதிரெத்தினேஸ்வரமே பஞ்சாக்ஷர ஜெபம் செய்வதற்கு ஏற்ற இடம் என்று தெளிந்து மார்க்கண்டேயருடனேயே கௌதமர் முதலான ரிக்ஷிகளும் புறப்பட்டு அனைவரும் ஆதிரெத்தினேஸ்வரத்தை அடைந்து இறைவனைப் பணிந்து பஞ்சாக்ஷர ஜெபம் செய்து வந்தார்கள். மார்க்கண்டேயர் அத்தலத்தால் ஈர்க்கப்பெற்று அங்கேயே ஓர் பர்ணக சாலை அமைத்துத் தங்கினார். அங்கே ஆதிரெத்தினேஸ்வரர் ஆலயத்திற்குத் தென் பாகத்தில் தன்பெயரிலேயே (மார்க்கண்டேய தீர்த்தம்) ஓர் தீர்த்தத்தை உண்டாக்கி பஞ்சாக்ஷர ருத்திர மந்திரங்களைப் பிரயோகித்தும், கங்கை முதலான புண்ணிய நதிகளை ஆவாஹனம் செய்தும் புனிதமாக்கினார். அந்த தீர்த்தத்திற்கு மேற்றிசையில் மார்க்கண்டேய லிங்கம் என்ற லிங்கத்தையும் ஸ்தாபித்து முறைப்படி பூஜித்து இடைவிடாமல் பஞ்சாக்ஷர ஜெபம் செய்து வந்தார்.

இங்கு ஒரு சந்தேகம் எழுவது இயல்பு. இந்தத் தலத்திலே முன்பே சூரியனால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற ஆதிரெத்தினேஸ்வரர் என்கின்ற லிங்கம் இருக்கின்றதே அதற்கே இவர் அபிஷேகம் பூஜைகள் செய்திருக்கலாமே அதைவிடுத்து இவர் தன்பெயரில் தனியாக ஒரு லிங்கம் ஸ்தாபித்து பூஜை செய்வது ஏன்? என்கின்ற கேள்வி எழும். துறவிகள் சன்யாசிகள் போன்றவர்களுக்கு பூணூல், அரைஞாண் போன்றவைகள் இல்லாத காரணத்தினாலும் ஒற்றையாடை உடுத்துவதாலும் (துறவிகள் முற்றும் துறந்தவர்கள் ஆடை ஆபரணங்களில் பற்றில்லாதவர்கள். எனவே மானத்தைக் காக்கும் பொருட்டு கோவணம் மட்டுமே அணிந்திருப்பார்கள். சமீபத்தில் வாழ்ந்து முக்தியெய்திய பகவான் ரமணமஹரிஷி கூட அதிக காலம் கோவணத்துடனேயே காட்சியளித்தார் என்பது பலரும் அறிந்த ஒன்று. இன்றும் கங்கை நதிப்புறத்து வாரணாசிக் காடுகளில் எந்தவிதமான ஆடையும் அணியாத துறவிகளும் வாழ்கிறார்கள் என்பதும் உண்மையே) அதிக காலம் தியானத்திலும் யோகத்திலும் நிலைத்து விடுவதாலும் பரார்த்த பூஜைக்குரிய மூல லிங்கத்தைத் தொட்டு பூஜிப்பதை சன்யாசிகளுக்குப் பொருந்தாத ஒன்றாகக் கருதி சைவ உலகம் அதனைத் தவிர்த்து வந்துள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பரார்த்த பூஜையானது பிறருக்காகச் செய்யப்படுவது. அதாவது தனிமனிதன் என்றில்லாமல் பொதுஜனங்கள் ஆட்சியாளர்கள் உலக அமைதி, நன்மை, பிற உயிர்களின் நலன் என்பன அனைத்தும் அதனுள் அடங்கும். "சர்வேஜனா: சுகினோ பவந்து"என்ற வாக்கியம் இதனை உணர்த்தும். இந்த பரார்த்த பூஜையானது எந்தவிதக் காரணத்தைக் கொண்டும் தடைபடாது நடத்தப்பட வேண்டியது அவசியம். அந்த அவசியம் கருதியே காப்புக்கட்டிக் கொண்டு திருவிழா நடத்துபவர்களுக்கு காப்பு அவிழ்க்கும் வரை சாவு முதலியவற்றால் ஏற்படும் தீட்டு தோஷங்கள் இல்லை. விழாக்கள் இல்லாத சாதாரணக் காலங்களில் இது போன்ற பிறப்பு, இறப்பு தீட்டுக்கள் ஏற்படுகின்ற பொழுது பிரம்மச்சாரியாக இருப்பவனுக்கு தீட்டு தோஷம் இல்லை, எனவே அவனைக் கொண்டு நித்ய பூஜைகளைச் செய்விக்கலாம் என்பது போன்ற விதிவிலக்குகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆக எக்காரணம் கொண்டும் பரார்த்த பூஜைகள் தடைபட்டுவிடக் கூடாது என்பதில் நம் முன்னோர்கள் உறுதியாக இருந்துள்ளார்கள் என்பது புலனாகின்றது.துறவிகள் சன்யாசிகளுக்கு இந்த நியதிகள் பொருந்தாது.மேலும் அவர்கள் ஸ்தாபித்த லிங்கம் அவர்கள் விட்டுச் சென்ற அடையாளமாகவும் கருதப்படுகிறது.

எனவே மார்க்கண்டேய முனிவரும் தன்னிஷ்டப்படிக்கு பூஜை செய்யும் விதத்தில் தனியாகவொரு லிங்கத்தை ஸ்தாபித்து தினமும் வில்வதளத்தால் முறைப்படி பூஜித்து இடைவிடாமல் பஞ்சாக்ஷர ஜெபம் செய்து வந்தார். (இவர் மட்டுமல்ல மற்ற முனிவர்களும் துறவிகளும் இதன் காரணம் தொட்டே புண்ய தலங்களில் தங்கியிருக்கின்ற காலத்தில் அங்கு தான் பூஜிப்பதற்கென தனியாக லிங்கப் பிரதிஷ்டை செய்திருக்கின்றார்கள். அவர்கள் பூஜித்த லிங்கங்களே பல புராதன ஆலயங்களின் உட்பிரகாரங்களில், அகத்திய லிங்கம், மார்க்கண்டேய லிங்கம், கௌதம லிங்கம் போன்ற பெயர்களில் ஸ்தாபிக்கப் பெற்றுள்ளன என்பதை இங்கு நாம் நினைவுபடுத்த விரும்புகிறோம்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு மார்க்கண்டயே முனிவரும் இத்தலத்தில் அதிககாலம் தங்கி வில்வதளத்தாலும் பலவித மலர்களாலும் பூஜித்து இடைவிடாமல் பஞ்சாக்ஷர ஜெபமும் செய்து வந்தார். அவருடைய பக்திக்கும் வழிபாட்டிற்கும் மனமிறங்கிய ஆதிரெத்தினஸ்வரர் அவரை ஆட்கொண்டு பலவித நல்லுபதேசங்களும் வில்வத்தின் மகிமையையும் அருளினார். அவற்றின் சாரம் வருமாறு.

வில்வ மரமும், ருத்ராக்ஷர மரமும், பரமசிவனின் இரண்டு கண்களுக்கு ஒப்பானதாகும் (இவையிரண்டும் பிரமனின் இரு கண்களில் இருந்து தோன்றியவை என்பது ஐதீகம்) எனவே இவ்விரு மரங்களும் ஈசனுக்கு இணையானவை. வில்வ மரத்தின் பெருமையும் வில்வ அர்ச்சனையின் மகிமையும் முன்பு மஹாவிஷ்ணுவிற்கு இறைவனாலே எடுத்துச் சொல்லப்பட்டது. அதனை அவர் தனது துணைவியாகிய மஹாலக்ஷமிக்கு உபதேசிக்க அதன் மகிமையை உணர்ந்த திருமகளும் தான் வில்வமரத்தின் அடியிலே நித்யவாசம் செய்யப்போவதாக உறுதியளித்தாள்.

இத்தலத்து வில்வமரம் மிகவும் மகிமைவாய்ந்தது. இந்த வில்வமரத்தை வலம்வந்து அதன் மண்ணை எடுத்து விபூதியாக இட்டுக் கொள்பவருக்கு தலையில் எழுதப்பெற்றுள்ள கெட்ட எழுத்துக்கள் மாறி நல்லதே நடக்கும்.

புத்திரபாக்கியம் இல்லாத தம்பதிகள் இந்த வில்வ மரத்தை 16 முறை வலம் வந்து நமஸ்கரித்து இந்த வில்வ மரத்தடி மண்ணை ஒரு வில்வ பழம் அளவு எடுத்துக்கொண்டு சென்று அதனுடன் நீரைக் கலந்து வடிகட்டி அந்நீரை 30 நாட்கள் வரை குடிக்க குழந்தை பாக்கியம் கிடைப்பது நிச்சயம். அந்தக் குழந்தை அறிவும் பக்தியும் மேம்பட்டவனாய் நீண்டநாள் வாழ்ந்திருப்பான் என்பதும் நிச்சயமே.

இத்தலத்து இறைவனின் அபிஷேக தீர்த்தத்தோடு அர்ச்சித்த வில்வத்தையும் ஒரு மண்டல காலம் உட் கொள்பவருக்கு அனைத்து வியாதிகளும் குணமாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இத்தலத்தில் வில்வ மரங்களை நட்டு வளர்ப்பவரும் வளர்ந்த வில்வ மரங்களுக்கு நீரூற்றிப் பராமரிப்பவரும் சிவனருளால் இம்மையில் எல்லாவிதமான நலன்களையும் மறுமையில் சிவபிரானுடைய திருவடியில் என்றும் நிலைத்திருக்கும் தன்மையும் பெறுவார்கள்.

மேற்கூறிய விளக்கங்களோடு வருணன் மகன் வாருணிக்கு மார்க்கண்டேய முனிவர் முன்னர் கூறிய வில்வ மஹாத்மியமும் இறைவனான ஆதிரெத்தினேஸ்வரரால் மார்க்கண்டேயருக்கு உபதேசிக்கப் பெற்றது. அதன் படியே மார்க்கண்டேய முனிவரும் இத்தலத்தில் மற்ற முனிவர்கள் புடைசூழ மேலும் பல்லாண்டுகள் தங்கியிருந்து சிவவழிபாடு செய்துவந்தார்.

இவ்வாறு மார்க்கண்டேய முனிவர் இங்கு தங்கியிருந்த காலத்திலேயே வருணன் மகன் வாருணி சாபவிமோசனம் வேண்டி இத்தலத்திற்கு வந்தான் என்பதும், பல்லாண்டுகாலம் பஞ்சாக்ஷர ஜெபமும் வில்வார்ச்சனையும் செய்தவராகையால் அவரே வாருணிக்கு பஞ்சாக்ஷர உபதேசம் செய்யத் தகுதியானவர் என்பதால் துர்வாசரும், அகத்தியரும் வாருணியை மார்க்கண்டேய முனிவரிடம் உபதேசம் பெறச்செய்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திராவிட தேசத்து அரசன் நாய்பிறவி நீங்கிய கதை

ஒரு சிற்றூர். அந்த ஊரிலே ஒரு பெரிய மாளிகை இருக்கிறது. அன்றையதினம் அந்த மாளிகைக்குச் சொந்தக்காரர் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறார். அமைச்சரும், அதிகாரிகளும் அந்த விருந்தில் கலந்துகொள்வதாக ஏற்பாடு! தடபுடலான சமையல்! எல்லாம் முடிந்து விருந்துக்குத் தயாராக இருக்கிறார்கள். வரவிருக்கும் அமைச்சரையும் அதிகாரிகளையும் தெருமுனையிலேயே வரவேற்று வாத்திய கோஷங்கள் முழங்க அழைத்து வருவதாக ஏற்பாடு. வீட்டு உரிமையாளரும் உறவினர்களும் தெருமுனையிலேயே காத்திருக்கிறார்கள். மதியம் 1.00 மணிக்கு மேல் ஆகிவிட்டது வீட்டில் எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டது. தெருக்கோடியிலே வாத்ய முழக்கங்கள் உச்சஸ்தாயியில் கேட்கின்றன. வரவேற்பு வைபவத்தைக் பார்க்கும் ஆர்வக்கோளாறு காரணமாக பணியாளர்களும் தெருமுனைக்கு வந்துவிட்டார்கள். மாளிகை வெறிச்சோடிக் கிடக்கின்றது. அந்த நேரத்தில் நீண்டதூரம் நடந்துவந்த களைப்பும், பசியின் தாக்கமும் மிகுந்த ஒருவர் அந்த மாளிகை வாசலுக்கு வருகிறார். அவர் வெளியூர்க்காரர் என்பதால் அவரை இங்கு யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை. செல்வச் செழிப்பில் அவரும் குறைந்தவரில்லை என்றாலும் வந்த இடத்தில் கைப்பொருளையெல்லாம் தொலைத்துவிட்டு வழிமாறி இந்த ஊருக்கு வந்திருக்கிறார். வெகுதூரம் நடந்து வந்ததால் ஆடைகளெல்லாம் அழுக்கடைந்து காணப்படுகின்றது. உடலும் தளர்ந்து முகமும் வாடிக்கிடக்கின்றது.

வந்தவர் வாசலில் நின்று கூப்பிடுகிறார். "வீட்டில் யாராவது இருக்கிறீர்களா?" பதிலில்லை; உள்ளே நுழைகிறார், கூப்பிடுகிறார். பதிலில்லை; இப்படி ஒவ்வொரு கட்டமாக நுழைகிறார், இறுதியில் விருந்து மண்டபத்திற்கு வருகிறார். பலவிதமான பதார்த்தங்கள் பரிமாறப்பட்டு தயாராக இருக்கிறது. சுற்றுமுற்றும் பார்க்கிறார். கண்ணுக்கெட்டிய தூரம்வரை யாரும் இல்லை, தான் பணக்காரன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்கின்ற இறுமாப்பு (தன் கோலம் முற்றிலும் மாறியிருக்கிறது. என்பதை அவர் உணரவில்லை) யார் வந்து கேட்டாலும் பதில் சொல்லிக்கொள்ளலாம் என்கின்ற எண்ணத்தில் ஓர் இலையில் அமர்ந்து உண்ணத் தொடங்குகிறார். அந்த நேரம் வரவேற்பதற்காக வாங்கி வைத்துள்ள உயர்ரக பட்டு சால்வையை (தனது பீரோவிலேயே மறந்து வைத்துவிட்டதை) எடுத்து போக வீட்டு உரிமையாளர் அங்கு வருகிறார். வந்தவர் விருந்து மண்டபத்தில், தாம் விதவிதமாகப் பார்த்துப் பார்த்து செய்யச் சொல்லிய பதார்த்தங்களை, அமைச்சரும், அதிகாரிகளும், உற்றார் உறவினர்களும் ருசித்து ரசித்து உண்ண வேண்டியதை யாரோ ஒரு பரதேசி அமர்ந்து உண்டு கொண்டிருப்பதைப் பார்க்கிறார். அவருடைய மனநிலை எப்படியிருக்கும் அவருடைய நடவடிக்கைகள் எப்படியிருக்கும். கொஞ்சம் சிந்தியுங்கள்; அவர் வெகுண்டெழுவது இயல்பு தானே? கோபத்தால் "திறந்த வீட்டில் நாய் நுழைந்து திண்பது போலத் திண்கிறாயே நீ யார்?" என்று கேட்பதும் இயல்புதானே? அப்படித்தான் அந்த வீட்டு உரிமையாளரும் அனுமதியின்றிக் சாப்பிட்டுக் கொண்டிருப்பவரைக் கேட்கிறார். உடனே சாப்பிடுபவருக்கு கோபம் வந்துவிட்டது. அவர் அனுமதியின்றி அந்த வீட்டினுள் நுழைந்தது அவருக்குக் குற்றமாகப் படவில்லை. யாருடைய அனுமதியும் இன்றி தானாகவே சாப்பிடத் துவங்கியதும் கூட அவருக்குக் குற்றமாகத் தெரியவில்லை. வீட்டுக்காரர் நாய்க்கு சமமாக வைத்துத் தன்னைப் பேசியது மட்டும் அவருக்குக் குற்றமாகப் போய்விட்டது. (தானும் ஒரு செல்வந்தர்தான் என்கின்ற மமதை) பதிலுக்கு அவனும் பேசுகிறான். "என்னைப் பார்த்தா நாய் என்கிறாய் நீ தான் இப்போது நாய் போலக் கத்திக் கொண்டிருக்கிறாய்" என்று பதில் சொல்கிறார். எஜமான் குரல்கேட்டு எங்கோ இருந்த ஒருசில வேலையாட்கள் வேகமாக வருகிறார்கள். நடந்ததை யூகிக்கிறார்கள். சாப்பிட்டவரை நையப்புடைத்து வெளியே துறத்துகிறார்கள். இது உலக இயல்புதானே சாப்பிட்டவர் சற்று அடக்கத்துடன் தன்னிலையை விளக்கியிருந்தால் ஒருவேளை சாப்பாட்டைத் தொடர்ந்திருக்கலாம். அல்லது குறைந்தபட்சம் அடிபடாமலாவது தப்பியிருக்கலாம். அப்படியல்லாத அகந்தையும் வாய்க்கொழுப்புமல்லவா அவரை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவமானப்பட வைத்தது. வாழ்ந்து மடியும் மனிதனுக்காகச் சமைக்கப்பட்ட உணவை சாப்பிட்டவருக்கே இந்த நிலை என்றால் ! நித்யவ்யாபியான பரமேச்வரனுக்கு ஒவ்வொரு நாளும் உணவு படைத்து நிவேதனம் செய்து அந்தப் பிரசாதத்தையே உணவாகக் கொள்ளும் பழக்கமுடைய ஒருவர் வீட்டில், அவ்வாறு இறைவனுக்காகச் சமைத்து வைக்கப்பெற்றுள்ள உணவை உரியவர் வீட்டில் இல்லாத நேரம் யாரோ ஒரு வழிப்போக்கர் உள்ளே சென்று சாப்பிட்டதுமல்லாமல் வீட்டுக்காரரையே எதிர்த்துப் பேசுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அங்கே என்ன நடக்கும்? இதன் அடிப்படையில் அமைந்துதான் இந்த திராவிட தேசத்து அரசன் நாய்ப்பிறவி பெற்று நீங்கிய கதை (இதே மனநிலையில் இருந்து கதையைப்படியுங்கள்.)

முன்னாளில் நீர்வளமும் நிலவளமும் நிறைந்ததும் காவிரி பாய்ந்து வளம்பல கொழிக்கக் கூடியதாகவும், காவிரி நதியின் வடக்குக் கரையில் அமைந்ததுமான நகரமொன்றிருந்தது. காவிரிக் கரையில் செழிப்புற விளங்கியமையால் அதனை மக்கள் காவிரிப்பட்டிணம் என்றே அழைத்துவந்தனர். அந்த நகரைத் தலைமையிடமாக கொண்டு போஜேஸ்வரன் என்ற அரசன் ஆண்டு வந்தான். ஹம்ஸத்வஜன் என்று மக்களால் அன்புடன் அழைக்கப் பெற்று வந்த அந்த அரசன், நீதிமானாகவும், தர்ம சிந்தனை மிக்கவனாகவும், மக்களிடம் மகுந்த அன்புகொண்டு அவர்களின் குறையை உடனுக்குடன் தீர்ப்பவனாகவும், சிறந்த பக்தனாகவும், நிர்வாகத் திறமை மிக்கவனாகவும், மற்ற அரசர்களால் மதிக்கப்படுபவனாகவும் விளங்கினான். நாட்டில் செழிப்பும், அமைதியும் நிலவும் சமயங்களில் மன்னர்கள் வேட்டையாடிப் பொழுதைக் கழிப்பது மரபு. (நீண்ட காலம் போர்த்தொழில் செய்யாமலிருந்தால் பழக்கம் விட்டுப்போகுமென்பதால் அம்பெய்தல், ஈட்டி எறிதல் போன்ற பயிற்சியை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு இவ்வழக்கத்தை மேற்கொண்டனர். இப்போது இருப்பது போன்ற புளூ கிராஸ் போன்ற அமைப்புகள் அப்போது இல்லை. எனவே வன விலங்குகளுக்கு சகவிலங்குகளால்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மட்டுமன்றி மனிதர்களாலும் ஆபத்து இருந்தது என்னவோ உண்மை.)

அவ்வாறு வேட்டையாடும் எண்ணத்துடன் தனது சகாக்கள் புடைசூழ அடர்ந்த வனப்பகுதியை அடைந்து வேட்டையாடத் துவங்கினான். அன்றைய தினம் அவனுக்கு வனவிலங்குகள் ஓரளவிற்கு அகப்படவே செய்தன. என்றாலும் ஓர் அழகான புள்ளிமானைப் பார்த்துவிட்டவன் அதனைஎப்படியாவதுபிடிக்க வேண்டும் என எண்ணியவனாய் குதிரையை அதன்பின் செலுத்தினான். மானின் வேகத்திற்கு ஈடுகொடுத்து அவனும் தன் சகாக்களைவிட்டு வெகுதூரம் வந்து விட்டான். உச்சி வேளையைத் தாண்டி சிறிது நேரம் ஆகிவிட்டது. மான் கண்ணிற்குப் படவேயில்லை. காலையிலிருந்து உணவருந்தவில்லை. நீரும் கூடக் கிடைக்கவில்லை. தலைக்கு மேலே கதிரவன் வேறு சுட்டெரிக்கிறான். மிகவும் களைப்படைந்த மன்னன் அருகில் நீர்நிலைகள் ஏதும் இருக்கிறதா என்பதை அறியும் நோக்கில் குதிரையை மெல்லச் செலுத்தினான். சிறிது தூரத்தில் அழகான இயற்கைச் சூழலுக்கு மத்தியிலே ஓர் குடில் தெரிகிறது. அதனை நோக்கித் தனது குதிரையைச் செலுத்துகிறான். அது சுமந்து முனிவரின் ஆச்ரமம். முனிவரும் அவர் பத்தினியும் அந்த ஆசிரமத்திலே தங்கியிருந்தனர். ஒவ்வொரு நாளும் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் எழும் அத்தம்பதிகள், தினசரி அனுஷ்டானங்களை முடிப்பார்கள். பின்னர் முனிவர் பெருமான் பூஜைக்கு வேண்டிய மலர்களையும், பழங்களையும் பறிக்கச் செல்வார். முனி பத்தினியார் உணவு சமைப்பதில் ஈடுபடுவார். பூஜைப் பொருட்களும், உணவும் தயாரான பிறகு உச்சிப் பொழுதிலே இருவரும் அருகிலே ஓடிக் கொண்டிருக்கும் நீரோடையிலே சென்று நீராடுவார்கள். நீராடி வந்த பிறகு பழங்களையும் சமைத்த உணவையும் இறைவனுக்குப் படைத்துப் பூஜை செய்வார்கள் பிறகு அந்த பூஜை பிரசாதத்தை உணவாக உட்கொள்வார்கள். இது அவர்களுடைய அன்றாட நடைமுறை. அன்றும் அப்படித்தான் உணவும், பூஜைக்குரிய மலர் முதலானவைகளையும் தயாரித்து வைத்துவிட்டு நீராடச் சென்றிருந்தனர். இந்த விபரங்கள் எதுவுமே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறியாத போஜேஸ்வரன்; அவர்கள் நீராடச் சென்றிருந்த அந்த நேரத்தில் ஆசிரமத்தை அடைந்தான். வந்தவன் சுற்றும் முற்றும் பார்த்தான் ஆசிரம வாயில் வெறுமனே சாத்தப்பட்டிருந்தது. யாரும் உள்ளே இருக்கிறீர்களா? நான் போஜன் வந்திருக்கிறேன்! பதிலில்லை. கதவை மெதுவாகத் தள்ளித் திறந்தான் "நான் இந்நாட்டு மன்னன் வந்திருக்கிறேன், உள்ளே யாரும் இருக்கிறீர்களா"? உள்ளே யாரும் இல்லையாதலால் பதிலில்லை. உள்ளே சென்றான். அங்கே பூஜைக்குரிய பூக்கள், மலர்கள் எல்லாம் தயாராக மூங்கில் கூடையிலே எடுத்து வைக்கப் பெற்றிருந்தது. இன்னொருபுறம் சமைத்த உணவு வகைகள் அதற்குரிய பாத்திரத்தில் வைக்கப்பெற்றிருந்தன. ஒரு மங்களமான சூழல் அங்கே நிலவிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் காத்திருந்து பார்ப்போம் யாரும் வருகிறார்களா? என்று ஆழ் மனம் தான் இவ்வாறு சொல்லியதே தவிற அவனுடைய செயல் அதற்குமாறாக இருந்தது. நெடுந்தூரம் பயணம் செய்த களைப்பு, பசி, தாகம், அத்துனையும் அவனை உந்தித்தள்ள, புத்தி வேறுவிதமாக யோசித்தது. "நானோ மன்னன். ஒரு நாட்டின் மன்னன் என்பவன் இறைவனுக்குச் சமமானவன்! அதனாலன்றோ இறை என்ற சொல் மன்னனையும் குறிக்கும் வகையில் அமைத்துள்ளார்கள். மேலும், இது எனது ஆட்சிக்குட்பட்ட பிரதேசம். எனது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ளது எல்லாம் எனக்குச் சொந்தமானது. எனக்குச் சொந்தமான பொருளை நான் உபயோகிப்பதற்கு யாருடைய அனுமதியைப் பெற வேண்டும்." என்று புத்தியானது குறுக்குவழியில் யோசிக்க ஆரம்பித்தது. "பசி ருசியறியாதது மட்டுல்ல; தர்ம நீதியும் அறியாதது" என்பதை இந்த ராஜாவின் அனுபவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்ட மன்னன் அங்கே சமைத்து (பூஜைக்காக) வைக்கப்பட்டிருந்த உணவை எடுத்துச்சாப்பிடத்துவங்கினான்.

நீராடச் சென்றிருந்த சுமந்து முனிவரும் அவர் துணைவியாரும் முன்னும் பின்னுமாக ஆசிரமத்தை அடைந்தார்கள். ஆசிரமக்கதவு திறந்திருக்கிறது. உள்ளே அரவம் வேறு கேட்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

காட்டு விலங்குகள் ஏதேனும் உள்ளே நுழைந்திருக்குமா? சந்தேகத்தோடு மெதுவாக உள்ளே எட்டிப்பார்க்கிறார்கள். உள்ளே யாரோ ஒருவர் பூஜைக்காக வைக்கப்பெற்றிருந்த உணவைப் புசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். எல்லோருக்கும் இயற்கையாக வரக்கூடிய கோபம் அவருக்கும் வந்தது. இருந்தாலும் துறவி என்பதால் ஓரளவிற்குப் பொறுமைகாத்தவராய் பூஜை நிவேதனத்திற்காகக் சமைத்து வைக்கப்பெற்றுள்ள உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறீரே? நிவேதனம் செய்வதற்காக வைக்கப்பெற்றிருக்கிறது என்பதும், இன்னும் நிவேதனம் செய்யப்படவில்லை என்பதும் பார்த்தவுடன் பாமரருக்கும் புரியுமே, நீரோ அரசகுமாரன் போல் இருக்கிறீர். உமக்கு எப்படித் தெரியாமற்போனது?. வீட்டில் யாரும் இல்லாத போது வீட்டாரின் அனுமதியின்றி இவ்வாறு புசிப்பது முறையா? தர்மமறிந்த நீர் இவ்வாறு செய்வது முறையா? உமது அறிவு மங்கிவிட்டதா? புதிதாகச் சமைத்து பூஜிப்பதற்கும் அரிசி முதலிய பொருட்கள் இல்லாத நிலையிலிருக்கிறோமே! இனி உண்டு மிகுந்த இந்த அன்னத்தை நாங்களும் சாப்பிட முடியாத நிலையில் இருக்கிறோமே! இனி என்ன செய்வது? என்று வினவினார். அவருடைய கேள்வியில் இருக்கக்கூடிய நியாயம் மன்னனுக்குப் புரியவே செய்தது. இருந்தாலும் தான் இந்நாட்டு மன்னன் இவர்கள் நமது குடிமக்கள். ஒரு சாதாரணக் குடிமகன் மன்னவன் செய்கையைக் குற்றம் கற்பித்துப் பேசுவதா? என்று ஒரு கணம் யோசித்தான்; அந்த அகந்தையுடனேயே பேச ஆரம்பித்தான் "ஏய்! முனிவனே இது எனது ஆட்சி, அதிகாரத்திற்குட்பட்ட பகுதி. இங்குள்ளவை யாவும் எனக்கு உடமையானவை. எனது உடமையை அனுபவிக்க நான் யாருக்காகவும் காத்திருக்க வேண்டியதில்லை. யாருடைய அனுமதியும் எனக்குத் தேவையில்லை", என்று சற்றுக் காட்டமாகவே பதிலளித்தான். சுமந்து முனிவருக்கு உண்மையிலேயே கோபம் உச்சத்தை எட்டியது. மன்னன் என்றும் பாராமல் "பிறருடைய இல்லத்தில் உரியவர் யாரும் இல்லாத நேரத்தில் திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல நுழைந்து உண்டதுமல்லாமல் அகந்தையோடு வேறு பேசுகிறாயா?" என்று காட்டமாகவே கேட்டார் முனிவர். தன்னை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நாய்க்குச் சமமாக முனிவர் பேசியதைக் கேட்ட மன்னன் கடுங்கோபங் கொண்டான். சாதாரணக் குடிமகனாக இருந்தால் அவ்விடத்திலேயே தனது உடைவாளுக்கு இரையாக்கியிருப்பான். இவர்கள் ஆசிரமவாசிகள் தினமும் அறவழிநின்று இறைவழிபாடு செய்யும் அந்தணர். அவரைக் கொன்றால் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டுக் காலமெல்லாம் அல்லல்பட நேரிடும். உடன் காவலர்கள் யாரும் இருந்தால் அவர்களைக் கைது செய்து அரண்மனைக்குக் கொண்டு சென்று தண்டிக்கலாம்; இங்கோ நாம் தனியாக இருக்கிறோம்! என்று யோசித்த மன்னன் தன்னை நாய்க்குச் சமமாக வைத்துப் பேசிய சுமந்து முனிவனை "நீர் நாயாக இருந்து உமது பத்தினியோடு கூடச் சஞ்சரிப்பீராக" என்று சாபம் கொடுத்தான். இதுவரை இருவரது வாக்குவாதத்தையும் உடனிருந்து கவனித்து வந்த முனி பத்தினியானவள் மன்னன் தனது கணவனைச் சபித்ததைக் கேட்டுப் பொறுக்கமாட்டாதவளாய் "நீர் இக்கணமே நாயாகக் கடவாய்"என்று சபித்தாள். அந்தக் கணமே மன்னவனும் நாயாக மாறினான்.

இங்கு நமக்கு ஒரு சந்தேகம் தோன்றுவது இயல்பு முனிவர்கள், ஞானிகள், யோகிகள் முதலானவர்கள் சதாசர்வ காலமும் ஜெபமும் தவமும் செய்து அதன்மூலம் அதிக சக்தியும் வல்லமையும் படைத்தவர்களாயிருப்பதால் அவர்களின் சாபங்கள் பலிதமாவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் இங்கு அரசன் எவ்வாறு முனிவனைச் சபிக்கிறான்? அவன் எந்த நம்பிக்கையில் தனது சாபம் பலிக்கும் என்று நம்பினான்? என்கின்ற ஐயம் எழுபது இயல்புதான்.

பொதுவாக யோகிகள், ஞானிகள் தங்களது தபோபலத்தால் அளவற்ற ஆற்றல் பெற்றிருப்பார்கள் என்றாலும், அவர்கள் தனது தபோபலத்தைத் தவறாக உபயோகிக்க நினைத்தாலும் தனக்குரிய தர்மத்தை அநுஷ்டித்துக் கொண்டிருப்பவர்களிடம் தவறாகத் தனது கோபத்தைக் காட்ட முயற்சித்தாலும் அவர்களுடைய சாபம் பிறரைப் பாதிக்காது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உதாரணத்திற்கு மஹாபாரதத்திலிருந்து ஒருகதை :

"கௌசிகன்" என்ற பெயருடைய பிரம்மச்சாரி ஒருவன் ஒரு கானகத்தில் ஆலமர நிழலில் அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தான். மனமொருமித்த ஜெபமும், பிரம்மச்சரியமும் இணைந்து அவனுக்கு ஒருவித ஆற்றல் உண்டாகியிருந்தது. இது அவருக்கே தெரியாது; ஒருநாள் காலையில் மரத்தடியில் அமர்ந்து ஜெபம் செய்து கொண்டிருந்தான். அப்போது மரக்கிளையில் அமர்ந்திருந்த கொக்கு ஒன்று அவன் தலையில் எச்சமிட்டது. தனது ஜெபத்திற்கு இடையூறு நேர்ந்ததால் சினம் கொண்ட கௌசிகன் கோபத்தோடு நிமிர்ந்து அந்தக் கொக்கைப் பார்த்தான். தபஸ்வியின் கோபக்கனலால் தாக்குண்ட கொக்கு உடனே கிளையிலிருந்து இறந்து விழுந்தது. தனது கோபத்துக்கு ஒரு உயிரை இறையாக்கி விட்டோமே என்று அவன் சிறிது வருத்தப்பட்டாலும், தன்னுடைய தவத்தால் தனக்கு அளவற்ற சக்தி வந்து விட்டதாக நினைத்து கர்வமும் கொள்ளலானான். அந்தக் கர்வத்துடனேயே அன்றையதினம் பிட்சைக்கும் சென்றான். ஒரு அந்தணர் வீட்டு வாயிலில் சென்று நின்று பிட்சை கேட்டான் "பவதி பிக்ஷாந் தேஹி" இவன் பிக்ஷைக்கு வந்த நேரம் அந்த வீட்டுப் பெண்மணி தனது கணவனுக்காக சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். தனது வேலைகளை முடித்துக்கொண்டு தன்னைக் கவனிப்பாள் என்று அவனும் காத்திருந்தான். தனது வேலைகளை முடித்துக் கொண்டு பிரம்மசாரிக்கு பிக்ஷைபோட வந்தாள். அதற்குள் அவளுடைய கணவன், வெளியில் சென்றிருந்தவன் மிகுந்த களைப்புடன் வந்து "எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. சீக்கிரம் உணவு பரிமாறு" என்றான். மறுபேச்சு ஏதும் பேசாத அந்த இல்லத்தரசி உடனடியாகத் தனது கணவனுக்குப் பணிவிடை செய்யத் துவங்கினாள். கணவனுக்கு உணவு பரிமாறி, அவன் உண்டு எழுந்தபிறகு அவனுக்கு தாம்பூலம் கொடுத்து உபசரித்துவிட்டு பிறகு சாவகாசமாக கௌசிகனுக்குப் பிக்ஷை எடுத்துவந்து போட்டாள். பிக்ஷையிட்டவள் "சுவாமி என் கணவனுக்குப் பணிவிடை செய்ததால் தங்களுக்குப் பிக்ஷையிடத் தாமதமாகிவிட்டது. என்னை மன்னிக்க வேண்டும் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாமதத்திற்கு மன்னிப்பும் கேட்டுக் கொண்டாள்". ஆனால் கௌசிகனுக்கு கோபம் தணியவில்லை. "அம்மா நான்கு வீடுகளுக்கு பிக்ஷைக்குப் போக வேண்டிய என்னை இவ்வளவு நேரம் காக்கவைத்த உனது செயல் தகாதது" என்று கோபமாகக் கூறினான். அவள் மீண்டும் தனது செயலுக்கான நியாயத்தைக் கூறி வருத்தம் தெரிவித்தாள். ஆனால் கௌசிகன் கோபம் சிறிதும் குறையாதவனாய் தனக்கு அளவற்ற சக்தி இருப்பதாக எண்ணிக் கொண்டு முன்பு மரக்கிளையில் தனது தவத்திற்கு இடையூறு செய்த கொக்கைப் பார்த்தது போன்ற அதே பார்வையை அந்தப் பெண்மணி மீதும் செலுத்தினான். பதிவிரதையான அந்த பெண்மணியும் சிரித்தபடியே அந்த பிரம்மச்சாரியை நோக்கி "சுவாமி நான் கொக்கல்ல! உங்களுடைய கோபம் என்னை ஒன்றும் செய்யாது". என்று சொன்னதும் கௌசிகனுக்கு பெருத்த ஆச்சர்யம்! நான் கொக்கை எரித்தது இவளுக்கு எப்படித் தெரிந்தது? என்று யோசித்தான். அந்தப் பெண்மணி முனிவனை நோக்கி "சுவாமி கொக்கு விஷயம் எனக்கு எப்படி தெரிந்தது! என்று யோசிக்க வேண்டாம். அவரவர்க்குரிய தர்ம விதிப்படி நடப்பவர்க்கு எல்லா விஷயங்களும் தெளிவாக புரியும். நான் பதிவிரதா தர்மப்படி நடந்து எனது கணவனுக்கு பணிவிடைகள் செய்த்தால் உங்களுடைய கோபம் என்னை ஒன்றும் செய்யாது. நீங்கள் இன்னும் அறிந்து கொள்ளவேண்டிய தர்மங்கள் நிறைய இருக்கிறது. எனவே மிதிலாபுரிக்குச் சென்று தர்மவியாதரிடம் உபதேசம் பெறுங்கள்" என்று கூறி அனுப்பினாள். அவனும் வியப்புக் குறையாதவனாய் அவளுக்கு நன்றி கூறி மிதிலையை அடைந்தான். தனக்கு உபதேசிக்கப் போகும் தர்மவியாதர் ஏதோ ஒரு ஆசிரமத்தில் இருப்பார் என்று எண்ணிக் கொண்டு சென்றவனை ஊரைவிட்டு ஒதுக்குப் புறமாக இருந்த கசாப்புக் கடையைக் காட்டி அங்கு வியாபாரம் செய்து கொண்டிருந்தவனை இவர்தான் தர்மவியாதன் என்று அடையாளம் காட்டினார்கள். ஒன்றும் புரியாத கௌசிகன் ஒதுங்கியே நின்றான். இவனை அடையாளம் கண்டுகொண்ட தர்மவியாதன் "சுவாமி வாருங்கள்! உங்களை அந்த பதிவிரதைதானே அனுப்பிவைத்தாள்" என்று கேட்டான். பிரம்மசாரிக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாம் அதிசயமாகவே தோன்றியது. "நான் யாரென்று உங்களுக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தெரியுமா"? என்று தர்மவியாதனைக் கேட்டான் கௌசிகன். தர்மவியாதன் பொறுமையாகப் பதில் சொன்னான். "நீங்கள் கொக்கை எரித்ததும் எனக்குத்தெரியும். அந்தணப் பெண்மணியிடம் தாங்கள் கோபம் கொண்டதும் எனக்குத் தெரியும். அவள் உங்களுக்கு அறிவுரை கூறித் தங்களை என்னிடம் அனுப்பிவைத்ததும் எனக்குத் தெரியும்" என்று கூறினான். கௌசிகன் வியப்பு மேலிட்டவனாய் தர்மவியாதனிடம் "இது எப்படிச் சாத்தியம்?" என்று கேட்டான். தர்ம வியாதனும் அவனைத் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்தான். அங்கு தர்மவியாதன் தனது வயதான தாய்- தந்தையருக்கு மனம் நோகாமல் பணிவிடை செய்வதை பார்த்தான். பிற உயிர்களைக் கொன்று வியாபாரம் செய்து பிழைப்பவன் அன்பு, இரக்கம், போன்ற குணங்கள் இல்லாதவனாக இருப்பான் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் ஒரு கசாப்புக் கடைக்காரனிடம் இவ்வளவு அன்பையும், பணிவையும் கண்டு பிரம்மச்சாரி வெட்கித் தலை குனிந்தான். ஏனென்றால் அவன் தனது தாய்-தந்தையரைக் கண்டு கொள்வதே இல்லை. தர்மவியாதன் கௌசிகனுக்கு உண்மையை விளக்கினான். "செய்தொழில் என்பது அவரவர் திறமை மற்றும் சந்தர்ப்ப வசத்தால் அமைவது. ஆனால் தர்மநெறி அனைவருக்கும் பொதுவானது. அவரவர்க்குரிய தர்மநெறிப்படி நின்றொழுகுவார்க்கு இயற்கையே முக்காலமும் உணரும் சக்தியையும், மேலும் பிற ஆற்றலையும் வழங்கும். ஒரு குல பத்தினிக்குரிய தர்ம நெறிப்படி நின்று ஒழுகுவதால் அந்தப் பெண்மணிக்கு உம் செயல் தெரிந்தது. ஒரு புதல்வனுக்குரிய தர்மநெறி பிறழாது நடப்பதால் எனக்கும் உம்மைப் பற்றியும், அந்தத் தர்மபத்தினியை பற்றியும் தெரிந்தது. தர்மநெறிப்படி நின்று தவறேதும் செய்யாதவர்களை உம் போன்றவர்களின் கோபமோ சாபமோ ஒன்றும் செய்யாது. அதனால் உம்முடைய சுட்டெரிக்கும் பார்வை அந்தப் பெண்மணியை ஒன்றும் செய்யவில்லை" என்று கூறி மேலும், பல அறங்களையும் எடுத்துரைத்து அனுப்பிவைத்தான். கௌசிகனும் தனது தாய்-தந்தைக்குப் பணிவிடைகள் செய்து தர்மத்தை அனுசரித்து உய்வுற்றான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தர்மவியாதனைப் போலவே போஜேச்வரனும் இன்றுவரை ராஜதர்மம் மாறாமல் நின்று தனது பிரஜைகளையும், நாட்டையும் காத்துவந்தான். அதனால் அவனிடமும் பிறரை சபிக்கும் ஆற்றல் இருந்தது என்பதில் ஐயமில்லை. எல்லா விதத்திலும் தர்மத்தை அனுசரித்தே நடப்பவன்தான் என்றாலும் "விநாசகாலே விபரீத புத்தி" என்பதுபோல தனது ஊழ்வினை உந்தித்தள்ள அகந்தை மேலிட்டவனாய் முனிவரிடம் பேசி இப்போது வம்பில் மாட்டிக் கொண்டான். முனிவரும், பத்தினியும் தவறேதும் செய்யவில்லையாதலாலும், அவர்கள் பக்கம் நியாயம் இருந்ததாலும் அரசனின் சாபம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை.

இவ்வாறு சுமந்து முனிவருடைய தர்மபத்தினியின் சாபத்தால் நாய் உருவம் எய்திய போஜேச்வரன் தனது நினைவின்றி பற்பல தேசங்களிலும், வனங்களிலும் அலைந்து திரிந்தான். (ராஜனுடன் வேட்டைக்கு வந்த சேனாதிபதி முதலான சகாக்கள் உண்மை உணராதவர்களாய் மன்னனைப் பல இடங்களிலும் தேடிக் களைத்தவர்களாய் நாடு திரும்பினார்கள்.) இவ்வாறு பல்லாண்டுகாலம் பலராலும் நிந்திக்கப் பெற்று சரியான உணவும் கிடைக்காதவனாய் மெலிந்து எலும்பும், தோலுமாகத் திரிந்தவன் தனது புண்ணிய வசத்தால் வேகவதி நதிக்கரையின் வழியாக சோமேச்வரம் என்றழைக்கப்படும் புண்ணிய தலத்தை அடைந்து அங்கு வசித்து வந்த ஓர் நட்டுவனின் இல்லத்தை அடைந்தான். தன்னைப் போலவே எலும்பும் தோலுமாக இருந்த நாயின் உருவத்தைக் கண்டு மனமிரங்கி, அதற்கு உணவிட்டு வளர்த்துவந்தான் அந்த நட்டுவன். இவ்விதம் சிலகாலம் கழிந்தது. ஓர்நாள் அந்நட்டுவன் தனது தொழில் நிமித்தமாக திருவாடானைத் திருத்தலத்தை அடைந்தான். அவன் வளர்த்துவந்த நாயும் அவனுடனேயே வந்து அத்தலத்தை அடைந்தது. நீண்ட தூரம் நடந்து வந்ததால் களைப்புற்ற நட்டுவனார் அங்கிருந்த ஓர் அன்னச் சத்திரத்தில் உணவுண்டு இளைப்பாறினான். சத்திர உரிமையாளர் நாயை அங்கிருந்து துறத்திவிட்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்த நாயும் வேறு வழியின்றி அங்கிருந்த நீங்கி அருகிலிருந்த ஆலய வாசலில் இருந்த வாருணி தீர்த்தமாகிய குளக்கரையை அடைந்தது. பசிக்கு உணவுதான் கிடைக்கவில்லை நீராவது அருந்துவோம் என நினைத்து போஜேச்வரனாகிய அந்த நாய் குளத்துள் இறங்கி நீரை நக்கிக் குடித்தது. வேனிற்காலத்து வெயிலும், நீண்டதூர நடைக்களைப்பும் உடலை வருத்த அப்படியே அந்தக் குளத்து நீரில் இறங்கி சிறிது தூரம் நீந்திச் சென்று உடலை நன்றாக நனைத்துக் கொண்டது. பிறகு மேலே ஏறிய நாய் ஆலய வாசலில் நின்ற வில்வ மர நிழலை அடைந்தது. வில்வ மர நிழலில் குளிர்ந்த காற்று வீசியதால் அங்கேய சிறிது நேரம் படுத்து இளைப்பாற விரும்பி அவ்வாறே செய்தது. படுத்த சிறிது நேரத்திலேயே களைப்பு மிகுதியால் நன்றாக உறங்கிவிட்டது.

எவ்வளவு நேரம் அவ்வாறு உறங்கியதோ தெரியாது. தன்முன்னால் ஏதோ ஓர் ஒளி தோன்றுவதையும், தன் உடலில் ஓர் மாற்றம் நிகழ்வதையும் உணர்ந்த அந்நாய் திடுக்கிட்டுக் கண்விழித்தது. ஒன்றும் விளங்காமல் சுற்றும் முற்றும் பார்த்தது. அதன் முன்னால் தோன்றிய ஒளி மறைந்திருந்தது. அதன் நாயுடல் நீங்கி மன்மதனுக்கு நிகரான அழகிய மனித உடலைப் பெற்றது. தான் போஜேச்வரனாக இருந்த போது வேட்டைக்கு வந்தது முதல் சுமந்து முனிவரின் பத்தினியால் சாபம் பெற்றது வரையிலான அனைத்து நினைவுகளும் அவன் மனக்கண் முன்னால் வந்து போனது. தான் நாயுருக் கொண்டு பன்னெடுங்காலம் அல்லல் பட்டதையும் அவனால் உணரமுடிந்தது. கண்களில் நீர் சொரிய, கரங்களிரண்டும் சிரமேற் குவிய அப்படியே வில்வ மரத்தடியிற் பணிந்தெழுந்தான். ஆதிரத்தினேச்வரரையும், சினேகவல்லி அம்மையையும் வில்வதளத்தாலும் பலவித மலர்களாலும் அர்ச்சித்து பலவித ஸ்தோத்திரங்களாலும், பஞ்சாக்ஷரத்தாலும் வழிபட்டு அவ்விடம் விட்டு நீங்க மனமின்றித் துதித்து வழிபட்டான். அப்போது வானின்று அசரீரியாக ஓர் ஒலி கேட்டது. "போஜேச்வரனே உனது ஊழ்வினைப் பயனால் சுமந்து முனிவனையும், பத்தினியையும் பகைத்துக்கொண்டு சாபத்திற்காளானாய். உனது பூஜைகளும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தானதர்மங்களும், நீ செய்த நல்லாட்சியால் ஏற்பட்ட புண்ணியமும் இணைந்து உன்னை இத்தலத்திற்கு இட்டு வந்தது. வருண தீர்த்தத்தில் நீராடி வில்வ விருக்ஷத்தைப் பணிபவருக்கு ரிஷிகள், முனிவர்கள், பிராமணர்களால் ஏற்பட்ட சாபம் நிவர்த்தியாக வேண்டும் என்று முன்பே தேவேந்திரன் எம்மிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க இன்று அத்தீர்த்தத்தில் நீராடி வில்வ மரத்தடியில் பணிந்து கிடந்த உனக்கு சுமந்து பத்தினியால் ஏற்பட்ட சாபத்தின்றும் விடுதலை கிடைத்தது. மேலும் வில்வத்தாலும் பலவித மலர்களாலும் பஞ்சாக்ஷர மந்திரத்தாலும் துதித்து வழிபட்டமையால் இனி உனக்கு எல்லாம் சுபமே. நீ இன்று முதல் ஒரு கற்பகாலம் இந்திரலோகத்திலிருந்து அங்குள்ள சுகபோகங்களையெல்லாம் அநுபவித்துவிட்டுப்பிறகு எமது திருவடியை அடைவாய் உனக்கு மங்களம்" என்றுரைத்து மறைந்தது. அந்தக் கணமே வானின்று இறங்கிய புஷ்பக விமானத்திலிருந்து இறங்கிய தேவ தூதர்கள் இருவர் போஜனைப் பணிந்து சகல மரியாதைகளுடன் அழைத்துக் கொண்டு இந்திரலோகம் சென்றனர்.

மற்ற பகுதிகளில் கூறியது போலவே இப்பகுதியிலும் வில்வ மஹாத்மியம் கீழ்க்கண்டவாறு கூறப்படுகிறது

"பில்வானாம் தர்சணம் புண்யம் ஸ்பர்சநம் பாபநாசனம்
அகோர பாபஸம்ஹாரம் ஏகபில்வம் சிவார்ப்பணம்"

(ஆதிசங்கரர் – பில்வாஷ்டகம்)

மேற்கண்ட ச்லோகத்தில் வில்வ மரத்தையும், வில்வ தளத்தையும் தரிசிப்பது புண்ணியம் நல்கும். வில்வ தளத்தைத் தொட்டால் நாம் அறியாமற் செய்த பாபங்கள் விலகும், ஒரு வில்வ தளத்தை எடுத்து சிவபெருமானை அர்ச்சித்தால் நாம் செய்த மிகக் கொடிய பாபங்களும் நிவர்த்தியாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது

ஆனால் இத்தலத்திலே விளங்குகின்ற வில்வமரத்தை நினைத்த பொழுதிலேயே பாவங்கள் விலகுகின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"திருவாரூரிலே பிறக்க முக்தி, காசியிலே இறக்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி," என்ற முன்னோர் மொழி போல இந்த தலத்து வில்வ மரத்தையும் நினைத்தளவிலே பாவங்கள் விலகும்.

பௌர்ணமி அமாவாசை போன்ற புண்ணிய தினங்களில் இந்த வில்வமரத்தைப் பூஜித்து வலம் வருபவர்கள் அச்வமேதயாகம் செய்த பலனைப் பெறுவார்கள்.

இம்மரத்தின் நிழலில் அமர்ந்து திரு ஐந்தெழுத்தை ஜெபம் செய்பவர்கள் கோடி ஜெபம் செய்த பலனைப் பெறுவார்கள்.

வறுமையால் வாடுபவர்கள் வெள்ளிக்கிழமைகளில் இவ்வில்வ மரத்தை சுகந்த மலர்களால் அர்ச்சித்து வலம் வந்து வழிபடுபவருக்கு அவர்களுடைய தரித்திரம் நீங்கி அவர்களுடைய இல்லத்தில் மஹாலக்ஷ்மி, நிரந்தர வாசம் செய்வாள்.

பேய் பிசாசு பூதப்பிரேதாதிகள் போன்ற துஷ்ட சக்திகளால் பாதிக்கப் பட்டவர்கள் இந்த வில்வ விருக்ஷத்தை சரணடைந்து வலம்வந்து வழிபட அதிலிருந்து நிவர்த்தியடைகிறார்கள்.

அகத்தியர் பூஜித்த கதை

தங்களுடைய இடைவிடாத பக்தியினாலும், இறைத் தொண்டினாலும் தவத்தினாலும் தெய்வானுக்கிரஹத்தைப் பெற்ற அருளாளர்கள் ஒரே இடத்தில் இருந்து கொண்டு தங்களது வழிபாட்டைத் தொடரமாட்டார்கள். இப்புவியெங்கும் பரவியுள்ள பற்பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும் சென்று அங்கு எழுந்தருளும் இறைவனை அந்தந்தத் தலங்களுக்கே உரிய தனிப்பட்ட வழிபாடுகளைத் தானும் செய்து களிப்படைவார்கள். மழை ஒரே இடத்தில் பொய்தால் புவியின் மற்ற பகுதிகள் காய்ந்து வரண்டு போகும். உலகம் முழுவதும் வேண்டிய காலங்களில் வேண்டிய அளவு மழை பெய்தால்தான் உலகம் செழிக்கும். அதுபோல அருளாளர்களும் இதுபோல பல இடங்களுக்கும் சென்றால்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர்கள் மூலம் அவ்வப் பகுதி மக்களுக்கு நற்பலனும், இறையருளும் கிட்டும். சுந்தரர், ஞானசம்பந்தர் போன்ற அருளாளர்கள் பல தலங்களுக்கும் சென்று இறைவனை பணிந்து பாடியதோடு தாம் சென்ற இடங்களில் இறையருளால் பல அற்புதங்களையும் நிகழ்த்தினார்கள். அதன்மூலம் அப்பகுதி மக்களும் பயன் பெற்றார்கள் என்று பெரிய புராணத்தின் வழி அறிகிறோம். அருணகிரிப் பெருமானும் பாரதம் மட்டுமின்றி கடல்கடந்து இலங்கை சென்று கதிர்காமத்துறையும் கந்தவேளைப் பாடியுள்ளார் என்பதையும் அறிகிறோம். இவ்வாறு செல்வதைச் க்ஷேத்ராடனம் என்று சொல்லுவார்கள். அந்த வகையில் அகத்திய முனிவரும் தனது க்ஷேத்ராடனத்தின் போது இத்தலத்திற்கு வந்து இங்கு தங்கியிருந்து தீர்த்தமும், லிங்கமும் ஸ்தாபித்து வழிபட்டுள்ளார். அதனை இங்கு பார்ப்போம்.

அகத்திய முனிவர் குள்ளமான தோற்றம் கொண்டவர். ஆனால் தனது தவ வலிமையால் அளவிடமுடியாத ஆற்றல் பெற்றவர். காவிரிநதி முழுமையும் தனது கைக்கமண்டலத்தில் அடக்கிய பெருமை கொண்டவர். ஆனால் அன்பே உருவானவர். அடக்கம்நிறைந்தவர்.

கைலாயத்தில் பல துறவிகள் இருந்தார்கள், என்றாலும் அவர்களுக்குள் பக்தியிலும், தவ வலிமையிலும் தாங்களே சிறந்தவர்கள் என்கின்ற கர்வமும் இருந்தது. அதனால் அவர்கள் அகத்தியரைச் சற்று ஏளனமாகவே பார்த்தார்கள். அவர்களின் அகந்தையை நீக்கி அகத்தியரின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என்று சிவபெருமான் திருவுளம் கொண்டார். அந்தத் தருணத்தில் பார்வதி கல்யாணம் நடந்தேற இருந்தது. பார்வதி பரமேச்வரன் திருமணக் கோலத்தைக் காண எண்ணிய தேவர், முனிவர், கந்தர்வர், கிம்புருஷர் எனக் கோடான கோடி கணங்களும் கயிலையில் கூடினர். இத்தருணத்தை பயன்படுத்திக் கொள்ள எண்ணிய பரம்பொருள் கயிலைமலையைச் சிறிது தாழ்ந்து விளங்கும்படி செய்தார். இதனால் மருண்ட சிவகணங்கள் தாழாத கூட்டத்தால் பூமி பாரம் தாங்காமல் தாழ்வதாக எண்ணிச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமானும், அளவிற் சிறியவனாகவும், எளிமையாகவும் காணப்பட்ட அகத்திய முனிவனை அழைத்து "நீர் தென்புறம் சென்று பொதிய மலையில் அமர்வாய் இப்புவி சமமடையும்" என்று பணித்தார். குறுமுனியும் மறுப்பேதும் சொல்லாமல் "தங்கள் திருவுளப்படியே நடக்கச் சித்தமாயிருக்கிறேன் ஆனாலும் ஓர் விண்ணப்பம், தங்கள் திருமணக் காட்சியைக் காண இச்சிறியேனுக்கும் அனுக்கிரஹிக்கவேண்டும்" என்று பணிந்து நின்றார். பெருமானும் "உனக்கும் திருமணக்காட்சி கிடைக்கச் செய்கிறேன்" சென்றுவா என்று அருள் செய்தார். அதன்பேரில் அகத்திய முனியும் தென்திசை நோக்கிப் பயணமாக அக்கணமே புவியும் சமநிலை எய்தியது. இவ்வாறு அத்துளை சிவ கணங்களின் ஆற்றலுக்கும் பக்திக்கும் அகத்தியர் ஒருவரே நிகரானவர் என்பதை உணர்ந்த மற்றவர்கள் தம் அகந்தை ஒழிந்து அகத்தியரையும் சிவபெருமானையும் போற்றிப் பணிந்தார்கள்.

அத்தகைய சிறப்பு மிக்கவரான அகத்திய முனிவரும் க்ஷேத்ராடனம் செய்ய எண்ணி கேதாரம், கோகர்ணம், அவிமுக்தவனம், கௌமாரவனம், காகோலம், நீலகண்டம், வடாரண்யம், வேதாரண்யம், பீமவனம், பாரிஜாதவனம், வேணுவனம், மாதவிவனம் முதலான புண்ணிய தலங்களில் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு வரும் வழியில் அஜகஜேச்வரம் என்னும் இப்புண்ணியஸ்தலத்தின் மகிமையைக் கேள்வியுற்று இத்தலத்திற்கு வந்தார். வந்தவர் இங்கு ஆசிரமம் அமைத்து ஆதிரத்தினேச்வரரைத் தினம் பூஜித்து வரும் மார்க்கண்டேய முனிவரை எதிர்கொண்டார். மார்க்கண்டேயரும் அகத்திய முனிவரை அன்புடன் உபசரித்து விதிப்படி அதிதி பூஜை செய்து தனது ஆச்ரமத்திலேயே தங்கச் செய்தார். இங்கு தங்கிய அகத்திய முனிவரும் சூர்ய தீர்த்தத்தில் நீராடி, ஆதிரத்தினேச்வரரைப் பணிந்து, மார்க்கண்டேய முனிவரை அணுகி "சிவனருட் செல்வரே இத்தலத்தின் பெருமையை எளியேனுக்கு எடுத்துரைக்க வேண்டும் " என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து மார்க்கண்டேய முனிவரும் சூரியன் நீலரத்தின மணியைப் பிரதிஷ்டை செய்ததிலிருந்து போஜராஜன் சாபம் நீங்கியது வரையிலான அனைத்து விருத்தாந்தங்களையும் அகத்தியருக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எடுத்தியம்பினார். இவற்றையெல்லாம் செவிமடுத்த அகத்திய முனிவரும், ஆதிரத்தினேச்வரரின் பெருமையைப் புகழ்ந்து உலக க்ஷேமத்தின் பொருட்டு தன்வகையாய் ஆடானை நாதருக்குத் தென்பாகத்தில் தன் பெயரிலேயே அகத்திய தீர்த்தம் என்கின்ற பெயரில் ஓர் தீர்த்தம் உண்டுபண்ணி; கங்கை முதலான நதிகளை முறைப்படி ஆவாகித்து அதில் நீராடி பின்பு ஆலயத்திற்குச் சென்று அன்பாயி அம்பிகையையும், ஆதிரத்தினேச்வரரையும் பலவித மந்திரங்களாலும் ஸ்தோத்திரங்களாலும் துதித்து வில்வம் மற்றும் நறுமலர்களால் அர்ச்சித்து வழிபட்டார். சன்னிதியிலேயே அமர்ந்து பஞ்சாக்ஷரம் ஜபிக்கத் துவங்கினார். அச்சமயம் ஆதிரத்தினேச்வரர் சன்னிதியில் ஓர் ஒளிவெள்ளம் தோன்றி அகத்திய முனிவரை விளித்தது. சிவபக்தருட் சிறந்தவனே முனிபுங்கவனே இத்தலத்திற்கு ஆக்னேய பாகத்தில், சூரியன் மகர ராசியில் சஞ்சரிக்கக்கூடிய தை மாதத்தில், வளர்பிறை சப்தமி திதியில் கிழக்கு முகமாக ஓர் லிங்கத்தை ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்து பூஜிப்பாய் அது பின்னாளில் உன் பெயரிலேயே வழங்கப்பெற்றுச் சேவிப்பவருக்கு நற்பலன்களை நல்கும் என்றுரைத்து மறைந்தருளியது. அகத்திய முனிவரும் மிகுந்த மனக்களிப்புடன் அவ்வாறே பிரதிஷ்டை செய்து ஓராண்டு காலத்திற்கும் அதிகமாக அங்கு தங்கி முறைப்படி வழிபாடு செய்து சாந்தியையும், தேஜஸையும் பெற்றார்.

காமதேனு பூஜித்தது

(கோ பூஜை உருவான வரலாறு)

தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தபோது முதலில் ஆலகால விஷமே வெளிப்பட்டது. தேவர்களைக் காக்கும் பொருட்டு பரமேச்வரன் விஷத்தைத் தான் உண்டு அதன்பின் வெளிப்பட்ட அமிர்தத்தை தேவர்கள் உண்ணக் கொடுத்தார். "ஆலம்தானுகந்து அமுது செய்தானை" என்ற வரிகள் இதனை உணர்த்தும் அவ்வாறு அமிர்தம் வெளிப்படுவதற்கு முன்பாக வேறு சிலவும் வெளிப்பட்டன ச்யமந்தகமணி, கௌஸ்துபம்பக மணி, கற்பக விருக்ஷம், காமதேனு, சந்திரன், மஹாலக்ஷ்மி. இவ்வாறு வெளிப்பட்டவைகளில் மஹாலக்ஷ்மியை மஹாவிஷ்ணு ஏற்றுக்கொண்டார். சந்திரன் கிரஹ பதவியை அடைந்தான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிவகைகளை இந்திரன் ஏற்றுக் கொண்டான். கற்பக விருக்ஷமும், காமதேனுவும் தேவலோகத்து சொத்துக்களாயின. இவை இரண்டுமே கேட்டதைக் கொடுக்கக் கூடியவை என்றாலும் கற்பக விருக்ஷம் ஒரே இடத்தில் இருந்து தன்னிடம் வந்து கேட்பவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கக் கூடியதாகையால் அது தேவலோகத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பெரும்பாலும் தேவர்கள் பயன்படுத்தும் வகையிலேயே விளங்கியது. காமதேனு மட்டும் தேவர்களாலும் முனிவர்களாலும் பரிவுடன் பராமரிக்கப்பட்டு வந்தது. பொதுவாக முனிவர்கள் தன்னலம் கருதாதவர்கள். உலக உயிர்கள் அனைத்தின் மீதும் அன்பு கொண்டு விளங்குபவர்கள். அவர்கள் உலக நலன் கருதியும், உலக மக்களின் அஜ்ஞானம் விலகி பக்தி மேலிடும் பொருட்டும், துஷ்டர்களின் உபத்திரவங்களிலிருந்து விடுபட்டு தேவர்களும், மனிதர்களும் பயமின்றி வாழவும், இன்னும் பலவித நன்மைகளுக்காகவும் யாகங்கள் செய்வதுண்டு. இன்றைய காலக் கட்டங்களில் ஹோமம், வேள்வி இவையெல்லாம் சாதாரண விஷயங்களாகிவிட்டன. ஆனால் அன்றைய காலக்கட்டத்தில் யாகம் செய்வதென்பது சாதாரண விஷயமன்று. யாகம் செய்ய பெரிய அளவில் யாகசாலைகள் வேண்டும், நூற்றுக்கும் அதிகமான வகைவகையான ஹோமத் திரவியங்கள், நெய், சமித்துக்கள், ஹோம மந்திரங்கள் சொல்லக் கூடிய வேத விற்பன்னர்கள், அவர்களுக்குத் தேவையான தக்ஷிணை, உணவு வகைகள், யாகத்திற்குத் தேவையன நெய்வேத்யங்கள், இப்படி இன்னும் எவ்வளவோ! பெரிய தேசங்களை ஆளும் சக்ரவர்த்திகளுக்கே யாகம் செய்வதென்பது பெரிய விஷயம். அப்படியிருக்க காடுகளில் மூங்கில்களாலும், தாவர இலைகளாலும் பர்ணசாலை அமைத்துக் கொண்டு வனங்களில் கிடைக்கும் கனிகளையும், கிழங்கு வகைகளையும் உண்டு வாழும் சன்யாசிகளுக்கு இது எவ்வாறு சாத்தியம்? அதனால் யாகம் செய்ய விரும்பும் முனிவர்கள் தம் யாகத்திற்குரிய திரவியங்களை வழங்கும் பொருட்டு காமதேனுவை நினைத்து அதற்குரிய த்யானங்கள், மந்திரங்களை உச்சரித்து அழைப்பார்கள். தூரதிருஷ்டி என்னும் ஒருவித தொலைநோக்கு உணரும் தன்மையால் காமதேனுவும் தம்மை யார் அழைக்கிறார்கள்? என்பதையும் அவர்களுடைய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தகுதியையும் உணர்ந்து அந்தந்த இடங்களுக்குச் சென்று அவர்கள் மேற்கொள்ளும் யாகத்திற்கு வேண்டிய திரவியங்களைத் தந்து யாகம் சிறப்புடன் நடைபெற உதவும். (அவ்வாறு வேள்விச்சாலைக்கு காமதேனு வந்தவுடன் அதனைச் சிறப்புடன் வரவேற்று அதற்கு தனிப்பட்ட முறையில் பூஜைகள் செய்து வழிபட்டு யாகசாலைக்கு அழைத்துச் செல்வார்கள். அந்த வழிபாடே இன்றைய நாளில் கும்பாபிஷேகம், சண்டியாகம், முதலான வழிபாடுகளில் முதல் அங்கமாக பசுமாட்டை வரவழைத்து, கோ பூஜை என்ற பெயரில் செய்யப்பெறும் வழிபாட்டிற்கு முன்னோடியாக இருக்கக்கூடும்.)

சாத்வீக குணம் நிறைந்தவரும், முனிவர்களுட் சிறந்தவரும், சப்தரிஷிகளுள் ஒருவருமாகிய வஸிஷ்டர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். இவர் இராமாவதார காலத்தில் அயோத்தியில் தசரதச் சக்ரவர்த்தியின் குலகுருவாகவும் விளங்கிய பெருமைக்குரியவர். அந்த முனிவர் ஒருமுறை உலக நலன் கருதி வாஜபேயம் என்னும் யாகத்திற்க்கான நல்ல நாளைக் குறிப்பிட்டு அதற்கு முன்னேற்பாடுகள் செய்யும் பொருட்டுக் காமதேனுவை அழைத்தார். ஆனால் குறித்த காலத்தில் காமதேனு அங்கு வராமை கண்டு மனம் வருந்தினார்.

அந்தத் தருணத்தில் பிரம்மன் வசிக்கும் சத்யலோகத்தில் ஒரு மாபெரும் விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தேவர்களும், கந்தர்வர்களும் அவ்விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு சத்ய லோகத்திற்கு சென்றிருந்தனர். காமதேனுவும் விழாவைக் காணும் ஆவலால் தானும் சத்யலோகம் சென்றிருந்தது. காமதேனு சத்யலோகத்தில் இருக்கும்பொழுது வஸிஷ்ட முனிவனின் அழைப்பை உணரவே செய்தது. எனினும் கேளிக்கைகளிலும், கலைநிகழ்ச்சிகளிலும் தன்னை மறந்து ஈடுபட்டிருந்ததால் அழைப்பை ஒரு பொருட்டாக நினையாமல் கேளிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு சுமார் 2 மாதகாலம் கழிந்தது. இவற்றையெல்லாம் ஞானதிருஷ்டியால் உணர்ந்த வஸிஷ்ட மகரிஷி காமதேனுவின் வரவிற்காகச் சிலகாலம் காத்திருந்தார். கால அவகாசத்திற்குப் பிறகும் காமதேனு வராமற் போகவே தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குறிப்பிட்ட காலத்தில் யாகம் செய்ய முடியாமற் போனதால் வருத்தமும், கோபமும் மேம்பட்டவராயும் காமதேனு இதுபோல் இனியொருமுறை நடந்து கொள்ளாமல் அதற்குப் பயம் உண்டாகும் பொருட்டும், காமதேனுவை ஆட்டின் உருவம் அடையுமாறும், யாகத்தில் காமதேனுவிற்காகப் பிரத்யேகமாக அளிக்கப்படும் ஹவ்யம் முதலானவற்றைப் பிராமணர்கள் வழங்காமல் ஒழிவதாகவும் சாபம் கொடுத்தார். அந்தத் தருணம் திரிலோக சஞ்சாரியான நாரத முனிவர் அங்குவந்தார். வந்தவருக்கு மனமகிழ்ச்சியுடன் முறைப்படி அதிதி பூஜைகள் செய்து வரவேற்று அமரச் செய்த வஸிஷ்டர், அவரிடம் தனது மனக்குறையை வெளியிட்டார். எல்லாவற்றையும் செவிமடுத்த நாரதரும் வஸிஷ்ட முனிவனைப் பார்த்து "தவச்ரேஷ்டரே தங்களைப் போன்ற பெரியவர்களுக்கு இது தகாத செயலல்லவா? காமதேனு மிகவும் பரிசுத்தமானது. நான்கு வேதங்களையும் நான்கு கால்களாகக் கொண்டது. தேவர்களும், தேவேந்திரனும் அதனாலேயே ஜீவித்திருக்கிறார்கள். காமதேனுவை நீங்கள் சபித்ததன் மூலம் அதனோடு தேவர்கள் அனைவரும் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தாங்கள் அறியாததா? இதனால் உங்களுக்குப் பெரும் பாவமல்லவா வந்துசேரும்" என உரைத்தார். தன் தவற்றை உணர்ந்த வஸிஷ்டரும் நாரதரைப் பணிந்து "முக்காலமும் உணர்ந்தவரே எனது தவறுக்குப் பிராயச்சித்தம் இருக்கிறதா? அதனைத் தாங்கள் தயைகூர்ந்து அடியேனுக்கு உரைத்தருள வேண்டும்." என வேண்டிநின்றார். நாரதரும் வஸிஷ்டரை விளித்து "மனம் கலங்க வேண்டாம்; பாண்டி நாட்டில் வேகவதி என்னும் மணிமுத்தா நதிக்கரையில் முன்னர் கூறப்பட்ட புண்ணியஸ்தலமான பாரிஜாத வனத்தையடைந்து அங்கு சூரியனால் உண்டாக்கப் பெற்ற சூர்யபுஷ்கரணி என்னும் தீர்த்தமிருக்கிறது. இதில் நீராடியவர்கள் அறியாமல் செய்த பாவமும், தோஷமும் நிவர்த்தியாகும் தன்மையுடையது. அத்தகைய சிறப்பு வாய்ந்த சூர்ய தீர்த்தத்தில் நீராடிக் கஜேச்வரரைப் பணிந்து, வில்வ தளத்தால் அர்ச்சித்து, இடைவிடாது வழிபடுவீராக. உமது தோஷம் நிவர்த்தியாகும்" என்று வஸிஷ்டருக்கு ஆசி கூறி நாரதர் விடைபெற்றுச் சென்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இது இவ்வாறு இருக்க சத்ய லோகத்தில் விழாக்களிப்பில் இருந்த காமதேனுவும் வஸிஷ்டரின் சாபத்தால் தனது உடல் ஆட்டின் ரூபமாக மாறுவதையுணர்ந்து பிரம்மதேவனிடம் சென்று பணிந்து தனது நிலையை எண்ணி வருந்தியது. பிரம்மதேவனும் "காமதேனுவே வஸிஷ்டர் மஹாதபஸ்வி, பிரம்மரிஷி என்ற பட்டம் வாங்கியவர். அவர் ஏதோ ஒரு முக்கியக் காரணம் கருதியே வாஜபேய யாகம் செய்ய எண்ணி உன்னை அழைத்திருக்கிறார். குறித்த காலத்தில் நீ அங்கு செல்லாமையால் உனக்குச் சாபம் அளித்திருக்கிறார். அவருடைய சாபத்தை ஏற்றேயாகவேண்டும். இருப்பினும் உன்மேல் பெரிய குற்றமொன்றும் சொல்ல முடியாதாகையால் உனக்கு உடனடியாகச் சாபநிவர்த்திக்கு வழி சொல்கிறேன். பாண்டிய நாட்டில் பாரிஜாத வனமென்று முன்னர் கூறப்பெற்ற புண்ணிய பூமியில் சூரிய தீர்த்தத்தில் நீராடி ஆடானை நாதரைப் பணிவாய். அவனருளால் உனக்குச் சாப நிவர்த்தியுண்டாகும் கவலைப்படாதே" என்று காமதேனுவிற்கு ஆறுதல் மொழி கூறி அனுப்பிவைத்தார்.

அதன்மேல் வஸிஷ்ட முனிவரும், காமதேனுவும் தனித்தனியே சமகாலத்தில் பாரிஜாத வனத்தை அடைந்தனர். வஸிஷ்டரும் நாரதரின் ஆலோசனைப்படி சூரிய தீர்த்தத்தில் நீராடி கஜேசர் முன்னிலையில் கடுமையான தவம் மேற்கொண்டார். தினமும் சூரிய தீர்த்தத்திலும், வேகவதி நதியிலும் நீராடி வில்வ தளத்தாலும், பலவித மலர்களாலும், ஆடானை நாதரையும், அன்பாயி அம்மையையும் வேத மந்திரங்களால் அர்ச்சித்து வழிபடுவார். பிறகு சன்னிதியில் ஓர்புறமாக அமர்ந்து, காற்றையும், இலைகளையும் மட்டும் உட்கொண்டு தவம் செய்வார். இவ்வாறு ஓராண்டு காலம் சென்ற நிலையில் கார்த்திகை மாதத்தின் பௌர்ணமி தினத்தன்று ஆடானை நாதர் வஸிஷ்டர் முன் தன் தேவியுடன் தோன்றினார். முனிவரும் கண்கள் குளமாகக் கரங்கள் சிரமேவ அம்மையப்பனைப் பணிந்து தனது தவறுக்கு மன்னிப்பு வேண்டி நின்றார். கஜேசரும் அவரை அருட்பார்வை பார்த்து "முனிவனே நீ செய்தது தவறாக இருந்த போதிலும் உனது நோக்கம் பொது நலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கருதிய உயரிய நோக்கம் ஆகையால் பொறுத்தருளினோம் வருந்தவேண்டாம். தேவப் பசுவாகிய காமதேனுவும் தனது கர்வத்தினால் சாபத்தின்று நீங்கி உனக்கு வசமாகும் இருவரும் இணைந்து யாகத்தினை நல்ல முறையில் பூர்த்தி செய்யுங்கள். உங்களுக்கு ஜெயமுண்டாகட்டும்" என்று ஆசிகூறி மறைந்தருளினார்.

ஏறத்தாழ இதே காலத்தில் காமதேனுவும் ஆட்டின் உருவத்துடன் பாரிஜாத வனத்தையடைந்து தவமியற்றத் துவங்கியது. தினமும் முதலில் வேகவதி நதியிலும், பிறகு சூர்ய தீர்த்தத்திலும் நீராடி லிங்கத் திருமேனியைத் தனது பாலைக் கொண்டு அபிஷேகித்து எண்ணிலடங்காத முறை சுற்றிவந்து நமஸ்கரிக்கும். பின்பு சன்னிதியின் முன் படுத்துக்கொண்டு இறைவனையே பார்த்தவண்ணம் கண்களில் நீர்சொரிய பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும். இவ்விதம் சிலகாலங்கள் கழிந்தபின்னர் அதன் பக்தியால் மனக்களிப்புற்ற இறைவன் சித்திரை மாதத்து அமாவாசையன்று ஆட்டின் ரூபங் கொண்ட காமதேனுவின் முன் தன் தேவியுடன் ரிஷப வாகனத்தில் தோன்றினார். காமதேனுவும் பக்தியுடன் அவர்களைப் பணிந்து சாப விமோசனம் வேண்டி நின்றது. அம்மையப்பரும் அன்புடன் அதன் மேனியைத் தொட்டுத் தடவினார்கள். அக்கணமே அது தன் சுய உருவை அடைந்தது. அம்மையப்பனை வலம் வந்து பணிந்து பலவாறு துதித்து நின்றது. இறைவரும் "காமதேனுவே தேவர், முனிவர், முதலானவர்கள் செய்யும் நற்செயல்களுக்கு உதவும் பொருட்டே நீ படைக்கப் பெற்றாய். நீ உன் படைப்பின் நோக்கம் அறிந்திருந்தும் கேளிக்கையில் மனதைச் செலுத்தி அசட்டையாக இருந்தமையால் சிறிது காலம் துன்பப்பட்டாய். இனி உனக்கு மங்களம். இத்தலத்தில் மேற்றிசையில் ஓர் தீர்த்தத்தை உண்டு பண்ணுவாயாக. இனி வரும் காலங்களில் அத்தீர்த்தத்தில் நீராடி எம்மைப் பணிபவர்கள் கோகத்தி முதலான பாவங்களிலிருந்து விடுதலை பெறுவார்கள். கோடி தீர்த்தங்களில் நீராடிய புண்ணியத்தை பெறுவார்கள். வஸிஷ்ட முனிவரின் விருப்பப்படியே அவருடைய யாகம் நல்லமுறையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நிறைந்தேர உதவுவாயாக" எனக்கூறி மறைந்தருளினர். காமதேனுவும் அதன்பிறகு மனக்களிப்புடன் கஜேச்வரத்திற்கு மேற்றிசையில் தனது குளம்பால் ஓர் குளம் உண்டுபண்ணி அதனைத் தனது பாலினால் நிறையச் செய்து, கங்கை முதலிய புண்ணிய நதிகளை ஆவாகித்து, அனைவரும் பயன்படுத்தும் வகையிற் செய்து அவ்விடம் விட்டு நீங்கி, வஸிஷ்ட முனிவரின் குடிலை அடைந்தது. அதன்மேல் இருவரும் இணைந்து வாஜபேய யாகத்தைச் சிறப்புடன் நடத்தி முடித்தார்கள். காமதேனுவால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் க்ஷீரகுண்டம் (பாற்குளம்) என்ற பெயரால் பிரசித்தம் பெற்று அடியார்களால் பயன்படுத்தப்பெற்று வருகிறது. அன்று தொட்டு இத்தலம் கோமுக்தீச்வரம் என்ற பெயரையும் பெற்று விளங்குகிறது.

அருச்சுனன் பூஜித்தது

பஞ்ச பாண்டவர்களில் மத்தியிலுதித்தவனும், இந்திரகுமாரனும், துரோணாச்சாரியாரின் பிரதான சீடனும், காண்டீபம் என்னும் வில்லை ஏந்தியவனும், மஹாவீரனுமாகிய அருச்சுணன் நாடு நகரங்களையிழந்து, தமது சகோதரர்களுடன் வனத்தில் வசித்து வந்த காலத்தில், தனது விரோதியான துரியோதனனையும், அவனது படைகளையும் வென்று தமது ராஜ்ஜியத்தை மீட்க வேண்டுமானால் இன்னும் படைபலமும், பலவிதமான அஸ்திரங்களும் தேவைப்படும் என்பதையுணர்ந்து இந்திரலோகம் சென்றிருந்த சமயத்தில் தனது தந்தையாகிய இந்திரனுடன் இதுகுறித்து ஆலோசித்தான். தேவேந்திரனும் பாரிஜாத வனத்தின் பெருமைகளை அவனுக்கு எடுத்துரைத்து "அங்கு சென்று சூரிய தீர்த்தத்தில் நீராடி முறைப்படி ஆதிரத்தினேச்வரரைப் பூஜிப்பாய் அவனருளால் உனக்கு நன்மையுண்டாகும்". என்று கூறி அனுப்பிவைத்தான். அருச்சுணனும் அதன்படியே இத்தலத்திற்கு வந்து விதிப்படி இறைவனை ஆராதித்து வழிபட்டான். அவனது பக்திக்கிறங்கிய இறைவனும் "காண்டீபனே இமயமலைச் சாரலில் இந்திரகீல மலையடிவாரத்தில் அஸ்திரம் வேண்டித் தவம்புரிவாய் அங்குவந்து உமக்கு அருள் செய்வோம்" என்று அசரீரியாய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒலித்தருளினார். அதன்படியே அருச்சுணனும் அங்கு சென்று தவம் செய்து பாசுபதம் முதலான அஸ்திரங்களைப் பெற்று கௌரவப் படைகளை வென்று தனது சபதத்தை நிறைவேற்றினான்.

திருஞான சம்பந்தர் வழிபட்டது

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க
பூதபரம்பரை பொலிய"

என்ற சேக்கிழார் வாக்கிற்கிணங்க வேத நெறியும், சைவநெறியும் தழைத்தோங்க அவதரித்தவரான ஞானசம்பந்தப் பெருமான் பதிகம் பாடிப் பணிந்தேத்திய பாண்டி 14 தலங்களுள் இத்தலமும் ஒன்று. ஆதலால் இத்தலம் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்றாகவும் போற்றப்படுகின்றது.

மதுரை மாநகரில் கூன்பாண்டியனாக இருந்த மன்னனின் வெப்புநோயை தனது திருநீற்றுப் பதிகத்தின் மூலம் நீக்கி நின்றசீர் நெடுமாறனாக மாற்றி, சமணர்களை வாதில் வென்று சைவத்தை நிலை நாட்டிய ஞானசம்பந்தப் பெருமான் அரசன் அரசியுடன் மந்திரியும் உடன்வரப் பாண்டி 14 க்ஷேத்திரங்களையும் தரிசித்து வரும் வழியில் நமது திருப்பதியாக திருவாடானையை அடைகிறார். மன்னனும், அவர் மலர்க்கொடியும், மந்திரியும், மற்ற அடியவர்களும் புடைசூழ ஆடானைத் திருத்தலத்துள் நுழைகிறார். கண்ணில் நீர்மல்கச் சந்நிதியின் முன் விழுந்து பணிந்து எழுகிறார். மற்றவர்களும் அவ்வாறே செய்கிறார்கள். "மாதோர் கூறுகந்தேற" எனத் தொடங்கும் பதிகம் அக்கணத்திலே அங்கே அரங்கேறுகிறது. அவ்வாறு ஞானசம்பந்தர் உடன் பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனும். இராணி மங்கையற்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் இணைந்து போற்றி வணங்கிய பாண்டித் திருத்தலங்களுள் இந்தத் திருவாடானைத் திருத்தலமும் ஒன்று. இங்கு இன்னொரு சிறப்பையும் நாம் எடுத்துக் கூற வேண்டும். இப்படி இவர்கள் வழிபட்ட பல பதிகளையும் அறிமுகம் செய்ய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எண்ணிய சேக்கிழார் பெருமான் திருப்புத்தூரை குறிப்பிடும் பொழுது, காளைக் கொடியை உடைய சிவபெருமான் விளங்கும் திருத்தலம் எனக் குறிப்பிடுகிறார். காளையார்கோவிலை பற்றிக் கூறும் போது "கற்றவர் தொழுதேற்றும் கானப்பேர்" என்று எழுதுகிறார். இராமேச்வரத்தை அடைந்ததை கூறும் பொழுது "செங்கண்மால் வழிபட்ட கோயில் நண்ணி" என்று குறிப்பிடுகிறார். ஆனால், இந்தத் திருவாடானைத் திருத்தலத்தில் அவர்கள் வழிபட்டதைக் கூற முற்படும் பொழுது இந்தத் தலத்தினுடைய எந்தச் சிறப்பை எடுத்துக் கூறுவது என்று ஒருகணம் மயங்குகிறார். பிறகு "செப்பரிய புகழ்த் திருவாடானை சேர்ந்து" என்று எழுதிமுடிக்கிறார். அப்படி எந்தச் சிறப்பைச் சொல்வது எதனை விடுவது என்று தெய்வச் சேக்கிழாரே ஒருகணம் திகைத்த பெருமைக்குரிய திருத்தலம் இந்தத் திருவாடானைத் திருத்தலம் என்றால் அது மிகையில்லை.

(இதன்பிறகு தனது பரிவாரங்களுடன் மந்திரி குலச்சிறையாரின் ஊரான மணமேற்குடியை அடைந்து, அங்கு பாண்டியனுக்கும் அவன் பரிவாரங்களுக்கும் விடை கொடுத்துவிட்டு ஞானசம்பந்தர் தனது பரிவாரங்களுடன் சோழ நாட்டை நோக்கிப் பயணம் மேற்கொண்டார்.)

ஆடானைப் பதிகம். ஞானசம்பந்தரால் பாடப் பெற்ற மிக எளிமையான அதேசமயம் பொருள் நிறைந்த ஓர் பதிகம். இறை வழிபாட்டிற்கு பூவும், நீருமே முதன்மையானவை. "போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்" "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" போன்ற வரிகள் இதனைப் புலப்படுத்தும். திருவாடானையில் பாடிய பதிகத்தில் ஞான சம்பந்தப் பெருமானும் இதனை வலியுறுத்தத் தவறவில்லை. பத்துப் பாடல்களில் எட்டு பாடல்கள் மலர் வழிபாட்டையே வலியுறுத்துகின்றன. 1,2,5,6,7,10 ஆகிய பாடல்கள் ஆடானை நாதரை மலரால் வழிபடுவர்களின் வினை மாயும் என்று எடுத்துரைக்கின்றன. மூன்றாவது பாடல் நோய் பிணி மாயும் என்பதைக் கூறுகிறது. நான்காவது பாடல், வண்ண மலர்களால் வழிபடுவோரின் இடர் களைய வழி செய்கிறது. 9ம் பாடல் தீவினை மாய்ந்து, நல்வினை பற்றும் உபாயத்தைக் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூற்பயனை எடுத்தியம்பும் 11ம் பாடலில் "ஆடானை நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ்ப் பாட நோய் பிணி மாறுமே" என்று கூறிப் பதிகத்தை நிறைவு செய்கிறார். உமையம்மையின் முலைப்பாலுண்டதனால் ஞானம் பெற்ற உத்தமர். ஞானஸ்கந்தப் பெருமானே ஞானசம்பந்தராக அவதரித்ததாக கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் முதல் அருணகிரிநாதர் வரை பல அருளாளர்களும் அறிவுறுத்துகிறார்கள். சாம்பலாகிப் பல்லாண்டு கடந்த எலும்புத் துண்டுகளைத் தனது பாடலின் மூலம் பதினாறு வயதுப் பெண்ணாக அஸ்திக்கலசத்திலிருந்து வெளிப்படச் செய்த அருளாளர். பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பையே "பையவே சென்று பாண்டியற் காகுக" என்று கட்டளையிட்டு ஏவல்கொண்ட ஆற்றல் பெற்றவர். இவ்வளவு பெருமைக்குரியவர் ஒன்றைச் சொன்னால் நிச்சயமாக அது பொய்த்துப் போகாது. எனவே, எவ்வளவு கடுமையான நோயால் பீடிக்கப் பெற்றவர்களாக இருந்தாலும், ஆடானைநாதரின் திருவடிகளை முழு நம்பிக்கையுடன் பணிந்து பலவிதமான நறுமலர்களாலும் வில்வ தளத்தாலும் ஆடானைப் பதிகத்தை உச்சரித்தபடி துதிப்பவர்கள் அந்தக் கொடிய நோயினின்றும் விடுபடுவார்கள் என்பது சத்தியம். மேலும், மனிதர்களுக்கு ஏற்படும் பிணிகளுக்கும், துன்பங்களுக்கும் அவர்களது வினைப்பயனே காரணம். பணிபவர் வினைகளை வேரறுத்து வீடு பேற்றை அளிக்கவல்ல வல்லமை கொண்டது இந்த ஞானசம்பந்தர் அருளிய பதிகம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அருணகிரிநாதர் திருப்புகழ் பாடியது

முருகப்பெருமானே ஞானசம்பந்தராக அவதரித்தார் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டவர் அருணகிரிநாதர். ஞானசம்பந்தருடைய காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு. அவருக்குப் பின்னால் சுமார் எழுநூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் அவதரித்தவர் அருணையடிகள். தனது குருநாதர் பாடிப்பணிந்த திருத்தலத்தை அவர் தரிசிக்காமல் விடுவாரா என்ன? (முருகப்பெருமான் அருணகிரிநாதருக்கு மந்திரோபதேசம் செய்த குருநாதர்)

யாழ்ப்பாணத்தில் கண்டி, கதிர்காமம், திருகோணமலை, முதலான தலங்களுக்கு நேரில் சென்று தரிசித்துத் திருப்புகழ் பாடிய அருணகிரியார் அங்கிருந்து பாரதம் திரும்பினார். பாபநாசம், குற்றாலம், இலஞ்சி முதலான தலங்களைத் தரிசித்துப் பின்பு திருமலை, கழுகுமலை, கொடும்பாளூர், உத்தரகோசமங்கை முதலான தலங்களில் உறையும் முருகப்பெருமானைப் பாடிப் பணிந்து, இராமேச்வரத்தை அடைந்தார். அங்கு இராமபிரானின் பராக்கிரமத்தைப் பாடி தனுஷ்கோடியையும் தரிசித்து விட்டு நமது புண்ணிய பூமியாம் திருவாடானையை அடைந்தார். இங்கு தேவியர் இருவரோடும் நின்றகோலத்தில் அருள்புரியும், வள்ளி மணாளனைப் புகழ்ந்து...

ஊனாரு முப்பிணியும் மானாக வித்தவுடல்
ஊதாரி பட் பொழிய உயிர் போனால்
ஊரார் குவித்துவர ஆவாவெனக் குறுகி
ஓயா முழக்கமெழ அழுதோய
நாணா விதச் சிவிகை மேலே கிடத்தியது
நாறா தெடுத் தடவி ளியூடே
நாணாமல் வைத்துவிட நீறாமெனிப் பிறவி
நாடா தெனக் கருள் புரிவாயே,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மானாக துத்திமுடி மீதே நிருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே
வாழ்வா யிருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்
ஆனா வரக்கருடன் வானோர் பிழைக்கவரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்
ஆசார பக்தியுடன் ஞானாகமத்தையருள்
ஆடானை நித்தமுறை பெருமாளே!

என்னும் திருப்புகழை மனமுருகிப் பாடுகின்றார். இந்தத்த திருப்புகழிலே ஆடானையைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "ஆசார பக்தியுடன் ஞான ஆகமத்தை யருள் ஆடானை" என்று குறிப்பிடுகிறார். ஆடானைத் திருத்தலம் பல ஆகம சீலர்களை இவ்வுலகத்திற்கு அளித்துள்ளது என்பது யாவரும் அறிந்ததே. சமீப காலமாக வாழ்ந்து மறைந்த சிவாகமச் சக்ரவர்த்திகள் சிவஸ்ரீ ஐய்யாமணி சிவம், சிவஸ்ரீ கணேசமணி சிவம் இருவருமே அதற்குச் சான்று. முதன் முதலில் திருவண்ணாமலையில் 33 குண்டம் கொண்ட உத்தமபக்ஷ யாகசாலை அமைத்துக் கும்பாபிஷேகம் செய்த பெருமைக்குரியவர்கள். அன்னாரவர்கள் கற்றுணர்ந்த நூல்களை கண்டு தரிசிக்கும் வாய்ப்பினை அடியேன் ஓரிருமுறை பெற்றிருக்கிறேன். கலைமகள் வாசம் செய்யும் கலைக்கோயில் அது என்று சொன்னால் அது மிகையாகாது. அவ்வளவு நூற்களும், ஏட்டு சுவடிகளும் அங்கே குவிந்து கிடக்கின்றன. இந்த தலத்திற்கு மட்டும் அப்படி என்ன சிறப்பு? இத்தலத்தில் மட்டும் காலந்தோறும் ஆகம சீலர்கள் தோன்றிக்கொண்டே இருக்கிறார்களே! என்ன காரணம்? என்று அருணையடிகள் சிந்திக்கிறார். அவருக்கு ஒரு உண்மை புலப்படுகிறது. இங்குள்ள தக்ஷிணாமூர்த்தி ஞானதக்ஷிணாமூர்த்தி. அவருடைய சன்னிதியிலே அமர்ந்து குரு உபதேசம் பெறுவார்கள் அவரருளால் அத்துறையிலே வல்லுனர்களாக ஆகிறார்கள். இத்தலத்தில் தோன்றிய சிவாச்சாரிய பெருமக்கள் எல்லோரும் தெக்ஷிணாமூர்த்தி சன்னிதியிலேயே குரு உபதேசம் பெறுவதை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழக்கமாகக் கொண்டுள்ளார்கள். அதனால் அவர்கள் ஞானத்திலும், ஆகம சாஸ்த்திரத்திலும் சிறந்து விளங்குகிறார்கள். இந்த உண்மையை உணர்ந்து கொண்ட அருணகிரிப் பெருமான் தனது திருப்புகழில் “ஆசார பக்தியுடன் ஞானாகமத்தை யருள் ஆடானை நித்தமுறை பெருமாளே” என்று எழுதி இத்தலத்திற்குப் பெருமை சேர்க்கிறார். சமீப காலத்தில் சிவஸ்ரீ சந்திரசேகர குருக்கள் அவர்களும், வைரமணி குருக்கள் அவர்களும் தனது முன்னோர்களின் பெருமையை நிலைநாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இனி வருங்காலத்திலும் இந்நிலை தொடர ஆடானைநாதர் அருள்புரிய வேண்டும் என்பதே எங்களைப் போன்றவர்களின் விருப்பம்.

(இத்தல வழிபாட்டை முடித்துக் கொண்ட அருணையடிகள் இங்கிருந்து திருப்புத்தூர், விநாயகமலை பிரான்மலை முதலான தலங்களைத் தரிசித்து விட்டுக் குன்றக்குடியை அடைந்து அங்கு சிலநாட்கள் தங்கியிருந்தார்)

குறிப்பு: எந்த துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்த தக்ஷிணாமூர்த்தியை வழிபட்டு அவர் முன்னிலையில் தனது குருநாதரிடம் உபதேசம் பெறுபவர்கள் அத்துறையிலே சாதிப்பார்கள் என்பது உறுதி.

திருவாடானைப் புராணம் முற்றும்...

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவ கீதையின் சாரம்

நம்மில் பலர் கீதை என்ற சொல்லைக் கேட்டவுடனே காத தூரத்திற்கு ஓடிவிடுகிறோம். ஏனென்றால் கீதை என்றாலே வேதாந்தம், புரியாத கருத்துக்கள், வார்த்தைகள் நிறைந்தது, மெத்தப்படித்தவர்களுக்கே அது வெளிச்சம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். இன்னும் பலர் கீதை என்றால் அது மஹாபாரதத்திலே ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருச்சுணனுக்கு உபதேசித்த பகவத்கீதை மட்டும்தான் என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். (அப்படி நினைத்துக் கொண்டிருப்பவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. பகவத்கீதை அளவிற்கு மற்ற கீதைகள் பிரசித்தமடையாததே இதற்குக் காரணம்) கீதை என்று சொன்னால் பயப்பட வேண்டிய அவசியமில்லை.

கீதை என்ற சொல்லுக்குப் பாட்டு என்பது தான் பொருள். இந்த வேர்ச் சொல்லிலிருந்து வந்ததே கீதம். கீதம் இசையோடு சேர்ந்தொலிக்கும் பொழுது சங்கீதமாகிறது. 19ம் நூற்றாண்டின் இறுதி வரை தமிழ், வடமொழி முதலான அனைத்து மொழி இலக்கியங்களும் பாடல்களாகவே இருக்கக் காண்கிறோம். அதைவிட அந்த நூலுக்கான பாயிரங்களும் கூடப் பாடல்களாகவே இருக்கக் காண்கிறோம். பாயிரம் என்பது இன்றைய கால நூற்களுக்கு எழுதப்பெறும் முன்னுரை போன்றது. நூல்கூறும் செய்திகள், நூலாசிரியர் பற்றிய குறிப்புகள் போன்ற விஷயங்கள் இந்தப் பாயிரத்தில் இருக்கும். அவையும் கூட பாடல்களாகவே எழுதப் பெற்று இருக்க காண்கிறோம்.

பகவத்கீதை துவாபரயுகத்திலே தோன்றியது. ஆகவே அதுவும் பாடல்களாக, ச்லோகங்களாகவே அமைக்கப்-பட்டிருக்கிறது. அதனாலேயே அது கீதை எனவும், கிருஷ்ண பகவானாலே உரைக்கப் பெற்றதால் அது பகவத்கீதை என்றும் ஆனது. இதுபோல, பிரம்மகீதை, சூர்யகீதை, ரிபுகீதை இப்படிப் பல கீதைகள் இருக்கின்றன. அந்த வகையில் நாம் இப்போது சிவகீதையைப்பற்றிப் பார்க்கப்போகிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதை என்று சொல்லும்போதே அது சிவபெருமானால் உபதேசிக்கப்பட்டது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சரி யாருக்கு உபதேசித்தார் என்றால் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசித்தருளினார். ஆக எல்லாம் வல்ல பரமேச்வரனாலே ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் ஏழாவது அவதாரமாகிய ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசிக்கப் பெற்றதாலே இது சிவகீதையானது. இராமாவதாரம் நிகழ்ந்தது த்ரேதாயுகம். கிருஷ்ணாவதாரம் நிகழ்ந்தது துவாபரயுகம். எனவே இது பகவத்கீதைக்கு முந்தைய நூல் என்பது தெளிவு. மஹாபாரதத்தின் ஒரு பகுதியாக பகவத்கீதை இடம் பெற்றுள்ளதைப் போல பத்மபுராணத்தின் ஓர் அங்கமாக இந்த சிவகீதை இடம் பெற்றிருக்கிறது. இதனைச் சூத முனிவர் உபதேசிக்க, சௌநகர் முதலான மற்ற முனிவர்கள் கேட்டதாக பத்மபுராணத்தின் வழி அறிகிறோம்.

அனைத்து புராணங்களும் சூத முனிவரால்தான் சொல்லப்பட்டனவா?

இங்கே ஒரு சந்தேகம் எழுகிறது. ஆடானைப் புராணத்தைப் பார்த்தபோதும் சூத முனிவர் சொல்ல, மற்ற முனிவர்கள் கேட்டதாகச் சொல்லப்பட்டது. இந்த சிவகீதையும் அவ்வாறே சொல்லப்பட்டுள்ளது. ஒன்றிற்கு ஒன்று தொடர்பில்லாத கதையாக இருக்கிறதே? இரண்டும் அவரால்தான் சொல்லப்பட்டதா? என்ற ஐயம் தோன்றலாம்! இரண்டிற்கும் தொடர்பிருக்கிறதா? இல்லையா? என்பதனைப் பிறகு பார்ப்போம். இந்த இரண்டு மட்டுமல்ல இன்னும் அநேகவிதமான புராணங்களும் சூத முனிவராலேயே சொல்லப்பட்டுள்ளது. இது ஏன்? மற்ற முனிவர்களுக்கு ஒன்றும் தெரியாதா? என்று கேட்டால் அது மடமை. இராமாயணம், மஹாபாரதம், பெரியபுராணம் போன்றவைகளில் வரும் கதைகள் நமக்கு தெரிந்திருந்தாலும், அதனை திரு. சுகி. சிவம், திரு. சொ. சத்தியசீலன், திருமதி. சரஸ்வதி இராமநாதன் போன்ற பேச்சாளர்களின் வாயிலாகக் கேட்கின்றபோது இன்னும் அதிக ஆர்வமாகக் கேட்கின்றோமல்லவா? அதுபோலத்தான் இதுவும். ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு தனித்திறமையுண்டு என்பது நாம் அறிந்ததே. அந்தக் கலையில் அவர்களை Expert என்று ஆங்கிலத்தில் கூறுவது போல இந்த சூதமுனிவர் புராண இதிகாசக் கதைகளை எடுத்தியம்புவதில் Expert.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதாவது புராண இதிகாசங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் மிகுந்த சூதமுனிவர் அவற்றை நன்கு அறிந்தவரான வியாச மஹரிஷியை நாடி அவற்றைத் தனக்கு உபதேசிக்கும்படி வேண்டி நின்றார். சீடனின் ஆர்வத்தை நன்கு உணர்ந்திருந்த வியாசபகவான் தனக்குத் தெரிந்த புராணங்கள் அனைத்தையும் சூத முனிவருக்கு உபதேசித்தார். சிலபேருக்குக் கதை கேட்கத்தெரியும். ஆனால் "கேட்டதைத் திரும்பச் சொல்" என்றால் தயங்குவார்கள். வற்புறுத்தினால் தனக்குச் சொல்ல வராது கேட்க மட்டும்தான் தெரியும் என்று பின்வாங்குவார்கள். இவர் தனக்குத் தெரிந்த கதையைத் திறம்படச் சொல்வதில் தனது திறனை வளர்த்துக் கொண்டார். அதனால் அவர் வாயிலாகக் கதை கேட்பதில் மற்றவர்களின் ஆவல் மிகுதியானது. எனவே மற்ற முனிவர்களின் விருப்பத்திற்கேற்ப சூத முனிவர் சொல்வதாகப் புராணங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

எத்தனை எத்தனை புராணங்கள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் எத்தனை ஆயிரம் சுலோகங்கள் அடங்கியவை. இத்தனையையும் சொல்ல அவர் எவ்வளவு காலம் எடுத்திருப்பார். அவ்வளவு காலமும் எல்லா முனிவர்களும் ஒரே இடத்தில் கூடியிருந்து பொறுமையாகக் கேட்டார்களா? என்பது போன்ற ஐயமும் நமக்கு எழுவது இயல்புதான். இதற்கான விளக்கங்களையும் கூட நாம் புராண காலச் செய்திகளிலிருந்து அறிந்துகொள்ளலாம். பொதுவாக ஒரு அமைப்பு, ஒரு சங்கம் என்றிருந்தால் அதற்கொரு கொள்கை இருக்கும். அதனை நிலைநிறுத்துவதில் அதன் தலைமைப் பதவியில் இருப்பவர்கள் கண்டிப்பாக இருப்பார்கள். அவ்வாறு இருந்தால்தான் அந்த அமைப்பு கட்டுக்கோப்பு கலையாமல் இருக்கும். வேதகால முனிவர்களுக்குள்ளும் அப்படி ஒரு அமைப்பு இருந்திருக்க வேண்டும். இந்தக் காலக் கட்சிகள் மாநாடு கூட்டுவது போல அவர்களும் ஆண்டுக்கொரு முறை ஓர் இடத்தில் கூடுவார்கள்.

அவ்வாறு ஒன்று கூடுகின்றபோது சிறப்பான யாக வேள்விகள் நடைபெறும். பிறகு உலக நடப்புகளைப் பற்றிப் பேசுவார்கள். இந்தக் கால பட்டிமண்டபம், சொற்பொழிவு, உபன்யாசங்கள் போன்று அங்கும் நடக்கும். இங்கு நாம் சிறப்புப் பேச்சாளர்களை அழைத்துப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பேசச் செய்வதைப் போல அன்றைய காலக் கட்டத்தில் புராணங்களை நன்கு அறிந்தவரான "ரோமஹர்ஷணர் என்கிற சூதமுனிவரை" அழைத்துப் புராண இதிகாசங்களை மற்றவர்களுக்கு உபதேசிக்கச் செய்வார்கள். ரசிகர் கூட்டத்திற்கு சௌநகர் தலைவர். எனவே அவரது வேண்டுகோளுக்கிணங்க சூதமுனிவர் சொல்வதாகப் புராணங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. சரி, இந்த மாநாட்டிற்கு எல்லோரும் வரவேண்டும் என்று எவ்வாறு கட்டாயப்படுத்துவது? இன்றைய கட்சிகள் என்ன நடைமுறைகளைக் கையாள்கின்றனவோ! அதே நடைமுறைதான். ஒரு கட்சி செயற்குழு கூட்டினால் அதற்குச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் வர வேண்டியது கட்டாயம். அப்படி வர முடியாவிட்டால் அதற்குக் தகுந்த காரணம் சொல்ல வேண்டும். இல்லையென்றால் அபராதம் விதிக்கப்பெறும்; அல்லது கட்சியை விட்டே நீக்கிவிடுவார்கள். இதே நடைமுறைதான் அன்றும்; இன்று அபராதம் விதிப்பது போல அன்றைக்குச் சாபம் விடுவது இருந்தது. (சாபம் அன்றைய முனிவர்களின் கைவந்த கலை) "சதஸ்ஸுக்கு (மாநாட்டிற்கு) ஒவ்வொரு முனிவரும் கட்டாயம் வரவேண்டும். அப்படி வரத்தவறியவர்களுக்கு ஏழு நாட்களுக்குள் பிரம்மஹத்தி தோஷம் பற்றிக்கொள்ளக்கடவது" என்று சாபம் இட்டு வைத்தார்கள். சாபத்திற்கு அஞ்சி எல்லா முனிவர்களும் வந்துவிடுவார்கள். நிகழ்ச்சியும் நல்லமுறையில் நடந்தேறும்.

அவ்வாறு மேருமலைச் சாரலில் நடைபெற்ற ஒரு சதஸ்ஸுக்கு வைசம்பாயனர் என்ற முனிவர் செல்லத் தவறியதால் அவருக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டானது. (அதாவது சதஸ் நடந்த ஏழு நாட்களுக்குள் வராதவர்களுக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டாக வேண்டும் என்பது சாபம். அதன்படி வைசம்பாயன முனிவரும் ஒருநாள் தனது தம்பியின் குமாரனை எதிர்பாராத விதமாகக் காலால் தட்டிவிட அவனும் கீழே விழுந்து மாண்டு போனான். அதனால் அவருக்கு பிரம்மஹத்தி தோஷம் உண்டானது.) வைசம்பாயன முனிவர் சாதரணமானவர் அல்ல. யஜுர் வேதத்திற்கு 27 சாகைகள் செய்து அதனைத் தனது சீடர்களுக்கு உபதேசித்தவர். அப்படிப்பட்டவர் பிரம்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பெற்று மிகவும் வருந்தினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதனால் அவர் தனது சீடர்களை நோக்கி "சீடர்களே நீங்கள் எனக்காக பிரம்மஹத்தி தோஷம் நீங்கும்படியான விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும்" என்று கூறினார். அப்போது அவருடைய பிரதம சீடராகிய யாஜ்ஞ்யவல்கியர் என்பவர் "குருதேவா அனைவருக்கும் எதற்காகக் கட்டளையிடுகிறீர்கள்? அவர்கள் வலிமையில்லாதவர்கள் அதனால் நான் ஒருவனே தங்களுக்காக விரதம் மேற்கொள்கிறேன்" என்று மற்றவர்களின் வலிமையைக் குறைத்துக் கூறினார். அதனால் கோபங்கொண்ட வைசம்பாயனர் "உன்னையே நீ உயர்ந்தவனாகக் கருதி மற்றவர்களின் ஆற்றலைக் குறைத்துக் கூறி அவர்களை நீ இழிவுபடுத்திவிட்டாய். அதனால் என்னிடமிருந்து கற்ற வேதங்களை நீ விட்டுவிடு" என்றார். யாஜ்ஞ்யவல்கியரும், "குருநாதா! தங்களிடம் இருந்த பக்தியினாலேயே நான் அவ்வாறு கூறினேன். மற்றவர்களை அவமதிக்கும் நோக்கம் எனக்கில்லை எனினும் உங்களுடைய கட்டளைப்படியே நான் தங்களிடம் கற்றவற்றை இங்கேயே கக்கிவிடுகிறேன்" என்று கூறி அவ்வாறே செய்ய அதனை மற்ற சீடர்கள் தித்திரி என்ற பறவையாக மாறி உட்கொண்டார்கள். அவ்வாறு உருவானதே தைத்திரிய உபநிஷத். இந்த விஷயங்கள் விஷ்ணு புராணத்திலும், பத்ம புராணத்திலும் இருக்கின்றன. ஆக எல்லாப் புராணங்களும் சூத முனிவரால் இவ்வுலகிற்கு அருளப்பெற்றது என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

எனவே மற்ற புராணங்களைப் போலவே இந்த பத்ம புராணமும், அதில் பதிக்கப்பெற்றுள்ள ரெத்தினமாகிய சிவகீதையும் சூத முனிவராலே சொல்லப் பெற்றுள்ளது. சரி இந்தச் சிவ கீதை எந்தச் சூழ்நிலையிலே சிவபெருமானால் ஸ்ரீ இராமபிரானுக்கு உபதேசிக்க பெற்றது என்பதை இனிக்காண்போம்.

அயோத்தி மன்னன் தசரதச் சக்ரவர்த்தியின் தவப் புதல்வராகிய இராமபிரான் தனது சிற்றன்னையான கைகேயியின் சூழ்ச்சியால் நாட்டைத் துறந்து, தனது மனையாள் சீதையுடனும், தம்பி இலக்குவனுடனும் கானகத்திற்கு வருகிறார். 14 ஆண்டு காலம் வனவாசம் மேற்கொள்ள வேண்டும் என்பது நிபந்தனை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அயோத்தியிலிருந்து கங்கைநதியைக் கடந்து பஞ்சவடி என்ற இடத்தில் பர்ணசாலை அமைத்து, அங்கே தங்குகிறார்கள். இளையவன் ஊண் உறக்கமின்றிக் காவல்காக்க அண்ணலும், அன்னையும் துறவற வாழ்க்கை வாழ்கிறார்கள். 12 ½ ஆண்டுகாலம் இவ்விதம் இனிதே கழிகிறது. இன்னும் 1½ ஆண்டுகள் மட்டுமே பாக்கி முடித்துவிட்டு நாடு திரும்பிவிடலாம். ஆனால் இத்தருணத்தில் ஸ்ரீ ராமபிரானின் அவதார நோக்கத்திற்கான விதி விளையாடத் துவங்குகிறது.

இராம, இலக்குமணர் மீது மையல் கொண்ட சூர்ப்பணகை என்னும் அரக்கி இளைய பெருமானால் அவமதிக்கப் பெறுகிறாள். தன் மாயசக்தியால் அவர்களை ஒன்றும் செய்ய இயலாத நிலையில் தனது அண்ணன் இலங்கைவேந்தன் இராவணேச்வரனைச் சரணடைகிறாள். தங்கையின் தவறான போதனையால் மதியிழந்த இராவணன் தனது மாமன் மாரீசனின் துணையுடன் சீதா தேவியைச் சிறையெடுக்கிறான். மனைவியை இழந்த ஸ்ரீ ராமர் துக்கம் தாழாமல் துயரத்தில் ஆழ்கிறார். (ஸ்ரீ ராமபிரான் பரமாத்மாவின் அவதாரம் ஆனபோதும் மானிடப் பிறவி எடுத்த காரணத்தினால் ஒரு சராசரி மனிதனாகவே நடந்துகொள்கிறார்.) மயங்கி விழுகிறார். இளைய பெருமான் அவருக்கு நீர் தெளித்து எழுப்புகிறார். எழுந்தமர்ந்தவர் மனைவியை இழந்த நிலையில் துக்கப்படுகிறார். சிலநேரம் அழுது புலம்புகிறார். சிலநேரம் கோபாவேசமாக இந்த உலகத்தையே அழித்து விடுகிறேன் என்று வில்லையும் அம்பையும் எடுக்கிறார். நிறைவாக மனைவியைக் காக்க முடியாதவன் என்ற அபகீர்த்தியோடு வாழ்வதைவிட இறந்து விடலாம் என்ற எண்ணங்கொண்டு அதற்கான முயற்ச்சியில் இறங்குகிறார். இளையவன் ஏதும் செய்யத் தோன்றாமல், செய்வதறியாது நிற்கிறான். அத்தருணம் அகத்திய முனிவர் அங்கு தோன்றுகிறார். இராமபிரானுக்கு மானிட வாழ்வின் இயல்பினை எடுத்துக்கூறித் துக்கத்தினின்று விடுவிக்கிறார். சிறையெடுக்கப்பட்ட மனைவியைச் சிறை மீட்பதே சிறந்த ஆண்மகனுக்கு அழகு என்று எடுத்துக்கூறி அதற்கு அவரைத் தயார் செய்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்தச் சம்பவங்களெல்லாம் எந்த இராமாயணத்தில் எந்த இடத்தில் வருகிறது! என்று பலரும் யோசிக்கலாம். இராமாயணத்தின் மூல ஆசிரியர் வால்மீகி முனிவர். அந்த இராமாயணத்தில் இந்த விஷயம் இல்லை. அவரைப் பின்பற்றி இராமாயணம் பாடிய துளசிதாசர், கம்பர் போன்றவர்களும் இதனைக் குறிப்பிடவில்லை. அப்படியிருக்க இது ஏது புதுக்கதை? என்ற கேள்வி எழலாம். ஒரு விஷயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். வால்மீகி முனிவர் இயற்றியது சதகோடி இராமாயணம் என்ற பெயரில் கோடிக்கணக்கான சுலோகங்களைக் கொண்ட மிகப்பெரிய நூல். சிறுவர்களாகிய லவ குசர்களுக்குப் புரியும் விதத்தில் அதிலிருந்து 24,000 சுலோகங்களை மட்டும் எடுத்து அவர்களுக்கு உபதேசித்தார் வால்மீகி முனிவர். அந்த 24,000 சுலோகங்கள் அடங்கிய சிறுவர் இராமாயணம் தான் இப்போது நாம் படிப்பது. எனவே இதுபோல் வெளிவராத எவ்வளவோ விஷயங்கள் வால்மீகி இராமாயணத்தில் இருந்திருக்கும் என்பதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும். அதிலிருந்த ஒரு விஷயம்தான் இந்நிகழ்வும். எல்லாப் புராணங்களையும் ஐயந்திரிபரக் கற்றவராகிய சூதமுனிவர் பத்மபுராணத்தின் வழி இதனை வெளிக்கொணர்ந்திருக்கிறார். வெளிக்கொணரக் காரணம் மானிட வாழ்வியலிலும், மனித உடலியலிலும் நமக்குத் தெரியாத, அதேசமயம் நாம் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய, நவீன மருத்துவ உலகிற்கே முன்னோடியான எவ்வளவோ விஷயங்கள், இந்தச் சிவகீதையின் மூலம் எல்லாம்வல்ல பரமேச்வரனால் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசிக்கப்பெற்றுள்ளது. அவை மறைத்து வைக்கப்படாமல் சாதாரண மக்களுக்கும் போய்ச்சேர வேண்டும் என்பதே.

இல்லற தர்மத்தை அனுஷ்டித்து, சம்சார பந்தத்தில் கட்டுண்டு வாழ்க்கை நடத்தும் ஸ்ரீராமனுக்கு ஒரு சன்யாசி எப்படி உபதேசிக்க முடியும்? என்று கூட யோசிக்கலாம். வேறு முனிவர் யாரேனும் இந்த உபதேசத்தைச் செய்திருந்தால் இந்தக் கேள்வி நியாயமானதே! இராமர் எப்படி சீதாதேவியென்னும் கற்புக்கரசியோடு வாழ்கிறாரோ! அதேபோல உலோபா முத்திரை என்னும் கற்புக்கரசியோடு இல்லற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தர்மம் அனுஷ்டித்து இல்லற சன்யாசியாகவே வாழக்கூடியவர் அகத்திய முனிவர். எனவே அவரே ஸ்ரீ ராமனுக்கு உபதேசிக்கத் தகுதியானவர் என்பதில் ஐயமில்லை. இனி அகத்திய முனிவர் இராமபிரானுக்கு என்ன உபதேசம் செய்தார் என்பதைச் சுறுக்கமாகக் காண்போம்.

ராஜாதி ராஜனான ஸ்ரீ ராமா மனைவியை இழந்தமைக்காக சராசரி மானிடனைப் போல துக்கப்படுகிறாயே! இந்த வாழ்வு நிலையற்றது என்பதை நீ அறியாதவனா? இந்த உடல் நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் ஆனது. இவை ஐந்துமே ஜடப்பொருட்கள் (உயிரற்றவை). எனவே பஞ்ச பூதங்களால் ஆன இந்த உடலும் ஜடப்பொருளே! ஆத்மா இதனுள் தங்கி இயக்குவதனாலேயே இந்தவுடல் இயங்குகிறது. ஆத்மா ஒன்றே நிலையானது. அழிவில்லாதது. அழிவற்ற ஆத்மா உடலை விட்டு நீங்கிய கணமே இந்தவுடல் ஜடமாகக் கிடத்தப்படுகிறது. அவ்வாறு அழியக் கூடிய உடலை இழந்தமைக்காகவா நீ இவ்வளவு துக்கப்படுகிறாய்?!

ஆத்மா ஆணோ, பெண்ணோ, அலியோ அல்ல. இன்னும் சொல்லப்போனால் அதற்கு உருவமே கிடையாது. அது எந்த உடலுக்குள் தங்குகிறதோ அதுவாக பாவிக்கப்பெறுகிறது. ஆகவே ஆணோ, பெண்ணோ யாராக இருந்தாலும் அவர்களுக்குள் தனிப்பட்ட சிறப்பொன்றுமில்லை. எத்தகைய பேரழகியாக இருந்தாலும் அவள் உடல் வெறும் தோலால் போர்த்தப்பட்டது. என்பதை உணர்வாயாக. அந்தப் பேரழகால் அல்லவா உனக்கு இவ்வளவு துயரம் ஏற்பட்டது. எனவே துக்கத்தை விடுவாயாக. (உண்மையிலேயே சீதாப்பிராட்டியார் யார்? என்பதை அறியாதவர் அல்ல அகத்திய முனிவர். ஆனாலும் முதலில் ராமபிரானைத் துயரக்கடலிருந்து வெளிக்கொணரவேண்டும். அதற்காகவே இவ்வாறு கூறுகிறார். என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்).

ஆகாசம் எவ்வாறு எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறதோ! அவ்வாறே ஆத்மாவும் இருக்கிறது. இரண்டுமே அழிவற்றது. நாம் பல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறைகள் கொண்ட வீட்டினைக் கட்டும்போது எவ்வாறு எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆகாசமானது (வெட்டவெளியானது) பல அறைகளாகத் தடுக்கப்படுகிறதோ! அவ்வாறே இந்த ஆத்மாவும் ஒவ்வொரு உடலுக்குள்ளும் பிளவுபட்டுத் தங்குகிறது. அந்த வீடு முற்றிலுமாக எரிந்துவிட்டது என்று வைத்துக்கொள்வோம், அதனால் அந்த வீட்டினுள் அடைபட்டிருந்த வெளியானது (ஆகாசமானது) சிறிதும் பாதிக்கப் படுவதில்லை. முன்போலவே வெளியோடு கலந்து நிற்கிறது. அதைப் போலவே உடல் அழிவதனால் அதனுள் தங்கிய ஆத்மாவும் எந்தவிதப் பாதிப்பையும் அடைவதில்லை. அது எங்கும் நிறைந்த பேரான்மாவோடு கலந்தே நிற்கிறது. அவ்வாறு இருக்க யாருக்கு யார் கணவன்? யார் மனைவி? எதற்காக நீ துக்கப்படுகிறாய்.

அழிவு என்பது உடலுக்கே தவிர ஆத்மாவிற்கல்ல. அவ்வாறு இருக்க, நீ துக்கப்படுவது எதற்காக? துக்கம் என்பது உடலுக்கும் அல்ல ஆத்மாவிற்கும் அல்ல (அதாவது இறந்து போன ஒருவனுக்காகவே துக்கப்படுவதே மடமை என்றாகும்போது மாற்றானால் சிறையெடுக்கப் பெற்றிருக்கும் பெண்ணிற்காக நீ இவ்வளவு தூரம் துக்கப்படுவது அழகாகாது. துக்கத்தை விடுத்து அவளை மீட்கும் முயற்சியில் இறங்குவாய் என்னும் பொருளில் பேசுகிறார்.)

அகத்திய முனிவரின் கூற்றை அமைதியாகச் செவிமடுத்த ஸ்ரீராமர் அவரை நோக்கி "முனிவர் பெருமானே! துன்பமானது உடலுக்கும் அல்ல; அழிவற்றதான ஆன்மாவிற்கும் அல்ல; என்று சொல்கிறீர்கள். ஆனால், சீதையின் பிரிவு நெருப்பாக என்னைச் சுடுகிறது. பிரிவுத் துன்பம் என்னை வாட்டுகின்றது. அதனை நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். நீங்களும் அதனை நேருக்குநேர் பார்க்கிறீர்கள். இருந்தும் இது துன்பம் இல்லை என்று கூறுகிறீர்கள். இதனை எப்படி ஏற்றுக்கொள்வது?" என்று கேட்கிறார்.

பலரும் பற்பல காலங்களில் பலவித கோணங்களில் விளக்கி வந்த மாயையைப்பற்றி அகத்தியரும் இங்கு ஸ்ரீ ராமபிரானுக்கு விளக்குகிறார். அதாவது,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ராமா உலகில் இன்று நாம் பார்ப்பதெல்லாம் உண்மை போல் தோன்றுகின்றது. ஆனால் இது உண்மை அல்ல. இதற்குப் பெயர் மாயை. எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளான பரமேச்வரனிடம் இந்த மாயை வசப்பட்டிருக்கிறது. நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாசம் செய்கின்ற ஜீவாத்மா இந்தப் பரமேச்வரனின் அம்சமாகும். இந்த ஜீவாத்மாக்கள் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கு சதுஷ்டயங்களைப் பிரதிபலிப்பவை".

சதுஷ்டயங்களாவன

மனம்

இது வாயுவின் அம்சம், நினைவும், மறதியும் இதன் தன்மைகள். அதனால் இது காற்றைப் போல அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கும். இதன் அதிதேவதை சந்திரன்.

புத்தி

புத்தி அக்னியின் அம்சம். நல்லது கெட்டதைப் பகுத்துணரும் தன்மை கொண்டது. இதன்வழி செல்பவர்கள் தடம் புரள மாட்டார்கள். இதன் அதிதேவதை பிரம்மன்.

சித்தம்

இது நீரின் அம்சமாக விளங்குவது, சிந்திப்பதும், ஐம்புலன்களுக்கும் சலனத்தை உண்டாக்குவதும் இதுவே. இதன் அதிதேவதை விஷ்ணு.

அஹங்காரம்

இது மண்ணின் அம்சம் கொண்டது. அழியக்கூடிய ஜடப் பொருளாகிய இந்த உடலையே நான் என்று எண்ணிக்கொண்டு, அதன் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு இயங்குவது. அஹங்காரம்; நான், எனது என்ற குறுகிய எண்ணத்துடன் நன்மை, தீமைகளை ஆராயாமல் நல்வினை, தீவினைகளைச் செய்து கொண்டிருக்கும். இதன் அதிதேவதை ருத்ரன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடலில் தங்கியுள்ள ஜீவன் இந்த நான்கினையும் பிரதிபலிப்பது. சிலநேரம் மனம் அலைபாயும். புத்தி அந்த மனதைக் கட்டுப்படுத்தி அதனால் வரும் நன்மை, தீமைகளை எடுத்துரைக்கும் (வெகு சிலரால் மட்டுமே இந்த புத்திமதிகளை ஏற்று நடக்க இயலும்) சுகமோ, துக்கமோ அதனை அனுபவிப்பதற்காக ஜீவன் தேர்ந்தெடுக்கும் இடமே இந்த தேகம்.

இந்த தேகமும் ஸ்தாவரம், ஜங்கமம் என்னும் இருபெரும் பிரிவுகளுக்குள் அடங்கும். மரம், செடி, கொடி வகைகள், ஸ்தாவர வகைக்குள் அடங்கும். முட்டையிலிருந்து தோன்றுவனவும், (வியர்வை) புழுக்கத்திலிருந்து தோன்றுவனவும், கருப்பையிலிருந்து தோன்றுவனவும், ஜங்கம வகையைச் சாரும். பறவை, பாம்பு போன்றவை முட்டையிலிருந்து தோன்றுவன. கொசுக்கள், புழுக்கள் போன்றவை வியர்வையிலிருந்து தோன்றுவன. மனிதன், பசு, நாய், பூனை முதலானவை கருப்பையிலிருந்து தோன்றுவன. நல்வினையின்பாற்பட்ட ஆத்மாக்கள், ஜங்கம ஜாதியிலும் தீவினையின்பாற்பட்ட ஆத்மாக்கள் ஸ்தாவர ஜாதியிலும் பிறவியெடுக்கின்றன.

அனைத்து ஜீவன்களும் மாயைக்கு அடிமையாகி உலக இன்பத்துள் மனத்தைப் புகுத்தி மீள முடியாமல் தவிக்கின்றன. இந்த ஜீவன்கள் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்ஸர்யம், என்னும் ஆறையும் தன்னகத்தே கொண்டு, அகங்காரத்தாற் கட்டுண்டு, இவ்வுலக வாழ்வில் நல்வினை தீவினைகளுக்கு ஆளாகின்றன என்று பலவாறு அகத்தியர் ஸ்ரீ ராமபிரானுக்கு பற்பல நல்லுபதேசங்கள் செய்தாலும், ஸ்ரீ ராமபிரானின் துயரம் சிறிதும் குறைந்தபாடில்லை. அதனால் ஸ்ரீராமர் அகத்தியரை நோக்கி ஸ்வாமி! மனைவியைப் பிரிந்து தாங்கமுடியாத துயரத்திலிக்கிறேன். எனவே, இந்தத் துயரம் நீங்க ஏதேனும் வழியிருந்தால் சொல்லுங்கள் என வினவி நிற்கிறார். (தத்துவ உபதேசங்களுக்கு இது சமயமல்ல என்பது கருத்து)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவரை தத்துவப் பூர்வமான விளக்கங்களைக் கூறிவந்த அகத்திய முனிவர், ஸ்ரீ ராமரின் இந்தக் கேள்விக்குப் பிறகு தனது அணுகுமுறையைச் சிறிது மாற்றுகிறார். அதனால் ராமரைச் சிறிது கோபங்கொள்ளச் செய்கிறார். (கோபத்தைத் தூண்டினால் துயரம் விலகும் என்று நினைத்தார் போலும்.)

ஹே ராமா ! மாயாவியான இராவணன் உனது மனைவியான சீதையைச் சிறையெடுத்துச் சென்று கடலுக்கு நடுவே இலங்கையில் சிறைவைத்திருக்கிறான். அவனோ மஹா பராக்கிரமசாலி! தேவர்கள் எல்லாம் அவனிடம் குரங்குக் கூட்டம் போலக் கட்டுண்டு கிடக்கிறார்கள். சிவபெருமானிடம் தான் பெற்ற வரங்களின் துணைகொண்டு, மூன்று உலகங்களையும் அவன் ஆண்டு, அனுபவித்துக் கொண்டு இருக்கிறான். தேவப்பெண்களெல்லாம் அவனுக்கு சவரி வீசிக் கொண்டிருக்கிறார்கள். அவனுக்கு இந்திரனை வென்று இந்திரஜித் என்று பெயர் பெற்ற மஹாவீரனான மகன் இருக்கிறான். மேலும், தேவர்களுக்கு யமனைப் போன்ற கும்பகர்ணன் என்னும் தம்பியைப் பெற்றிருக்கிறான். அறிவு ஜீவியான விபீஷணன் என்னும் மற்றொரு சகோதரனும் இருக்கிறான். அவனுடைய லங்காபுரி நகரமோ பகைவரால் உள்ளே நுழைய முடியாத அரண்களைக் கொண்டது. நால்வகைப் படைகளும் அவனிடம் கோடி கோடியாக இருக்கின்றது. (நீயோ காட்டில் எந்தப் படையுமின்றி இருக்கிறாய் என்பதைச் சொல்லாமற் சொல்கிறார். அப்படிப்பட்டவனை வெல்ல உன்னிடம் என்ன இருக்கிறது? என்று ஸ்ரீ இராமபிரானுக்குக் கோபம் உண்டாகும் விதத்தில் கேள்வி கேட்கிறார்.) நீயோ காம மயக்கத்திலிருக்கிறாய். உன்னால் எப்படி இராவணனை வென்று, சீதையை மீட்கமுடியும்? என வினவினார்.

இப்படிக் கேட்டால் சாதாரண மனிதனுக்கே கோபம் வரும். க்ஷத்ரிய குலத்தில் உதித்து பல அரக்கர்களையும், தாடகை முதலான அரக்கியையும் வென்ற மாவீரனான இராமரை இப்படிக் கேட்டால் அவருக்குக் கோபம் வராமலா இருக்கும்?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இராமபிரான் கோபமாகப் பேசினாலும், தான் ஒரு மஹா தபஸ்வியிடம் பேசுகிறோம் என்பதை மறக்காதவராக சற்று நிதானத்துடனேயே பேசுகிறார். முனிவரே! நான் க்ஷத்ரியன். என் மனைவியை ஓர் அசுரன் அபகரித்துக்கொண்டு போயிருக்கிறான். அந்த அசுரனைக்கொன்று, என் மனைவியை மீட்காவிடில் ஒரு க்ஷத்ரியனாக நான் உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை. இந்தத் தருணத்தில் நீங்கள் எனக்கு தத்துவ உபதேசம் செய்வதில் யாதொரு பயனும் இல்லை. மனைவியை மாற்றான் அபகரித்துச் சென்ற வேளையில் அவளை மீட்க யாதொரு முயற்சியும் மேற்கொள்ளாமல் தத்துவ உபதேசம் கேட்டுக்கொண்டிருந்தால் அவனை மனிதன் என்றே இவ்வுலகம் மதிக்காது. எனவே எனக்கு இப்போது வேண்டியது தத்துவ உபதேசம் இல்லை. நான் கடலைத் தாண்டி இலங்கையை அடைந்து இராவணனைக் கொல்லக் கூடிய உபாயத்தை அறிந்து கூறவேண்டும். நீங்கள்தான் எனக்குக் குருவாக இருந்து அதனை உபதேசித்து அருளவேண்டும். எனக்கு தங்களை தவிர வேறு குரு யாரும் இல்லை என பணிந்து நிற்கிறார்.

(எப்படியோ அகத்தியருடைய எண்ணம் ஈடேறிவிட்டது. இராமர் துயரத்திலிருந்து விடுபட்டுவிட்டார். அசுரனைக் கொன்று சீதையை மீட்கக்கூடிய முயற்சியிலும் இறங்கிவிட்டார்.)

ஸ்ரீ ராமபிரானின் வேண்டுகோளை ஏற்ற அகத்திய முனிவர் அவருக்கு விரஜா தீக்ஷையைச் செய்துவைக்க முன்வருகிறார். ஸ்ரீராமா இராவணன் இந்திராதி தேவர்களாலும், பிரம்மா விஷ்ணுவாலும் கூட வெல்லப்பட முடியாதவன். அவன் சாமகானம் இசைத்து ஈச்வரனுடைய அனுக்கிரஹத்தை முழுமையாகப் பெற்றவன். எனவே, பரமேச்வரனுடைய அனுக்கிரஹத்தைப் பெற்றால் ஒழிய அவனை வெல்லமுடியாது. எனவே, உனக்கு விரஜாகம விதிப்படி தீக்ஷை செய்துவைக்கிறேன். அதன்வழி நின்று தேஜோமயமான தேஹத்தைப் பெற்று, பாசுபத விரதத்தை அனுஷ்டித்து, சிவானுகிரஹத்தைப் பெறுவாயாக. அதன் மூலம் உனக்கு நல்வழி கிட்டும் எனக் கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஸ்ரீ ராமபிரானும் அதற்கிசைந்து அகத்தியரை வணங்கிப் பணிந்து தனக்கு தீக்ஷை செய்துவைக்கும்படி வேண்ட அவரும் தீக்ஷை முறைகளைச் சொல்கிறார்.

தசரத குமாரா! இந்த தீக்ஷையை திருவாதிரை நக்ஷத்திரமும், திங்கட்கிழமையும் கூடிய நாளில், வளர்பிறை சதுர்த்தசி, அஷ்டமி அல்லது ஏகாதசி இதில் ஏதாவது ஒரு திதியில் ஆரம்பிக்க வேண்டும். மும்மூர்த்திகளுக்கும் மேலான சிவபெருமானை தியானித்து அக்னியால் ஆவஸத்யம் என்ற அக்னியை சோதித்து (நம் உடலில் உள்ள 6 ஆதாரங்களிலும் உள்ள) பஞ்ச பூதங்களையும் நன்கு அறிந்து கொண்டு அவ்வற்றிற்குரிய குணங்களின் விதிமுறைப்படி சிந்தித்து ஐந்து மாத்திரை, நான்கு மாத்திரை, மூன்று மாத்திரை, இரண்டு மாத்திரை, ஒரு மாத்திரை அதன் பிறகு மாத்திரையற்றதையும் சிந்தித்து, துவாதசாந்தத்தத்திலுள்ள சிவபெருமானை நன்கு தியானித்து, ஸ்தாபித்துத் தன்னையே சிவமாய் ஆக்கிக்கொண்டு இந்தப் பாசுபத விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று பாசுபத விரத முறைகளைக் கூறுகிறார்.

(சிவாகமத்தில் பூதசுத்தி என்று ஓர் அற்புதமான அங்கம் உண்டு. இன்றும் கும்பாபிஷேக விழாக்களில் ஒவ்வொரு நாளும் யாகசாலை கிரியைகள் துவங்கும் முன்பு யாகம் செய்யக் கூடிய சிவாச்சாரியப் பெருமக்கள் வரிசையாக அமர்ந்து கொண்டு பூதசுத்தி என்கின்ற இந்த சடங்கைச் செய்வதனைக் காணலாம். இதனை முறையாகச் செய்த பிறகுதான் அவர் யாக பூஜைகளைச் செய்வதற்குத் தகுதி பெறுகிறார். மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆஜ்ஞை என்று நமது உடலில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரம் மண்மயமானது, சுவாதிடானம் – நீர்மயமானது, மணிபூரகம் – அக்னிமயமானது, அநாகதம் – காற்றின் தன்மையானது. விசுத்தி – ஆகாயத்தின் தன்மை கொண்டது. இவற்றில் மண்ணிற்கு மணம், சுவை, ஒளி, ஊறு, ஓசை, என்று ஐந்து வகை குணங்கள் உண்டு. அடுத்தாக உள்ள நீருக்கு மணம் நீங்கலாக நான்கு குணங்கள் உண்டு. இப்படியே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வொன்றாகக் குறைந்து, ஆகாயம் ஓசை என்கின்ற ஒரே குணத்தை மட்டும் பெற்றிருக்கும். அதற்கு அடுத்ததாக உள்ள ஆஜ்ஞை என்னும் ஆறாவது ஆதாரத்தில்தான் நமது ஆத்மா தங்கியுள்ளது. இந்த ஆத்மா மேற்கூரிய ஐந்து குணங்களிலிருந்தும் நீங்கியதாய் நிர்மலமாக அமைந்துள்ளது. பூதசுத்தியின் போது மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி, ஒவ்வொரு ஆதாரத்தின் வழியாகவும் மேலெழும்பச்செய்து, ஒவ்வொரு தன்மையாகக் (குணங்களாக) குறைத்து, நிறைவாக நிர்மலமான ஆத்மாவை இந்த தேகத்திலிருந்து வெளிடுப்படுத்தி துவாத சாந்தத்தில் உறையும் சிவபெருமானைத் தியானித்து. இந்த தேகத்தையே சிவமாக பாவனை செய்துகொண்டு, அதன்பிறகு ஆத்மாவை இந்த தேகத்தில் மீண்டும் உறையச் செய்து தாமே சிவமாக இருந்து கொண்டு, சிவபூஜை செய்ய வேண்டும். பூதசுத்தியின் முடிவில் சிவோகம் பாவயேது என்று இந்த தேகத்தையே சிவமாகப் பாவிக்கச் செய்வதைக் கவனித்திருந்தால் இது நன்கு விளங்கும். அவ்வாறு பூதசுத்தி செய்துகொண்டு வரக் கூடிய சிவாச்சார்யப் பெருமக்களைச் ஸாக்ஷாத் சிவபெருமானாகவே பாவிப்பதனால், அவர்கள் யாகசாலைக்குள் நுழையும் முன்பாக அவர்களுக்கு பாதபூஜை, கற்பூர நீராஞ்சனம் முதலிய உபசாரங்கள் செய்யப்படுகின்றன.

இந்த நடைமுறையைத்தான் அகத்திய முனிவர் இங்கே இராமபிரானுக்கு உபதேசிக்கிறார். ஒவ்வொரு குணத்தையும் ஒரு மாத்திரை என்கிறார். அவ்வாறு ஒவ்வொன்றாகக் குறைத்து நிறைவாக இந்த தேகத்தையே சிவமயமாய் ஆக்கிக்கொண்டு இந்தப் பாசுபத விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று கூறுவதிலிருந்து இந்த உண்மை நன்கு விளங்கும்.)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாசுபத விரத முறை

அதன்பிறகு அகத்திய முனிவர் பாசுபத விரதம் அனுஷ்டிக்கும் முறையைச் சுருக்கமாகக் கூறுகிறார்.

"விரதம் அனுஷ்டிப்பதற்கு முதல் நாள் உபவாசம் இருக்க வேண்டும். அதிகாலையில் எழுந்து, தேவையற்ற ரோமம், நகம் இவற்றை நீக்கி, நதி நீரில் நீராடி, வெண்ணிற ஆடை, வெண்ணிறப் பூநூல், வெண்ணிற மாலை, பூச்சணிந்து, சங்கல்பம் செய்து கொண்டு தனது சாகைக்குள்ள (பிரிவுக்குள்ள) மந்திரத்தால் அக்னியை ஏற்படுத்த வேண்டும், பிறகு விரஜா மந்திரத்தால் அந்த அநுவாகம் முடிய ஒருமுகப்பட்ட மனத்துடன் உச்சரித்து, சமித், நெய், அன்னம் முதலியவற்றால் தனித்தனியாக ஹோமம் செய்யவேண்டும். அதன்பிறகு "யாதே மந்த்ரே" என்ற மந்திரங்களால் ஹோமாக்னியுள்ள குண்டத்தில் உள்ள விபூதியை (சாம்பலை) எடுத்து குழைத்து விதிமுறைப்படி இட்டுக்கொள்ள வேண்டும். இந்த விபூதியானது அக்னி பகவானின் வீரியமாதலால் இதனைப் பூசிக் கொள்பவன் சக்தியுடையவனாகவும், பாபங்களிலிருந்து விடுபடுபவனாகவும், சிவபெருமானுக்குப் பிரீதியுடையவனாகவும் ஆகிறான். ஆகவே, ஸ்ரீ ராமா இப்போது உனக்குச் சிவ சஹஸ்ர நாமத்தை உபதேசிக்கிறேன். நான் முன்பு கூறிய விதிமுறைப்படி பாசுபத விரதத்தை அனுஷ்டித்து அந்த விபூதியை அணிந்து கொண்டு இரவும், பகலும் இடைவிடாமல் இந்த சிவ சஹஸ்ரநாமத்தைச் ஜெபிப்பாய். அதனால் சிவபெருமான் மகிழ்ச்சியடைந்து, உன்முன் பிரத்யக்ஷமாகி, உனக்கு நல்லுபதேசமும், பாசுபதாஸ்த்திரத்தையும் அளிப்பார். அந்த பாசுபதாஸ்த்திரம் மிகுந்த சக்திவாய்ந்தது. பிரளய காலத்தில் சிவபெருமான் அந்த அஸ்திரத்தை உபயோகித்தே உலகங்களை அழிப்பார். எனவே அந்த அஸ்திரம் உனக்கு இராவண வதத்திற்கு உறுதுணையாக இருக்கும். எனவே பாசுபத அஸ்திரம் பெறுவதற்காகச் சிவபெருமானைச் சரணடைவாய் உனக்குச் ஜெயமுண்டாகும்" என்று ஆசி கூறி அகத்தியர் விடைபெற்று சென்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிறகு ஸ்ரீராமபிரான் அகத்தியர் கூறிய முறைப்படி (கோதாவரி) நதிக்கரையில் குடில் அமைத்து, விபூதி ருத்ராக்ஷங்களை அணிந்துகொண்டு, விதிப்படி தீக்ஷை ஏற்று, ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்துப் பூஜை செய்யலானார். நதி நீரால் சிவலிங்கத்தை அபிஷேகம் செய்து, வனத்திலுள்ள மலர்களால் அர்ச்சித்து, காய்கனிகளை நிவேதனம் செய்து, பிறகு அகத்தியர் கூறிய விதிமுறைப்படி ஹோமம் செய்து, அந்த விபூதியையே உடலெங்கும் பூசிக்கொண்டு சிவ சஹஸ்ரநாமத்தை இடைவிடாமல் ஜெபித்துக் கொண்டிருந்தார்.

இவ்விதம் 4 மாதங்கள் கழிக்க ஸ்ரீ ராமபிரானின் பக்திக்கும், தவத்திற்கும் மனமிரங்கிய சிவபெருமான் தனது தேவியோடும், கணங்களோடும், பரிவாரங்கள் புடைசூழ ஜோதி ரூபமாக இடப வாஹனத்தில் ஸ்ரீராமரின் முன் எழுந்தருளினார். ஸ்ரீ ராமபிரானும் அக்காட்சியைக்கண்டு மிகுந்த மனக்களிப்புற்றுக் கூத்தாடி நாத்தழுதழுக்க சிவசஹஸ்ர நாமத்தை உச்சரித்தபடி சிவபெருமானைப் பலமுறை விழுந்து வணங்கியவராய் விளங்கினார்.

ராமரின் பக்தியால் மகிழ்ச்சியடைந்த சிவபெருமான் தனது இடப வாகனத்திலிருந்து பொன்மயமான ஓர் தேரின்மீதேறி அமர்ந்து கொண்டு, ஸ்ரீ ராமரையும் தனது ரதத்திற்கு வரவழைத்துத் தனது மடிமீது இருத்திக்கொண்டார். பிறகு ஸ்ரீ ராமருக்கு புனிதமான வில்லையும், குறைவற்ற அம்பறாத்தூணியையும் கொடுத்துப் பிறகு மஹாபாசுபதம் என்னும் திவ்யாஸ்த்திரத்தையும் கொடுத்தார். பிறகு ஸ்ரீ ராமபிரானைப் பார்த்து "அரசே இந்த பாசுபதாஸ்த்திரம் தீக்ஷண்யமானது. இந்த உலகத்தையே அழிக்கக்கூடிய வல்லமை படைத்தது. எனவே இதனை சாதாரணப் போரில் உபயோகிக்கக் கூடாது. உயிருக்கு ஆபத்து வரக்கூடிய தருணத்தில் மட்டுமே இந்த அஸ்த்திரத்தை உபயோகிக்க வேண்டும்." என்று பாசுபதாஸ்த்திரத்தின் வீரியத்தை எடுத்துக்கூறி, ஸ்ரீ ராமரிடம் அவ்வாறே உறுதிமொழியும் வாங்கிக்கொண்டார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதன் பின்னர் சிவபெருமான் லோகபாலர்களையும் (அட்டதிக் பாலகர்கள்) சூரியன், சந்திரன், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், போன்றவர்களையும் அழைத்து "நீங்களும் உங்களுடைய ஆயுதங்களை ஸ்ரீராமனுக்கு அளிப்பீர்களாக, அது ராவண வதத்திற்கு ராமனுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும். மேலும், என்னாலும் மற்ற தேவர்களாலும் இராவணனுக்கு மரணமில்லை என்ற வரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, தேவர்களெல்லாம் வானரங்களாக மாறி, இராமனுக்கு உதவிபுரிய வேண்டும்" என்று உத்தரவிட்டார். அவர்களும் அவ்வாறே தத்தம் ஆயுதங்களை ஸ்ரீ ராமபிரானுக்கு அளித்து, தேவபுத்திரர்கள் எல்லாம் வானரங்களாக உருமாறி இராமருக்கு உதவிபுரியச் சித்தமாயிருந்தார்கள்.

பிறகு ஸ்ரீராமர் பரமேச்வரரிடம் "ஸ்வாமி! ராவணனோ மிகுந்த பலசாலியாக இருக்கிறான். கடல் நடுவே யாரும் நெருங்க முடியாத கோட்டைகள், அரண்கள் அமைத்து அதனுள் பொன் மயமான நகரை நிர்மாணித்து, ஆண்டு கொண்டிருக்கிறான். அங்கு மிகுந்த பலம் கொண்டவர்களும், புத்திசாலிகளும், சிவபக்தர்களும், வேதாந்திகளுமாகிய பலகோடி அரக்கர்கள் இருக்கிறார்கள். அவர்களை தனித்திருக்கக் கூடிய (இராம லக்ஷ்மணர்களாகிய) நாங்கள் எவ்வாறு வெல்ல முடியும்" என வினவி நின்றார். அதற்குச் சிவபெருமான் "ஒருவனுக்கு அழிவுகாலம் (விநாசகாலம்) ஏற்படும் பொழுது அவன் தர்மநெறிகளிலிருந்து விலகியவனாகிறான் அதனால் அவனுடைய பக்தியும் பூஜாபலன்களும் பயனற்றவையாகி விடுகின்றன. எவனொருவன் தெய்வநிந்தனை செய்துகொண்டு, தேவர்களையும், ஞானிகள், யோகிகள், மஹறிஷிகள், அந்தணர்கள், பெண்கள் முதலானவர்களைக் கொடுமைக்கு ஆளாக்குகிறானோ, அவனுடைய அந்தச்செயல்களே அவனுடைய அழிவிற்கும் காரணமாகின்றன. இராவணனும் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டான். அவனால் பாதிக்கப்பட்டுள்ள நாகலோக, தேவலோகப் பெண்கள் எண்ணிலடங்காதவர்கள். அவனால் துன்புற்ற தேவர்கள், ரிஷிகள், அந்தணர்களின் எண்ணிக்கையும் அவ்வாறே. எனவே, அவனுக்கு உன்னால் அழிவு நேர்வது உறுதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"இராவணனால் சிறையெடுக்கப்பெற்று இலங்கையிலே (கடல் நடுவே) சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். அவளைக் கடலைக் கடந்து இலங்கை சென்று எப்படிக் காப்பாற்றுவாய்"? என்று எப்படிக்கேட்க முடியும்? அதற்கு இராமனும் இராவணனைக் கொன்று சீதையை மீட்கும் உபாயத்தை தாங்கள் தான் கூறவேண்டும் என்று எவ்வாறு வேண்டியிருக்க முடியும்?

அகத்திய முனிவர் முற்றும் உணர்ந்தவர். முக்காலமும் தெரிந்தவர். அவர் தனது ஞான திருஷ்டியால் சீதை எங்கு இருக்கிறாள் என்பதைக் கண்டறிந்து ஏன் இராம பிரானிடம் சொல்லியிருக்கக் கூடாது ? என்று நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. ஆனால் ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அகத்தியர் போன்ற முனிவர்கள் முக்காலமும் உணர்ந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் காரண காரியம் இன்றி அவர்கள் எந்த உண்மையையும் வெளிப்படுத்தமாட்டார்கள். இராமன் – சுக்ரீவன் நட்பு ஏற்பட வேண்டும், அதன் மூலம் இராமபிரான் கையாலேயே வாலி வதம் நிகழவேண்டும். இலங்கையை நோக்கி அனுமன் தூது நிகழ வேண்டும். அனுமனால் இலங்கை தீக்கிரையாக வேண்டும், சீதை அசோக வனத்திலிருக்கும் செய்தி அனுமனாலேயே ஸ்ரீ ராமபிரானுக்கு தெரியவரவேண்டும் என்பன போன்ற விஷயங்களும் முக்காலமும் உணர்ந்தவரான அகத்திய முனிவருக்குத் தெரியும் தானே? எனவே நிச்சயமாக முன்னமேயே அவர் இதனைச் சொல்லியிருக்கமாட்டார். அப்படியே ஒரு வாதத்திற்காக அகத்தியர் உண்மையைச் சொன்னதாக வைத்துக் கொண்டாலும் கூட, உண்மை அறிந்த இராமர் என்ன செய்திருப்பார்? சீதையைத் தேடி நேரடியாக இலங்கைக்கே பயணம் மேற்கொண்டிருப்பார். அல்லது சுக்ரீவனிடம் நட்புப்பூண்டு அவனது வானரப் படையின் உதவியுடன் பயணப்பட்டிருந்தாலும் கூட நாலாபக்கமும் படைகளை அனுப்பித் தேடச் செய்திருக்கமாட்டார். "என் மனைவி கடலின் மத்தியிலே இலங்கையிலே சிறை வைக்கப்பெற்றிருக்கிறாள். எனவே உடனடியாக படையெடுத்து இலங்கையை முற்றுகையிடுவோம்", என்று அதற்கான முயற்சியிலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறங்கியிருப்பாரேயன்றி, சீதையைத் தேடுகிறேன் பேர்வழி என்று காலதாமதம் செய்துகொண்டிருக்கமாட்டார். எனவே இராமலக்ஷ்மணர்கள் கோதவரி நதிக்கரையிலோ, பஞ்சவடிக் கட்டத்திலோ தங்கியிருந்த காலத்திலே அகத்தியர் இந்தப் பாசுபத விரதத்தை உபதேசிக்கவில்லை என்பதை நாம் உணரவேண்டும்.

சரி சுலோகத்தில் தண்டகாரண்யம் என்கின்ற ஒரு வனம் வருகின்றதே அது எங்கே இருக்கிறது? இது அடுத்த வினா. ஆலய வழிபாடுகள், சாந்திகள், ஹோமங்கள் போன்றவற்றில் சங்கல்பம் ஓர் முக்கியமான அங்கம் என்பது நாமெல்லோரும் அறிந்ததே. அந்த சங்கல்பத்திலே ஒருசில வரிகளை இப்போது பார்க்கப் போகிறோம். அத்யப்ரஹ்மன:, த்விதீய பரார்த்தே ஸ்வேதவராஹ கல்பே,: வைவஸ்வத மன்வந்த்ரே, அஷ்டாவிம்சதிதமே கலியுகே, பிரதமேபாதே, ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரதகண்டே மேரோ:, தக்ஷிணே பார்ச்வே, தண்டகாரண்யே, சகாப்தே.... (பாரதத்தில், குறிப்பாக நமது தென் பகுதியில் எந்த இடத்தில் விசேஷங்கள் நிகழ்ந்தாலும் மேற்கூறிய முறையிலேயே சங்கல்பம் செய்யப்படுகிறது. இதன் பொருள், இப்போதைய (or) இப்போது இருக்கக்கூடிய பிரம்மாவின்!!? இரண்டாவது பரார்த்திலே!! அதாவது இப்போது இருக்கக்கூடிய பிரம்மாவின் ஆயுட்காலத்தில் பாதி முடிந்துவிட்டது என்பது பொருள். (பிரம்மா என்பவர் எப்போதும் நிரந்தரமானவர் என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், பிரம்மாவுக்கும் ஆயுள் நிர்ணயம் உண்டு!)

நூறு கோடி பிரமர்கள் நொந்தினர்
ஆறு கோடி நாரணர் அங்ஙனே
ஏறு கங்கையின் மணல் எண்ணிலி இந்திரர்
ஈறிலாதவன் ஈசன் ஒருவனே!

என்ற பாடல் இதனை உணர்த்தும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கிட்கிந்தையில் கோடிக்கணக்கான தெய்வத்தன்மை பொருந்திய வானரப் படைகள் உனக்கு ஊழியம்புரியக் காத்திருக்கிறது. அவற்றின் உதவியால் கடலில் பாலம் அமைத்து இலங்கை ஏகுவாய். அங்கு இராவணாதிகளை குலநாசம் செய்து உன் மனைவியை மீட்டு வருவாய். உனக்கு ஜெயமுண்டாகட்டும்." என்று கூறி ஆசியும் வழங்கினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவ கீதை

சிவபெருமானிடமிருந்து பாசுபதம் முதலான அஸ்திரங்களைப் பெற்றுக்கொண்டவரான ராகவனுக்கு சிவபெருமானுடைய சிறிய அளவிலான தோற்றத்தையும், கருணை ததும்பும் கண்களையும், தனது சரீரத்தின் அளவினதாகவே விளங்கும் அவருடைய தேகத்தையும் பார்த்து, அவருக்கு ஒரு சந்தேகம் எழுகிறது. ஏறத்தாழ சராசரி மனிதனுக்குள்ள சரீர அளவேயான இவருடைய உடம்பிற்குள் எவ்வாறு ஈரேழு 14 உலகங்களும், அதிலுள்ள காடு, மலை, கடல், ஜீவராசிகள் என அனைத்தும் ஒடுங்கியிருக்க முடியும்? அந்தக் கூற்று உண்மையானதா? இல்லை மிகைப்படுத்தப் பெற்றதா? என்கின்ற சந்தேகம்தான் அது. சாக்ஷாத் மஹாவிஷ்ணுவின் அவதாரமான ராமபிரான் அனைத்தும் அறிந்தவர். அவர் அறிந்திராத விஷயங்கள் இந்த உலகத்தில் ஏதும் இருக்க முடியாது. ஆனாலும், தான் ஒரு சராசரி மனிதனாக அவதாரம் எடுத்திருப்பதை உணர்ந்து பல இடங்களிலும் தன்னை ஒரு சாதாரண மானிடனாகவே காட்டிக் கொள்கிறார்.

இறைவன் மாயைகளற்றவன். சாதாரண மனிதற்குரிய பற்று, பாசம், பரிவு, கோபம், சுகம், துக்கம், இதுபோன்ற எந்த உணர்ச்சிகளும் இறைவனைப் பாதிப்பதில்லை. ஆனால், ராமர் மனைவியைப் பிரிந்த துக்கத்தில் வாடுகிறார். இராவணனை கொல்ல வேண்டும் என்று கோபாவேசத்தில் துடிக்கிறார். ஏதும் அறியாதவர் போல் அகத்தியரிடம் உபதேசம் கேட்கிறார். இவையெல்லாம் சராசரி மனிதர்களுக்குரிய குணங்கள். ராமபிரானும் அவ்வாறே நடந்து கொள்கிறார். அவருடைய இந்த சந்தேகமும் அதன் வெளிப்பாடாகவே அமைகிறது. எனவே தனது சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக மட்டுமல்ல, உண்மையை வெளியுலகத்திற்கு வெளிப்படுத்தும் விதமாகவும் தனது சந்தேகத்தை பரமேச்வரனிடமே கேட்கிறார்.

“பகவானே அண்டசராசரங்களும், அனைத்து ஜீவராசிகளும், இன்னும் கண்ணிற்குப் புலப்படும், புலப்படாத அனைத்தும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தாங்களாகவே இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் தாங்களோ எங்களைப் போன்றவர்களால் பார்க்கக் கூடிய அளவிலே ஓர் வரையறுக்கப்பட்ட வடிவத்தோடு தேவியுடன் இருக்கிறீர்கள். தாங்கள் எப்படி பஞ்சபூதங்களை ஆதாரமாகக் கொண்டு அமைந்ததான இந்த உலகங்களாகிறீர்கள்? தயவு செய்து எனக்கு விளக்க வேண்டும்" என்று வேண்டுகோள் வைத்தார்.

கருணைக்கடலான சிவபெருமானும் பக்தனின் வேண்டுகோளை ஏற்று அதற்குப் பதில் சொல்ல தொடங்குகிறார். "அரசே! நானே மூலம் என்றும் விளங்கக் கூடியவன்! அழிவற்றவன்! நித்யமான நானே அநித்யமான ஜீவராசிகளாகவும் இருக்கிறேன்! பஞ்ச பூதங்களும், ஈரேழு பதினான்கு லோகங்களும் என்னுடைய அம்சங்களே! வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்கள் இப்படி அனைத்திலும் ஜீவனாக விளங்கக்கூடியவனும் நானே! பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், சூரிய சந்திரர்கள், அட்டவசுக்கள், திக் பாலகர்கள் இப்படி அனைவருமாக நானே விளங்குகிறேன்! இருளும், ஒளியும், சப்தமும் நானே! பார்வதியும், முருகனும், விநாயகனும் எனது அம்சங்களே! அனைத்து வித்யைகளுக்கும் அதிபதியும் நானே! அனைத்து மந்திரங்களும், அதன் உட்பொருளும் நானே! புண்ணியம், பாவம் என்று சொல்லப்பட்டவை அனைத்தும் நானே! அகாரம், உகாரம், மகாரம் என்னும் மூன்றையும் உள்ளடக்கியதும், வேதங்களுக்கெல்லாம் முற்பட்டதுமான ஓம்காரமும், அதன் உட்பொருளும் நானே! ஸர்வவ்யாபி அனந்தன், சூட்சுமன், வைத்யுதன், ஏகன், ஈசானன், பகவான், மஹேச்வரன் மஹாதேவன் இப்படி எண்ணற்ற நாமங்கள் எனக்கு உண்டு. என்னால் படைக்கப்பெற்ற இவ்வுலகம், என்னாலேயே பிரளயம் ஏற்படுத்தப் பெற்று, மீண்டும் என்னுள்ளேயே ஒடுங்கிவிடுகிறது." என்று மஹாதேவனான பரமேச்வரன் விளக்கிக் கூறுகிறார். (சிவபெருமான் ஸ்ரீ ராமபிரானுக்கு நேரடியாக உண்மை நியதிகளை எடுத்தியம்புவது இந்தப் பகுதியிலிருந்துதான். எனவே சிவகீதை இப்பகுதியிலிருந்து தான் துவங்குகிறது.) அவர் இவ்வாறு கூறினாலும், இராமருக்கு அந்தப் பதிலால் திருப்தி ஏற்படவில்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு சிறு குழந்தை ஒரு பெரிய மாளிகையின் முன் நின்று கொண்டு இந்த மாளிகையை நான் தான் கட்டினேன். இந்த மரங்களை நான் தான் வைத்து உண்டாக்கினேன் என்று கூறினால் நாம் சிரித்துக் கொண்டே அதற்கு மறுப்பேதும் சொல்லாமல் ஆமோதிப்பது போலத்தான் ஸ்ரீ ராமருடைய நிலையும் இருந்தது. கண் முன்னே அழகிய சிறிய உருவத்தோடு விளங்கக்கூடிய சிவபெருமான் அனைத்தும் தானே என்று கூறுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? எனவே இராமபிரான் மீண்டும் அவரிடமே கேட்கிறார். "சுவாமி நான் கேட்டதற்கான விளக்கம் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை. சிறிய தேகத்தோடு விளங்கும் உங்களுக்குள் தேவர்களும், 14 உலகங்களும் எப்படி இருக்க முடியும்? தாங்கள் தயைகூர்ந்து அடியேனுக்கு விளக்கவேண்டும்" என்று வேண்டினார். அதற்கு பரமேச்வரனானவர் "ராமா! ஆலவிதை மிகவும் சிறியது ஆனால், அதனுள் ஓர் ஆலவிருக்ஷம் எவ்வாறு அவ்வித்தினுள் அடங்கியிருக்கிறதோ, அதுபோலவே எனது மேனியில் பூதங்களின் தோற்றமும், ஒடுக்கமும் நிகழ்கிறது. ஒவ்வொரு நாளும் சூரியன் காலையில் தோன்றி, மாலையில் மறைவதைப்போன்று அகில உலகங்களும் என்னுள்ளிருந்து வெளிப்பட்டு, என்னுள்ளேயே ஒடுங்குகிறது. என்பதை அறிவாயாக" என்று கூறினார்.

மாதொரு பாகன் எவ்வளவு எடுத்துக்கூறியும் ஸ்ரீராமர் இன்னும் தெளிவடையாத ஓர் சிந்தையுடனேயே இருந்தார். அனுபவத்திற்கு வராத ஓர் விஷயத்தை யார் எப்படிச் சொன்னாலும், அதனைப் புரிந்துகொள்வது கடினம். வேடிக்கையாக ஓர் கதை சொல்வார்கள். ஒரு பெண் ஒரு மரத்தடியில் இறந்த குழந்தையைத் தன் மடியில் கிடத்தியபடி அழுது கொண்டிருந்தாள். (அந்த வழியாக வழிப் போக்கர்கள் யாரேனும் வந்தால் அவர்கள் உதவியுடன் அதனை அடக்கம் செய்யலாம் என்று வருவோரை எதிர்பார்த்துக் காத்து இருந்தாள்.) அப்போது அந்த வழியாக ஓர் குருடன் வந்தான். அவனிடம் இவள் உதவி கோரினாள். உடனே அவன் "குழந்தை எப்படி இறந்தது?" என வினவினான். அதற்கு அவள் "பால் விக்கி இறந்துவிட்டது" என்றாள். உடனே இவன் "பால் எப்படி இருக்கும்?"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எனக் கேட்டான். அவள் "பால் வெள்ளையாக இருக்கும்" என்றாள். அவன் "வெள்ளை எப்படி இருக்கும்?" என மேலும் வினவினான். அவளும் "வெள்ளை கொக்கைப்போல இருக்கும்" என்றாள். இவன்தான் எதையும் பார்த்ததில்லையே! எனவே அவளிடமே "கொக்கு எப்படியிருக்கும்?" எனக் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக் கொண்டே போக எரிச்சலைடந்த அவள் தன் கையை அவன் முன் கொக்கைப்போல வளைத்து இப்படி இருக்கும் என்றாள். தன் முன்னாள் ஏதோ நீட்டப்படுவதை உள்ளுணர்வால் உணர்ந்த குருடன் அந்த வளைந்த கையைத் தன் கைகளால் தடவிப்பார்த்தான். பிறகு கூறினான். "இவ்வளவு பெரியதாக உள்ளதை விழுங்கினால் குழந்தை இறக்காமல் என்னவாகும்" என்று கூறினானாம். அதுபோல எல்லாம் உணர்ந்தவரான ஸ்ரீ ராமபிரானும் நம்பொருட்டு சிவபெருமான் மூலமாகப் பல விஷயங்கள் இந்த உலகிற்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக தன்னை ஒரு பாமரனாகவே காட்டிக்கொண்டு "சுவாமி! இன்னும் தாங்கள் கூறுவதைப் புரிந்துகொள்ள முடியாதவனாகவே இருக்கிறேன். எனவே தயவு செய்து எனக்குப் புரியச் செய்யவேண்டும் என வேண்டினார். உடனே பரம்பொருளானவர் "இராமா! அகில உலகமும் என்னுள் எப்படி இருக்கிறது என்பதை உமக்குக் காட்டுகிறேன். சாதாரண கண்களுக்கு அதனைக்காணும் சக்தியில்லை எனவே திவ்யநேத்திரம் என்று சொல்லக் கூடிய ஞானக்கண்களை உமக்குத் தருகிறேன். அதனைக் கொண்டு பயமில்லாமல் எனது ஜோதி மண்டலத்தைக் காண்பாயாக" என்று அருளினார். அவ்வாறே ஞானக் கண்களையும் அளித்துத் தமது வாயைத் திறந்து ஸ்ரீ ராமபிரானுக்கு அண்டசராசரங்களையும் காட்டினார். அங்கு கைலாயம், விந்தியம், மந்திரம் முதலான மலைகள், கடல்கள், சூரிய சந்திரர்கள், அஸ்வினி தேவர்கள் 14 உலகங்கள் இப்படி எண்ணற்றவையும் இருப்பதைக் கண்டு திகைத்தார். இப்படி அனைத்தையும் பரமேச்வரரிடம் கண்ட ஸ்ரீ இராமபிரானுக்குத் தத்துவஞானம் ஏற்பட்டது. பிறகு அவர் சிவபெருமானைப் பலவாறு துதித்துப் பெருமானே! என்னை சம்சார பந்தத்தினின்று காப்பாற்றுவீராக!" என வேண்டி நின்றார். பரம்பொருளே! இவ்வுலகங்கள் யாவும் உம்மிடத்திலே தோன்றி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உம்மிடத்திலேயே நிலை பெறுகிறது என்பதை உணர்ந்து கொண்டேன். இவ்வுலகம் உமது மாயையால் ஆக்கப் பெற்றுள்ளது என்பதையும் புரிந்துகொண்டேன். எனவே உமது இந்த ரூபத்தைக் குறைத்துக் கொண்டு வழக்கமான திவ்ய ரூபத்தில் காக்ஷி தரவேண்டும்" என வேண்ட சிவபெருமானும் தனது விச்வரூபத்தை விடுத்துத் தனது இயற்கையுருவைக் கொண்டார். பின்பு, பலமுறை பணிந்தெழுந்து வணங்கிய இராமபிரானைப் பார்த்து "ராமா எதையெதைக் கேட்க விரும்புகிறாயோ அவற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள் உமக்கு நானே குருவாக இருந்து அதனைத் தெளியச் செய்கிறேன்" என்றார்.

இவ்வாறு பரமேச்வரன் கேட்டதும் ஸ்ரீ ராமரும் அவரை வணங்கி "பகவானே! பஞ்ச பூதங்களாலான இந்த உடலுக்குத் தோற்றமும் நிலையும், ஒடுக்கமும், இதன் வடிவமும் எப்படி உண்டாகிறது? அதனை எனக்கு விளக்கவேண்டும்" என வினவ சிவபெருமானும் விளக்கத் துவங்குகிறார்.

"அரசகுமாரனே! நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், என்னும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் அமைந்ததான இந்த தேகம், கருப்பையிலிருந்து தோன்றுவது. (மனிதன், பசு, விலங்குகள் முதலியன) முட்டையிலிருந்து தோன்றுவது (பறவைகள்) புழுக்கத்திலிருந்து தோன்றுவது (கொசு, புழுக்கள்) விதையிலிருந்து தோன்றுவது (மரம், செடி, கொடிகள்) என நான்கு வகைப்படும்" இதைத்தவிர மனதால் நினைத்து தோன்றச் செய்வதான பிறவிகளும் உண்டு. இவர்களுக்கு மானச புத்திரர்கள் (நாரதர், புலஸ்தியர் முதலானவர்கள் பிரம்மாவின் மானச புத்திரர்கள், சுந்தரர் சிவபெருமானின் மானச புத்திரராவார்) என்று பெயர்.

ஆணின் சுக்கிலமும், பெண்ணின் சோணிதமும் பெண்ணின் கருப்பையில் இணைந்து உருவாவது ஜராயுஜம் என்னும் கருப்பையுருவாக்கமாகும். ஒரு பெண் ருதுவான நான்காவது நாளில் குளித்துச் சுத்தமாவாள். அதன்பிறகு 16 தினங்கள் ருதுகாலமாகும். அந்தக் காலத்தில் ஆண்பெண் சேர்க்கை நிகழும் பொழுது கரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உருவாகிறது. அவ்வாறு உருவாகும் கருவானது சுக்கிலம் மிகுமானால் ஆண் குழந்தையாகவும், சோணிதம் மிகுமானால் பெண் குழந்தையாகவும், இரண்டும் சமமானால் அலியாகவும் உருவெடுக்கும் (இன்றைய மருத்துவ உலகம் இதனை அப்படியே ஏற்றுக் கொள்கிறது. ஆணினுடைய விந்தணுக்கள் (y) குரோமோ சோம், எனவும் பெண்ணினுடைய அண்ட அணுக்கள் (x:y) குரோமோசோம் எனவும் மருத்துவர்களால் அழைக்கப்படுகிறது. இதில் y:y ஆனால் ஆண் குழந்தையும், y:x ஆனால் பெண் குழந்தையும், y:x:y ஆனால் அலியும் உருவாகும் என்று இன்றைய மருத்துவ உலகம் நிரூபித்துள்ளது.) அந்த ருது காலத்தில் ஒற்றைப்படை நாளில் கர்பம் தரித்தால் பெண் மகவும், இரட்டைப்படை நாளில் கரு தரித்தால் ஆண்மகவும், 16வது நாளில் உருவாகும் குழந்தை கீர்த்தியடையும் விதத்திலும் பிறக்கும்.

ஒரு பெண் ருது காலத்தில் எந்த ஆணினுடைய முகத்தை ஆசையுடன் பார்க்கிறாளோ அவனது உருவம் போலக் குழந்தை உருவாகும். (இதுவும் மேல் நாட்டினரால் நிரூபிக்கப் பெற்ற உண்மையாகும். ஒரு வெள்ளைக்காரத் தம்பதிக்கு நீக்ரோ ஜாடையுடன் ஒரு குழந்தை பிறந்தது. அந்த ஊரில் நீக்ரோ யாரும் இல்லை அந்தப்பெண்ணும் வெளியில் எங்கும் செல்வதில்லை. ஆகையால், அவள் எந்த நீக்ரோ இளைஞனையும் சந்திக்க வாய்ப்பில்லை. இதனை நன்கு அறிந்திருந்த கணவன் இது எவ்வாறு நிகழ்ந்தது? என்பதை அறிந்து கொள்ள ஓர் ஆராய்ச்சியாளரை அணுகினான். அந்த ஆராய்ச்சியாளரும் இவனுடைய வீட்டிற்கு வந்து அண்டை வீடுகள், இவர்கள் புழங்கக்கூடிய இடங்கள் இப்படிப் பலவற்றையும் ஆராய்ந்து பார்த்துவிட்டு இறுதியாக படுக்கையறைக்கு வந்தான். அங்கு பெரிய அளவிலான ஓர் நீக்ரோ மல்யுத்த வீரனின் படம் ஒன்று மாட்டப் பெற்றுள்ளதைக் கண்டான். அதுவும் அவர்கள் அன்றாடம் தூங்கி எழுந்தவுடன் பார்க்கக் கூடிய வகையில் எதிர் சுவரில் மாட்டப்பட்டிருந்தது. உடனே அந்த ஆராய்ச்சியாளன் தனது முடிவை (எழுதினான்) கூறினான். உன் மனைவி கர்ப காலத்தில் ஒவ்வொரு நாளும் படுக்கையை விட்டு எழும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பொழுது இந்த நீக்ரோ இளைஞனின் புகைப்படத்தை பார்த்து இது போன்ற காட்டுமஸ்தான ஓர் குழந்தை தனக்கு வேண்டும் என எண்ணியிருக்கிறாள். அதனால் குழந்தை இவ்வாறு பிறந்திருக்கிறது. வேண்டுமானால் உன் மனைவியிடம் கேட்டுத் தெரிந்துகொள் எனக் கூறிவிட்டுச் சென்றான். கணவனும் தனது மனைவியிடம் வினவ, அவளும் அது உண்மைதான் எனக் கூறினாள்.) (எவ்வளவு அரிய விஷயங்கள் எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது இலக்கியங்களின் மூலம் வெளிப்பட்டிருக்கிறது பாருங்கள்.)

தோலினாலான சிறிய கர்ப்பபைக்கு ஜாரயுஜம் என்று பெயர். அந்தப் பையிலே ஆண், பெண்ணின் சுக்கில, சோணித சங்கமத்தால் கரு உற்பத்தியாவதினாலே கர்பப்பையில் உண்டாகும் உயிர்களுக்கு ஜராயுஜம் என்று பெயர். அண்ட என்ற சொல்லுக்கு முட்டை என்று பெயர். எனவே, முட்டையின் மூலம் உற்பத்தியாகும் உயிர்களுக்கு அண்டஜம் என்று பெயர். திறந்த வெளியிலே தேங்கிய நீரிலிருந்து உண்டாகும் கொசு முதலியவற்றிற்கு ச்வேதஜம் என்பது பெயர். மரம் செடி, கொடிகள் முதலான விதையிலிருந்து தோன்றக் கூடிய உயிர்களுக்கு உத்பிஜ்ஜம் என்று பெயர். மனதில் நினைத்தபடி தேகமெடுப்பவர்கள் தேவரிஷிகள்.

யோநிவாயில் விடப்பட்ட சுக்லமானது பெண்ணின் கர்பபையை அடைந்து, சோணிதத்தோடு இணைந்து கருவாகிறது. இது இரண்டாவது மாதத்தில் பிண்டம் என்ற நிலையிலும், மூன்றாம் மாதத்தில் சிறது சிறிதாக உடலுறுப்புக்கள் உற்பத்தியாவதும் நிகழ்கிறது. இவ்வாறு உருவாகும் உயிரானது ஆணானால் தாயின் வயிற்றில் வலப்புறத்திலும், பெண்ணானால் இடப்புறத்திலும், அலியானால் நடுவிலும் தங்கி சிறிது அசைவை ஏற்படுத்தும். கர்பத்திலிருக்கும் குழந்தை தனது தாயின் மனம் எதில் நாட்டமுடையதாக இருக்கிறதோ! அதிலேயே கவனம் செலுத்துகிறது. எனவே கர்ப காலத்தில் தாயின் விருப்பத்தை உணவு முதலியவற்றை அவசியம் நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில் குழந்தை அங்கஹீனமாகப் பிறக்கும் வாய்ப்பும் உள்ளது. தாய் எந்த விஷயத்தில் நாட்டமுடன் இருக்கிறாளோ? கவனம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செலுத்துகிறாளோ? குழந்தையும் அந்த விஷயத்தில் ஆர்வமுடன் இருக்கிறது. (பிரஹலாதன் தாயின் கருவிலிருந்து நாரதரிடம் அஷ்டாக்ஷர உபதேசம் பெற்றதும், அபிமன்யு சுபத்திரையின் கருவிலிருந்து கிருஷ்ணபரமாத்மாவிடம் பத்ம வியூகத்தினை உடைக்கும் உபாயம் கேட்டதும் இந்த வகையில்தான். இன்றைய நவீன மருத்துவமும் இக்கருத்தை உறுதி செய்கின்றது.) 7 மாதங்களுக்குள் குழந்தையின் அனைத்து அவயங்களும் நன்றாக வளர்ந்து முழுமை பெற்று விடுகிறது. எட்டாவது மாதத்தில் ஓஜஸ், தேஜஸ் என்னும் தாதுக்கள் உற்பத்தியாகும். இந்தத் தாது பிறக்கப் போகும் குழந்தைக்கு மிகவும் முக்கியமாகும். (குறைப்பிரசவத்தில் குழந்தை பிறந்தால் இந்த தாதுக்குறைவினால் இறக்க நேரிடும். அதனாலேயே நவீன காலத்தில் இங்கு பேட்டர் என்னும் கருவியில் வைத்து குறைப் பிரசவக் குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றன. தாய் உட்கொள்ளும் உணவின் சாரத்தை தொப்புள் கொடியானது குழந்தைக்குச் சேர்க்கிறது. 9வது மாத இறுதியில் அல்லது பத்தாவது மாதத் தொடக்கத்தில் முழு வளர்ச்சியடைந்து சிசு தாயின் யோனி வழியாகத் தலைகீழாக உரக்கக் கத்திக் கொண்டே வெளிப்பட்டு விழுகிறது. இவ்வாறு பிறந்த குழந்தை தானாக ஏதும் செய்ய இயலாத நிலையில் இருக்கிறது. எவ்வளவு காலம் ஸுஷும்னா என்னும் நாடியை கபம் சூழ்ந்திருக்கிறதோ? அது வரை மழலையாகவே இருக்கிறான்.

பிறகு வளர்ந்து இளமைப்பருவமெய்தி பலவிதமான செயல்களிலும் ஈடுபடுகிறான். காமத்தால் உந்தப்பட்டு அழகிய பெண்களை நாடுபவனாக அலைகிறான். பெண் என்பவள் எலும்பையும் சதையையும் தோலில் போர்த்தப்பட்ட உடம்புதான். அவளுடைய உடலிருந்து உயிர் நீங்கிவிட்டால், அந்த அழகிய உடல் சில நாட்களிலேயே அழுகி நாற்றமெடுத்துவிடும் என்பதை உணராமல் பெண்ணின்பத்திற்காக ஏங்குகிறான். பிறகு, மற்றவர்களால் அவமதிப்பிற்குள்ளாகும் வயோதிக பருவத்தை அடைந்து, பலவித நோய்களுக்கும் இடமாகி, பற்களையிழந்து, பார்வையையும் இழந்து, உணவு உண்ண முடியாதவனாகி, உடல் மெலிந்து, பலம் குறைந்து உறவினர்களால் அவமதிக்கக் கூடிய நிலையை அடைந்து முடிவில் மரணமடைகிறான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒவ்வொரு நாளும் காலையில் இறைதேடப் போகும் பறவைகள் மாலையில் தத்தம் கூட்டை வந்தடைவது போல உயிர்களின் பிறப்பும் இறப்பும் அமைகின்றன.

குழந்தைக் கருவையும், பிறப்பையும் பற்றிக்கூறிய சிவபெருமான் பிறகு உடலின் தன்மையைப் பற்றிக் கூறுகிறார். "ஸ்ரீராமா எளிதில் ஓத முடியாத மஹாவித்தையானது சத்வ, ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களைக் கொண்டது. அதில் வெண்ணிறமான சத்வகுணம் மனிதர்களின் சுகத்துக்கும், ஞானத்திற்கும் இடமானது. சிவப்பு நிறமுடைய ரஜோகுணம் நிலையற்றுச் சலனப்பட்டுக்கொண்டும், துக்கப்பட்டுக்கொண்டும் இருப்பது. தமோகுணம் அசையாத தன்மையுடையது. கரிய நிறமுடையது. சுகதுக்கங்களைப் பொருட்படுத்தாதது. தாய்தந்தையர் சாப்பிட்ட உணவினால் ஆறு கோசமுள்ள உடல் உண்டாகிறது. இவற்றில் சிறு நரம்புகள், எலும்புகள் முதலான கடினமான பொருட்கள் தந்தையிடமிருந்தும், தோல், மாமிசம், ரத்தம் முதலான மிருதுவான பொருட்கள் தாயிடமிருந்தும், மஜ்ஜை இருவரிடமிருந்தும் உருவாகிறது. முகத்தில் உள்ள மீசை, தாடி மற்ற பாகங்களில் உள்ள முடிகள், சிரை, தமனி, நகங்கள், பற்கள், ரேதஸ் முதலானவைகளும் தந்தையிடமிருந்தே உண்டாகின்றன. விருப்பு, வெறுப்பு, சுகம், துக்கம், தர்மம், அதர்மம், மனநிலைகள், முயற்சி, அறிவு, ஆயுள், புலன்கள் எல்லாம் ஜீவனால் உண்டாவன.

காது, தோல், கண், நாக்கு, மூக்கு, என்னும் ஐந்தும் ஞானேந்திரயங்கள், இவற்றின் செயல்களாவன கேட்டல், தொடுவுணர்ச்சி, பார்த்தல், சுவையுணர்தல், நுகர்தல் ஆகும். வாய், கை, கால்கள், அபானம், குஹ்யம் இவைகள் கர்மேந்திரியங்கள் இவற்றின் செயல்கள் முறையே பேச்சு, செயல், நடத்தல், விடுதல், ஆனந்தித்தல் ஆகும். மனம் இருவகையிலும் செயல்படுவது. மனம், புத்தி , அகங்காரம், சித்தம் என்னும் நான்கும் அந்தகரணங்களாகும். சுகமும் துக்கமும், மனதின் தன்மைகள். மனதின் செயல்கள் நினைவு, பயம், நிச்சயமற்ற தன்மை முதலியன. புத்தி நிச்சய வடிவானது. நான், எனது என்னும் அகங்காரம் எனப்படும் சித்தம் சிந்திக்கின்ற தன்மை கொண்டது. சத்வம் என்று கூறப்படும் அந்தக்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கரணமானது குணங்களின் வித்யாசத்தால் மூன்று வகைப்படும்; அவை சத்வ, ரஜஸ், தமஸ் என்னும் மூன்றாகும்.

மனம் அடங்கியிருத்தல், சுத்தம், தர்மகாரியங்கள் செய்வதில் நாட்டம் முதலான நல்ல தன்மைகளாலானது சத்வகுணம்.

காமம், குரோதம், மதம்,மாச்சர்யம் முதலான தன்மைகளைக் கொண்டது ரஜோகுணம். (ரஜோ குணம் மிகுந்தவர்கள் ராக்ஷஸர்கள் எனப்பட்டனர்.) தூக்கம், சோம்பல், அஜாக்ரதை, வஞ்சனை முதலிவைகள் நிரம்பியது தாமசகுணம்.

சத்வகுணமே நற்குணமாகும். சத்வகுணம் நிரம்பியவர்க்கு இந்திரியங்கள் தெளிவோடிருக்கும். நோயற்ற தேகமும், சோம்பலின்மையும் சத்வகுணத்திற்குரியது.

இந்தவுடல் பஞ்சபூதங்களாலானது. அதனால் அவைகளின் குணங்களும் உடலின் பல பாகங்களில் வெளிப்படும். ஓசைக்கு செவி (காது) இந்திரியம் தைர்யமும், பலமும், ஆகாயத்தின் தன்மைகள். மேல் தள்ளல், கீழே இறங்குதல் குறுக்கே பாய்தல், நடத்தல், பரவுதல் என்னும் ஐந்து செயல்களும் வாயுவின் தன்மைகளாலானது.

நம் உடலில் 10 வகையான வாயுக்கள் இருக்கின்றன அவையாவன 1.பிராணன், 2. (அ)சுபானன், 3.வியானன், 4.சமானன், 5.உதானன், 6.நாகன், 7.கூர்மன் 8.கிருகரன், 9.தேவதத்தன் 10.தனஞ்ஜயன், என்பன

1.பிராணன்

தசவாயுக்களில் முக்கியமானது. வயிற்றுப் பகுதியிலிருந்து கழுத்துவரை சஞ்சாரம் செய்யும் பிராணன், மூச்சை உள்ளிழுப் பதற்கும், வெளிவிடுவதற்கும், ஓசைகளை உச்சரிப்பதற்கும் காரணமாயுள்ளது.

2. (அ)சுபானன்

இது ஆசனவாய், குஹ்யம், இடை, முழுங்கால், வயிறு அடிவயிறு, துடைகளின் சந்தி, முழங்கால்களிலும் சஞ்சரிக்கிறது. இதனுடைய செயல் சிறுநீர், மலம் இவற்றை வெளியேற்றுவதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. வியானன்

இவ்வாயு, கண், காது, கணுக்கால்கள், நாக்கு, மூக்கு. முதலான இடங்களில் சஞ்சரிக்கும். இதனுடைய செயல் பிராணாயாமம் (பூரகம், கும்பகம், ரேககம்) ஆகும்.

4. சமானன்

இவ்வாயு நெருப்பின் தன்மையது. இது உடல் முழுவதும் வியாபித்துக் கொண்டு 72,000 நாடித் துவாரங்களிலும் சஞ்சரிக்கின்றது. நாம் உண்ட (or) அருந்திய உணவிலுள்ள சத்துக்களை நன்கு கொண்டு சேர்ப்பதும், உடலுக்குப் புஷ்டியைக் கொடுப்பதும் இதன் செயலாகும். (உடல் உஷ்ணமாக இருப்பதற்கு இவ்வாயுவே காரணம்.)

5. உதானன்

இவ்வாயு கால், கை, அங்கங்கள் சேருமிடங்கள் இவற்றில் சஞ்சரிக்கும். நாம் விரைவாக ஒரு செயலைச் செய்வதற்கும் குதித்தல் துள்ளல், முதலியவற்றிக்கும் இவ்வாயு காரணமாக அமைகிறது.

6. நாகன்

கழுத்திலும், கண்களிலும் தங்கியிருக்கும். வாந்தியை உண்டுபண்ணுவதும், கண்களுக்கு ஒளியைக் கொடுப்பதும் இதன் தொழில்.

7. கூர்மன்

கண்களில் தங்கியிருந்து இமைகளை மூடித்திறக்க உதவுகிறது.

8. கிருகரன்

தும்மலையும், பசி, தாகத்தையும் உண்டுபண்ணுவது.

9. தேவதத்தன்

கொட்டாவியை உண்டு பண்ணுவது, சோம்பலை முறிக்கச் செய்வதுமானது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. தனஞ்ஜயன்

சோர்வடையச் (சோகமடையச்) செய்வதும், கர்பத்திலிருக்கும் குழந்தையை வெளித்தள்ளுவதும் இதன் செயல். மரணமடைந்த பிறகும் தேகத்தை விடாமல் சில நேரங்கள் காத்திருக்கும் இவ்வாயு.

எனவே இந்தப் பத்து வாயுக்களின் செயல்களால்தான் நமது அனைத்து இயக்கங்களும் நடைபெறுகின்றன.

இவ்வாறு ஆகாயம் மற்றும் வாயுவின் தன்மைகள் நமது உடலில் வெளிப்படுகின்றன. அடுத்ததாக அக்னி

அக்னி

பஞ்ச பூதங்களில் அடுத்ததான அக்னியிடமிருந்து கண் என்னும் இந்திரியத்தையும், வெண்மை, சிவப்பு முதலிய நிறத்தையும், உண்ட உணவு ஜீரணித்தலையும், பிரகாசத்தையும், பொறுமையின்மை, கொடிய தன்மை இளைத்தல் முதலானவையையும், சக்தி, வெப்பம், பராக்கிரமம், புத்திசாலித்தனம் முதலியவற்றையும் இவ்வுடல் பெறுகிறது.

நீர்

தண்ணீரிலிருந்து நாக்கு என்னும் இந்திரியத்தையும், உஷ்ணத்தையும், குளிர்ச்சியையும், திரவத்தன்மை, வியர்வை, உடல் மென்மை முதலானவற்றை பெறுகிறது.

பூமி

பூமியிலிருந்து மூக்கு என்னும் இந்திரியத்தையும், வாசனையையும், கனத்தையும், தைர்யம், பராக்கிரமம் இவைகளையும் பெறுகிறது. தோல், இரத்தம், மாமிசம், மேதஸ் எனப்படும் வசை, எலும்பு மஜ்ஜை முதலானவை தாதுக்கள் எனப்படும்.

மனிதனால் உண்ணப்பட்ட உணவு ஜடராக்னியால் ஜீரணிக்கப் பெற்று மூன்று விதமாக ஆகிறது. அதன் ஸ்தூலபாகம், மலமாகிறது. இடைப்பட்ட பகுதி தசையாக மாறுகிறது. ஜீரணிக்கப்பட்ட உணவின் சூக்ஷுமமான பகுதி மனதின் அம்சமாகும். எனவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உண்ணும் உணவின் அடிப்படையிலே தான் மனிதனின் குணாதிசயங்கள் மாறுபடுகின்றன. அதனால் தான் மனம் அன்னமயமானது (உணவை மையமாகக் கொண்டது) என்று சொல்லப்படுகின்றது.

நாம் அருந்தும் தண்ணீரினுடைய ஸ்தூலபாகம், சிறுநீராகிறது. நடுப்பாகம் இரத்தமாகிறது. நுண்ணியபாகம் பிராணனை அடைகின்றது. ஆதலால் பிராணன் ஜலஸ்வரூபமாகும் என்று சொல்லப்படுகிறது.

உயிர்களின் இரத்தத்திலிருந்து தசையும், தசையிலிருந்து கொழுப்பும், கொழுப்பிலிருந்து எலும்புகளும், அதிலிருந்து மஜ்ஜையும் உண்டாகிறது. மஜ்ஜையிலிருந்து ரேதஸ் உண்டாகிறது. மாமிச சேர்க்கையால் நாடிகள் உண்டாகின்றன. இந்த உடலின் வாதம், பித்தம், கபம் முதலானவை தாதுக்கள் என்று சொல்லப்படும்.

நம் உடலில் 10 பங்கு தண்ணீரும், 9 பங்கு உணவின் சாரமும், 8 பங்கு இரத்தமும், மலம் 7 பங்கும், கபம் 6 பங்கும், பித்தம் 5 பங்கும், மூத்திரம் 4 பங்கும், நீர் 3 பாகமும், வசை என்னும் மாமிச திரவம் 2 பங்கும், மஜ்ஜை 1 பங்கும், சுக்கிலம் என்னும் ரேதஸ் ½ பங்களவும் உள்ளன. இவற்றில் சுக்கிலமே பலம் மிக்கதும், குறைந்த அளவினதும் ஆகும் என்று சொல்லிய சிவபெருமான் பின்பு எலும்புகள், ரோமம் (முடி) வரை மனிதனின் உடல் அமைப்பைக் கூறி முடிக்கிறார்.

பரம்பொருளின் வாயால் மேற்கூறியவற்றைக் கேட்டறிந்த இராமர் பின்னும் இந்த ஜீவனின் தன்மையைக் கேட்டறியும் பொருட்டுச் சிவபெருமானை மேலும் வினவுகிறார். "சர்வேச்வரா ஜீவன் ஜீவன் என்று கூறினீர்களே! ஜீவன் என்பவன் பிராணிகளுடைய உடலிருந்து உண்டாகின்றவனா? அல்லது தனித்திருப்பவனா? எதனால் ஜீவன் எனப்படுகிறான்? இதனுடைய சொரூபம் என்ன? மேலும் மரணத்திற்குப்பின் இந்த ஜீவன் எங்கு செல்கிறது? எப்படி மீண்டும் வருகிறது? மறுபடி தேகத்தை வந்தடைகிறதா? இல்லையா?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவற்றையும் எனக்கு விளக்கவேண்டும்" என வேண்ட, சிவபெருமானும் அதற்கு இசைந்து பதிலளிக்கிறார்.

மிகுந்த பாக்யசாலியான இராமா! ஜீவன் பற்றிய உண்மை தேவரகசியமானது. இந்திராதி தேவர்களும் அறிய இயலாதது எனினும் உனது பக்திக்கு மகிழ்ந்து இப்போது உனக்குச் சொல்கிறேன்.

இந்த ஆத்மாவானது சகல பூதங்களிலும் இருந்தாலும் வெளிப்படையாகப் பிரகாசிப்பதில்லை. மிக விவேகமாய் அறிபவர்களாலேயே நுணுக்கமாக ஒருமுகப்பட்டுள்ள புத்தியைக் கொண்டு காணப்படுகிறது.

உலகம் முதலியவற்றுக்கு முழு முதற்காரணமான நானே எண்ணற்ற அவித்யைகளோடு கூடி ஜீவத்தன்மை பெறுகிறேன். கர்மேந்திரயங்கள் ஐந்து, ஞானந்திரியங்கள் ஐந்து, மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்னும் நான்கு, வாயுக்கள் ஐந்து ஆகியவைகள் கூடி லிங்க சரீரத் தன்மையை அடைகின்றன. லிங்கதேகம் எனப்படும் இந்த நுண்ணிய உடலில் பிரதிபிம்பமாக்கப்பட்ட அவித்தையையோடு கூடிய சைதன்யமானது விவகார சம்பந்தமான ஜீவன் என்றும், க்ஷேத்ரக்ஞன் என்றும், புருஷன் என்றும் சொல்லப்படுகிறது. இந்த ஜீவனே உலகங்களில் புண்ய பாவங்களை அனுபவிப்பவன். லிங்க சரீரத்தில் ஜீவன் அங்குமிங்குமாகச் சென்றுகொண்டு விழிப்பிலும், கனவிலும் சுகதுக்கங்களை அனுபவிக்கின்றது.

கண்ணாடியில் உள்ள அழுக்கினால் எப்படி பார்க்கும் முகம் தெளிவற்றதாக இருக்கிறதோ! அது போலவே அந்தக் கரணங்களிலுள்ள அழுக்கினால் ஆத்மாவும் அழுக்கடைந்தது போலக் காணப்படுகின்றது. அந்தகரணங்களோடு சேர்ந்து இயங்குவதால் ஆத்மாவும் தம் அறிவையிழந்து தானும், அவையும் ஒன்றே என்னும் பாவனையால் பற்றுதலையடைகிறது. அதன் காரணமாக மேலான ஆத்மா துக்கமுற்றது போன்று ஆகிறது.

* ★ *

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜீவனின் இருப்பிடமும் அளவும்

உடலில் வயிற்றுக்கு மேல் கழுத்துக்குக் கீழ் இருக்கக் கூடிய ஹ்ருதயம் என்று சொல்லப்படுகின்ற நெஞ்சுப்பகுதியின் நடுவில் காம்போடு கூடிய தாமரை மொட்டுப் போன்ற இதயம் தலைகீழாக இருக்கிறது. அதனுள் நுட்பமான தகராகாசம் என்று சொல்லப்படுகின்ற இடம் இருக்கின்றது. அந்தத் தகராகாசத்தில் ஜீவன் இருக்கிறான்.

கேசத்தின் நுணியை நூறு பங்காக்கி, அதன் ஒரு பங்கை மீண்டும் நூறாக்கினால் என்ன அளவோ, ஜீவனின் அளவும் அவ்வளவே! இந்த ஜீவன் அழிவற்ற தன்மையுடையவன். (இந்தக் கருத்தைத் திருமூலரும் அப்படியே பிரதிபலிக்கிறார். அவருடைய பாடலைப் பார்ப்போம்.

மேவிய ஜீவன் வடிவது சொல்லிடில்
ஆவியின் மயிரொன்றை நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறது நூறாயிரத் தொன்றே! (திருமூலர் திருமந்திரம்)

சிவ பெருமான் கேசத்தின் நுணியை நூறு பங்காற்ற வேண்டும் என்றார். நுணி என்பது எந்த அளவு என்பதில் குழப்பம் வந்துவிடக் கூடாதாகையால், அதையும் தெளிவுபடுத்தும் விதத்தில் பசுவின் உடலிருந்து ஒரு முடியை எடுத்து அதனை 1 லட்சம் பங்குகளாக்கினால் அதில் ஒரு துண்டின் அளவே ஜீவனின் வடிவம் என்று தெளிவுபடுத்துகிறார் திருமூலர்.

சூரியனிடமிருந்து கதிர்கள் வெளிப்பட்டு எவ்வாறு எங்கும் பரவியிருக்கின்றதோ! அதுபோல இதயத்திலிருந்து நாடிகள் வெளிப்பட்டு உடலெங்கும் பரவியிருக்கின்றது. இவற்றில் குறிப்பாக 110 நாடிகள் எங்கும் பரவியிருக்கின்றது. விஷயங்களைப் பார்க்கின்றனவாக ஒவ்வொரு இந்திரியத்திலும் 10-10 நாடிகள் செல்கின்றன. இவைகள் உறக்கம், விழிப்பு, கனவு முதலான நிலைகளில் வினைப்பயனை அனுபவிக்கச்செய்கின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மனிதர்களுக்கு விழிப்பு, உறக்கம், கனவு என மூன்று நிலைகள் உண்டு, இதனை ஜாக்ரத், சுஷுப்த்தி, ஸ்வப்னம் என்று கூறுவார்கள். நாம் படித்தல், உண்டல், வேலைகள் செய்தல் போன்ற அன்றாட அலுவல்கள் விழிப்பு நிலை ஜாக்ரத். எதுவுமே தெரியாத ஆழ்ந்த உறக்கநிலை சுஷுப்தி. உறக்கத்தின் இடையே வரும் கனவு – ஸ்வப்னம்.

சூக்ஷ்ம தேகத்தோடு தொடர்புடைய புத்தி, சித்தம், மனம் அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களினால், அவரவர் கர்ம வினைகளுக்கேற்ப விழிப்பு நிலையில் சுக துக்கங்களை அனுபவிக்கின்றன. நமது உடம்பாகிய இந்த ஸ்தூல தேகம் ஒவ்வொரு பிறப்பிலும் அழியும் தன்மையுடையது. ஆனால், சூக்ஷ்ம தேகமோ ஜீவன் முக்தியடையும் வரையில் அழிவதில்லை.

விழிப்பு நிலையில் செயல்கள் முடிந்த பின்னால், உறக்க நிலை ஏற்படுகிறது. உறக்கத்தில் கனவு காண்பதில் இன்பம் கொண்டு மாயையுடன் கூடிய ஜீவன் கனவு மயக்கத்தில் நிலை மாறுகிறது. கனவுகள் வயது பருவத்திற்குத் தக்கபடி அமைகின்றன. ஆகாயத்தில் மிக உயர்ந்த தூரத்தில் பறக்கும் பருந்தானது களைப்படையும் போது மீண்டும் தனது கூட்டை அடைந்து ஓய்வெடுப்பது போல ஜீவனும் மாயையினாலும், முன்வினைப் பயனாலும், விழிப்பு, கனவு, உறக்க நிலைகளில் சுக துக்கங்களை அனுபவித்து, நிறைவில் பரமனுடைய பாதத்தில் சரணாகதியடைகிறது. இந்த மூன்று நிலைகளே இவ்வுலகில் சொர்க்க நரகங்களிலும் ஏற்படுவன.

“நிரந்தரமான சூரியன் இரவில் மறைந்து விடுவது போலவும், மறுநாள் மீண்டும் உதயமாவது போலவும், மழைமேக மூட்டத்தால் சில சமயம் மறைக்கப்படுவது போலவும் தோன்றும். ஆனால் சூரியன் எழுவதுமில்லை, மறைவதுமில்லை அதைப் போலவே இந்த ஜீவனும் நிரந்தரமானது. மாயையினால் பல பிறப்புக்கள் எடுத்து மடிவது போலத் தோன்றினாலும், இந்த ஜீவன் நிரந்தரமானவன் என்பதை அறிவாயாக!” என்று இராமபிரானுக்கு இந்த தேகத்தின் தன்மையைக் கூறி முடிக்கிறார் சிவபெருமான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(அடுத்ததாக ஸ்ரீராமர் கேட்காத ஒரு விஷயத்தையும் அவருக்கு விளக்குகிறார் பரம்பொருள். அது மரணத்திற்கு அப்பாலே நிகழ்வதாகும்.)

"அரசர்களிற் சிறந்தவனே! இந்த ஜீவன் உடலைவிட்ட பிறகு அடையும் நிலை பற்றியும் கூறுகிறேன் கேள்!

ஜீவன் மண்ணுலகில் வாழும் போது மூன்று உடல்களைப் பெற்றிருக்கும். அவை முறையே ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களாகும்.

ஸ்தூல சரீரம் நமது கண்களுக்குப் புலப்படும் வகையில் அமைந்தது (கண், காது, உடல், கை, கால், நிறம், உயரம் முதலியன)

சூட்சும சரீரம் நமது உடலில் பல பாகங்களிலும் உள்ளது. ஆனால், கண்களால் பார்க்க இயலாத நிலையில் உள்ளது. இதனை லிங்கசரீரம் என்றும் கூறுவார்கள்.

நமது காதுகள் நமக்குத் தெரியும். அவை எப்படிக் கேட்கின்றன என்பது நமக்குத் தெரியாது. கண்கள் நமக்குத் தெரியும். ஆனால், அவை எவ்வாறு பார்க்கின்றன என்பது நமக்குத் தெரியாது. இவையும், இவைபோல இன்னும்.

1.	நமது	நாக்கும்	சுவையுணரும் தன்மையும்
2.	நமது	செவியும்	கேட்கும் தன்மையும்
3.	நமது	கண்ணும்	பார்க்கும் தன்மையும்
4.	நமது	மூக்கும்	முகரும் தன்மையும்
5.	நமது	தோலும்	தொடுவுணர்ச்சியும்
6.	நமது	கைகளும்	செயல்பாடும்
7.	நமது	காலும்	நடத்தல், நிற்றல், ஓடுதல் முதலானதும்
8.	நமது	வாயும்	பேசும் தன்மையும்
9.	நமது	குதமும்	மலஜலம் கழிக்கும் தன்மையும்
10.	நமது	மர்ம உறுப்பும்	சிறுநீர், சுக்கிலம், சோணிதம், இவைகளை
	இவற்றோடு		விடுத்து ஆனந்தம் தரும் தன்மையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவற்றோடு நாம் முன்பு கூறிய பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், என்னும் பஞ்சப் பிராணன்களும் மனமும், புத்தியும் ஆகிய 7ம் சேர்ந்து மொத்தம் 17ம் சூட்சும சரீரம் எனப்படும்.

அஞ்ஞானமே காரண சரீரம்

ஜீவனின் பிறப்பு, இறப்புகளுக்கும், சுக துக்கங்களுக்கும் இவையே காரணம்.

ஸ்தூல சரீரம், உணவு முதலியவற்றால் வளர்வது. உணவும், நீரும் இல்லாவிட்டால் இந்த ஸ்தூல சரீரம் அழிந்து விடும்.

காமம், குரோதம், துவேஷம், பாசம் முதலானவற்றால் வளர்வது சூட்சும சரீரம், இவைகள் அழிந்தால் சூட்சம சரீரம் அழியும்.

காரண சரீரம் நான், எனது என்னும் எண்ணங்களால் வளர்வது. நான், எனது என்னும் எண்ணங்கள் அழிந்தால் காரண சரீரமும் அழியும். காரண சரீரமும், சூட்சும சரீரமும் அழிந்தால் தான் முக்தி கிட்டும்.

நமது வயிற்றில் ஜடராக்னி என்று ஒரு அக்னி இருக்கிறது. நாம் உண்ணும் உணவை அந்த அக்னிதான் பக்குவப்படுத்தி ஜீரணிக்க வைக்கிறது. முதுமை, நோய், கபம் போன்ற காரணங்களால் உடல் பீடிக்கப்படும் பொழுது, இந்த அக்னி அணைந்து போகும். அதனால் ஜீரணத்தன்மை குறைந்து விடும். அதனால் பசி ஏற்படாது. அன்னபானங்கள் ரசமாக்கப்படாததால் தாதுக்கள் வற்றிப்போகின்றன. அன்னபானங்களை (உணவு, நீராகாரங்கள்) ரசமாக்கி, சமமாகப் பிரித்து நாடிகளில் செலுத்தும் பணியை சமானவாயு செய்து வருகிறது. (இப்பணியைச் செய்வதனாலேயே அதற்கு அந்தப் பெயர்) அஜீரணம் காரணமாக சமானவாயு தன் பணியைச் செய்ய இயலாமற் போகிறது. நாடிகளுக்கு சத்துக்கள் கிடைக்காததால் பழுத்தபழும் மரத்திலிருந்து தாமாகவே விழுந்து விடுவதைபோல, உடலிருந்து சூக்ஷும உடல் வெளியேறிவிடுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதன் பிறகு நாடிகளின் மூலம் உடல் முழுதும் வியாபித்திருந்த ஜீவனானது இந்திரியங்களின் வாசனைகளையும், அத்யாத்மிகம் முதலானவற்றையும் கிரஹித்துக் கொண்டு இதய கமலத்தில் ஒடுங்குகிறது. இந்நிலையில் பிராண வாயுவானது வெளிப்படுதற்குத் தயாராகி மற்ற ஒன்பது வாயுக்களோடும் சேர்ந்து கொண்டு மேல்நோக்கிய சுவாசம் உடையதாகின்றது. இப்போது ஜீவன் பிராண வாயுவோடு கூடினவனாகிறான்.

இந்நிலையில் விஞ்ஞானாத்மா (இரண்டற்றதான ஆத்மநிலை) கற்ற வித்தை, செய்த கர்மவினை, முதலியவைகளோடும் கூடியனவனாக, விழிப்பு நிலையில் உள்ள ஆத்மாவைப் பற்றிக்கொண்டு, நாடிகளின் வழியை அடைந்து கண்களின் வழியாகவோ (or) தலைவழியாகவோ உடலைவிட்டு வெளியேறுகிறான்.

பானை உடைந்த பிறகு வெளியோடு கலந்து நிற்கும் குடாகாசமானது அதே இடத்தில் வேறொரு குடத்தை (பானையை) வைக்க அதனுள் நிறைந்து தனிப்பட்டு நிற்பது போல, சூட்சும சரீரமும் அதன் கர்ம வினைக்குத் தக்கபடி (மறுபிறப்பின் மூலம்) வேறு உடலை அடைகின்றது. நதியில் மீன் இக்கரைக்கும் அக்கரைக்குமாகச் சஞ்சரிப்பது போல ஜீவனும் முக்தி கிடைக்கும் வரையில் வேறு வேறு பிறப்பெடுத்துச் சஞ்சரிக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மரணத்திற்குப் பின்

மரணத்திற்குப்பின் ஜீவனானவன் பாபத்தின் பலனை அனுபவிக்கவேண்டியிருந்தால் யாதனா சரீரம் என்னும் காற்று வடிவமான சரீரத்தைப் பெற்று யம தூதர்களால் அடக்கப்பட்டவனாக நரகலோகத்தை அடைவான்.

பூலோகத்தில் வாசம் செய்யும் காலத்தில் யாகம், தர்மம், அன்னதானம், குளம் வெட்டுதல் போன்ற நற்கருமங்களைச் செய்த ஜீவன், அவன் பூஜித்த அக்னியின் துணைகொண்டு யமதூதர்களைப் பின்பற்றிப் பித்ரு லோகத்தை அடைகிறான். பின் தூமதேவதை, ராத்ரிதேவதை, கிருஷ்ணபக்ஷதேவதை, தக்ஷிணாயண தேவதை இவர்களின் துணையுடன் சந்திர லோகத்தில் அங்குதமயமான திவ்ய தேகத்தைப் பெற்று, பெரும் போக சுகங்களை அனுபவிக்கிறான். அவனுடைய புண்ணியபலன் எவ்வளவு காலம் அங்கிருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்கின்றதோ? அவ்வளவு காலம் அங்கிருந்து சுக போகங்களை அனுபவித்துவிட்டு மீதமுள்ள கர்மவினைகளை அனுபவிக்க பூமிக்கு வருகிறான்.

(செய்தது புண்ணியமோ, பாவமோ எதுவாக இருந்தாலும் அதன்பலனை அனுபவித்தே ஆகவேண்டும். புண்ணியத்தின் மிச்சமோ, பாவத்தின் மிச்சமோ இல்லாமல் போனால்தான் முக்தி கிட்டும். இதனைத் தான் "இருவினை ஒழிய" இறைவனைப் பணிந்து நின்றார்கள். நம் முன்னோர்கள் சிலர் சிறுவயதிலே குழந்தையாக இருக்கும்பொழுது அல்ப ஆயுஷில் மடிவது கூடத் தனது மிச்ச வினைப்பயனை அனுபவிக்க வந்து அதனை முடித்துக் கொண்டு செல்வதாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். (ஞான சம்பந்தர் 16 வயதிலேயே முக்தியெய்தினார். சங்கரர் 32 ஆண்டுகள் வாழ்ந்தார்.)

அவ்வாறு பூமிக்கு வரும் ஜீவன் ஒரு தந்தை மூலம் யோனி வழியாகத் தாயின் கெர்பத்தை அடைந்து, தத்தம் கர்மவினைக்குத் தக்கபடி ஆண், பெண், அலி இவற்றில் ஒன்றாகப் பிறப்பெடுக்கிறது என்று கூறி ஜீவன், அடையும் நிலைகளைப்பற்றி கூறிய சிவபெருமான் ஜீவன் பின்னும் முக்திக்குரிய வழிவகைகளையும், கூறுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புண்ணியப் பலன்கள் அதிகமாகக் கொண்டுள்ள ஜீவன் உடலை விட்டு வெளியேறி அர்ச்சித்த வடிவமாக, தினதேவதை, சுக்லபக்ஷ தேவதை, உத்தராயண தேவதை, வருஷ தேவதை இவைகளின் துணைகொண்டு, சந்திர, சூர்ய உலகங்களைக் கடந்து வித்யுத் லோகத்தை அடைகின்றது. அங்கே பிரம்மலோகத்து திவ்ய புருஷன் ஒருவன் வந்து அந்த ஜீவனை ஒரு திவ்யமான தேகத்தில் புகச் செய்து பிரம்மலோகத்தில் வாசம் செய்யச் செய்கிறான். பிரம்ம லோகத்தில் திவ்ய தேகத்தோடு விரும்பிய போகங்களை அனுபவிக்கும் ஜீவனானவன் வெகுகாலம் அங்கே வாசம் செய்து பிறகு பிரம்மாவோடு முக்தியடைகிறான்.

இவைகளை விடுத்துப் பிரம்மஜ்ஞானத்தில் மட்டுமே விருப்பம் கொண்டவனான ஞானி முன்பு சொன்ன எந்த உலகத்திற்கும் செல்ல வழியில்லை. அந்தந்த லோகத்திற்குறிய திவ்ய தேகங்களையும் பெறுவதில்லை. தண்ணீரிலே போட்ட உப்புக்கள் தண்ணீரோடு கலந்துவிடுவதுபோல நேராக பிரம்மத்தோடு கலந்துவிடுகிறான்.

கனவில் கண்ட காட்சிகள் விழித்துக் கொண்டவுடன் காணக்கிடைப்பதில்லை. அது போல பிரம்மஜ்ஞானத்தை அடைந்த ஒருவனுக்கும் மாயையான இந்த உலகத் தோற்றங்கள் கனவுபோலவே மறைக்கப்பட்டு விடுகின்றன. இவ்வாறு புண்ய கர்மங்களைச் செய்யாதவனும், பிரம்ம வித்தையை அறியாதவனும் நரகம் என்னும் மூன்றாவது இடத்தை அடைந்து, அங்கு பலவிதக் கொடுமைகளை அனுபவித்துப் பிறகு மீண்டும் பூமிக்கு வந்து ஈ, கொசு முதலான ஈனப்பிறவிகளை அடைகின்றான்! என்று பிரம்மஜ்ஞானம் ஒன்றே இறைவனை அடையும் ஒரே வழி என்பதனை விளக்குகிறார்.

இவற்றைச் செவிமடுத்த இராமபிரான் சிவபெருமானிடம் கந்தர்வலோகம் முதலான லோகங்களின் போகம் எப்படிப்பட்டது? இந்த லோகங்களில் ஏற்றத் தாழ்வுகள் உண்டா? போன்ற விளக்கம் வேண்டுமென்று கேட்க சிவபெருமானும் அதனைப் பின்வருமாறு விளக்குகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஒருவனுக்கு பிரம்மவித்யாஞானம், கர்மவினை இவைகளுக் கேற்பவே கந்தர்வ தேவ போகங்கள் ஏற்படும். ஒருவன் பூலோகத்தில் சகல செல்வங்களுடன் ஏகபோகமாக வாழ்கிறானென்றால், அந்த ஆனந்தம் மனித ஆனந்தம் எனப்படும். தவமுடைய ஒரு மனிதன் கந்தர்வனாகிறான் என்றால் அந்த ஆனந்தம் மனித ஆனந்தத்தை விட 100 மடங்கு அதிகம். தேவகந்தர்வர்களுடைய ஆனந்தம் அதை விட100 மடங்கு, தேவர்களின் ஆனந்தம் அதைவிட 100 பங்கும் அதிகமாகும்.

ஆதலினால் முதலிலிருந்தே தேவர்களாகத் தோன்றியவர்களுடைய ஆனந்தம் அதைவிட 100பங்கு அதிகம் தேவகுருவான பிரஹஸ்பதிக்கு தேவர்களைவிட 100 மடங்கு ஆனந்தம் அதிகம். பிரம்ம தேவருக்கு அதைவிட 100 பங்கு ஆனந்தம் அதிகம்.

ஞானத்தினால் தான் சுகம் கிடைக்கும். தேவலோகத்தில் சுகத்தைத் தவிர்த்து வேறு இல்லை. பாவம் புரியாதவனாக, காமமற்று, வேதமோதி அதன் பொருளுணர்ந்து அதன்படி நடக்கும் அந்தணனுக்கு முன்னர் கூறிய ஆனந்தங்கள் படிப்படியாகக் கிடைக்கும்.

"தசரத குமாரா" ஆத்ம ஞானத்தை விடச் சிறந்தது வேறெதுவுமில்லை. ஆத்மஞானியான அந்தணன் தான் செய்யும் செயல்களால் உயர்வோ! தாழ்வோ! அடைவதில்லை. ஞானியை பாவச்செயல்கள் பற்றாது. எனவே ஞானியான அந்தணனே அனைவரிலும் உத்தமன்.

செய்யும் செயலின் பலன் இன்னது என்று தெரிந்து செய்பவனுக்கு கிடைக்கும் பலனும் குறைவின்றிக் கிடைக்கும். கோடி அந்தணர்களுக்கு அன்னமளிப்பதால் கிடைக்கக் கூடிய புண்ணியமனைத்தும் ஒரு ஞானிக்கு அன்னமளிப்பதால் கிட்டிவிடும். ஞானி என்பவன் ஈச்வரனுக்குச் சமமவான் எனவே ஞானியைத் துவேஷிக்கின்ற (இம்சிக்கின்ற, இழிவாக நடத்துகின்ற) மனிதன் துன்பத்தால் தகிக்கப் பெற்று மடிவான்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உபாசனை செய்பவன், மீண்டும் இழிநிலையை அடைய மாட்டான். எனவே அரசகுமாரனே உபாசனையை விரும்பிச்செய்து சுகமடைவாயாக!" என்று ஆத்மஞானத்தின் பெருமையைக் கூறி முடிக்கிறார் பரம்பொருள்.

உபாசனை

சிவபெருமான் இவ்வாறு கூறியதும் இராமபிரான் "தேவதேவா மகேச்வரா! "உபாசிக்க வேண்டிய முறையையும், காலத்தையும் தயவு செய்து கூற வேண்டுகிறேன்" என வேண்டுகிறார் – அதற்குப் பகவானும் இசைந்து உபாசனை செய்ய வேண்டிய முறையினைப் பின்வருமாறு விளக்குகிறார்.

"அரசர்களுள் சிறந்தவனே!" ராமா! யார் எந்த தெய்வத்தைப் பூஜித்தாலும் அது என்னையே சாரும். யார் எந்த வடிவத்தை மனதில் கொண்டு என்னை பூஜிக்கிறாரோ அவருக்கு அந்தவடிவத்துடன் தோன்றி மகிழ்ச்சியோடு அவர்கள் விரும்பியதைக் கொடுக்கிறேன். (நம் மதத்தில் எவ்வாறு வேறுவேறு வடிவங்களில் இவ்வளவு தெய்வங்கள் தோன்றின என்பதை இந்த வாக்கியத்தைப் புரிந்து கொள்பவர்கள் நன்கு உணர்வார்கள்)

தீய நடத்தையுள்ளவனாயினும் அவற்றையெல்லாம் விடுத்து வேறெந்தப் பற்றுமில்லாதவனாக (என்னை) இறைவனைப் பூஜிப்பானானால் அவன் திடசித்தம் கொண்டவனாகிறான். எனவே அவன் "சாது" என்றே கொள்ளப்படுவான்.

வேறெதிலும் மனதைச் செலுத்தாமல் இறைவன் திருவடிகளை மட்டுமே மனதிற் கொண்டு வழிபடுபவனை பிரம்மஹத்தி போன்ற தோஷங்கள் அணுகாது." (ஆக உபாசனைக்கு திடசித்தமும், உலகப் பற்றுக்களை விட்டுவிலகுவதும் அவசியம் என்பது தெளிவு) என்று கூறிவிட்டு அடுத்தாக உபாசனையைப் பற்றிக் கூறுகிறார். அதன் சாரமாவது.

உபாசனை நான்கு வகைப்படும். அவை 1. சம்பத், 2.ஆரோபம், 3. அத்யாசம். 4. சம்வர்கம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1. சம்பத் உபாசனை

அற்பமான (சாதாரணமான) வற்றையும் குணசம்பந்தத்தால் பெரிதாகச் சிந்திப்பது. (ஒரு சிறிய ஜோதியை (தீபத்தை) ஏற்றிவைத்து அதில் மிகப்பெரிய ஜோதிப் பிழம்பாக (சூரியனுக்கு நிகராக) இறைவனைக் காண்பது) தன்மனமே பரப்பிரம்மம் என்று சிந்திப்பது இது சம்பத் உபாசனை.

2. ஆரோப உபாசனை

கர்மானுஷ்டான விதிகளில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளை அப்படியே கடைபிடித்துச் செய்வது அல்லது ஒரு மந்திரத்தை ஒரு குருவிடம் உபதேசம் பெற்று அவர் காட்டிய நெறிமுறைப்படி ஜெபம், ஹோமம் போன்றவை செய்வது ஆரோபம்.

3. அத்யாச உபாசனை

கிரஹஸ்தனாயுள்ளவன் (இல்லறத்தான்) மேற்கண்ட பூஜைகளைச் செய்யும்பொழுது தனது மனைவியுடனேயே செய்ய வேண்டும் அந்த வழிபாட்டில் மனைவிக்கும் சில பங்குகள் உள்ளன. (கிரஹஸ்தன் மனைவியின்றிச் செய்யும் எந்த வழிபாட்டிற்கும் பலனில்லை) அவ்வாறு மனைவியுடன் செய்யும் உபாசனை முறைக்கு "அத்யாசம்" என்று பெயர்

4. சம்வர்க உபாசனை

பிரளய காலத்தில் இவ்வுலகில் சம்வர்தம் என்ற வாயு மட்டுமே எஞ்சியிருக்கும். அந்த வாயுவே பஞ்ச பூதங்களையும் தம்முள் அடக்கிக் கொள்ளும். அதுபோல கிரியா யோகத்தால் புலன் பொறிகளை அடக்கி உபாசிக்கும் முறை சம்வர்கமாகும்

இவை நான்கும் வெளி உபாசனைகளாகும். இவை தவிர புத்தியினால் தன்னையே பரமாத்ம சொரூப்மாக நன்கு அறிந்து கொண்டு உள் முகமாக தன்னை உபாசிப்பது "அந்தருபாசனம்" எனப்படும். இவ்வகை வழிபாட்டில் கிரியைகளுக்கு இடமில்லை பூஜைப் பொருட்கள் எதையும் வெளியில் தேடி அலைய வேண்டியதுமில்லை.

Karun Eluthurukku

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்
அன்பே மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே!"
என்று "தாயுமானவர்" பூஜிக்கும் முறை இவ்வகை உபாசனையுள் அடங்கும்.

எனவே

உபாசனையாவது உலக இன்ப துன்பங்களால் சஞ்சலப் படாமல் பரமாத்ம சொரூபம் ஒன்றை மட்டுமே நினைக்கும் பயிற்சியினால் பரமாத்ம சொரூபத்தை நன்கு அறிந்திருத்தல் ஆகும்.

"சம்பத் முதலான வெளிமுகமான உபாசனைகளில் உறுதியான புத்தியோடு இருந்தாலும் கூட சிறந்த உபாசனை தான் " அதாவது மந்திரஜபம் மற்றும் பூஜைகள் செய்யும் போது அதன் கிரியைகளை உள்ளன்போடும் பற்றுதலோடும் செய்வது கூட ஒரு சிறந்த உபாசனையாகும்.

உதாரணமாக மந்திரஜெபம் செய்யத் துவங்குமுன்னால் அங்கந்யாசம், கரந்யாசம் முதலானவற்றை சிரத்தையோடு செய்வதும், பூஜையின் போது இறைவனுக்குச் செய்யப்படும் ஆவாஹனம், அர்க்யம், பாத்யம் போன்ற ஷோடசோபசாரங்களை தனக்கு முன்னால் இறைவனே எழுந்தருளியிருப்பதாகப் பாவித்துப் பக்தி சிரத்தையோடு செய்வதும் (இதனை எனது "சோடாஷோபசாரம் அநுபவ விளக்கம் " என்னும் நூலில் தெளிவாகத் தந்துள்ளேன்) உபாசனை என்றே கொள்ளப்படும்.

அடுத்ததாக உபாசனையின் அங்கங்களைக் கூறுகிறார் சிவபெருமான். "உபாசனை செய்ய விரும்புவவன், முதலில் புலனடக்கம் உள்ளவனாகத் தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும். மனம் தேரோட்டிக்கு அடங்காத குதிரை போன்றது.அதனை அறிவு என்னும் தேரோட்டியைக் கொண்டு மனம் என்னும் கடிவாளம் கொண்டு தனக்கு அடங்கி நடக்கும் வண்ணம் செய்ய வேண்டும். இவ்வாறு புலனடக்கத்தின் மூலம் காமம், மோகம், குரோதம் முதலானவற்றை அடக்கிக் கொண்டு ஒரே சிந்தனையுடன் உபாசனை செய்ய முயற்சிக்க வேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடுத்ததாக, புண்ணிய நதிகள், புண்ணிய க்ஷேத்திரங்கள் முதலானவற்றிற்குப் போகும் பற்றுதலை விட வேண்டும். எந்த இடத்தில் தன்னால் ஒருமைப்படுத்த முடிகிறதோ அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து உபாசனைக்காக அமர வேண்டும். அந்த இடத்தில், கம்பளம், பட்டு , புலித்தோல், போன்றவற்றை விரித்து அவரவர் குல வழக்கப்படி விபூதி, திருமண் போன்றவற்றைத் தரித்துக் கொண்டு சகல இந்திரியங்களையும் அடக்கிக் கொண்டு முதுகுத்தண்டு கழுத்து, தலை இவை ஒரே நேர்கோட்டில் இருக்கும் வண்ணம் நேராக அமர்ந்துகொண்டு தனக்கு மந்திர உபதேசம் செய்த குருவை வணங்கி அவர் உபதேசித்தபடி யோகாப்யாசம் செய்ய வேண்டும். இந்திரியங்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி உபாசிப்பவனே பிறப்பற்ற நிலையை அடைவான். அவ்வாறு செய்ய இயலாதவன் உபாசித்ததன் பயனை முழுமையாகப் பெறாதவனாகி மீண்டும் மீண்டும் பிறந்துழலும் நிலையை அடைவான்

யோகாப்யாசம் கைகூடப்பெற்றால் மனம் ஒருநிலைப்படும். அவ்வாறு மனம் ஒருநிலைப்பட்டவுடன் தான் உபாசிக்க விரும்பும் தெய்வத்தின் முழுவடிவத்தை தனது மனக்கண் முன் கொண்டுவந்து தியானிக்க வேண்டும் (உபாசிப்பவருக்கு ஆரம்பத்தில் உருவ வழிபாடு அவசியம்)

இவ்வாறு மனதையும், ஓம் என்னும் பிரணவத்தையும் இரண்டு அரணிக்கட்டைகளாகப் பாவித்து, தியானம் என்னும் கடைதலை இடைவிடாமல் செய்பவன் தெய்வ சன்னிதியை அடைகிறான். (அரணிக்கட்டை என்பது வலுவான வெப்பம் மிகுந்த ஒரு மரத்தின் கட்டையாகும். இம்மரத்தின் இரண்டு கட்டைகளை எடுத்துக் கொண்டு ஒன்றுடன் ஒன்றை உரசிக் கடையும் பொழுது வெப்பம் மிகுந்து நெருப்புத் தோன்றும். இந்த நெருப்பைப் பஞ்சின் மூலம் பற்றச் செய்து அந்த அக்கினியைக் கொண்டே முற்காலத்தில் ஹோமம் முதலியவற்றிற்குப் பயன்படுத்தினார்கள். அந்த அரணிக் கட்டைகளைக் கடைந்தால் நெருப்புத் தோன்றும், ஓம்கார்த்தையும் ஆத்மாவையும் கடைந்தால் தனக்கு இஷ்டமூர்த்தி தரிசனம் கிட்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேத வாக்கியங்களை திறம்படக் கற்றிருந்தாலும் சாஸ்திரங்களை நன்கு அறிந்திருந்திருந்தாலும் மட்டும் இறைவனை அடைந்து விட முடியாது. தீய செயல்களிலிருந்து விடபட்டு ஒரே சிந்தனையோடும், அமைதியடைந்த மனத்தோடும் கூடி உபாசிக்கின்றவனே இறைநிலையை அடைய முடியும்.

விழிப்பு, உறக்கம், கனவு என்னும் மூன்று நிலையிலும் நான் யார் என்று ஆராயும் போது எதுவுமே நானல்ல, எல்லாமே மாயை என்னும் ஞானம் ஏற்படும். அப்போது பிரகாசிக்கின்ற அந்தப் பரப்பிரம்மமே நான் என்பதை அறிபவன் அந்த நிலையில் சகல பந்தங்களில் இருந்தும் விடுபடுகிறான். உலகில் தோன்றும் அனைத்துப் பொருட்களிலும் பரப்பிரம்மத்தைக் காணும் நிலையை அடையும் அவன் ஒரே பரம்பொருளே எங்கும் வியாபித்து அனைத்துள்ளும் நிற்கிறது என்பதை உணர்கிறான். அப்படி உணர்பவன் பிறப்பற்ற நிலையை எய்தி எனது பாதங்களில் முக்தியடைகிறான்." என்று உபாசனை குறித்துச் சிவபெருமான் விளக்குகிறார்.

அதன் பிறகு ஸ்ரீ இராமபிரானின் வேண்டு கோளுக்கிணங்க முக்தியினை பின்வருமாறு விளக்குகிறார் சிவபெருமான்.

"ராகவா! சாலோக்யம், சாரூப்யம், சாமீப்யம், சாயுஜ்யம், கைவல்யம் என முக்தி ஐந்து வகைப்படும்

யாகம் செய்பவன் ஏழைகளுக்கு அன்னதானம் செய்பவன், குளம் கிணறு முதலானவை அமைத்துப் பொது மக்களுக்காக அர்ப்பணிப்பவன், தேவாலயங்கள் நிர்வாகம் செய்பவனும், தான் உண்ணக்கூடிய பொருளையும், பிறருக்குக் கொடுக்கக் கூடிய பொருளையும், இறைவனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு அக்காரியத்தைச் செய்பவனும், சந்தேகத்திற்கிடமின்றி முக்தியை அடைகிறான்.

இவ்வுலகமனைத்தும் அதிலுள்ள பொருட்களனைத்தும், மாயையாகும். இல்லாததைக் காட்டி மயக்கும் இந்திரஜாலம் போல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்த உலகமும் இயங்குகிறது. எப்போது எனது சொரூபஞானத்தால் அறியாமையானது நாசமடைகிறதோ அப்போதே மனம் வாக்குகளுக் கெட்டாத பரமானந்தனாக, சுயம்பிரகாசனாக ஞானவடிவினனாக இறைவன் இருக்கிறான் என்னும் ஞானம் ஏற்படும். இறைசொரூபம் கண்களால் பார்க்கக் கூடியது அல்ல அது புத்தியால் உணரக் கூடியது." அவ்வாறு உணர்ந்தவர்களை முக்தர்கள் என்று விவரிக்கிறார்.

அடுத்ததாக "மனிதனுக்கு பகவானது சுத்தமான ஞானம் எப்படி உண்டாகும்?"என்று இராமர் வினவ அதற்கும் சிவபெருமான் பின்வருமாறு பதிலுரைக்கிறார்.

"ஞானத்தை விரும்புபவன் சுற்றம் நட்பு, பகை இவற்றிலிருந்து முழுமையாக விலகி, நான் எனது என்னும் பற்றுக்களை விட்டொழித்து முக்திக்குரிய சிரத்தையுடையவனாய் வேதாந்த ஞானத்தைப் பெறும் விருப்பத்துடன் காணிக்கை ஏந்தியகரங்களுடன் பிரம்ம ஞானியாகிய குரு ஒருவரைத் தேடி அடைய வேண்டும். அந்தக் காணிக்கைப் பொருளை முன்வைத்து அவரை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க வேண்டும். பிறகு எழுந்து கூப்பிய கரத்துடன் தனது எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டும். ஒரு பிரம்ம ஞானியை காணிக்கைப் பொருளால் கரையவைக்க இயலாது. ஏனெனில் அவர் பற்றற்றவர். எனவே அவருக்கு வெகுகாலம் பணிவிடைகள் செய்து அவரது அன்பைப் பெற வேண்டும். பிறகு அவரது உபதேசத்தை மனதை ஒருமுகப்படுத்தியவண்ணம் அவர் கூறும் சகல வேதாந்த வாக்கியங்களின் பொருளையும் கேட்டரிய வேண்டும். அந்த வேதாந்த வாக்கியங்களின் மூலம் இவ்வுலகில் நிச்சயமான பொருள் இறைவனே என்பதை உணர வேண்டும். இவ்விதம் உண்மை உணர்ந்து, நான், எனது என்னும் பாவனைகளின்றி அனைத்தையும் சமமாகப் பாவித்து. தன்னைத் தனிமைப் படுத்திக்கொண்டு (சமுதாயத்தை விட்டு விலகி) எப்போதும் த்யான யோகத்தால் பரம்பொருளிடம் தன்னைக் காணும் நிலையை எய்தவேண்டும். இந்நிலைக்கு நிதித்யாஸனம் என்று பெயர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்விதம் நிதித்யாஸன நிலையை அடைந்தவர்களுக்கு அவரவர் கர்மவினைகளுக்குத் தக்கபடி யாரோ ஒரு சிலருக்கு விரைவாகவோ, சிலருக்குக் காலங்கடந்தோ ஆத்மாவின் உண்மையான சொரூப ஞானம் ஏற்படுகிறது. இவ்வுலகில் பலபிறவிகளில் சம்பாதித்து வைத்துள்ள கர்ம வினைகள் அனைத்தும் ஆத்ம ஞானத்தால் மட்டுமே நாசமடையும். பிற செயல்களால் அழியாது. ஆத்மஞானம் பெற்றபிறகு அவன் செய்யும், புண்ணியமோ, பாவமோ, எவ்விதத்திலும் அவனை பாதிக்காது.

இப்படிப்பட்ட ஜீவன் முக்தரைப் பார்க்கின்றபோது யாருக்கும் அவர்மேல் பயம் ஏற்படுவதில்லை. மனிதனுக்கு வினைகளின் விருப்பு வெறுப்புக்கள் முழுவதும் அழிந்த நிலையிலேயே முக்தி ஏற்படும். இந்த இடத்தில் வாழ்ந்தால் மோட்சம், இந்த இடத்தில் வாழந்தால் மோட்சமில்லை என்பதெல்லாம் ஒன்றுமில்லை. பழுத்தபழம் மரத்திலிருந்து கீழே விழுவதுபோல ஞானிக்கும் முக்தி நிச்சயம் உண்டு. ஜீவன் முக்தனான ஞானி புண்ணிய தீர்த்தக் கரையில் உயிர்விட்டாலும் ஒரு சண்டாளனுடைய வீட்டில் உயிர்விட்டாலும் முக்தியையே அடைகிறான். பாலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்டதாக இருந்தாலும் நெய்யானது மீண்டும் அந்தப் பாலோடு கலப்பதில்லை. அதுபோலவே ஞானம் பெற்ற ஒருவனும் மீண்டும் சஞ்சாரத்தோடு கலப்பதில்லை. இந்த அத்யாயத்தைத் தினந்தோறும் படிப்பவன் இயற்கையிலேயே பற்றொழிந்தவனாய் ஜீவன் முக்தனாகிறான்."

அடுத்ததாக "மனம் வாக்குகளுக்கெட்டாததும், எங்கும் வியாபித்திருந்தும் காண இயலாததும் பிரம்ம சொரூபமான உம்மை (இறைவடிவை) எவ்விதம் அறிய இயலும் தயைகூர்ந்து உரைத்தருளுக " என்று இராமபிரான் வேண்ட பரம்பொருள் பதிலுரைக்குமாறு.

"இராமா ! வீராதி வீரனே ! இறைவடிவை அறியமுற்படுபவன் முதலில் காணல் நீர் போன்ற நியாயத்தைக் கொண்டு சகுணோ பாசனை முதலியவைகளைச் செய்து கொண்டு சித்தத்தை ஒருமுகப்படுத்தவேண்டும் (சகுணோபாசனை- என்பது விக்கிரஹ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வழிபாடு போன்ற வழிபாடுகளைக் குறிக்கும். இங்கு இவ்வழிபாட்டை செய்து மனதை ஒருநிலைப்படுத்த வேண்டும் என்று மட்டும் சொல்லியிருக்கலாம். ஆனால் பரம்பொருள், சகுனோபாசனை என்ற சொல்லுக்கு முன்னால் காணல் நீர் போன்ற நியாயத்தைக் கொண்டு, என்றொரு வாக்கியத்தை வலியுறுத்துகிறார்.ஏன் அப்படிச் சொல்லுகிறார்.? கானல் நீர் என்பது கண்ணுக்கு தெரிந்ததே. வெயில்நேரத்தில் தூரத்தில் நீர் இப்பது போன்ற ஒரு தோற்றம் தெரியும் ஆனால் அங்கு சென்று பார்த்தால் வெற்றிடமே இருக்கும். இதனை ஏன் விக்கிஹ ஆராதனையோடு ஒப்பிடுகிறார்? காரணம் இது தான். கானல் நீரானது நமது தாகத்தைத் தீர்க்க உதவாவிட்டாலும் நமது கவனத்தை அதன்பால் இழுக்கும். அதுபோலவே விக்ரஹ வழிபாடும்.

விக்ரஹ வழிபாடு முழுமையான ஞானத்தைக் கொடுக்கா விட்டாலும் மனதை இறைவழிபாட்டில் ஈடுபடுத்த மனதை ஒருநிலைப்படுத்த அவசியமானதாகும். உருவ வழிபாடு ஞானத்தின் முதல் படி என்று கூறலாம். நாமெல்லோரும் இன்னும் இந்த முதற்படியில் தான் நின்று கொண்டிருக்கிறோம். சரியை, கிரியை, என்னும் இரண்டும் இந்நிலைக்குட்பட்டதாகும். இதற்கு மேலுள்ள யோகம், ஞானம் என்னும் நிலைகளை லட்சத்தில் ஒருவரோ கோடியில் ஒருவரோ தான் அடைய முயற்சிக்கிறார்கள். இந்த நிலையை எய்துபவர்களுக்கு உருவ வழிபாடு தேவையற்ற ஒன்றாகி விடுகிறது.

"நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கரிச் சுவை அறியுமோ?"

என்ற ஞான வாக்கியம் இந்நிலை எய்தியமையின் வெளிப்பாடு என்பதை நாம் உணர வேண்டும்

இந்த ஆத்மா 5 கோசங்களால் மறைக்கப்பெற்றுள்ளது அவை முறையே

1. பிறந்து வாழ்ந்துஅல்லல்பட்டு மறையும் இந்த உடலே தான் என்று எண்ணும் அன்மைய கோசம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

2. பிராணமய கோசம்: பசி தாகங்களால் வாட்ட முறுவதும், ஜடமாயிருப்பது ஆகிய பிராணமய கோசம்.

3. மனோமய கோசம்: பிராணமய கோசத்திலேயே இருப்பதும், புத்தி முதலிய ஞானேந்திரியங்களுடன் கூடியதும், நினைப்பு, மறப்புகளுக்கு காரணமானதுமான மனோ மய கோசம்.

காமம் குரோதம், மோகம், லோபம், மதம், மாத்ஸர்யம் (3:1- காமம் மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை முதலிய, 3:2 - குரோதம் பகையுணர்ச்சி, 3:3 லோபம் நான், எனது, என்னும் எண்ணம், 3:4 மோகம் போதுமென்ற மனமின்றி மேலும், மேலும் சம்பாதிக்க நினைப்பது, 3:5 மதம் அப்படிச் சேர்த்த செல்வப்பெருக்கால் செருக்குற்றுப் பிறரை மதியாமல் இருத்தல் 3:6 மாத்ஸர்யம் = பொறாமை இந்த ஆறும் பகைக் கூட்டங்களாகும்) கூடிய மனோமய கோசம்.

4. விஞ்ஞானமய கோசம்: இங்குமங்கும் சஞ்சரிக்கும் தன்மை கொண்டது, விவகாரங்களில் ஈடுபடுவது இதுவே ஜீவன் எனப்படும்.

5. ஆனந்தமய கோசம் : நாம் முன்பே கண்டதுபோல், கர்மேந்திரியங்கள் 5, 5. ஞானேந்திரியங்கள் 5, வாயுக்கள் 5 இவற்றோடு மனம், புத்தி ஆகியவைகளையும் சேர்த்து 17-ம் லிங்க சரீரம் எனப்படும். இவை அனைத்தும் அனுபவிக்கும் தன்மை கொண்டது (அனைத்து அனுபவங்களுக்கும் இவையே காரணம்) இது ஆனந்தமய கோசம் எனப்படும்.

வித்தை, செயல் முதலானவற்றின் பலன்களை இம்மையிலும், மறுமையிலும் அனுபவிப்பது இதுவே. இப்படி ஐந்து கோசங்களால் மறைக்கப்பட்டிருக்கும் ஆத்மாவை ஓர் வாழைத் தண்டிற்கு ஒப்பிடலாம் வாழைத் தண்டை அடைய நினைப்பவன் முதலில் வாழை மரத்தின் பட்டைகளை ஒவ்வொன்றாகப் பிரித்து எடுக்க வேண்டும். நிறைவிலேயே தண்டு கிடைக்கும். அதனைப் போல, இந்தப் பஞ்ச கோசங்களின் விஷயத்தை அறியும் வண்ணம் அதில் மனதைச் செலுத்தச் செலுத்த அவை ஒவ்வொன்றாக விலகும். நிறைவில் நடுவில் இருக்கும் ஆத்மாவை அடைய முடியும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வாறு இந்திரியங்களை அடக்கி மனதை வெளியுலகிற்குத் திருப்பாத வண்ணம் உள்முகமாக ஒருமுகப்படுத்தி சித்தத்தைப் பரமாத்மாவிடம் செலுத்த வேண்டும். இவ்வாறு செய்தால் மனம் அடையவொண்ணாத, காணக் கிடைக்காத, பரமாத்மாவை உள்ளபடி அறிகிறது." எனப் பரமாத்மாவை அறியும் உபாயத்தை எடுத்தியம்புகிறார் பரம்பொருளான சிவபெருமான்.

பிறகு இராமபிரானின் அடுத்த சந்தேகமான வேதசாஸ்திரங்களை அறிந்தவர்களும், யாகங்களைச் செய்பவர்களும், சத்தியத்தைக் கடைபிடிப்பவர்களும் கூட ஆத்மாவை அறிவதில்லையே ? அப்படியே அறிந்தாலும் அதனைப் பொய்யென்று எண்ணுகிறார்களே? இது ஏன்? என்று வினவ பரம்பொருளும் "இது என் மாயையால் விளைவது. கர்ம பலன்களால் சூழப்பட்டவர்களுக்கு இதை அறிய முடியாது எண்ணற்ற பல பிறவிகள் எடுத்தவனுக்கு அவன் எந்த உடலெடுத்தவனாக இருந்தாலும் அவன் பல பிறவிகளிலும் சம்பாதித்துள்ள புண்ணியத்தால் இறைபக்தி ஏற்படுகிறது அந்தபக்தியின் விளைவால் இறைவனிடம் ஈடுபாடு கொண்டு அவனை அடைய முயல்கிறான். இதன் வெளிப்பாடாக இறை உபாசனை செய்கிறான். அந்த உபாசனையின் மூலம் மலையாகிய தடைகளை விலக்கி என்னை (இறைவனை) அடைகிறான். ஆதலால் எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னிடம் பக்திவைப்பாயாக. நீர், ஏது – செயல் செய்தாலும், எதை உண்டாலும், எதை ஹோமம் செய்தாலும் அதனை இறைவனுக்காக அர்ப்பணமாகச் செய்வாய். அது உன்னை சகல வினைகளிலிருந்தும் விடுபடச் செய்யும் சோகத்தை விடுவாய்" என்று கூறுகிறார்.

அடுத்த இரண்டு அத்யாயங்களிலும்,பக்தி செலுத்தக் கூடிய விதம் பற்றியும், பக்தி செலுத்துவதற்கு யார்யார் தகுதியானவர்கள் என்பது போன்ற விபரங்களையும் கூறுகிறார் சிவபெருமான். அவற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

பக்தி செய்பவன், வேத அத்யயனம் செய்பவர்களாகவும், வேள்வி, பலவகை தானங்களை சிரத்தையோடும் பாவனையோடும் செய்யலாம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அல்லது தினமும் அக்னிஹோத்ரம் செய்யும் வேதியரிடமிருந்து அக்னிஹோத்ர விபூதியைப் பெற்று "அக்னிரிதி" என்பதான மந்திரங்கள் அபிமந்திரித்து விதிப்படி பூசிக் கொண்டு என்னை பூஜிப்பதும் கூட பக்திதான்.

ருத்ராட்சத்தைத் தலையிலும் கழுத்திலும் அணிந்து கொண்டு எப்போதும் பஞ்சாக்ஷர ஜெபம் செய்வதும் கூட பக்தியென்றே கொள்ளப்படும்.

விபூதி ருத்ராட்சங்களை அணிந்து கொண்டு இந்திரியங்களை வென்றவனாக ருத்ரஜெபம் செய்வதும் பக்தியின் ஒரு வகையாகும்.

(வேதங்களைத் திறம்படக் கற்றவராயிருக்கும் பட்சத்தில்) ஸ்ரீ ருத்ரம், சூக்தங்கள், உபநிஷத்துக்கள் முதலானவற்றை ஜெபிப்பதும் பக்தியின் வகையே

(இப்படிப் பக்தியின் வகையைக் கூறியவர் இடையே பிரணவத்தைப் பற்றிக் கூறுகிறார்)

தயிரிலிருந்து கடைந்தெடுக்கப்பெற்ற வெண்ணையானது அவற்றிலிருந்து தனித்து நிற்பதுபோல வேதங்கள் உபநிஷத்துக்கள் சாஸ்திரங்கள் இவற்றை ஆராய்ந்தால் அவற்றிலிருந்து வெளிப்பட்டுத் தனித்து நிற்பது "ஓம்" காரமேயாகும்

இந்த ஓம்காரமே பிரம்மம், ஒவ்வொரு உடலிலும் அடங்கியுள்ள பரப்பிரம்மம் ஓம்காரமேயாகும்.

ஓம்கார விளக்கம்

அந்த ஓம்காரம் நான்கு மாத்திரை நேரம் ஒலிக்க வேண்டும். அந்தப் பிரணவத்தில் அகாரம், உகாரம், மகாரம், என்ற மூன்றும் அடங்கியுள்ளது. (இவை மூன்றும் இணைந்ததே ஓம்காரமாகும்)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

“அ”காரத்தில்

“பூ”என்பது ருக்வேதமும், பிரம்மா, அஷ்ட வசுக்கள் கார்ஹபத்யம் என்னும் அக்னி,காயத்ரீ, கங்கை, காலைநேர ஹோமம் முதலானவை அடங்கியுள்ளன.

“உ”காரத்தில்

இரண்டாவதாக உள்ள “உ” காரத்தில் “புவ” என்பதும் விஷ்ணு ருத்ரர் இவர்களும் “அனுஷ்டுப்” என்னும் சந்தசும் யஜுர் வேதமும், யமுனா நதியும், தட்சிணாக்னியும், மதியநேர ஹோமமும் அடங்கியுள்ளன

“ம”காரத்தில்

மூன்றாவதாகிய “ம” காரத்தில் “சுவ” என்பதும் சாம வேதமும், ஆதித்யன், மஹேஸ்வரன், ஆஹவனீயம் என்னும் அக்னி, “ஜகதி” என்னும் சந்தஸ், சரஸ்வதி, மாலைநேர ஹோமம் அதர்வண வேதம் ஆகியவை அடங்கியுள்ளன.

நான்காவதாக உள்ள அரை மாத்திரையில் (இந்த அரை மாத்திரை நேரமும் “ம” காரமே “ம்ம்ம்” என்று நீண்டு ஒலிக்கும்) சந்திரலோகமும், அதர்வ, ஆங்கீரஸ, சம்வர்த்தகம் இவற்றோடு “மஹ” என்பதும், விராட்புருஷன், சப்யம், ஆவசத்யம் என்னும் அக்னிகளும் அதித்ரு என்னும் நதியும், யஜ்ஞங்களின் வால்பாகமாகக் கொண்டுள்ளதும் அடங்கும்.

இவற்றில் அகாரம் சிவப்பு நிறமுடையது, உகாரம் சூரியனைப் போலப் பிரகாசமானது, மகாரம் மின்னல் போன்று ஒளிர்வது நான்காவதான மாத்திரை ½ வெண்ணிறமுடையது. இதுவரை உண்டாகியதும், இனிஉண்டாகக் கூடியதுமான அனைத்தும் ஓம்காரத்தில் அடங்கும். இந்த உலகம் முழுவதும் ருத்ரனில் அடக்கம். அந்த ருத்ரருக்கு ஓம் காரமே சுவாசம். என்றும் நித்தியமாயுள்ள பரப்பிரம்மமானது ஓம்காரத்திலே கலந்துள்ளது. ஆதலால் ஓம்கார ஜெபம் செய்பவன் முக்தனாகிறான்.”

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கார்ஹபத்யம், ஆஹவனீயம் தக்ஷிணம், கேவலம் என்னும் பெயர்களைக் கொண்ட ஹோமாக்னியிலிருந்து எடுக்கப்பெற்ற விபூதியை பிரணவத்தால் அபிமந்திரித்து அதனை அணிந்து கொண்டு பூஜிப்பதும் பக்தியின் வகையே (அன்றாடம் சமிதாதானம் பிரம்ம யக்யம் போன்றவைகள் செய்யும்) வைதீகரது இல்லத்திலிருக்கும் அக்னியிலிருந்தாவது, காட்டுத் தீயிலிருந்தாவது எடுத்து அபிமந்திரிக்கப் பெற்ற விபூதியை உடல் முழுமையும் பூசிக் கொண்டு ஒருமுகமாக வழிபடுவதும் ஒரு வகை பக்தியே.

நாணல் புல்லின் மலர், வில்வஇலைகள், மலையில் தோன்றும் மலர்கள், அறுகம்புல் போன்ற வேருடன் கூடிய இலைகள் முதலியவற்றைக் கொண்டு பிரணவத்தோடு அர்ச்சிப்பதும், மலர்கள், பழங்கள் குறைந்த பக்ஷம் தண்ணீரையாவது பக்தியோடு இறைத் திருவடியில் சமர்ப்பித்தல் முதலானதும் பன்மடங்கு நற்பலன் தரும் பக்தியின் வகைகளாகும்.

பிறரை இம்சிக்காமல் இருப்பதும், திருடுதல் போனற் பாவச் செயல்களைச் செய்யாமலிருப்பதும் இந்திரியங்களை அடக்கும் வல்லமை பெற்றிருப்பதும் கூட பக்தி என்றே கொள்ளப்படும்.

பிரதோஷ காலத்தில் கோவிலுக்குச் சென்று வழிபடுவது, (பிரதோஷ வழிபாடு வேண்டிய எல்லாம் தரும்) அமாவாசை, பௌர்ணமி, தேய்பிறையில் வரும் அட்டமி, சதுர்தசி போன்ற காலங்களில் இரவில் வழிபாடு செய்வது, ஏகாதசியில் உபவாசமிருந்து (உண்ணாநோன்பு) இரவில் வழிபடுவது, திங்கட்கிழமை இரவு வழிபாடு போன்றவைகளும் பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம், மலர், தீர்த்தங்கள், பால், நெய், தேன், கரும்புச்சாறு, பழரசங்கள், இளநீர், சந்தனம், முதலியவற்றை ருத்ர மந்திர உச்சரிப்போடு இறையுருவத்திற்கு அபிஷேகம் செய்வதும், நீரிலே நீராடுகின்றபோது சூரியனைப் பார்த்தவாறு சூரியமண்டலத்திலே இறைவன் வியாபித்திருப்பதாகப் பாவித்து வணங்கி நீராடுவதும்,வேத மந்திரங்களையும், உபநிஷத் வாக்கியங்களையும், சன்னதி முன்பிருந்து அனுதினமும் ஜெபிப்பதும் இவையெல்லாம் பக்தியே"

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்று ஸ்ரீ ராமபிரானுக்குப் பக்தியோகம் குறித்து விவரிக்கிறார் பரம்பொருள்.

சிவகீதையை ஆரம்பித்தில் படிக்கின்ற போது அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள், வழிமுறைகள், சாதாரண பாமர மக்களால் புரிந்து கொள்ளவியலாத, கடைபிடிக்க முடியாதவைகளாகத் தோன்றும். அதனால் சாதாரண மக்களால் பக்திசெய்ய முடியாது, முக்தியடைய இயலாது போலும் என்று எண்ணக்கூடும். அந்த எண்ணத்தை மாற்றும் விதமாகவே இந்த பக்தியோகம் அமைந்துள்ளது. வழிபாடு எத்தகையதாக வேண்டுமானாலும் இருக்கலாம். இறைவாழிபாட்டுக்கு அவசியமானது ஒரு மித்த சிந்தனையும், நேர்மையுமே தவிர வேறில்லை என்பதனையே இந்த பக்தி யோகம் என்னும் 15வது அத்தியாயம் விளக்கி நிற்கிறது.

தினமும் சிவலிங்கத்தைக் கல்லால் எறிந்து வழிபட்ட சாக்கிய நாயனாரும், உண்டு மிகுந்த இறைச்சியையும், சூடிய மலரையும் உமிழ்நீரையும் சிவலிங்கத்திற்கு அர்ப்பணித்த கண்ணப்பநாயனாரும் செய்த செயல்கள் இறைவனாலேயே அங்கீகரிக்கப் பெற்றவை. அவர்கள் தங்கள் செயல்பாட்டின் வழியே முக்தியை அடைந்தார்கள் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

நம் மதத்திற்குள்ளேயே ஏகப்பட்ட பிரிவுகளும், சாதிகளும், அவற்றுள் உபசாதிகளும் பல்கிப் பெருகிவிட்ட இன்றைய நிலைபோலல்லாமல் அவரவர் மேற் கொள்ளும் செயலின் அடிப்படையில் பகுக்கப்பெற்ற பிராம்மணர், க்ஷத்ரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்களை மட்டுமே கொண்டிருந்த காலம் ஸ்ரீ ராமபிரான் வாழ்ந்த காலம். ஓதுதல், ஓதவித்தல், வேட்டல், வேட்பித்தல், போன்ற உயரிய செயல்கள் அந்தணர்களுக்கே உரியது. எனவே முழுவதும் இறை வழிபாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும் அவர்களால் மட்டுமே பக்தியின் வழி முக்தியை அடையமுடியும். நாமெல்லோரும் அதற்கு அருகதையற்றவர்கள் என்று (மற்ற மூன்று வர்ணத்தாரும்) எண்ணிக் கொண்டு அதற்கான முயற்சியில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறங்காமல் சோம்பியிருந்தவர்கள் இராமபிரான் காலத்திலும் இல்லாமல் இல்லை. எனவே அவர்களைப் போன்றவர்களின் ஐயப்பாட்டை நீக்கும் நோக்கத்தோடு "பகவானே நீர் கூறிய மோட்ச வழிக்குரிய அதிகாரி (தகுதி படைத்தவர்) யார்? அதனை உமது வாயாலேயே அறிய விரும்புகிறேன்" என வினவ பரமசிவனாரும் அதற்குப் பின்வருமாறு ஆணித்தரமாகப் பதில் கூறுகிறார்.

"ரகுநாயகா! மோட்ச வழியில் செல்வதற்கு பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், பெண்கள், இல்லறவாசி, உபநயனம் செய்யப்பட்டவன், செய்யப்படாதவன், காடுகளில் வசிப்பவன், நாட்டில் வசிப்பவன், சன்யாசி பாசுபதவிரதமிருப்பவன் இப்படி எல்லோருக்குமே அருகதையுண்டு. இதில் பாகுபாடில்லை, (என்று பட்டியல் போட்டுக் கொண்டுவந்தவர் அதனை நீட்டிக்க விரும்பாமல்) அதிகம் சொல்லாமல் யாருக்கெல்லாம் சிவார்ச்சனையில் பக்தியும், ஈடுபாடும் இருக்கிறதோ அவர்கள் எல்லோரும் மோட்ச வழியில் செல்வதற்குரிய அதிகாரிகள். பக்தியின்றி மற்ற சுகபோகங்களில் மனதைச் செலுத்துபவர்கள் அதிகாரம் (அருகதை) அற்றவர்கள்" என்று பதிலுரைக்கிறார். அமாத்ய பிராம்மணர் குலத்தில் அவதரித்த மாணிக்க வாசகருக்கு முக்தியளித்த தில்லைச் சிற்றம்பலத்திலே தான் புலையரான நந்தனாருக்கும் முக்தி கொடுத்தருளினார் அம்பலவாணர் என்பது இங்கு நினைவு கூறத்தக்கது.

அடுத்து யாரெல்லாம் மோட்ச வழிக்குத் தகுதியற்றவர்கள் என்கிற வினா எழும்,அதற்கு முன்னரே அதற்கான பதிலையும் தருகிறார். "பக்தி செய்ய முடியாத நிலையிலுள்ள மூடன் (அறிவு வளர்ச்சியற்றவன்) சுத்தமற்றவன், சோம்பித்திரிபவன் அறிந்திருந்தும் கர்மானுஷ்டானங்களைக் கடைபிடிக்காதவன், பெரியவர்களையும், ஞானிகளையும் ஏளனம் செய்பவன், பக்தியில்லாதவன், விபூதி, ருத்ராட்சம் போன்ற சிவ சின்னங்களைத் தரிப்பவர்களை தரக்குறைவாக நடத்துபவன் (துவேஷிப்பவன்) சிவபெருமானையும், லிங்கத்தையும், தனது குருநாதரையும் பாசுபத விரதத்தையும், மஹாவிஷ்ணுவையும், துவேஷிக்கின்றவன். தினமும் கர்மானுஷ்டானங்கள் கடைபிடிப்பவனாகவே இருந்தாலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

(கர்மானுஷ்டானங்கள் = சந்தியாவந்தனம், சமிதாதானம், பிரம்மயஜ்ஞம், பிதுர்க்கடன் முதலியன) அதனை ச்ரத்தையும் பக்தியும் இல்லாமல் கடனே என்று நிறைவேற்றுபவன். பொருளீட்டுவதற்காக (சம்பாத்தியத்திற்காக) வேத விரோதமான செயல்களில் ஈடுபடுபவன் (பில்லிசூன்யம் செய்தல், துர்தேவதைகளை ஏவிப் பிறரைத் துன்புறுத்துதல், பிறர் பொருளைக் களவாடுதல் போன்ற செயல்களைச் செய்பவன்) போன்றவர்கள் மோட்சவழிக்கான அதிகாரம் அற்றவர்கள்"

காசி, சிதம்பரம், துவாரகை, ஸ்ரீ சைலம், போன்ற தலங்கள் முக்திக்குரிய தலங்கள். அந்தத் தலங்களில் இறப்பவர்கள், இயற்கையிலேயே முக்தனாகிறார்கள். "காசியிலே இறக்க முக்தி" என்பது பழமொழி.

த்யானம்

உபநயனமாகி நித்யகர்மானுஷ்டானங்களை அநுசரிப்பவனுக்கே வேதம் ஓதும் அதிகாரம் தரப்பட்டுள்ளது. அவ்வாறில்லாதவன் (அவன் அந்தணனாகவே இருந்தாலும்) வேதம் ஓதக் கூடாது. ஆனால் தியானம், செய்வதற்கும் நாம சங்கீர்த்தனம் செய்வதற்கும் இந்தத் தடையில்லை அவற்றை யார் வேண்டுமானாலும் செய்யலாம். தவமியற்றுதல் வேதம் ஓதுதல், அதிகளவு தான தருமங்கள் செய்தல் இவை எல்லாவற்றைக் காட்டிலும் 1000 மடங்கு தியானமே உயர்ந்தது. தியானம் செய்வதற்கு ஈடாக வேறெதையும் சொல்ல முடியாது.

மற்ற வழிமுறைகளை அனுஷ்டிப்பவர்களுக்கு பலவிதநியமங்கள், நெறிமுறைகள், கட்டுப்பாடுகள் உள்ளன அவற்றைக் சரிவரக் கடைபிடித்தால் மட்டுமே அவன் அதனைத் செய்வதற்கு அருகதையுள்ளவனாகிறான். ஆனால், த்யானம் செய்பவருக்கு எந்த நியமமும் இல்லை, கட்டுப்பாடுகளும் இல்லை.

தியானம் செய்பவன் இந்த ஜாதியில் பிறந்திருக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லை. பிரம்மச்சர்யம், இல்லறம், வானபிரஸ்தம், சந்நியாசம் என்னும் ஆசிரமங்களுள் எவற்றிலிருந்தும் தியானம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யலாம். இன்ன ஆசிரமத்திலிருப்பவர்தான் தியானம் செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை, யமம், நியமம் முதலானவையும் தேவையில்லை

தியானம் செய்பவர்கள் இன்ன இடத்திலிருந்து தான் செய்ய வேண்டும் இந்தக் காலங்களில் தான் செய்ய வேண்டும் என்கிற கட்டுப்பாடுகளும் இல்லை எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் செய்யலாம். பத்மாசனம்,சுகாசனம் இப்படிக் குறிப்பிட்ட ஆசனங்களில் அமர்ந்து தான் தியானம் செய்ய வேண்டும் என்கிற வறைமுறைகள் ஏதும் தியானத்திற்கு இல்லை. நிற்கும் போதும் நடக்கும் போதும், வேறு செயல்களில் ஈடுபட்டுக் கொண்டும், ஏன் படுத்திருக்கும் நிலையிலும் கூடத் தியானம் செய்யலாம். பாவங்களால் பீடிக்கப்பட்டவனாக இருப்பினும் கூட அவன் தொடர்ந்து தியானம் செய்வானாகில் அவன் சந்தேகத்திற்கிடமின்றி முக்தியை அடைகிறான்.

தியானம் செய்யும் போது அதற்கு இடைஞ்சல்கள் இல்லை, இடையில் நிறுத்தினாலும் மீண்டும் தொடரலாம். ஆரம்பகட்டத்திலேயே பயம் போன்றவற்றிலிருந்து நம்மைக் காத்து நிற்கும்.

நன்றாக வாழ்ந்த காலங்களில் இல்லாவிடினும், தனது கடைசிக் காலங்களில் குறிப்பாக மரணத்தருவாயில் இறைநாமத்தை, பஞ்சாக்ஷரத்தை உச்சரிப்பதனால் கூட முக்திக்கு வழிவகைக்கும்

தன்னையும், மற்ற உலக உயிர்களையும், மற்ற பொருள்களையும் சிவமாகவே காண்கின்றவன் புண்ய க்ஷேத்திரங்களுக்கோ, தீர்த்தங்களுக்கோ செல்லவேண்டிய அவசியமில்லை. எப்படிப்பட்ட பாவங்கள் செய்தவனாக இருப்பினும் அவனது மரணத் தருவாயில் முழுதும் மனம் திருந்தியவனாக விபூதி ருத்ராட்சம் முதலியன தரித்து மரணத்தருவாயில் வில்வமரத்தடி மண்ணை உடலிற் பூசி சிவநாமம் ஜெபிப்பவனுக்கும், மரணபயம் இல்லை.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மேற்கண்டவாறு முக்திக்கு வழி கூறிய சிவபெருமானிடம் இராமபிரான் இறைவனே தாங்கள் எங்கு பூஜிக்கப்படுகிறீர்? எதனால் பிரசன்னனாகிறீர்? (அதாவது சிவபூஜைக்குரிய அடையாளம்) கருவி எது? எனக்கேட்க அவரும் அதற்குப் பின் வருமாறு பதிலுரைக்கிறார்.

மண், பசுவின்சாணம், விபூதி, சந்தனம், மணல், மரம், கல் போன்றவற்றில் ஏதாவது ஒரு பொருளில் செய்யப்பட்டதோ அல்லது இரும்பு, ஈயம், வெண்கலம், துத்தநாகம், பித்தளை, போன்ற உலோகங்களில் ஒன்றால் செய்யப்பட்டதோ, அல்லது செம்பு வெள்ளி, தங்கம், போன்ற உயர்ரக உலோகங்களினாலோ மாணிக்கம், வைரம், மரகதம், போன்ற உயர்ரக ரத்தினங்களில் ஒன்றினால் செய்யப்பட்டதாகவோ, பாதரசம், பச்சை கற்பூரம் போன்றவற்றில் ஒன்றில் செய்யப்பட்டதான, உருவம் அல்லது லிங்கத்தில் இறைவனை ஆவாகனம் செய்து பூஜிக்கலாம். இவ்வாறு பூஜிக்கும் பொருள்களில் ஒன்றைவிட ஒன்றுக்குப் பூஜாபலன் அதிகம்.

இல்லறவாசிகள், மண், மரம், வெண்கலம், இரும்பு, கல் போன்றவற்றாலான உருவத்தைப் பூஜிக்கலாம். அப்படி பூஜிப்பவருக்ககு நீண்ட ஆயுள், செல்வம், நன்மக்கட் பேறு, நற்குலம் போன்ற நன்மைகள் வாய்க்கப் பெறும்.

வில்வ மரத்திலும், வில்வப் பழத்திலும் கூட பூஜைகள் செய்யலாம். மேம்பட்ட வாழ்வும் மோக்ஷமும் இதன் பலன்கள். வில்வ மரத்தினடியில் அமர்ந்து ஜெபம் செய்வது இன்னும் அதிகப் பலன்களை நல்கும். மலைச்சிகரம், நதிக்கரை வில்வவனம், சிவாலயம், அக்னிஹோத்ர சாலை, விஷ்ணுவின் சன்னிதி முதலானவை ஜெபம் செய்ய ஏற்ற இடங்கள்.

பஞ்சபூதங்களிலும் இறைவழிபாடு செய்யலாம் எல்லாவற்றையும் விட தனது ஆத்மாவே சிவரூபம் என்பதை உணர்ந்து அதனைப் பூஜிப்பதே சிறந்தது. அதற்குச் சமமான வேறு பூஜைகள் இல்லை. அவ்வாறு ஆத்மாவில் பூஜிப்பவனுக்கு முக்தி உறுதி.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மந்திரங்களை வெறும் தரையிலோ, கல்லிலோ அமர்ந்து ஜெபிக்கக் கூடாது. கல்லில் அமர்ந்து ஜெபம் செய்தால், துக்கம் ஏற்படும். வெறும் தரையில் அமர்ந்து ஜெபம் செய்தால் அந்த மந்திரம் சித்தியாகாது. மான் தோல், புலித்தோல் போன்றவற்றில் அமர்ந்து ஜெபிப்பவருக்கு முறையே முக்தியும், மோக்ஷமும் கிட்டும். தர்பை புல்லினால் ஆசனம் அமைத்து ஜெபித்தால் ஞானம் கிட்டும். பலகை இலைகள் முதலானவற்றால் ஆசனம் அமைத்து அதிலமர்ந்து ஜபம் செய்தால் தேக ஆரோக்யம் கிட்டும். அப்படி அமர்ந்து ஜெபம் செய்பவர்கள் வடக்குமுகமாகவோ (or) கிழக்கு முகமாகவோ அமர்ந்து ஜெபம் செய்ய வேண்டும் என்று கூறியவர் அடுத்ததாக ஜெப மாலை பற்றிய விபரத்தையும் கூறுகிறார்.

ஸ்படிகம், தாமிரம், பவளம், நெல்லிக்கனிகள், முத்துக்கள், மாணிக்கம், நீலம், மரகதம், தங்கம், வெள்ளி, பாதரசம் முதலானவற்றால் மணிகள் அமைத்து, மாலை அமைத்து அந்த மாலைகளைக் கொண்டு ஜெபம் செய்யலாம். ஒவ்வொரு மாலைக்கும் பலனும் சொல்லப்பட்டுள்ளது. ஸ்படிகமணியிலான ஜெபமாலை, ராஜ்யத்தையும், தங்கம், தாமிர மணி மாலைகள் செல்வத்தையும், நாணல் மாலை, ஆத்மஞானத்தையும், ருத்ராட்ச மாலை விருப்பங்களை நிறைவேற்றுவதாகவும், பவள, மாணிக்க மாலைகள் ஜன வசியத்தையும், நெல்லிமாலை மோட்சத்தையும், முத்துமாலை கல்வி ஞானத்தையும், நீல, மரகத மாலைகள் சத்ரு நாசத்தையும், வெள்ளிமணி மாலை விரும்பிய கன்னிகையை மணம் புரியவும் பாதரச மணியால் செய்யப்பட்ட மாலை, மேலே கூறப் பெற்றுள்ள அனைத்தையும் நல்கும்.

27, 50, 54, 100, 108 ஆகிய எண்ணிக்கைகளில் மணிகள் அமைத்து மாலைகள் தொடுக்கலாம்.

100,108	மணிகள்	கொண்ட	ஜெப மாலை	உத்தமம்
50,54	மணிகள்	கொண்ட	ஜெப மாலை	மத்திமம்
27	மணிகள்	கொண்ட	ஜெப மாலை	அதமம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜெப மாலையை தம் குருநாதர் தவிர மற்றவர் எடுக்கவோ பார்க்கவோ கூடாது.

இடது கையை ஆசனத்திலும், வலது கையை லிங்கத்துக்கு (or) யோனிக்கு மேலும் வைத்து அமரும் ஆசனம் யோனி முத்ராசனம். இவ்வகை ஆசனத்தில் அமர்ந்து ஒருமுகப்பட்ட சிந்தையாய் எந்த மந்திரத்தைச் ஜெபித்தாலும் சித்தியுண்டாகும்.

ஜெபம் செய்யும் காலம்

பிரம்ம முகூர்த்தம் (அதிகாலை -3.30மணி) தொடங்கி உச்சி வேளை வரையிலும் ஜெபம் செய்யலாம். இறங்கு பொழுதில் ஜெபம் செய்யலாகாது அவ்வாறு செய்தால் நாசம் ஏற்படும்.

“ரகு நாயக” ஆசைகளைத் துறந்தவனாக இந்திரியங்களை முழுமையாக வென்றவனாக யாரொருவர் எனது வடிவைத் தியானித்தப்படி ஜெபிக்கிறார்களோ அவர்கள் இந்தப் பிறவியிலேயே சிவமாம் தன்மையை அடைகிறார்கள்.

இந்த சிவகீதையை யாரொருவர் தினமும் படிக்கிறார்களோ, ஜெபம் செய்கிறார்களோ அல்லது பிறர் படிப்பதையாவது கேட்கிறார்களோ அவர்கள் உடனடியாக சம்சார பந்தத்தினின்றும் விடுபடுவார்கள் சந்தேகம் இல்லை என்று கூறி சிவபெருமான் மறைந்தருளினார். ஸ்ரீராமபிரான் தான் பெற்ற பாக்கியத்தை எண்ணி வியந்து நின்றார்.

இவ்வாறு சூதமுனிவர் சக முனிவர்களுக்கு சிவ கீதையை உபதேசித்து அருளினார். முனிவர்களும் சூத முனிவரைப் பலவாறு புகழ்ந்த வண்ணம் பணிந்து ஆசி பெற்றனர்.

சிவ கீதை முற்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதையைப் படிக்கத் துவங்கும் போது இருந்த மனநிலைக்கும், படித்து முடித்த பிறகு இருக்கக் கூடிய மனநிலைக்கும் நிறைய வேறுபாடு உண்டு. இதனை நன்கு ஊன்றிப் படிப்பவர்களால் உணர முடியும். ஆரம்பத்தில் நமக்குப் புரியாத பலவிடயங்களைக் கொண்டு துவங்கும். இந்த உலகமே மாயை இங்கு நடப்பவை எல்லாமே வெறும் தேற்றம் தான் எதுவுமே உண்மையில்லை என்று நம் கண்முன்னால் நடக்கக் கூடிய எதுவுமே உண்மையில்லை என்பது போலத் துவங்கும்.மேலும் பக்தியின் மூலம் முக்தியடைதல் என்பது சாதாரண மக்களால்இயலாத செயல், அது வேதங்களையும் சாஸ்த்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்த ஒரு சிலருக்குமட்டுமே கைகூடும். பாமர மக்களுக்குப் பக்தியும் முக்தியும் எட்டாக்கனி என்கின்ற எண்ணம் படிக்கத் துவங்கும் பொழுது எழுவது இயல்பு. ஏன் எல்லாம் உணர்ந்தவரான ஸ்ரீ ராமபிரானே (நமக்காக) பல விடயங்களைத் திரும்பத் திரும்பக் கேட்டுத் தெளிவு பெறுவதிலிருந்தே இதனை உணரமுடியும். ஆனால் ஒவ்வொரு அத்யாயத்திலும் பலவித உதாரணங்கள் மூலம் ஒவ்வொரு விடயத்தையும் நமக்குத் தெளிய வைக்கிறது சிவகீதை. பக்தியும், முக்தியும் படித்தவர்களுக்கும் உயர்குடிப் பிறந்தவர்களுக்குமே கைகூடும் என்கின்ற மாயையைத் தகர்த்தெரிந்து, பக்திக்கு நேர்மையும் புலனடக்கமும், தூய உள்ளமுமே முக்கியம் மற்றவை இரண்டாம் பக்ஷம் என்பதைத் தெளிவு படுத்துகிறது. மேலும் இன்றைய அறிவியல் உலகம் பலவிதமான ஆராய்ச்சிகளில் விளைவாகக் கண்டறிந்த நமது உடற்கூறு சம்பந்தமான பல அறிவியல் உண்மைகளை சர்வ சாதாரணமாக விளக்குகிறது சிவகீதை.

சிவகீதை ஒரு பொக்கிஷம். இதனைப் பேற்றிப் பாதுகாப்பதோடன்றி நம் வருங்காலச் சந்ததியினருக்கும் இதனை உணர்த்த வேண்டும். இதனை இந்நூலைப் படித்துணர்ந்த ஒவ்வொரு வரும் கடமையாகக் கொண்டு நிறைவேற்ற வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்றும் அன்புடன்

முறசை. சுந்தரேசசிவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவகீதை தந்த திருவாடானை

இவ்வளவு தூரம் கடந்து இப்போது தான் நூலின் தலைப் பிற்குள்ளே நுழைகிறோம். சிவகீதை சிவபெருமானாலே ஸ்ரீ இராமபிரானுக்கு உபதேசிக்கப்பெற்றது என்பதைப் பார்த்தோம். அது இராமாயணத்தோடு தொடர்புடைய விஷயம். திருவாடானை என்பது இராமநாதபுரம் மாவட்டத்திலே தொண்டிக் கடற்கரையிலிருந்து சுமார் 6 கிலோ மீட்டர் தூரத்திலே அமைந்துள்ள சிவத்தலம். இராமாயணத்திலே இத்தலத்தைப் பற்றிய சிறு குறிப்புக் கூட எங்கும் காணப்படவில்லை. அப்படி இருக்கின்றபோது இந்த சிவகீதைக்கும் திருவாடானைக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் ஏதோ இவன் மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறானே? என்றெல்லாம் நீங்கள் நினைப்பது எனக்குத் தெரியாமல் இல்லை. அவசரப்படாமல் இதனை முழுமையாகப் படியுங்கள்! உண்மையை உணருவீர்கள்.

சிவகீதை துவங்கும்பொழுதே முதலாவது அத்யாயத்தின் நிறைவு சுலோகத்தில் சூதமுனிவர்

"ராமாய தண்டகாரண்யே யத்ப்ராதாத் கும்பஸம்பவ!
தத் ஸர்வம் வ : ப்ரவக்ஷ்யாமி ச்ருணுத்வம் பக்தியோகிந:!!

தண்டகாரண்யத்திலே அகத்தியர் ஸ்ரீ ராமருக்கு உபதேசித்தது முழுவதையும் உங்களுக்குக் கூறுகிறேன். பக்தியுடன் கேளுங்கள் என்று சௌநகர் முதலான முனிவர்களுக்குச் சொல்வதை வைத்து சிவகீதை தண்டகாரண்யத்தில் ஸ்ரீ ராமபிரானுக்கு உபதேசிக்கப்பட்டது என்கின்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

அடுத்ததாக நான்காவது அத்யாயத்தின் மூன்றாவது சுலோகத்தில்

"அபிஷிச்ய ஜலை: புண்யையர் கௌதமீ ஸிந்து ஸம்பவை:!
அர்ச்சயித்வா வந்ய புஷ்பைஸ் தத்வத் வந்ய பலைரபி"!!

என்று சொல்லப்பட்டுள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதாவது கோதாவரி நதிக்கரையில் லிங்கம் ஸ்தாபித்து அந்தச் சிவலிங்கத்திற்கு கௌதமீ (கோதாவரி) மற்றும் சிந்து நதி தீர்த்தங்களால் அபிஷேகம் செய்து வனத்தில் கிடைக்கும் பூக்களால் அர்ச்சித்து பழங்களை நிவேதனம் செய்து வழிபட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்யாயத்தின் இரண்டாவது சுலோகம்

"மத்யே ஸமுத்ரம் யாநீதா ஸீதா தைத்யேந மாயிநா !
ஆஸ்யாதி நரச்ரேஷ்ட ஸாகதம் தவஸந்நிதிம்":!!

சோகமயமாக இருந்த இராமபிரானை அகத்தியர் பலவிதமான தத்துவ உபதேசங்களைச் சொல்லித் தேற்ற முயல்கிறார். அப்போது ஸ்ரீ இராமபிரான் சிறிது கோபப்பட்டவராக "நானே மனைவியை இழந்த சோகத்தில் இருக்கிறேன். என்னிடம் வந்து தத்துவம் பேசுகின்றீர்களே?" என்று கேட்கிறார். அதற்குத் பதில் கூறும் விதத்தில் தான் மேற்கூறிய சுலோகம் அமைகிறது. அதாவது "இராவணனால் சிறையெடுக்கப்பட்ட சீதாப்பிராட்டி இலங்கையிலே கடல் நடுவிலே மாயாவியான அரக்கனால் சிறைவைக்கப் பட்டிருக்கிறார். நீ இப்படி சோகத்தில் மூழ்கி முயற்சியொன்றும் செய்யாமலிருந்தால் அவள் எப்படி உன்னிடம் திரும்பி வருவாள்" என்று கேட்பதோடு மேலும் அடுத்தடுத்த சுலோகங்களின் மூலம் "இராவணனிடம் தேவர்கலெல்லாம் குரங்குக் கூட்டங்கள் போலக் கட்டுண்டு கிடக்கின்றார்கள். அவனோ சாமகானம் பாடி சிவபிரானை மகிழ்வித்து அவரிடம் அநேக வரங்களைப் பெற்றவன். மூன்று உலகங்களையும் அவனுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறான். மேலும் அவனுடைய குமாரன் இந்திரனையே ஜெயித்து "இந்திரஜித்" என்ற பட்டம் பெற்றவன். அவனுக்கு யமனைப் போன்ற கும்பகர்ணன் என்ற சகோதரனும், சர்வ ஞாயங்களையும் உணர்ந்த வீடணன் என்ற சகோதரனும், கோடி கோடியாகப் படைகளும் இருக்கின்றன. அப்படிப்பட்டவனை நீ எப்படி சாதாரணமாக வெல்ல முடியும்" ? என்று கேட்கிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதே அத்யாயத்தின் 13வது சுலோகத்தில்

**"தஸ்மாத் தஸ்ய வதோபாயம் லங்கயித்வாம் புதிம் மூநே!
ப்ருஹிமே முநிசார்தூல த்வத்தோ நாந்யோஸ்திமே குரு"!!**

என்று இராமபிரான் அகத்திய முனிவரிடம் கேட்பதாக வருகிறது.

அதாவது "முனிவரே! கடலைத்தாண்டி இலங்கை சென்று இராவணனைக் கொல்லும் உபாயத்தைத் தாங்கள்தான் கூற வேண்டும். எனக்கு தங்களைத் தவிர வேறு குரு இல்லை" என்று வேண்டுவதாக உள்ளது.

இதுவரை பார்த்தவற்றுள் முதல் சுலோகத்தின்படி அகத்தியர் ஸ்ரீ ராமரைத் தண்டகாரண்யத்திலே சந்தித்து உபதேசித்தார்.

இரண்டாவது சுலோகத்தின்படி அகத்தியரிடம் விரஜாதீக்ஷை பெற்ற ஸ்ரீராமர், கோதாவரி நதிக்கரையில் லிங்கம் ஸ்தாபித்து அந்தச் சிவலிங்கத்திற்கு கௌதமி, சிந்து, ஆகிய நதி தீர்த்தங்களால் அபிஷேகம் செய்து பூஜித்தார் என்பது புலனாகின்றது.

இப்படிப் பார்த்தால் தண்டகாரண்யம் எங்குள்ளது? கோதாவரி நதி எங்குள்ளது? சிந்து நதி எங்குள்ளது? என்றெல்லாம் சிந்தித்தோமானால் ஒன்றிற்கு ஒன்று தொடர்பில்லாமல் இருப்பது புரியும். தண்டகாரண்யம் தற்போதைய சட்டீஸ்கர், ஒரிசா, ஜார்கண்ட் ஆகிய மூன்று மாநிலங்கள் சந்திக்கக் கூடிய பகுதியில் பிரம்மாண்டமாக விரிந்து கிடக்கின்றது. கோதாவரி நதி, குஜராத் மாநிலத்தில் துவங்கி மஹாராஷ்ட்ராவின் குறுக்காகப் பாய்ந்து ஆந்திராவின் வடக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. சிந்து நதி மத்யப் பிரதேசத்தில் பாயக்கூடிய நதி. இந்தப் பாடல்களை அப்படியே பொருள் கொண்டால் உபதேசம் பெற்றது ஒருவனம், சிவ பூஜை செய்தது இரண்டு நதிக்கரைகள் என்று பொருள்கொள்ள வேண்டியது வரும்.

இராமாயணம், வடதிசையிலே உத்திரப்பிரதேசத்திலே துவங்கி தென்கோடியிலே தமிழகத்தையும் தாண்டி இலங்கையில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உச்சமெய்தி மீண்டும் ஆரம்பித்த இடத்திலேயே முடிவடைகிறது. இது இராமாயணம் படிக்கும் அனைவருக்கும் தெரியும். அந்த வகையில் தனது சிற்றன்னையின் கட்டளைப்படி 14 ஆண்டுகள் வனவாசம் மேற்கொண்டு தனது இளவல் லக்ஷ்மணனுடனும், மனைவி சீதாப்பிராட்டியுடனும் அயோத்தியை விட்டுப் புறப்படுகிறார் ஸ்ரீ இராமபிரான். அவர்கள் மூவரும் கங்கைக் கரையைக் கடந்து வெகுதூரம் நடந்து கோதாவரி நதிக்கரையில் பஞ்சவடி என்ற இடத்தில் குடில் அமைத்துத் தங்குகிறார்கள். 14 ஆண்டுகளிலே 12½ ஆண்டுகளுக்கு மேல் அங்கேயே மகிழ்ச்சியாகக் கழிகிறது. அதன் பிறகுதான் சீதை இராவணனால் சிறையெடுக்கப்படுகிறார். சிறையெடுத்தவர் யார்? அவர் எங்கு சிறைவைக்கப் பெற்றிருக்கிறார்? என்பன போன்ற விபரங்கள் ஏதும் தெரியாத நிலையிலேதான் இராம லக்ஷ்மணர்கள் இருவரும் சீதையைத் தேடிச் செல்கிறார்கள். வழியில் இறகுகள் வெட்டப் பெற்ற நிலையிலே குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடந்த ஜடாயுவால்தான்; சீதாப் பிராட்டியைச் சிறையெடுத்தவன் இராவணன் என்பதும், அவன் சீதையுடன் தென்திசை நோக்கி சென்றான் என்பன போன்ற விபரங்களும் கிடைக்கப் பெறுகிறார்கள். ஸ்ரீ இராமபிரான் மடியிலேயே ஜடாயு மடிய ஸ்ரீ ராமனும் தன் கைகளாலேயே அவருக்கு ஒரு மகனின் நிலையிலிருந்து கடன்களை நிறைவேற்றுகிறார். முன்பு ஒரு இலக்கின்றித் தேடியவர்கள் இப்போது குறிப்பாகத் தென் திசையை நோக்கி தேடி வருகிறார்கள். அப்படி வரும் வழியில் தான் கிஷ்கிந்தையை அடைந்து அனுமன் மூலம் சுக்ரீவனோடு நட்புக் கொள்கிறார்கள். கிஷ்கிந்தை என்பது ஸ்ரீ தர்மசாஸ்தா கோயில் கொண்டு ஐயப்பனாக அருள்பாலிக்கும் உலகப்பிரசித்தம் பெற்ற இப்போதையை சபரிமலை வனப்பகுதி. ஸ்ரீ இராமபிரானாலேயே "அன்னை" என்று அன்புடன் புகழப் பெற்ற சபரிமாதா வாழ்ந்தது இந்த வனப்பகுதிதான். இங்குதான் சபரியன்னை வனத்திலே கிடைத்த பழங்கள் ஒவ்வொன்றாகத் தானுண்டு சுவைத்து அதில் அதிகச்சுவை மிகுந்த கனிகளை (எச்சில் என்றும் பாராமால்) ஸ்ரீ இராமபிரானுக்கு கொடுத்து உபசரித்தாள். அண்ணலும் அதனை அருவெறுப்பின்றிச் சுவைத்து மகிழ்ந்தார். (அன்பை மட்டுமே முதன்மையாகக் கொண்ட பக்திக்கு மற்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆசாரங்கள் இரண்டாம் பக்ஷம்.) இது பின்நாளில் காளத்தி மலையிலே கண்ணப்ப நாயணாரினாலும் உறுதி செய்யப் பெற்றுள்ளது.) அந்தச் சபரியன்னையின் பெயராலேயே அப்பகுதிக்குச் சபரிமலை என்கின்ற பெயர் வந்தது. அது இன்றும் (இரண்டு யுகங்கள் கடந்து மூன்றாவது யுகமான இந்தக் கலியுகத்திலும்) நிலைத்து நிற்கிறது.

கிஷ்கிந்தைக்கு வரும் வரையில் இராவணன் சீதையைத் தென் திசையிலே எங்கு சிறை வைத்திருக்கிறான்? என்கின்ற விபரங்கள் யாருக்கும் தெரியாது. கிஷ்கிந்தைக்கு வந்த பிறகு சுக்ரீவனுடன் நட்புக் கொள்கிறார்கள் ஸ்ரீ இராமலக்ஷ்மணர். சுக்ரீவனுக்கும், வாலிக்கும் இடையிலான பகையை அறிந்து அதில் சுக்ரீவன் பக்கம் உள்ள நியாயத்தை உணர்ந்து சுக்ரீவனுக்கு உதவ முன்வருகிறார் ஸ்ரீராமர். அதுவும் ஒரு ஒப்பந்தத்தோடு. அதாவது வாலியை வதைத்துத் தாம் கிஷ்கிந்தையையும், சுக்ரீவன் மனைவியையும் மீட்டுக் கொடுத்தால்; அதற்கு ஈடாகச் சுக்ரீவன் தனது வானர சேனையைப் பயன்படுத்தி, சீதை எங்கே சிறை வைக்கப் பெற்றிருக்கிறாள்? என்பதனைக் கண்டு சொல்வதும், சீதையை மீட்க உதவி செய்வதாகவும் அந்த ஒப்பந்தம் அமைந்தது. அதன்படி ஸ்ரீ ராமபிரானின் இராமபாணத்திற்கு வாலி பலியாகிறான். கிஷ்கிந்தையை மீட்டு, இலக்குவன் சுக்ரீவனுக்கு மகுடம் சூட்டுகிறான். இந்தக் காலக்கட்டத்தில் கிஷ்கிந்தையில் கார்காலம் துவங்குகிறது. கார் காலம் (மழைக் காலம்) முடியும்வரை காத்திருக்க இராம லக்ஷ்மணர்கள் சம்மதிக்கிறார்கள். அதுவரை சீதை எங்கே சிறைவைக்கப்பட்டிருக்கிறாள் என்கிற விஷயம் இராம இலக்குவணர்களுக்குத் தெரியாது. கேரளத்திலே கார்காலம் 4 மாதங்கள். (வைகாசி முதல் ஆவணி வரை) கார்காலம் முடிந்த பிறகும் காலம் தாழ்த்தியதால் அண்ணலின் கோபத்திற்கு ஆளாகிறான் சுக்ரீவன். பிறகு ஒருவாறு சமாதானம் செய்து உலகின் நாலாபுறங்களிலும் சீதையைத் தேடும் பணிக்காகத் தனது வானரங்களை ஏவுகிறான். இராவணனின் கோட்டையாகத் திகழும் இலங்கையிருக்கும் தென்திசையை நோக்கிச் செல்லும் மிக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முக்கியமான பணியை அனுமனே ஏற்கிறார். கடலைத் தாண்டி இலங்கை சென்று, அசோக் வனத்திலே அன்னையைக் கண்டு, அவளுக்கு ஆறுதல் கூறி, இலங்கையில் அரக்கர் படைகளை நாசம் செய்து, இந்திரஜித்தின் நாகாஸ்த்திரத்தால் கட்டுண்டு, இராவணன் அவையிலே இராமனுக்காக தூதுரைத்து, நிறைவில் இலங்கை நகரைத் தீக்கிரையாக்கி மீண்டு வருகிறான் அனுமன். வந்தவன் இராமபிரானைப் பணியாமல் அவருக்கு எதிர் திசையிலே இலங்கையை நோக்கி வீழ்ந்து வணங்கி எழுகிறான்.

"எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழிதிலன் முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇ நெடிதிறைஞ்சி வாழ்த்தினான்"

(கம்பராமாயணம்)

என்று கம்பர் வருணிப்பார்.

அனுமனின் இச்செயலை ஸ்ரீ ராமபிரான் அவமதிப்பதாக நினைக்கவில்லையாம். இவன் சீதையைக் கண்டிருக்கிறான் – அங்கு அவள் வணங்கத்தக்க நிலையில் கற்புடன் இருக்கிறாள் என்பதை இராமர் குறிப்பால் உணர்ந்து கொண்டாராம். இதனை...

"கண்டதும் உண்டு அவள் கற்பு நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணரும் கொள்ளையான்"

என்கின்ற கம்பனின் வரிகள் உணர்த்தும். வால்மீகியும் இதே கருத்தைத் தான் வலியுறுத்துகிறார். எனவே இராமலக்ஷ்மணர்கள் கிஷ்கிந்தையை அடைந்து இத்தனை சம்பவங்களும் நிகழ்ந்தேறிய பிறகுதான் இராவணனாலே சிறையெடுக்கப்பெற்ற சீதாதேவி இலங்கையிலே அசோக வனத்திலே சிறை வைக்கப் பெற்றிருக்கிறாள்; என்கின்ற உண்மை இராமபிரான் உட்பட அனைவருக்கும் தெரியவருகிறது. உண்மை இவ்வாறு இருக்க கிஷ்கிந்தையிலிருந்து பலநூறு காதங்களுக்கு அப்பாலிருக்கும் கோதாவரி நதிக்கரையிலே அகத்தியர் ஸ்ரீஇராமபிரானைச் சந்தித்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எங்ஙனம் கங்கையாற்றின் மணலை எண்ண முடியாதோ அதுபோல இதுவரை தோன்றி மறைந்துள்ள இந்திரர்களையும் எண்ண முடியாதாம். இதுவரை நூறு கோடி பிரம்மாக்களும், 6 கோடி நாராயணர்களும் தோன்றி மறைந்துள்ளார்களாம்.) ஸ்வேத வராகம் என்று சொல்லக்கூடிய வெள்ளைப் பன்றியினுடைய கல்பத்திலே, வைவஸ்வத மனுவினுடைய காலத்திலே 28வது பருவத்திலே கலியுகத்தின் முதலாவது பாதத்தில், ஜம்பூத்வீபம் என்று சொல்லக்கூடியதான பாரத வர்ஷத்தில், பரதக்கண்டத்தில் மேரு மலையினுடைய தென் பாகத்திலிருக்கக் கூடிய, தண்டகாரண்ய சகாப்தத்திலே என்று அந்த சங்கல்பம் தொடர்கிறது.

தண்டகாரண்யம் என்பது இப்போது இருக்கக் கூடிய சட்டீஸ்கர், ஒரிசா, ஜார்கண்ட் ஆகிய மூன்று மாநிலங்களின் பகுதிகளை உள்ளடக்கிய மிகப்பரந்த வனப்பகுதி. பொலிவும், வளமும், செழிப்பும் நிறைந்த இந்த வனப்பகுதியில் ஏராளமான கனிம வளங்கள் கொட்டிக்கிடக்கின்றன. இந்தியாவில் அதிக அளவு இரும்புத்தாது இப்பகுதியில்தான் இருக்கிறதாம். 3,500 கோடி டன் நிலக்கரியும், 234 கோடியுடன் இரும்புத்தாதும், 3,550 மில்லியன் டன் சுண்ணாம்புக் கல்லும் இந்த வனப்பகுதியில் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. டாட்டா, எஸ்ஸார், வேதாந்தா, ஜிண்டல் உள்ளிட்ட பல பெரிய நிறுவனங்கள் இப்பகுதியில் தங்கள் ஸ்தாபனங்களை நிறுவப் போட்டி போடுகின்றன. காட்டு வளங்களோடு கனிமவளமும் நிறைந்த பகுதி என்பதால் தான் இப்பகுதிகளில் முனிவர்களும், தபோவனர்களும் ஆசிரமம் அமைத்து இதனைத் தமது குழந்தைகளைப் போல பாதுகாத்து வந்தனர். (அன்று அந்த மஹான்களின் சொர்க்க பூமியாக விளங்கிய இந்த தண்டகாரண்ய வனப்பகுதிதான் இன்று நக்ஸலைட்டுகளின் ஆதிக்கம் மிகுந்த பகுதிகளாக இருக்கின்றன).

பாரதத்தின் வடகோடியில் இருக்கக் கூடிய தண்டகாரண்யத்தை தென்பகுதியில் நடைபெறும் வழிபாட்டின் சங்கல்பத்தில் ஏன் குறிப்பிட வேண்டும்? மேரோ தக்ஷிணேபார்ச்வே என்று மேருமலையைக் குறிப்பிடுவது போலே இதனையும் ஒரு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அடையாளத்திற்காகக் கூறலாம் என்றால், மேருமலையை ஒரு அடையாளமாக வைத்து அதன் தென்பகுதி என்று கூறுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது அவ்வளவுதான். ஆனால், தண்டகாரண்யம் அப்படிக் குறிப்பிடப்படவில்லை. "தண்டகாரண்யே சகாப்தே" என்று அதன் சகாப்தத்தில் அடங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. சகாப்தம் என்ற சொல் ஆளுமையைக் குறிக்கக் கூடிய சொல். முற்காலத்தில் வாழ்ந்த மன்னர்களுள் விக்ரமாதித்தனும், சாலிவாகனனும் மிகவும் பிரசித்தமானவர்கள். எனவே அவர்கள் வாழ்ந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு விக்கிரம சகாப்தம், சாலிவாகன சகாப்தம் என்று அவர்கள் பெயரால் வழங்கி வரும் வருடங்களை இன்றைய காலப் பஞ்சாங்களில் கூடக் காண முடிகிறது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த (விஜய) வருடத்திற்கு விக்கிரமசகாப்தம் 2070-71 சாலிவாகன சகாப்தம் 1934-35 இது அவர்களுடைய ஆளுமையைக் குறிக்கிறது. இன்றும் கூட இறந்து போன பெரிய தலைவர்களின் பெருமையைக் கூறுமிடத்து. அறிஞர் அண்ணா ஒரு சகாப்தம், புரட்சித்தலைவர் M.G.R. ஒரு சகாப்தம் என்று சொல்வதை நாம் வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். இதுவும் மக்கள் மனத்திலே ஆழமாகப் பதிந்துவிட்ட அவர்களது ஆளுமையைக் குறிக்கும் விதத்திலேயே அமைந்துள்ளது.

அந்த வகையில் பார்க்கும்பொழுது தண்டகாரண்யம் பாரதத்தின் வடபகுதியில் உள்ள ஒரு பகுதிதான் என்றாலும் கூட வனம், காடு என்று வரும்பொழுது தண்டகாரண்யம் இந்தியாவிலேயே மிகப்பெரியது மட்டுமல்ல, இயற்கை வளங்களும் தபசிகள், மகான்களின் அருள்வளமும் கொட்டிக்கிடக்கின்ற ஒரு வனப்பகுதி. எனவே, அதனை வனங்களுக்கெல்லாம் (or) ஆரண்யங்களுக் கெல்லாம் தலைமையாகக் கொண்டு பாரதத்தில் மற்ற பகுதிகளையும் (வனங்களையும்) தண்டகாரண்யத்தின் ஆளுமையைக் கொண்டு குறிப்பிடுவதை நமது முன்னோர்கள் ஒரு மரபாகக் கொண்டார்கள். அது இன்றுவரை தொடர்கிறது. ஒரு மிகப்பெரிய நிர்வாகத்தின் கீழ் நாம் இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்வதிலே ஒரு பெருமை ! தனியார் நிறுவன ஊழியரைவிட மாநில அரசு ஊழியர் என்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொல்லிக் கொள்வதிலே (அதைவிடத் தகுதி குறைந்த பணியாக இருந்தாலும் கூட ஒரு பெருமை! மாநில அரசு ஊழியரை விட மத்திய அரசு ஊழியர் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை அதிகம்!! அந்த நிர்வாகத்தின் கீழ் நாம் எந்த அடிமட்டப் பணியில் இருந்தாலும் அதனைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. நாம் அந்த நிர்வாகத்தின் கீழ் பணியாற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்வதிலே பெருமை கொள்கிறோம் அல்லவா? அது போன்றதுதான் இதுவும். பாரதத்தின் எந்தப் பகுதியாக இருந்தாலும் அதைத் தண்டகாரண்யத்தின் உபவனமாகப் பாவித்து வழங்குவதை நமது முன்னோர்கள் வழக்கமாகக் கொண்டார்கள். ஆகவே இதனையும் அந்த வகையிலேயே எடுத்துக்கொண்டு பொருள்கொள்ளவேண்டும்.

அடுத்ததாக ஒருவருக்கு விரக்தி எப்போது வரும்? எவ்வளவு உயர்வான பொருளாக இருந்தாலும் சரி! தனது உயிருக்கு உயிரானவராக இருந்தாலும் சரி! அவர்களைக் காணவில்லை என்றால் அதிகம் முயற்சியெடுத்துத் தேடுவார்களே தவிர அறிந்த கணத்திலேயே விரக்தியாகித் தம்மை மாய்த்துக்கொள்ள முயலமாட்டார்கள். "விரக்தி என்பது போராட்டத்தின் உச்சம். தமது சக்திக்கும் அதிகமாகத் தேட முயற்சி எடுத்து அந்த முயற்சியும் பலிக்காமல் போய்விடுமோ? என்று நினைக்கக் கூடிய தருவாயிலே வருவது தான் விரக்தி" ஒரு சராசரி மனிதனுக்கே இது பொருந்தும் என்றால், அவதார புருஷனாகிய இராமபிரான் இன்னும் பல படிகள் மேலானவராக அல்லவா இருக்கவேண்டும். தனது உயிரனைய சீதையைக் காணவில்லை என்பதை அறிந்தவுடனேயே முதலில் நாலாபுறமும் தேடியிருப்பார்கள் கத்திக் கூப்பாடு போட்டிருப்பார்கள். அந்தப் பிராந்தியத்திலே அவள் இல்லை என்பதை அறிந்தபிறகு அடுத்தகட்ட முயற்சியை மேற்கொண்டிருப்பார்கள். மேலும், மேலும் முயன்றிருப்பார்கள். சோகம் ஸ்ரீ இராமபிரானை வாட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அது எந்தவித முயற்சியும் மேற்கொள்ளாமல் விரக்தியின் எல்லைக்குக் கொண்டு சென்றிருக்கும் என்று சொல்ல முடியாது. எனவே சீதைய்ப் பிரிந்த இராமனை சோகம் வாட்டியது. பிரிவுத் துயரம் அவனை நெருப்பாகச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுட்டது. தான் பிறந்த சூரியவம்சத்திற்கு ஒரு கலங்கத்தை ஏற்படுத்திவிட்டோமே! என்கின்ற அவமான உணர்ச்சி அவனை வதைத்தெடுத்தது. இதனைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைக் கொல்லவேண்டும்! என்கின்ற கோபம் அக்கினியாகக் கொப்பளித்தது. எல்லாம் உண்மை. ஆனால், அவையெல்லாம் சீதையை விரைந்து கண்டுபிடித்து மீட்கவேண்டும் என்கின்ற உத்வேகத்தை ஏற்படுத்தியதே தவிர, அவரை விரக்தியின் எல்லைக்குக் கொண்டு சென்றுவிடவில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த உத்வேகத்தின் உந்துதலால்; சீதை எங்கோ உயிருடன் இருக்கிறாள் என்கின்ற உள்ளுணர்வின் உந்துதலால்தான் இராமன் சீதையைத் தேடித் தென்திசை நோக்கி வந்தான் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

சரி அப்படியென்றால் ஸ்ரீ ராமர் கடைசிவரை விரக்தி அடையவே இல்லையா? அப்படியென்றால் சிவகீதை உபதேசிச்கப் படவேண்டிய அவசியம் என்ன? அல்லது உபதேசிக்கப்படவே இல்லையா? எல்லாம் கட்டுக்கதையா? என்று கேள்விக்கணைகளால் நீங்கள் என்னைத் துளைப்பது எனக்குப் புரிகிறது. கொஞ்சம் அமைதியாக இருங்கள். பின்வரும் பகுதியில் அதனை பற்றி ஆராய்வோம்.

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து (கோதாவரி நதிக்கரை, தண்டகாரண்யம், கடல் மத்தியிலே சீதை சிறை வைக்கப்பட்டிருப்பது) சீவகீதை பாரதத்தின் வடபகுதியிலே உபதேசிக்கப்பட வாய்ப்பு இல்லை என்பது தெளிவாகிறது. அதற்காக இவை அனைத்துமே கட்டுக்கதைகள் அகத்திய முனிவர் ஸ்ரீராமனுக்கு பாசுபத விரதத்தை உபதேசிக்கவே இல்லை. ஸ்ரீ ராமனும் அந்த விரதத்தைக் கடைபிடிக்கவில்லை. சிவபெருமானும் இராமனுக்கு சிவகீதையை உபதேசிக்கவில்லை என்ற முடிவிற்கும் வந்துவிட இயலாது.

"உள்ளது சிதையாது
இல்லது முளைக்காது"

என்பது சித்தாந்த வாக்கு.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதன்படி இல்லாத ஒன்று வெளிவருவதற்கு வாய்ப்பே இல்லை. எனவே, அகத்தியர் ஸ்ரீ ராமனுக்கு பாசுபத விரதத்தை உபதேசித்திருக்கிறார். அவரும் அதனைக் கடைபிடித்து சிவ தரிசனம் பெற்று கீதோபதேசமும் பெற்றிருக்கிறார். அதில் ஏதும் மாற்றுக்கருத்தில்லை. அது எங்கே எப்படி நிகழ்ந்தது? என்பதில் தான் ஐயம் எழுகிறது. அதனைத் தெளிவிக்கும் முயற்சியில் இனிவரும் பகுதியில் இறங்குகின்றேன்.

சிவகீதை எங்கே உபதேசிக்கப்பெற்றது என்பதைச் சிந்திக்கும் முன் திருவாடானை நகரைச் சுற்றியுள்ள ஊர்களைக் கொஞ்சம் தெரிந்து கொள்வோம். 1. கண்டதேவி, 2. இறகுசேரி, 3. அஞ்சுகோட்டை, 4. தேவிப்பட்டினம், 5. மணிமுத்தாநதி

1. கண்டதேவி

இலங்கையில் அசோகவனத்தில் அன்னை சீதாதேவியைக் கண்ட அனுமன் அன்னையிடம் சூடாமணியைப் பெற்றுக் கொண்டு இராவணனிடம் தூதுரைத்து, இலங்கை நகரைத் தீக்கிரையாக்கிவிட்டு மீண்டு வந்து தன்னை எதிர்பார்த்துக் காத்திருந்த ஜாம்பவான் மற்றும் வானர சேனையிடம் தான் தேவியைக் கண்டு வந்த விபரத்தைக் "கண்டேன் சீதையை" என்று, உரைத்த இடம் என்று இந்த ஊருக்கான பெயர்க் காரணம் சொல்லப்படுகிறது. இந்த சம்பவம் வால்மீகி, கம்பன் ஆகிய இருவரின் இராமாயணத்திலும் விவரிக்கப்படுகின்றது. "த்ருஷ்டா ஸீதேதி விக்ராந்த: என்று வால்மீகியும் அதை அப்படியே பொருள் மாறாமல் "கண்டேன் சீதையை" என்று, கம்பனும் அனுமன் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். இந்தச் சம்பவத்தோடு தொடர்படுத்தப்படக் கூடிய வேறு ஊர்களோ, ஊரின் பெயர்களோ எனது கவனத்திற்குப் புலப்படவில்லை. எனவே ஊரின் பெயரையும், பெயர்க் காரணத்தையும் அப்படியே ஏற்றுக் கொள்வோம்.

உ. இறகுசேரி

இந்த ஊர் ஓர் சிறிய கிராமம். இராவணன் சீதையை சிறையெடுத்துச் சென்ற போது தடைசெய்த ஜடாயுவின் சிறகை வெட்டினான் இராவணன். அந்த இறகு விழுந்த இடம் இந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இறகுசேரி என்று ஒரு பெயர்க்காரணம் சொல்லப்படுகிறது இந்த ஊருக்கு. ஆனால், இதே காரணத்தைப் பல காலமாகப் பல ஊர்களில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். "தோகை விழுந்த இடம் தோகை மலை" என்பதைப் போல, பல ஆயிரம் கிலோ மீட்டர்கள் தூரத்திற்கு அப்பால் வட நாட்டிலே பஞ்சவடிக் கட்டத்திற்கு அருகே நடந்தது இந்தச் சம்பவம். அங்கே வெட்டப்பட்ட இறகு இங்கே வந்து விழுந்திருக்க வாய்ப்பில்லை. எனவே, இந்தப் பெயருக்கு வேறு ஏதோ ஒரு வலுவான காரணம் இருக்கவேண்டும். அதனை அடுத்துப் பார்ப்போம். அதற்கு முன்னால் இந்த இறகோடு ஒட்டிக் கொண்டுள்ள சேரி என்பதைப் பற்றிச் சிறிது நோக்குவோம்.

இன்றைய சூழ்நிலையில் சேரி என்றால் ஏதோ ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்கள் வாழும் பகுதியாகச் சித்திரிக்கப்படுகிறது. ஆனால், உண்மையில் சேரி என்பதற்கு அதுதான் பொருளா? அவர்களுக்காகத்தான் சேரிகள் உருவாக்கப்பட்டனவா? என்றால் உண்மை அதுவல்ல. இன்னும் சொல்லப் போனால் சேரிகள் மிகமிகப் புனிதம் வாய்ந்த இடங்கள் என்று சொன்னால் அது மிகையில்லை. சந்தேகமிருந்தால் இளங்கோவடிகள் சொல்வதைப் பாருங்கள்.

"அறம்புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்"

(சிலப்பதிகாரம் புறஞ்சேரி இறுத்த காதை -195 - 196)

பொருள் : அறம்புரி மாந்தர் அன்றிப் பிறர்யாரும்
சென்று தங்காத புறஞ்சிறைமூதூர்

"அறத்துறை மாக்கட்கு அல்லது இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது"

(சிலம்பு அடைக்கலக் காதை -106 - 107)

பொருள் : அறத்துறையிலே ஈடுபட்டுத் தவவாழ்க்கை மேற்கொண்டு
வாழ்பவர்க்கல்லாது இல்லற வாழ்க்கை
மேற்கொள்பவர்க்கு இப்புறச்சிறை இருக்கை பொருந்தாது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"அறம்புரி நெஞ்சில் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்" (சிலம்பு அடைக்கலக் காதை - 115 - 116)

பொருள் : அறமே புரிகின்ற நெஞ்சம் உடையோரான
அறவோர்கள் நிறைந்துள்ள புறஞ்சிறை மூதூர்.

சேரி, புறஞ்சேரி, புறஞ்சிறை, புறஞ்சிறைமூதூர் அனைத்தும் ஒரு பொருளைத் தரும் சொற்கள். புறஞ்சேரி இறுத்த காதை என்று இளங்கோவடிகள் இந்த அத்தியாயத்திற்குப் பெயர் சூட்டியிருப்பதிலிருந்து இதனை நன்கு உணரலாம். அதாவது சேரி என்பது நாம் நினைத்துக் கொண்டிருப்பது போல் தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்கும் பகுதி அல்ல. இன்றைய காலச் சூழ்நிலையிலே சேரிகள் அவ்வாறு ஆக்கப்பட்டுள்ளன. ஒரு பெரிய ஊர் இருக்கிறதென்றால் அதற்குப் புறத்தே, இயற்கை வளம் கொழிக்கும் சூழலிலே சப்தம் அதிகமில்லாத அமைதியான சுற்றுப்புறத்தோடு கூடிய சிறிய குடியிருப்புப் பகுதி தான் சேரி. அது ஊருக்குப் புறத்தே அமைந்திருப்பதினாலே புறஞ்சேரி. நகரத்துச் சந்தடியை விரும்பாத அமைதியான தவ வாழ்க்கை மேற்கொள்ள விரும்புவோரும், தருமவான்களும் நிறைந்திருக்கக் கூடிய அமைதி தவழும் இடம் தான் இந்தப் புறஞ்சேரிகள். எனவே புறஞ்சேரிகள் புண்ணியப் பகுதிகள் என்பதில் ஐயமில்லை.

அடுத்ததாக இறங்குதல் என்ற சொல்லுக்கான விளக்கத்தை பார்ப்போம் இறங்குதல் என்ற சொல்லுக்கு நாணுதல், இழிதல், தாழ்தல், நிலைகுலைதல், தங்குதல் என்று பல பொருட்கள் அகராதியிலே தரப்பட்டுள்ளது. இவற்றில் நிலை குலைதல், தங்குதல் ஆகிய இரண்டு பொருட்களும் இங்கு நமக்குப் பயன்படக் கூடியனவாக இருக்கும். எங்கே எப்படிப் பயன்படப் போகிறது? தொடர்ந்து படியுங்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அஞ்சுகோட்டை

இவ்வூர் திருவாடானையிலிருந்து சுமார் 3கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. ஊரின் பெயரை வைத்து ஏதோ பெரிய பெரிய கோட்டைகளும் மதிலும் நிறைந்த ஊர் என்று பெரிதாகக் கற்பனை செய்தீர்கள் என்றால் உங்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். இது ஒரு சிறிய கிராமம். கோட்டை என்று சொல்லக்கூடிய அளவிற்கெல்லாம் பெரிதாக ஒன்றும் இல்லை ! ஆனாலும் அஞ்சுகோட்டை என்று பெயர் வருவதற்குத் காரணம் இன்றிப் போகாது அது என்ன காரணமாக இருக்கும்? அதிகமாக மூளையை போட்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். இன்னும் சிறிது நேரத்தில் எல்லாமே தெளிந்துவிடும்.

தேவிப்பட்டினம்

இது கடற்கரையில் அமைந்துள்ள கிராமம். இத்தலமும் இராமாயணத்தோடு தொடர்புபடுத்திக் காட்டப்படுகிறது. இங்கு கடலினுள்ளே 9 கற்றூண்கள் நடப்பெற்றிருக்கக் காணலாம். இவை ஒன்பதும் நவகிரஹங்கள் என்றும், இராமபிரான் இங்கு நவகிரஹங்களை ஸ்தாபித்துப் பூஜித்த பிறகு தனது இலங்கைப் பயணத்தைத் தொடர்ந்தார் என்றும் கூறப்படுகிறது. பகற்பொழுதில் முழங்கால் அளவிற்கே இருக்கும் கடல்நீர் அந்தியில் சிறிது சிறிதாக அதிகரித்துச் சில வேளைகளில் 9 தூண்களையும் முழுமையாக மறைக்கும் அளவிற்கு அதிகமாகச் சூழ்ந்து கொள்வதும் மீண்டும் மறுநாட் காலையில் பக்தர் சென்று வழிபடும் அளவிற்குக் குறைந்து விடுவதும் இங்கு நிகழும் ஓர் அதிசய நிகழ்வு.

மணிமுத்தா நதி

முன்பு நாம் கண்ட இறகுசேரி, அஞ்சுகோட்டை முதலான ஊர்களின் வழியாகத் திருவாடானையின் மேற்கு மற்றும் தெற்குத் திசைகளின் வழியாகச் செல்கிறது இந்த மணிமுத்தா நதி. முன்பு நன்றாக அகண்டும், வற்றாத ஜீவ நதியாகவும் இந்நதி விளங்கியதாக

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிகிறோம். காலப்போக்கில் மனிதர்களின் இதயம் போல இது சுருங்கி இன்று ஒரு கால்வாய் போல மழைக்காலத்தில் மட்டும் நீர்வரும் ஓர் சிற்றோடையாக மாறிவிட்டது காலத்தின் கோலம்.

இனி விஷயத்திற்கு வருவோம். சீதை இலங்கையில் அசோக வனத்திலே சிறைவைக்கப்பட்டிருக்கிறாள் என்கின்ற விபரத்தை அனுமன் மூலம் அறிந்த இராமலக்குவணர்கள்; மிகப்பெரிய வானர சேனையுடன் இலங்கையை நோக்கிப் புறப்படுகிறார்கள். இலங்கைக்கான வழியை நன்கு அறிந்தவன் அனுமன், சென்றுவந்த அனுபவம் இருக்கிறது. எனவே அனுமன் வழிகாட்ட படை நடக்கிறது. கிஷ்கிந்தையிலிருந்து புறப்பட்ட படை தென்கடலை அடைவதற்குப் 12 நாட்கள் எடுத்துக் கொண்டதாக இராமாயணத்தின் வழி அறிகிறோம். அப்படிப் பார்க்கின்ற போது 12 நாட்களும் இடைவிடாது பயணம் செய்ய இயலாது. இடையிடையே ஆங்காங்கே தங்கித்தான் சென்றிருக்க வேண்டும். அப்படி தங்கிச் சென்ற இடங்களில் ஒன்றுதான் முன்பு நாம் கண்ட இறகுசேரி, கண்டதேவி, தேவகோட்டை வழியாக இலங்கை நோக்கிச் சென்ற படைவீரர்கள் இரவு தங்குவதற்கு ஒரு நல்ல இடமாகத் தேடினார்கள். சாதாரணப் படை வீரர்கள் எங்கு வேண்டுமானாலும் தங்கலாம் ஆனால் சக்ரவர்த்தி குமாரர்களும், தவசீலர்களுமாகிய இராம இலக்குவணர்களை அப்படிக் கண்ட இடத்திலும் தங்கவைக்க முடியுமா? எனவே அதற்கான இடத்தைத் தேடினார்கள். புறஞ்சேரிகள் அறவோரும், தவசீலர்களும் நிறைந்த இடம் என்பதை முன்பு கண்டோம். எனவே திருவாடானை நகரின் புறத்தே அமைந்த சேரியிலே விருந்தினர்கள் தங்கும் குடிலிலே இராம இலக்குவணர்களைத் தங்க வைத்தார்கள். இறங்குதல் என்ற சொல்லுக்கு தங்குதல், நிலைகுலைதல் என்கின்ற பொருள்கள் உள்ளன என்பதையும் முன்பு பார்த்தோம். அதனை இங்கு பொருத்திப் பாருங்கள் உங்களுக்கு உண்மை புலப்படும். இராமசேனை தங்கியிருந்த சேரி என்பது சரி, நிலை குலைதல் எவ்வாறு பொருந்தும்? என்று கேட்டால் அந்த வார்த்தை இந்த இடத்திற்குத் தான் மிகச்சரியாகப் பொருந்தும் எப்படி?

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்வதென்றால் சும்மா எடுத்தேன், கவிழ்த்தேன் என்று படைகளைத் திரட்டிக் கொண்டு சென்றுவிட முடியாது. "படை வலியும், தன்வலியும் மாற்றான் வலியும்," தெரிந்து அதற்குத் தகுந்தபடி திட்டமிட்டுப் படை நடத்த வேண்டும் என்று வள்ளுவர் சொல்வதுபோல நானா விஷயங்களையும் ஆராய்ந்து தெளிந்த பிறகே முயற்சியில் இறங்க வேண்டும். பூவுலகின் சிறு பகுதியை ஆளும் சாதாரண மன்னர்களின் மீது படையெடுப்பதற்கே இவ்வளவு விஷயங்களை ஆராய வேண்டும் என்றால்; ஏழு உலகங்களையும் அடக்கியாளும் இராவணன் மீது படையெடுப்பதென்றால் இன்னும் எவ்வளவு விஷயங்களை சீர்தூக்கிப்பார்க்கவேண்டும்? எனவே வரும் வழியெல்லாம் ஸ்ரீ இராமபிரான் அனுமனிடம் இராவணனுடைய படைவலிமை, ஆயுதவலிமை, கோட்டை, அரண்களின் அமைப்பு போன்றவற்றையும் விசாரித்து அறிந்து கொண்டதோடு இடையிடையே அசோக வனத்திலே சீதையின் நிலை குறித்தும், பேசிய வசனங்கள் குறித்தும் மீண்டும் மீண்டும் கேட்டு அறிந்து கொண்டார்.

தன்னிடமிருக்கும் வானரப் படையின் அளவு, அவற்றின் வலிமை, தன்னுடைய வீரம், வலிமை, மனோதைரியம், இவையெல்லாம் இராவணனுடைய வலிமைக்குச் சிறிதும் குறைவற்றது என்பதை ஸ்ரீ ராமன் நன்றாக உணர்ந்தே இருந்தார். என்றாலும், இரண்டு விஷயங்களை எப்படிச் சமாளிக்கப் போகிறோம்? என்பதை நினைத்தபொழுது அவருக்கு மலைப்பு ஏற்பட்டது. முதலாவது இலங்கையின் அமைவிடம். இரண்டாவது இருக்கக் கூடிய காலவரையறை.

சாதாரணமாக நிலப்பகுதியிலே இருக்கக்கூடிய கோட்டையாக இருந்தால் அது எவ்வளவு வலிமையுடையதாக இருந்தாலும் தன்னுடைய ஒரேயொரு அக்னி அஸ்த்திரத்தினாலே அதனைத் தகர்த்தெரிந்துவிடும் ஆற்றல் ஸ்ரீராமனுக்கு உண்டு. ஆனால், இலங்கை அப்படியில்லையே! மஹாசமுத்திரமென்னும் இயற்கை அரணல்லவா அதனைக் காத்து நிற்கிறது. அவ்வளவு பெரிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

கடலைத்தாண்டி எவ்வாறு இலங்கையை அடைவது? அப்படித் தாம் முயற்சிகள் எடுத்தாலும் அதற்கு எவ்வளவு காலதாமதம் ஆகும்? நாளைக்கே முடியக்கூடிய காரியமா? சீதைவேறு காலக்கெடு விதித்துவிட்டாள். "இன்னும் 30 நாட்கள் மட்டுமே உயிர்தரிப்பேன் அப்படி அதற்குள் அவர் வந்து என்னை மீட்காவிட்டால் அவர் கையாலேயே எனக்கு கங்கைக் கரையிலே எள்ளும், தண்ணீரும் இறைக்கச்சொல்"

செங்கையால் கடன் செய்தி என்று செப்புவாய்

– கம்பராமாயணம்

என்று சற்று உணர்ச்சிவயப்பட்ட நிலையிலேயே சீதை உரைத்ததாக அனுமன் மூலம் அறிந்திருந்தார் இராமபிரான். அதற்கு மறுமொழியாக அனுமனும் "ஸ்ரீ ராமர் ஒரு மாதத்திற்குள் இங்கு வந்து தங்களை மீட்பார்! அப்படிக் குறித்த நாளில் அவர் வரத்தவறினால் அவர் இராமன் இல்லை! இவனே ராமனாவான்! அவர் இராவணனாகி விடுவார்!"

"பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு
இராவணன் அவன் இவன் இராமன் என்றனன்"

(கம்பராமாயணம்)

என்று தான் சூளுரைத்து வந்ததையும் அனுமன் வாயிலாக இராமர் அறிந்திருந்தார். எனவே அனுமன் தூது சென்றுவந்து 8 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது, இன்னும் பயணப்படவேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது, கரையை அடைந்தாலும் கடலைக் கடப்பது மிக எளிய காரியமா? கடலில் பாலம் அமைத்துச் செல்வதானாலும் அதற்கு எவ்வளவு கால அவகாசம் பிடிக்கும்? அப்படியே கடந்து சென்றாலும் இந்திரனையும், தேவாதி தேவர்களையும் வென்ற இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித்தன் போன்ற மாவீரர்களோடு கடலனைய அரக்கர் சேனையையும் அல்லவா வெல்லவேண்டும்! அதன் பிறகல்லவா நாம் சீதையை மீட்க முடியும்! இதற்கெல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இருக்கக்கூடிய கால அவகாசம் போதுமா? என்றெல்லாம் பலவிதமான சிந்தனைகளினூடே புறஞ்சேரியின் குடிலில் அமர்ந்திருந்த ஸ்ரீராமர்; ஒருவேளை தான் இந்தச் சவாலை (ஜெயிக்க) வெல்ல முடியாமற்போனால்; தான் தசரதன் மைந்தன் என்ற பெயருக்கும் தானுதித்த சூரிய குலத்தின் பெரும் புகழுக்குமல்லவா பெரும் அபகீர்த்தி வந்துவிடும்! என்று நினைத்தார். விரக்தியின் உச்சத்திற்குப் போனார். அதன் மூலம் நிலைகுலைந்தவரானார். எனவே நிலைகுலைந்த நிலையில் இராமர் இறங்கியிருந்த (தங்கியிருந்த) சேரி அதனால் இறங்குசேரி எனப் பெயர் விளங்கிவந்த இவ்வூர், நாளடைவிலே மாற்றம் கண்டு இறகுசேரியாகியிருக்கிறது என்பதை நான் சொல்லாமலே உங்களுக்குப் புரிந்திருக்கும்.

ஆகவே, இராமபிரான் இராவணனின் பராக்கிரமத்திற்கோ, படை வலிமைக்கோ, தவ வலிமைக்கோ அஞ்சியவரல்லர். அவரால் சாதிக்க முடியாதது எதுவும் இல்லை. சர்வ வல்லமை பொருந்திய பரசுராமனையே ஜெயம்கொண்ட ஜெயராமன் அவன். ஆனால் இருக்கக்கூடிய காலக்கெடு மிகக்குறைவாக இருக்கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் இலங்கை சென்று இராவணனை வென்று சீதையை மீட்டுவிட முடியுமா? அவ்வாறு அந்தக் காலக்கெடுவிற்குள் அதனைச் சாதிக்கவில்லையானால் தன் உயிரனைய சீதையை அல்லவா இழக்க நேரிடும்! என்று எண்ணிப்பார்த்தவர் நிலை குலைந்தார். விரக்தியின் எல்லைக்குப் போனார். அப்படி ஸ்ரீ ராமன் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருந்தபோதுதான், அப்போது இப்பகுதியில் ஆசிரமம் அமைத்து வாழ்ந்து கொண்டிருந்த அகத்திய முனிவர் இராமபிரான் முன்னால் வந்தார். அவருக்கு ஆறுதல் கூறி பாசுபத விரத முறையையும் உபதேசித்தார்.

அடுத்ததாக அஞ்சுகோட்டைக்கு வருவோம். இவ்வூரும் இன்றைய திருவாடானைக்கு அருகில் உள்ள ஓர் சிற்றூர் என்பதும், இவ்வூரில் பேர் சொல்லும் அளவில் கோட்டை ஏதும் இல்லை என்பதையும் முன்பு பார்த்தோம். ஆனால், ஊரின் பேரில் ஐந்து கோட்டைகள் உள்ளது. இவ்வூர் மன்னர்களின் வாழ்விடமாகவோ, சரித்தர முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ தெரியவில்லை. எனவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்கு கோட்டை கட்டிப் பாதுகாக்கும் அளவிற்கு முக்கியத்துவம் அமையவில்லை என்பது தெளிவு. ஒரு கோட்டையே அவசியமில்லாதபோது, அஞ்சுகோட்டைகள் எதற்கு? நாம் முன்பே பார்த்தோம் "இல்லது முளைக்காது" என்று எனவே தகுந்த காரணமின்றி இந்தப் பேர் வந்திருக்காது. அது எதுவாக இருக்கும் என்று ஆராய்வோம்.

அகத்தியரிடம் பாசுபத விரதமுறையை உபதேசம் பெற்ற இராமபிரான் இருக்கக் கூடிய கால அவகாசத்தை மனதிற்கொண்டு அதனை உடனே கடைபிடிக்கத் துவங்குகிறார். அருகிலேயே மணிமுத்தா நதிக்கரையில் ஓர் குடில் அமைத்து, அதில் லிங்கம் ஸ்தாபித்து வழிபாடு துவங்கிறார். சிவகீதையில் கோதாவரி, சிந்து நிதிக்கரையில் என்று வருகிறதே? என்றால் முன்பே பார்த்தோம். பெரியவர்களோ, முனிவர்களோ ஓர் தீர்த்தம் உண்டாக்கினால் அதில் கங்கை முதலிய நதிகளை ஆவாகித்துப் புனிதப்படுத்துவார்கள் என்று.

பெரியவர்கள் என்ன! நாமே கூட ஒரு பூஜையைத் துவங்கும் முன்பு ஒரு சிறிய கலசத்தில் நீரை நிரப்பி அதில்

"கங்கேச யமுனே சைவ கோதாவரி சரஸ்வதி!
நர்மதே சிந்து காவேரி தீர்த்தேஸ்மிந் சன்னிதிம் குரு"!!!

என்று சப்த நதிகளையும் அந்த நீரில் பூஜித்து அந்த நீரைக் கொண்டு இடத்தை சுத்தம் செய்தபிறகுதானே பூஜையைத் துவங்குகிறோம்! இதனையும் அப்படித்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். எனவே, மணிமுத்தாநதி தீர்த்தத்திலேயே கோதவரி, சிந்து, மற்றும் புண்ணிய நதிகளை ஆவாஹித்து, அந்நீரைப் புனிதப்படுத்தி, அந்த நீரினாலே லிங்கத்தை அபிஷேகம் செய்து அகத்தியர் கூறிய முறைப்படி பாசுபத விரதத்தை அனுஷ்டிக்கிறார் இராமபிரான். (குறிப்பு: பாசுபத விரதமுறையை இந்நூலின் சிவகீதை அத்யாயத்தில் காண்க.) இவ்வாறு இராமபிரான் கடுமையான விரதத்தை மேற்கொண்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேளையில் அவ்விரதத்திற்கு பங்கம் வந்துவிடாதபடி காக்கும் பொறுப்பை இளவல் இலக்குவணன் (வழக்கம்போல) ஏற்றுக் கொள்கிறான். இது போன்ற விரதங்களுக்கு ஐந்து வகையிலே இடையூறுகள் செய்ய முடியும். அதாவது பஞ்சபூதங்களால் அதிகமான மழையினாலே, நெருப்பினாலே, பூகம்பத்தாலே, இப்படி பலவகையிலும் இடையூறுகள் ஏற்படலாம். அவ்வாறு தடை ஏற்பட்டால் விரதபங்கம் ஏற்படும். நினைத்த செயலை நிறைவேற்ற முடியாதுபோகும். எனவே பஞ்ச பூதங்களாலும் இடையூறுகள் நேறாதவாறு தனது அம்பினாலே ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒரு கோட்டை வீதம் ஐந்து கோட்டைகள் கட்டினான் இளையபெருமான். அதாவது ஐந்து சரக்கூடங்கள் கட்டினான். முன்பே வனத்திலே விசுவாமித்ர முனிவனின் வேள்விக்கு அசுரர்களால் ஏற்பட்ட இடையூறுகளைத் தடுக்க சரக்கூடம் அமைத்த செய்தி இராமாயணத்தில் உண்டு. அதுபோல இராமபிரானின் பாசுபத விரதத்திற்கு தடங்கல் வரா வண்ணம் ஐந்து சரக்கூடங்களை கோட்டைகளாக அமைத்துக் காத்த இடம். எனவே இந்த ஊர் அஞ்சு கோட்டையானது.

அடுத்ததாக சிவகீதையில் இராமர் நான்கு மாத காலங்கள் விரஜா தீக்ஷை அனுஷ்டித்ததாக வருகிறது. இருக்கக் கூடியதோ விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலான நாட்கள். இந்நிலையில் மாதக்கணக்கில் விரதமிருந்தால், சீதையின் கதி அதோகதிதான். எனவே, இதனையும் அப்படியே எடுத்துக்கொள்ளக்கூடாது. நான்கு மாத காலம் செய்ய வேண்டிய பிரயத்னத்தை ஒரு சில நாட்களில் செய்துமுடித்தார். அதாவது தீவிர விரதம் அனுஷ்டித்தார் என்று கொள்ளவேண்டும். இன்றைய நாட்களில் கூட இதுபோன்ற நடைமுறைகள் நடப்பில் உள்ளன. உதாரணமாக அரசாங்கம் ஒரு பாலம் கட்டுவதாக வைத்துக் கொள்வோம். அந்தப் பாலம் ஓராண்டு கால அவகாசத்தில் கட்டி முடிக்கப்பெற்றிருக்கும். அதனால் அதன் அருகே ஒரு அறிவிப்புப் பலகை வைத்திருப்பார்கள். அதில் பாலம் ஆரம்பிக்கப்பட்ட நாள், ஏற்பட்ட தொகை இவற்றோடு மனித வேலை நாட்கள் 743 நாட்கள் என்று எழுதியிருப்பார்கள். அருகிலே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குடியிருப்பவர்களுக்கு இந்தச் செய்தி வியப்பாக இருக்கும் 8 மாதத்தில் கட்டி முடித்த பாலத்தில் 2½ ஆண்டுகளாகக் கட்டியிருக்கிறார்களே ! என்று ஆனால் ஒரு நாளைக்கு ஒரு மனிதனின் வேலைநேரம் 8 மணி நேரம் மட்டுமே. அப்படி எத்தனை மணிநேரம் எவ்வளவு பேர் மற்றும் எந்திரங்கள் பார்த்திருக்கிறார்கள் என்று கணக்கு பார்த்தால் அவர்கள் போட்டுள்ள விபரம் சரியாகவே இருக்கும். அதுபோலத்தான் இராமரும் தீவிர விரதத்தை மேற்கொண்டார் என்று கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். அதாவது, அன்ன ஆகாரம், ஓய்வு உறக்கம் ஏன்! தண்ணீர் கூட குடிக்காமல் சதா சர்வகாலமும் அகத்தியர் உபதேசித்த சிவ சஹஸ்ரநாமத்தை ஜெபித்தபடி இருந்தார். அவசியம் கருதி இறைவனும் அவருக்கு உடனடியாகத் தரிசனம் கொடுத்து உபதேசித்தார். இன்றைய காலச் சூழ்நிலையிலே மத்திய மாநிலத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பிறகு அந்தத் தேர்தல் குறித்து வழக்கு ஏதேனும் தொடுக்கப்பட்டால் நீதி மன்றங்கள் (குறித்த காலத்தில் தேர்தல் நடைபெற வேண்டிய அவசியம் கருதி) அந்த வழக்கிற்கு முன்னுரிமை கொடுத்து அதனை உடனடியாக நடத்தி முடித்துவிடும். அதுபோலத்தான், குறித்த காலத்தில் இராவண வதம் நடைபெற வேண்டும். அதன் மூலம் சீதையின் சபதம் நிறைவேற்றப்பட்டுச் சீதை சிறை மீட்கப்பட வேண்டும். பரதனின் அக்னிப்பிரவேசம் தடுக்கப்பட வேண்டும். எனவே இவ்வளவு அவசியம் கருதியும், இராமபிரானின் தீவிர பக்திக்கு இறங்கியும் பரமேச்வரன் உடனடியாகக் காட்சி கொடுத்து பாசுபதாஸ்த்திரத்தையும் வழங்கிச் சிவகீதையையும் உபதேசித்து அருளினார்.

திருவாடானைத் திருத்தலத்திலே பல கோவில்கள் இருக்கின்றன. அவற்றோடு இராம பஜனை மடம் ஒன்றும் இங்கு இருக்கிறது. மற்ற இடங்களில் உள்ள இராமர் படங்களுக்கும் இந்தப் பஜனை மடத்தில் உள்ள இராமர் படத்திற்கும் ஓர் முக்கியமான வேறுபாடு உண்டு. மற்ற படங்களில் ஸ்ரீ ராமர் நெற்றியில் கோபியோ அல்லது ராமமோ அணிந்து காணப்படுவார். ஆனால் இங்கு உள்ள இராமர் நெற்றியில் திருநீறு அணிந்து காணப்படுகிறார். பாசுபத விரதம் மேற்கொண்ட ஸ்ரீ ராமர் அகத்தியரின் உபதேசப்படி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உடலெங்கும் விபூதி அணிந்து விபூதியிலேயே படுத்து மிகத் தீவிரமாக அந்த விரதத்தை மேற்கொண்டார். என்ற சிவ கீதைச் செய்தி இங்கு நினைவு கூறப்படுகிறது.

எனவே இவற்றையெல்லாம் உன்னிப்பாக ஆராய்ந்து பார்த்ததில் நாம் ஒரு தெளிவான முடிவிற்கு வந்திருக்கிறோம். சிவகீதை, ஸ்ரீ ராமருக்கு இந்தத் திருவாடானைத் திருதலத்திலேதான் உபதேசிக்கப் பெற்றுள்ளது. அதனை உபதேசித்தவர் வேறு யாரும் இல்லை எல்லாம் வல்ல ஆதிரெத்தினேச்வரர்தான் சிவகீதையை உபதேசித்தருளினார். இதனை நன்கு அறிந்திருந்த காரணத்தினாலேயே தேவேந்திரன் தமது குமாரனான அர்ஜுனனை பாசுபதம் முதலான அஸ்த்திரங்கள் வேண்டி ஆதிரெத்தினேச்வரரைப் பூஜிக்கும்படி பணித்தான். இவற்றையெல்லாம் தமது உள்ளுணர்வால் உணர்ந்த காரணத்தினாலே தான் இத்தலத்து முன்னோர்கள் இங்கு இராமபிரனை விபூதிப்பட்டை தரித்த நிலையில் அமைத்துப் பூஜித்தார்கள். இதில் சிறிதும் ஐயத்திற்கு இடமில்லை. திருவாடானையில்தான் சிவகீதை உபதேசிக்கப் பெற்றது. அதுமட்டுமல்ல, பிரசித்தி பெற்ற ஆதித்ய ஹ்ருதயமும் இங்குதான் அகத்தியரினாலே இராமபிரானுக்கு உபதேசிக்கப்பெற்றிருக்க வேண்டும். இங்கு அகத்தியர் ஆசிரமம் அமைத்து ஆதிரெத்தினேச்வரரை ஆராதித்து வந்த காலத்திலேதான் இராமருக்கு பாசுபத விரத முறையும், அதன் மூலம் சிவகீதை உபதேசமும் நடைபெற்றது என்பதனாலே இந்தத் தலத்திலேயே அகத்தியர் ஸ்ரீ ராமனுக்கு ஆதித்யஹ்ருதயத்தையும் உபதேசித்தருளியுள்ளார்.

அதன் வெளிப்பாடாகத்தான் தேவிபட்டிணத்திலே நவக்கிரஹங்களை பிரதிஷ்டை செய்து வழிபட்டுத் தனது பயணத்தை தொடர்ந்தார். தடையேதுமின்றி இலங்கையை அடைந்து, இராவணனை வென்று, சீதையையும் மீட்டு, அயோத்தியை அடைந்து, பட்டாபிஷேகமும் செய்துகொண்டார் என்பது தெளிவாகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவ கீதையின் முதல் சுலோகம்

***"அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி சுத்த கைவல்ய முக்திதம்!
அனுக்ரஹாந் மஹேசஸ்ய பவ து: கஸ்ய பேஷஜம்!!"***

பொருள் :

சுத்த கைவல்ய முக்தியை அளிப்பதும், சம்சாரம் என்னும் துக்கத்திற்கு மருந்தானதுமான சிவகீதை என்னும் இரத்தினத்தை சிவபெருமானுடைய அருளால் உங்களுக்கு நன்கு விளக்கிக் கூறுகிறேன்.

என்று சூதமுனிவர் கூறுவதாக உள்ளது.
(நன்றி: ஸ்ரீ ஆனந்த நாச்சியாரம்மா)

இதற்கு விளக்கவுரை எழுதிய சிவகீதை உரையாசிரியர் திருமதி. ஆனந்த நாச்சியாரம்மா அவர்கள் "சிவகீதையானது ரத்தினம் என்று நேரடியாகச் சொல்லப்படவில்லை. ஆயினும் இப்பொருள் வரத்தக்க இலக்கண விதிமுறைகள் இதில் இருத்தலால் இதனை வடமொழிப் பண்டிதர் "சிவகீதாரத்னம்" என்று குறிப்பிடுகிறார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிவகீதை ரத்தினத்தை சூர்யகுல ரத்தினமாகிய ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கு உபதேசித்தருளிய ஸ்தல ரத்தினமாகிய திருவாடானைத் திருத்தலத்தில் எழுந்தருளும் ஆதிரத்தின சிவபரம் பொருளை வாழ்நாளில் ஒருமுறையேனும் தரிசித்து, வாழ்நாளெல்லாம் அவன் நாமம் சிந்தித்து, பிறவிப் பெருந்துன்பத்திலிருந்து விடுபட்டு, வீடுபேறடைவோம் என்று கூறி இதனை நிறைவு செய்கிறேன்.

சுபம்

அன்புடன்
முறகை சுந்தரேச சிவம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூலாசிரியரைப் பற்றி...

இயர்பெயர் : **இராம. சுரேஷ்** M.A., M.Phil

புனைப்பெயர் : **முறசை சுந்தரேச சிவம்**

ஊர் : முறையூர், சிவகங்கை மாவட்டம்

எழுதியுள்ள வேறு நூல்கள் : முறசை மகிமை (செய்யுள் நூல்)
சோடஷோபசாரம், அகரச்சுவடி

சிறப்பு விருது : தஞ்சை தமிழ்த்தாய் அறக்கட்டளை வழங்கிய "இலக்கியச்சுடர்" விருது